சமூக அரசியல்
ஆரம்ப நூல் வரிசை

# விஞ்ஞான கம்யூனிசம் என்றால் என்ன?

எல். செலிஸ்னியோவ்
வி. ஃபிதீசவ்



முன்னேற்றப் பதிப்பகம்

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

எல். செலிஸ்னியோவ்
வி. ஃபிதீசவ்

# விஞ்ஞான கம்யூனிசம் என்றால் என்ன?

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன் எம். ஏ.

நூல் வரிசையின் பதிப்பாசிரியர் குழு:
எஃப். எம். வோல்கவ் (தலைமைப் பதிப்பாசிரியர்),
ஈ. எஃப். குப்ஸ்கி (துணைப் பதிப்பாசிரியர்),
எஃப். எம். புர்லாட்ஸ்கி, வி. டி. ஸோதவ், வி. வி. கிரபிவின்,
யூ. என். பொபோவ், வி. வி. ஸோபலெவ், எஃப். என். யூர்லொவ்

ABC СОЦИАЛЬНО-ПОЛИТИЧЕСКИХ ЗНАНИЙ

**Селезнёв Л., Фетисов В.**

ЧТО ТАКОЕ НАУЧНЫЙ КОММУНИЗМ?

*на тамильском языке*

ABC OF SOCIAL AND POLITICAL KNOWLEDGE

**Seleznev L., Fetisov V.**

WHAT IS SCIENTIFIC COMMUNISM?

*in Tamil*

© Progress Publishers, 1985

© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1988

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

С $\frac{0302030000-279}{014(01)-88}$ 352-88

ISBN 5-01-000869-6

## பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . 7

அத்தியாயம் ஒன்று

கற்பனாவாத சோஷலிசம்: சமூக நீதியைத் தேடுதல் . . . . . . . . . . . . . . 9

ஆரம்பகால சோஷலிஸ்டுகளின் கனவுகள் . . 10

புதிய சமூகத்தை முன்னறிவித்தவர்கள் . . . 23

அவர்கள் கற்பனாவாதிகளாக இருந்தது ஏன்? 28

அத்தியாயம் இரண்டு

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தை உருவாக்குதல் . . . . . . . . . . . . . 32

கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானத்தை நோக்கி 34

புதிய சமூகத்தை நிர்மாணிப்பது எப்படி? . . . 43

சர்வதேசத் தத்துவம் . . . . . . . . . 49

உலகத்தைப் புரட்சிகரமான முறையில் புத்தாக்கம் செய்கின்ற கருவி . . . . . . . . . . 53

அத்தியாயம் மூன்று

நம் சகாப்தத்தின் பிரதான உள்ளடக்கம் 57

சகாப்தம் என்றால் என்ன? . . . . . . . 59

பூர்ஷ்வா சித்தாந்தம் என்னும் உருச்சிதைந்த கண்ணாடி . . . . . . . . . . . . 65
நமது சகாப்தத்தின் தனித்தன்மைகள் . . . . 71

அத்தியாயம் நான்கு
சோஷலிஸ்ட் புரட்சி பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவம் . . . . . . . . . 78
சமூகப் புரட்சிகள் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதவை . . . . . . . . . . . . . 79
சமூகப் புரட்சி ரகம் என்ற முறையில் சோஷலிஸ்ட் புரட்சி . . . . . . . . . . . . 82
சோஷலிஸ்ட் புரட்சியின் பிரதான நியதிகள் . . 84

அத்தியாயம் ஐந்து
கம்யூனிஸ்ட் சமூகத்தின் தனித்தன்மையான கூறுகள் . . . . . . . . . . . . . . 96
நாகரிகத்தின் ஆக உயர்ந்த கட்டம் . . . . 98
புதிய சமூகம் நிறுவப்படுதலும் வளர்ச்சியடைதலும் . . . . . . . . . . . . . . 104

அத்தியாயம் ஆறு
முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டம் . . . . . . . . . 107
மாறும் காலகட்டத்தின் அவசியம் . . . . . 107
சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் தனித்தன்மையான கூறுகள் . . . . . . . . . . . . . 110
உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரமும் அதன் வடிவங்களும் . . . . . . . . . . . . 114

அத்தியாயம் ஏழு
சோஷலிசத்தின் வளர்ச்சிக் கட்டங்கள் . . 120

சோஷலிசத்துக்குச் செல்லும் பாதை . . . . . 197

முடிவுரை . . . . . . . . . . . . . . . . . 203

சொற்றொடர் விளக்கம் . . . . . . . . . 207

எந்த விஞ்ஞானத்தையும் கற்கின்ற பொழுது அதன் ஆராய்ச்சிப் பொருள் என்ன, அது மக்களுக்கு எதை வழங்கு கிறது, அதாவது அதன் சமூக நோக்கம் என்ன என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

மனிதகுலத்தின் வாழ்க்கை இந்த அளவுக்குச் சிக்கலான தாக முன்னெப்போதும் இருந்ததில்லை; அதன் சமூக அம்சங் களில் பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம், கலை, அரசு, தனிநபர் ஆகியவை அடங்கும். சமூக விஞ்ஞானங்கள் இன்று மிகவும் அதிகமாக, வெவ்வேறாக இருப்பதற்குக் காரணம் இதுவே. சில விஞ்ஞானங்கள் சமூகம் என்ற அங்கஜீவியின் பல்வேறு ''பகுதிகளை'' ஆராய்கின்றன; மற்றவை அதை மொத்தமாக ஆராய்கின்றன.

இப்புத்தகம் விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் என்ற ஒரு குறிப்பிட்ட விஞ்ஞானப் பிரிவின் எல்லைகளுக்கு உட்பட்ட வற்றை விளக்குகிறது.

''சரியான தத்துவத்தைக் காட்டிலும் அதிக அளவுக்குச் செய்முறையானது வேறு ஒன்றுமில்லை'' என்று ஒருவர் கூறினார்; இக்கூற்று விஞ்ஞான கம்யூனிசத்துக்கு மிகவும் பொருத்தமாகும். மார்க்சிய-லெனினியப் போத னையின் ஒரு பகுதியான விஞ்ஞான கம்யூனிசம் அறிதல்

முறை மற்றும் உழைக்கும் மக்களின் நலன்களுக்காக உலகத்தை மாற்றியமைக்கின்ற சக்தி மிக்க கருவியாக இருக்கிறது. நுட்பமான எந்தக் கருவியையும் போலவே விஞ்ஞான கம்யூனிசத்தில் முழுத் தேர்ச்சி பெறுவதற்குப் பொறுமை, இடைவிடாத முயற்சி அவசியம். ஒருவர் நவீன உலகத்தின் சிக்கலான பிரச்சினைகளைப் புரிந்து கொள்கின்ற பொழுது, சமூக வளர்ச்சியைப் பற்றித் தன்னுடைய கருத்தை விரித்துரைக்கின்ற பொழுது, சமூக அநீதிக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக முற்போக்குச் சக்திகள் நடத்துகின்ற போராட்டத்தில் உணர்வு பூர்வமாகச் சேருகின்ற பொழுது, அறிதல் மற்றும் கண்டுபிடித்தலின் இன்பங்களை அனுபவிக்கின்ற பொழுது அவை அனைத்தும் ஈடு செய்யப்படுகின்றன.

அந்த விஞ்ஞானத்தின் பிரத்யேகமான கூறுகளையும் இன்றியமையாத உள்ளடக்கத்தையும் இயன்ற அளவுக்கு எளிமையாக எடுத்துக்கூறுவதற்கு இப்புத்தகத்தின் ஆசிரியர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஆராயப்படுகின்ற முக்கியமான பிரச்சினை மற்ற பிரச்சினைகளுடன் தொடர்புள்ள வகையில் மற்ற அத்தியாயங்களிலும் ஆராயப்படுகிறது.

ஆகவே நாம் கடந்த காலத்தை, விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தின் தோற்றுவாய்களை சுற்றோட்டமாகப் பார்ப்பதை முதலில் தொடங்குவோம். பிறகு நம்முடைய சகாப்தத்தின் முக்கியமான பிரச்சினைகளின் பின்னணியில் அதன் இன்றைய பாத்திரத்தை ஆராய்வோம். மனிதகுலத்தின் எதிர்காலத்தை விஞ்ஞான ரீதியாகப் பார்த்து விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தைப் பற்றி இந்த அறிமுகத்தை முடித்துக் கொள்வோம்.

## அத்தியாயம் ஒன்று

# கற்பனாவாத சோஷலிசம்: சமூக நீதியைத் தேடுதல்

சமூக நீதியைப் பற்றிய கனவு, கற்பனையான சித்திரம் என்ற முறையில் சோஷலிசக் கருத்துகள் நெடுங்காலத்துக்கு முன்னரே தோன்றிவிட்டன. அவை பல நாடுகளில் ஆதர வாளர்களையும் பெற்றிருந்தன. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சோஷலிசக் கருத்துகளுக்கு விஞ்ஞான அடிப் படை அமைக்கப்பட்டது. அவை புதிய வாழ்க்கையைப் பெற்றுவிட்டன. இக்கருத்துகள் முதிர்ச்சியுற்று, உலக முழுவ திலும் பரவின. இதைக் காட்டிலும் முக்கியமானது என்ன வென்றால் அவை எதார்த்தத்தில், கோடிக்கணக்கான மக்களின் சமூகப் போராட்டத்தின் நடைமுறையில் பயன் படலாயின. விஞ்ஞான கம்யூனிசம் என்று கூறப்படுகின்ற இத்தத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு அதன் தோற்றம் மற்றும் வளர்ச்சியின் வரலாற்றை நாம் அறிய வேண்டும்.

புதிய விஞ்ஞானங்கள் சூனியத்தில் தோன்றுவதில்லை; அவை முந்திய தத்துவங்களில் மூல வேர்களைக் கொண் டிருக்கின்றன. ஒரு விஞ்ஞானம் எந்த அளவுக்கு முக்கியமாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அது முந்திய சிந்தனை யாளர்களுடைய சாதனைகளை சுவீகரித்துக் கொள்வதும் ஆழமாக இருக்க வேண்டும். விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத் துக்கு முன்னர் கற்பனாவாத சோஷலிசக் கருத்துகள்

இருந்தன. இக்கருத்துகளை அறிவது அந்தத் தத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவும்; சமூக சமத்துவம், உழைப்பு எல்லோருக்கும் பொதுவானது, ஒவ்வொரு தனிநபரிடமும் மரியாதை மற்றும் அக்கறை ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நியாயமான சமூகம் ஏற்பட வேண்டுமென்று பல்வேறு நாடுகளிலும் உழைக்கும் மக்களும் முற்போக்கான சிந்தனையாளர்களும் நெடுங்காலமாக ஏங்கினார்கள் என்பது தெரிய வருகிறது; இப்படிப்பட்ட ஏக்கங்கள் கற்பனாவாத சோஷலிசமாக முகிழ்த்தன; அதன் வரலாறு மிகவும் சுவாரசியமானது, திடீர்த் திருப்பங் களுடையது.

### ஆரம்பகால சோஷலிஸ்டுகளின் கனவுகள்

தாமஸ் மோர் (1478—1535) என்ற ஆங்கிலேயர் கற்பனா வாத சோஷலிசத்தின் முதல் பிரதிநிதி என்று கருதப் படுகிறார். அவர் *Utopia* ("கற்பனை") என்னும் தலைப் பில் ஒரு புத்தகத்தை எழுதினார். அந்தப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டுதான் 16—19ஆம் நூற்றாண்டு களைச் சேர்ந்த சமூக அரசியல் கருத்துகளும் கோட்பாடு களும் கற்பனாவாத சோஷலிசம் என்று சொல்லப்படு கின்றன.

நெடுந்தொலைவுக்கு அப்பாலுள்ள ஓர் இன்பம் நிறைந்த தீவுக்குச் சென்று திரும்பிய கடற்பயணியின் வர்ணனை வடிவத்தில் *Utopia* எழுதப்பட்டிருக்கிறது. அதன் முதல் பகுதியில் மோர் பிரிட்டிஷ் சமூகம், செல்வந்தர்கள் ஏழைகளை ஈவிரக்கமின்றிச் சுரண்டுதல், அவர்களுடைய பேராசை, ஒழுக்கமின்மை ஆகியவற்றைக் கூர்மையாக விமர்சிக்கிறார். பின்னர் அவர் நெடுந்தொலைவுக்கு அப்பா

லுள்ள ஒரு தீவில் முற்றிலும் வேறுபாடான, அற்புதமான வாழ்க்கை நிலவுவதை வர்ணிக்கிறார். அந்தத் தீவில் எல்லாப் பெரிய நகரங்களும் ஒரே மாதிரியாக, அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன; அந்த நாட்டின் குடிமக்கள் சுதந்திரமானவர்கள், சம அந்தஸ்து உடையவர்கள்; எல்லோருடைய வாழ்க்கை முறையும் ஒரே மாதிரியாக அமைந்திருக்கிறது. அங்கே விவசாயப் பண்ணைகளும் இருக்கின்றன; குடிமக்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் மாறிமாறி வசிக்கிறார்கள்; வெவ்வேறு விதமான வேலைகளை மாறிமாறிச் செய்கிறார்கள். அங்கே விஞ்ஞானிகள் மட்டுமே உடலுழைப்பு வேலையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அந்தத் தீவில் சோம்பேறிகள் கிடையாது. ஒவ்வொரு நபரும் நாளொன்றுக்கு ஆறு மணி நேரம் உழைக்கிறார்; ஆகவே ஒவ்வொருவரும் விஞ்ஞான, கலைத் துறைகளில் ஈடுபடுவதற்குப் போதிய ஓய்வு நேரம் இருக்கிறது. அங்கே பணம் என்னும் பொருள் இல்லை; மக்கள் தங்கத்தை மதிப்பதில்லை. அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற எல்லாப் பொருட்களும் பொதுச் சேமிப்பு நிலையங்களில் வைக்கப்படும்; ஒவ்வொரு நபரும் தனக்குத் தேவையான அளவுக்கு எடுத்துக் கொள்கிறார். யாரும் தனக்கென்று தனியாகப் பொருட்களைச் சேமித்து வைத்துக் கொள்வதில்லை; ஏனென்றால் அது அவசியமல்ல. நாட்டில் பொருட்கள் தேவைகளுக்கு ஏற்ப இலவசமாக வினியோகிக்கப்படுகின்றன. இது எப்படி நடைபெறுகிறது? மோர் விளக்கம் தருகிறார்: முதலாவதாக, எல்லாப் பொருட்களும் அபரிமிதமாக இருக்கின்றன; இரண்டாவதாக, ஒருவர் தனக்குத் தேவையானதைக் காட்டிலும் அதிகமாக எடுத்துக் கொள்வார் என்று எண்ணுவதற்குக் காரணமில்லை. தங்களுக்கு வேண்டிய எல்லாமே எப்பொழுதும் கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையைக் கொண்டவர்கள் மெய்யாகவே தமக்கு அவசியமில்

லாத பொருட்களை ஏன் சேமிக்க வேண்டும்?

அந்தத் தீவில் வசிப்பவர்கள் அனைவரும் பொது உணவு நிலையங்களில் உணவருந்துகிறார்கள். ஒவ்வொரு நபருடைய தேவைகளும் முற்றிலும் இயற்கையானவையாக, அவசிய மானவையாக இருக்கின்றன.

அந்தத் தீவின் குடிமக்கள் அனைவரும் சம அந்தஸ்து உடையவர்கள்; அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி கள் நாட்டை நிர்வாகம் செய்கிறார்கள்.

தாமஸ் மோர் எழுதிய புத்தகம் மக்கள் செல்வந்தர் கள், ஏழைகள் என்று பிரிக்கப்பட்டிருந்த, ஒரு பக்கத்தில் அதிகாரமும் போக வாழ்க்கையும் மறு பக்கத்தில் உரிமை யின்மையும் வறுமையும் நிலவிய பிரிட்டிஷ் சமூகத்துக்குச் சவாலாக இருந்தது.

தாமஸ் மோரின் வாழ்க்கை சோகமாக முடிந்தது. அரச ருடைய ஆணையின்படி அவர் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

கற்பனாவாத சோஷலிஸ்டுகளின் பட்டியல் நீளமானது. அவர்களுடைய வாழ்க்கையும் துன்பமாக, சோகமாகவே இருந்தது. தாமஸ் கம்பனேல்லா, கெரார்டு வின்ஸ்டன்லி, மூான் மெலியே, காப்ரியேல் மாப்லீ, கிராஹ் பாபெஃப், அன்ரி சான்-சிமோன், ஷார்ல் ஃபூரியே, இராபர்ட் ஓவன், விஸரியோன் பெலின்ஸ்கி, அலெக்சாந்தர் ஹெர்ஸென், நிக்கலாய் செர்னிஷேவ்ஸ்கி ஆகியோர் அவர்களில் முக்கிய மானவர்கள். அவர்கள் வெவ்வேறு வரலாற்று சகாப்தங் களில் வாழ்ந்தார்கள், வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த வர்கள். ஆனால் எல்லோரும் ஒரே விதமான ஆசையைக் கொண்டிருந்தார்கள். உழைப்பின் பலன்கள் உழைப்பாளி களுக்கே சொந்தமாக இருக்கின்ற, பலர் சிலரால் ஒடுக்கப் படுதல் இல்லாத, வர்க்கம், அந்தஸ்து, தேசிய இனம் என்ற வேற்றுமைகள் இல்லாத, எல்லோரும் சமமாக இருக்கின்ற சமூகத்தை நிறுவ வேண்டும் என்பது அந்த ஆசையாகும்.

அவர்கள் புதிய, இன்பமான வாழ்க்கைக்குப் பாடுபடுகின்ற பொழுது சமூக அநீதி, ஏற்றத்தாழ்வு, வறுமை, உரிமை யின்மை ஆகியவற்றை ஒழிக்குமாறு மக்களை அறைகூவினார் கள். அதற்கு அவர்கள் கொடுத்த விலை மிக அதிகம். ஆளும் வர்க்கத்தினர் அவர்களை அடக்கினார்கள், நாடுகடத்தி னார்கள், சிறையில் அடைத்தார்கள்; அவர்களில் சிலர் கொல்லப்பட்டார்கள்.

அன்றி சான்-சிமோன், ஷார்ல் ஃபூரியே என்ற இரண்டு பிரெஞ்சுக்காரர்கள், இராபர்ட் ஓவன் என்ற ஆங்கிலேயர் ஆகியோருடைய தத்துவங்கள் மிகவும் பிரபலமானவை. இவர்கள் சோஷலிசச் சிந்தனை வரலாற்றில் மிகவும் பிரபலமான இடத்தைப் பெற்றிருப்பது ஏன்?

18ஆம் நூற்றாண்டின் கடைசியில் பிரான்சில் பூர்ஷ்வாப் புரட்சி நடைபெற்றது; நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களின் இடத்தை முதலாளி வர்க்கம் என்ற புதிய வர்க்கம் பிடித்தது. அக்காலத்தைச் சேர்ந்த பிரெஞ்சுச் சிந்தனை யாளர்கள் அந்தப் புரட்சியின் மீது அதிகமான நம்பிக்கை கள் வைத்திருந்தார்கள். அது நிலப்பிரபுத்துவ நிலக்கிழார் கள் மற்றும் திருச்சபையின் ஆட்சிக்கு, அநீதி, அறியாமை, மூடநம்பிக்கை தாண்டவமாடிய யுகத்துக்கு முடிவு கட்டும் என்று அவர்கள் கருதினார்கள். பூமிக்கு மேலே சூரியன் பிரகாசிக்கும், எல்லா மக்களுக்கு இடையிலும் நீதி, சமத் துவம், சகோதரத்துவம் நிரந்தரமாக ஆட்சி புரியும் என்று அவர்கள் நம்பினார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பகுத்தறிவு மற்றும் நீதியானது சுரண்டல், அடிமைப்படுத் துதலின் மற்றொரு வடிவமே என்பதை வாழ்க்கை வெகு சீக்கிரத்தில் எடுத்துக்காட்டியது. அந்தப் புரட்சி சிலருக்கு அதிகமான செல்வத்தைக் கொடுத்தது, மற்றவர்களை முன்னைக் காட்டிலும் அதிகமான வறுமையில் தள்ளியது. மறைந்து கொண்டிருந்த நிலப்பிரபுத்துவத்தின் தீமைகளைக்

காட்டிலும் புதிதாக வந்த முதலாளித்துவத்தினால் ஏற்பட்ட தீமைகள் அதிகமாக இருந்தன.

இதற்கிடையில் முதலாளித்துவம் ஐரோப்பாவில் வேரூன்றிக் கொண்டிருந்தது, மற்ற கண்டங்களின் மீது காலனியாதிக்கப் படையெடுப்புகளை நடத்திக் கொண்டிருந் தது; உலக முழுவதிலும் உள்ள மக்கள் மீது புதிய துன்பங் களைச் சுமத்தி தன்னுடைய மனிதவிரோத, முரண்பாடான தன்மையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

முன்னைக் காட்டிலும் சிறப்பான வாழ்க்கை ஏற்படும் என்று நம்பியவர்கள் மிகவும் ஏமாற்றமடைந்தார்கள். சிலர் முதலாளித்துவ அமைப்பை மிகவும் கடுமையான சொற்களில் விமர்சிப்பதற்குத் தொடங்கினார்கள். அதிக நியாயமான, அதிகமாக மனிதத்தன்மையுள்ளதாக அவர்கள் கருதிய சமூகத்தைப் பற்றிய திட்டங்களை வெளியிட்டார் கள்.

அந்த சமயத்தில் மனித அறிவு புதிய வெற்றிகளைக் குவித்துக்கொண்டிருந்தது. விஞ்ஞானிகள் இயற்கையின் இரகசியங்களை மேன்மேலும் ஆழமாக ஊடுருவினார்கள், வியக்கத்தக்க அளவுக்குச் சக்தி வாய்ந்த, நுட்பமான இயந்திரங்களையும் கருவிகளையும் தயாரித்தார்கள். மக்கள் தங்களுடைய வாழ்க்கையை மாற்றியமைப்பதற்கு அறிவு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பச் சக்தியை ஏன் உப யோகிக்கக் கூடாது? நெடுங்காலத்துக்கு அப்பாலுள்ள எதிர் காலத்துக்குப் பதிலாக இப்பொழுதே அந்த மகிழ்ச்சி நிரம்பிய சமூகத்தை அவர்களால் நிர்மாணிக்க முடியாதா? சான்-சிமோன், ஃபூரியே மற்றும் ஓவன் இத்தகைய கேள்விகளை எழுப்பினார்கள்; அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் பதிலளித்தார்கள்.

அன்ரி சான்-சிமோன் (1760 – 1825) பாரிஸ் நகரத்தில் ஒரு பிரபுவின் மகனாகப் பிறந்தார். அவர் தன்னுடைய

வாழ்நாளில் நடைபெற்ற மிக முக்கியமான சம்பவங்களாகிய அமெரிக்க சுதந்திரப் போரிலும் *(1775 – 1783)*, பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சியிலும் *(1789 – 1794)* பங்கு கொண்டார். அவர் தன்னுடைய வாழ்க்கை முழுவதிலும் தத்துவஞானத்தில் ஈடுபட்டார், வறுமையில் வாழ்ந்தார்.

மனிதகுலம் தன்னுடைய வளர்ச்சியில் மூன்று கட்டங்களைக் கடந்து வந்திருக்கிறது என்று சான்-சிமோன் கருதினார். முதல் கட்டத்தில் மதம் முழுமையாக ஆட்சி செய்தது; இரண்டாவது கட்டத்தில் மதத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் இடையில் போராட்டம் நடைபெற்றது; மூன்றாவது கட்டம் விஞ்ஞானம் வெற்றியடைந்த கட்டம். கடைசிக் கட்டம் ஏற்கெனவே தொடங்கிவிட்டபடியால் மனித வாழ்க்கையை மாற்றியமைப்பதற்கு ஒரு விசேஷமான சமூக விஞ்ஞானத்தைப் படைப்பது அவசியம். மகிழ்ச்சி நிரம்பிய சமூகத்துக்கு ஒரு திட்டத்தைத் தயாரிப்பது அந்த விஞ்ஞானத்தின் முக்கியமான கடமை. அத்திட்டம் பின்னர் நிறைவேற்றப்பட வேண்டும்.

அத்தகைய திட்டம் ஒரு தனிப்பட்ட மேதையின் படைப்பாக இருக்கும், அது அந்த சகாப்தத்தையோ வரலாற்று நிலைமைகளையோ பொறுத்ததல்ல என்று சான்-சிமோன் கருதினார். அத்தகைய மேதை ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருந்தால் மனிதகுலம் பல நூற்றாண்டுக் காலமாகத் துன்பத்தை அனுபவித்திருக்காது. ஆனால் அத்தகைய மீட்பர் அன்று வரையிலும் தோன்றவில்லை; எனவே ஒரு புதிய வாழ்க்கைக்குத் திட்டத்தைத் தயாரித்து மனித குலத்தை இயன்ற அளவு சீக்கிரமாக விடுதலை செய்வது இன்றைய கடமையாகும்.

சான்-சிமோன் எதிர்கால சமூகத்தை எப்படி கற்பனை செய்தார்? அந்த சமூகத்தைத் தகுதிமிக்கவர்கள், ஆற்றலில் சிறந்தவர்கள் நிர்வாகம் செய்வார்கள். ஆட்சியதிகாரத்தின்

தலைமையான உறுப்பாகிய நாடாளுமன்றம், கண்டுபிடிப்புகள் மன்றம், ஆராய்ச்சி மன்றம், நிர்வாக மன்றம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும். அது நாட்டின் தலைமையான பொருளாதார மற்றும் திட்டமிடும் அமைப்பாக இருக்கும். புதிய சமூகத்தின் பொருளாதார வாழ்க்கை திட்டமிட்ட முறையில் நடைபெறுவதால் அராஜகம், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை அல்லது பட்டினி அங்கே இருக்காது. ஒவ்வொரு தனிநபருடைய வாழ்க்கை நிலைமைகளையும் அபிவிருத்தி செய்தல், தனிநபருடைய திறமைகளையும் தகுதிகளையும் வெளிப்படுத்தி வளர்த்தல் அந்த சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மாற்றங்களின் முக்கியமான நோக்கமாக இருக்கும்.

புதிய சமூக அமைப்புக்கு மாறுவதை, வறுமை மற்றும் ஒடுக்குமுறையை ஒழித்து சர்வாம்ச இணக்கமும் பரஸ்பரப் புரிதலும் அடைவதற்கு சான்-சிமோன் எப்படித் திட்டமிட்டார்? இன்றைய சமூகத்தில் செல்வந்தர்கள், ஏழைகள் ஆகிய இரண்டு பிரிவினருமே மகிழ்ச்சி இல்லாதிருக்கிறார்கள்; ஏனென்றால் சிலர் வறுமையில் வாடுகிறார்கள், மற்றவர்கள் தங்களுடைய செல்வத்தின் காரணமாக மனவேதனைக்கு உள்ளாகிறார்கள்; எனவே தன்னுடைய சமூகத் திட்டத்தைப் பரப்புவதும் நிறைவேற்றுவதும் எல்லோருக்கும் நன்மை பயக்கும் என்று அவர் கருதினார். புதிய சமூகத்தில் எல்லோரும் திருப்தியடைந்தவர்களாக, மகிழ்ச்சி நிரம்பியவர்களாக இருப்பார்கள். ஆகவே புதிய சமூகத்தின் சாதகங்களை ஒவ்வொரு நபரும் புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்; பிறகு அந்த சமூகம் தானாகவே ஏற்படும்.

உணர்வு, கருத்துகள் சமூக வாழ்க்கையில் முக்கியமானவை. இவற்றில் மாற்றங்கள் ஏற்படுகின்ற பொழுது சமூகத்தின் எல்லாப் பிரிவுகளிலும் மாற்றங்கள் ஏற்படுவது நிச்சயம்

என்று சான்-சிமோன் உறுதியாக நம்பினார். சமூக மாற்றத்துக்கு அவர் வகுத்த திட்டம் இந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அந்த நம்பிக்கை சரியானதா? இந்த மாபெரும் மனிதாபிமானியிடம் ஏற்பட்டிருந்த பிரமைகளுக்கு அது ஒரு காரணமாக இருக்குமா? இப்பிரச்சினையை நாம் பிறகு ஆராய்வோம்; இப்பொழுது சான்-சிமோனுடைய சமகாலத்தவரும் முக்கியமான பிரெஞ்சுச் சிந்தனையாளருமான ஷார்ல் ஃபூரியேயின் கருத்துகளை ஆராய்வோம்.

ஷார்ல் ஃபூரியே (1772 – 1837) வர்த்தக நிலையங்களில் எழுத்தராகத் தன்னுடைய வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்தார். மனிதன் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறான்; மனிதன் தன்னுடைய இயற்கையான, நியாயமான தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்ற பொழுது மகிழ்ச்சி அடைகிறான். ஒவ்வொரு தனிநபருடைய தேவைகளையும் பூர்த்தி செய்வது சமூகத்தின் கடமை. சமூகத்தினால் அந்தக் கடமையை நிறைவேற்ற முடியவில்லை என்றால் அதைக் கண்டனம் செய்து அகற்ற வேண்டும்.

முதலாளித்துவம் காலாவதியான, மோசமாக அமைக்கப்பட்ட சமூகம் என்றும் அது பல கொடிய பாவங்களைச் செய்திருக்கிறது என்றும் ஃபூரியே குற்றம் சாட்டினார். அவர் எதிர்கால சமூகத்தைப் பற்றி நுணுக்கமான திட்டத்தைத் தயாரித்தார். அவர் ஒத்திசைவு என்று பெயர் சூட்டிய மகிழ்ச்சி நிரம்பிய சமூகத்தை அவர் எப்படி கற்பனை செய்தார்?

அந்த சமூகம் எண்ணற்ற பொதுவாழ்வுக் குழாம்களை அல்லது உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் சங்கங்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொன்றிலும் 1,600 உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் ஒரு பெரிய கட்டிடத்தில் வசிப்பார்கள். அதில் தொழிற்சாலைகள், உணவருந்து

கின்ற அறைகள், நூலகங்கள் இருக்கும்.

புதிய சமூகத்தில் ஒரு நபர் மற்றொரு நபரை ஒடுக்குவது இருக்காது. அதன் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விருப்ப பூர்வமாகப் பொது நன்மைக்காகப் பாடு படுவார்கள். அங்கே உழைப்பு சாபக்கேடாக இல்லாமல் மகிழ்ச்சி நிரம்பியதாக இருக்கும். பொதுவாழ்வுக் குழாமின் உறுப்பினர்கள் தம்முடைய திறமைகளுக்குத் தகுந்தவாறு வேலைகளை மாற்றிக் கொள்வார்கள்; அவர்களுக்கிடையில் போட்டி இருக்கும், படைப்புத் தன்மை இருக்கும். ஆகவே ஒவ்வொரு நபரும் உற்சாகத்துடன் வேலை செய்வார்.

ஃபூரியேயின் புதிய சமூகத்தில் பெண்கள் ஆண்களுடன் சம உரிமைகளைக் கொண்டிருப்பார்கள்; வீட்டு வேலைகள் அவர்களுக்குக் கிடையாது. கல்வி மனிதனுடைய உடலை யும் உள்ளத்தையும் ஒரு சேர வளர்ப்பதாக இருக்கும். சான்-சிமோனைப் போல் ஃபூரியேயும் மனிதன் மீது, அவனுடைய ஆன்மிக, தார்மிக சக்தியின் மீது நம்பிக்கை வைத்திருந்தார். மனிதனிடம் இருக்கின்ற திறமையைக் கண்டுபிடிக்க வேண் டும், அதை வெளியே கொண்டு வர வேண்டும், பரிபூரண மாக்க வேண்டும், அதுவே முக்கியமான கடமை என்று அவர் கூறினார்.

எனவே மகிழ்ச்சி நிறைந்த எதிர்கால சமூகத்தின் திட்டம் தயாராக இருந்தது. ஆனால் அதை நிறைவேற்றுவது யார்? எப்படி நிறைவேற்ற வேண்டும்? செல்வந்தர்களுடைய அதி காரத்தைப் பறித்து, மக்களுடைய வாழ்க்கையை மாற்று வதற்கு அதை உபயோகிக்கலாமா? அது கூடாது என்றார் ஃபூரியே. உடைமை வர்க்கத்தினரை, அவர்களுடைய மூல தனத்தையும் நல்லெண்ணத்தையும் நம்பியிருப்பதே முக்கிய மானது. அவர்கள் உண்மையைப் பார்ப்பதற்கு, புதிய அமைப்பின் சாதகங்களை அவர்கள் புரிந்து கொள்வதற்கு உதவி செய்ய வேண்டும், அதுவே போதும் என்றார்

ஃபூரியே. அவர் இந்த நோக்கத்துடன் அரசர்கள், பிரபுக்கள், வங்கி மற்றும் தொழிற்சாலை அதிபர்களுக்குக் கடிதங்களை எழுதினார். அவர்களில் யாராவது தன்னைத் தேடி வந்து தன்னுடைய கருத்துகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்வார் என்று அவர் நெடுங்காலமாகக் காத்திருந்தார். அவர் தன்னுடைய சிறு வீட்டில் ஒவ்வொரு நாளும் இப்படிக் காத்திருந்தார். ஆனால் யாரும் வரவில்லை. அவருடைய வாழ்க்கைப் பணி, மகிழ்ச்சி நிரம்பிய சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு அவர் பல இரவுகளாக உறங்காமல் தயாரித்த திட்டம் வெறும் கனவாக முடிந்தது.

எதிர்கால சமூக அமைப்பைப் பற்றி சான்-சிமோனும் ஃபூரியேயும் கொண்டிருந்த கருத்துகளில் பல வேற்றுமைகள் இருந்தாலும் அவற்றுக்கு இடையில் அதிகமான ஒற்றுமை இருந்தது. சமூகத்தை மாற்றுகின்ற முறையை எடுத்துக் கொண்டால் ஃபூரியேயின் திட்டம் சான்-சிமோனுடைய திட்டத்தை ஒத்திருக்கவில்லையா? ஆனால் எவ்விதமான முடிவுகளுக்கும் வருவதற்கு முன்னர் மூன்றாவது முக்கியமான கற்பனாவாத சோஷலிஸ்டாகிய ஆங்கிலச் சிந்தனையாளர் இராபர்ட் ஓவனுடைய கருத்துகளைக் காண்போம்.

இராபர்ட் ஓவன் (1771 – 1858) குட்டி முதலாளி வர்க்கக் குடும்பத்தில் பிறந்தார். அவர் அசாதாரணமான திறமைகளைக் கொண்டிருந்தார்; இருபது வயதை அடைவதற்குள் மாஞ்செஸ்டர் நகரத்தில் ஒரு பஞ்சாலையின் நிர்வாகியாகி விட்டார். முப்பது வயதில் ஸ்காட்லாந்தில் ஒரு பெரிய தொழிற்சாலையில் இயக்குநராக இருந்தார். அவர் ''அநேகமாக தெய்விகமான மனிதர், குழந்தையைப் போன்ற எளிமையான குணம் உடையவர்; அதே சமயத்தில் பிறவித் தலைவர்கள் என்று அழைக்கப்படுகின்ற சிலரில் ஒருவர்'' *

* F. Engels, *Anti-Dühring*, Moscow, Progress Publishers, 1975, p. 310.

என்று பிரெடெரிக் எங்கெல்ஸ் அவரை வர்ணித்தார். ஓவன் சிந்தனையாளர் என்ற முறையில் மட்டுமின்றி செய்முறைச் சீர்திருத்தவாதி என்ற முறையிலும் சுவாரசிய மானவர்.

அவர் முதலிலேயே சோஷலிசக் கருத்துகளை ஏற்றுக் கொண்டவர் அல்ல. தொடக்கத்தில் அவர் அன்றைய அமைப்புக்குள்ளாகவே மக்களுடைய வாழ்க்கையை மாற்று வதற்குப் பாடுபட்டார். ஸ்காட்லாந்திலிருந்த நியூ லானார்க் மில்லின் பங்குதாரராகவும் நிர்வாகியாகவும் இருந்த பொழுது அவர் தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். தொழிலாளர்களின் வேலை நேரத்தைக் குறைத்தார், குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தை ஏற்படுத்தினார். ஒரு பள்ளிக்கூடத்தையும் மருத்துவ நிலையத்தையும் தொழிலாளர்களுக்கு உதவுகின்ற நிவாரண நிதியையும் நிறுவினார். அதன் விளைவாக அந்த மில் வர்த்தக ரீதியில் செழித்தது. மக்களுடைய வாழ்க் கையும் ஒழுக்கமும் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்ற மடைந்தன. அதற்கு முன்னர் வழக்கமாக இருந்த ஒழுக்கக் குறைவும் குற்றமும் விதிவிலக்காக மாறின. இந்த சீர்திருத் தங்களின் விளைவாக ஓவனுடைய பெயர் ஐரோப்பா முழுவதிலும் பிரபலமடைந்தது. ஆனால் அவர் தன்னுடைய சாதனையைப் பற்றித் திருப்தி அடையவில்லை. முத லாளித்துவ சமூகம் தீமைகள் நிறைந்த அமைப்பு, அதை அகற்றி விட்டுக் கம்யூனிஸ்ட் சமூகத்தை நிர்மாணிக்க வேண்டும் என்று காலப்போக்கில் முடிவு செய்தார்.

எதிர்கால சமூகத்தையும் அதை நிர்மாணிக்கின்ற வழி முறைகளையும் பற்றி ஓவனுடைய கருத்து என்ன? அவருடைய திட்டத்தின்படி **300** முதல் **3,000** நபர்களைக் கொண்ட விசேஷமான கூட்டுச் சமூகங்களை உலகம் முழுவதிலும் அமைக்க வேண்டும். இந்தக் கூட்டுச் சமூகங்களில் நகரம்

மற்றும் கிராமத்திலுள்ள எல்லா சாதகங்களும் இருக்கும்; அவற்றில் நிலவுகின்ற குறைகள் அங்கே இருக்கமாட்டா. கூட்டுச் சமூகத்தின் உறுப்பினர்கள் தொழில்துறையிலும் விவசாயத் துறையிலும் மாறிமாறி வேலை செய்வார்கள்; மூளை உழைப்பிலும் உடல் உழைப்பிலும் மாறிமாறி ஈடுபடுவார்கள். மிகவும் நவீனமான இயந்திரங்களைப் பயன் படுத்துவார்கள். ஃபூரியேயின் திட்டத்தில் கைத்தொழில் களும் பட்டறைத் தொழில்களும் முக்கியமான பாத்திரத்தை வகித்தன. ஆனால் ஓவன், நவீன இயந்திரங்களும் பெரிய அளவுத் தொழில்துறையும் அவசியம் என்று வலியுறுத்தினார். வீட்டு வேலைக்கு இயந்திரத்தை உபயோகிக்க வேண்டும் என்று அவர் கருதினார். முதலாளித்துவத்தின் கீழ் குறிப்பிட்ட சிலரைச் செல்வந்தர்களாக்குவதற்கும் பெருந் திரளான மக்களை அடிமைப்படுத்துவதற்கும் பயன்பட்ட வலிமையான உற்பத்திச் சக்திகள் புதிய சமூகத்தில் எல் லோருடைய நலனையும் அபிவிருத்தி செய்வதற்கு உபயோகிக் கப்படும்.

புதிய சமூகத்தில் பொருட்கள் அபரிமிதமாக இருக்கும். அதன் உறுப்பினர்கள் தமக்கு அவசியமான பொருட்களை பொதுச் சேமிப்பு நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்வார் கள். அவர்கள் பொது உணவு நிலையங்களில் உணவருந்து வார்கள். ஆரம்பத்தில் ஒவ்வொரு தனிநபருடைய உழைப் புக்கும் தகுந்தவாறு வினியோகம் நடைபெறும். பின்னர் மக்களுடைய தேவைக்குத் தகுந்தவாறு வினியோகம் செய் கின்ற முறைக்கு சமூகம் மாறும். மக்களுக்கு இடையில் எல்லா உறவுகளும் அன்பையும் பரஸ்பர உதவியையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

கம்யூனிசக் கருத்துகளைப் பரப்புதல், தீவிரமான தொண் டர்களின் உதாரணமான நடவடிக்கைகள், மக்களின் சாதா ரண ஒத்துழைப்பு ஆகிய முறைகளைப் பின்பற்றி புதிய

சமூகத்துக்கு மாற முடியும் என்று ஓவன் கருதினார். சான்-சிமோன், ஃபூரியே ஆகியோரும் இதே முறைகளைப் பின்பற்றி சமூக வாழ்க்கையை மாற்ற முடியும் என்று கருதினார்கள் என்பதை இங்கே நினைவுபடுத்திக் கொள்வோம்.

ஓவன் தன்னுடைய கருத்துகளைச் செயல்படுத்துவதற்குப் பாடுபட்டார். அவர் அமெரிக்காவில் ஒரு பண்ணையை வாங்கி அதில் கம்யூனிச ரகத்தைச் சேர்ந்த கூட்டுச் சமூகத்தை நிறுவினார்; அதற்குப் ''புதிய ஒத்திசைவு'' என்று பெயரிட்டார். தொடக்கத்தில் அந்தக் கூட்டுச் சமூகம் வெற்றிகரமாக இருந்தது. ஆனால் பின்னர் தேவைகளுக்கேற்ப வினியோகத்தை அமுலாக்கியதும் சுற்றிலுமிருந்த முதலாளித்துவ அமைப்பின் பகைமையும் அதன் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. ஓவன் தன்னுடைய சொத்து முழுவதையும் அந்தக் குடியமைப்பில் செலவிட்டிருந்தபடியால் அவர் ஏழையானார். அவருடைய உலகப் புகழ் மறைந்தது; அவர் வறுமைக்கும் அலட்சியத்துக்கும் ஆளானார். அவருடைய துன்பங்கள் மேன்மேலும் அதிகரித்தன. எனினும் ஓவன் மனம் தளரவில்லை. அவர் முன்பிருந்த மாதிரியே உற்சாகத்துடன் தன்னுடைய கருத்துகளைப் பிரசாரம் செய்தார்; செல்வந்தர்களுக்குக் கடிதங்களை எழுதினார்; கட்டுரைகளை எழுதினார், தொழிலாளர் கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார். அத்தகைய கூட்டம் ஒன்றில் அவர் சோஷலிசத்தைப் பற்றி உரை நிகழ்த்திக் கொண்டிருந்த பொழுது மேடையில் நோய்வாய்ப்பட்டார்; பேச்சு முடிவடையாத நிலையில் தூக்கு படுக்கையில் தூக்கிச் செல்லப்பட்டார். நியாயமான, மகிழ்ச்சி நிரம்பிய சமூக அமைப்புக்குப் பாடுபடுவதற்குத் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த பெரியார் சீக்கிரத்தில் மரணமடைந்தார்.

மற்ற நாடுகளைச் சேர்ந்த கற்பனாவாத சோஷலிஸ்டு

களின் கோட்பாடுகள் மிகவும் சுவாரசியமானவையே. எனினும் நாம் இதுவரை ஆராய்ந்த நபர்களுடைய கருத்து கள் சோஷலிஸ்ட் சிந்தனையின் திசை வழியை நன்றாக எடுத்துக்காட்டுகின்றன. கற்பனாவாத சோஷலிசத்தின் பலமான அம்சங்களையும் பலவீனமான அம்சங்களையும் தெரிந்து கொண்டால்தான் நாம் சோஷலிசத்தையும் கம்யூனிசத்தையும் பற்றிய விஞ்ஞானத் தத்துவத்தைப் புரிந்து கொண்டு பாராட்ட முடியும்.

## புதிய சமூகத்தை முன்னறிவித்தவர்கள்

நியாயமான, மனிதப் பண்புடைய சமூகத்தைப் பற்றி நுணுக்கமான முறையில் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் நிறை வேற்றப்பட இயலாதவையாகவும் சாராம்சத்தில் கற்பனா வாதமாகவும் மாறியது ஏன்? சோஷலிசம் மற்றும் அதை அடைவதற்குரிய வழிமுறைகளைப் பற்றி சான்-சிமோன், ஃபூரியே, ஓவன் ஆகியோருடைய கருத்துகள் மேதாவிலா சம் நிறைந்தவை என்றாலும் அவை விஞ்ஞான ரீதியான முடிவுகள் அல்ல, அவை வெறும் ஊகங்களே. விஞ்ஞான ரீதியான முடிவுகளுக்கும் ஊகங்களுக்கும் வேறுபாடு என்ன வென்றால் முந்தியவை எப்பொழுதும் முற்றாக ஆராயப் பட்டு, சோதிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டவை ஆகும். விஞ்ஞா னம் மெய்யான விவரங்களையும் நிகழ்வுப் போக்குகளையும் அதாவது மெய்யான வாழ்க்கையை ஆராய்கிறது; ஆனால் ஊகங்கள் தனிநபருடைய கற்பனையின் விளைவாகத் தோன்றுகின்றன. ஆகவே அவை அடிப்படையில் வேறுபடு கின்றன. அப்படியானால் கற்பனாவாத சோஷலிசம் விஞ் ஞான சோஷலிசத்தின் சித்தாந்த அடிப்படையாக, தொடக்க நிலையாக எப்படி இருக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது.

கற்பனாவாத சோஷலிஸ்டுகள் எழுப்பிய பிரச்சினைகள் (மற்றும் ஓரளவுக்கு இப்பிரச்சினைகளுக்குக் கூறிய தீர்வுகள்) விஞ்ஞானக் கம்யூனிசத் தத்துவத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. *

கற்பனாவாத சோஷலிஸ்டுகளின் சாதனைகள் யாவை?

முதலாவதாக, அவர்கள் முதலாளித்துவ அமைப்பைக் கடுமையாக, இடைவிடாமல் விமர்சனம் செய்து அதற்குப் பதிலாக ஒரு நியாயமான, சோஷலிஸ்ட் அமைப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதன் மூலம் மனித குலத்துக்குச் சேவை செய்தார்கள். அவர்களுடைய நூல்கள் பெருந்திரளான மக்கள் மத்தியில் சோஷலிசக் கருத்துகளைப் பரப்புவதற்கு உதவின; அதன் மூலம் சோஷலிஸ்ட் நிர்மாணம் என்ற விஞ்ஞானத் தத்துவம் குறுகிய வரலாற்றுக் காலத்தில் கோடிக்கணக்கான மக்களுடைய இதயங்களில் இடம் பெற முடிந்தது.

இரண்டாவதாக, கற்பனாவாத சோஷலிஸ்டுகள் சோஷலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்ட் சமூகத்தின் சில அடிப்படையான கூறுகளை முன்னறிந்து கூறினார்கள்; விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவர்களான மார்க்சும் எங்கெல்சும் அவர்களுடைய முற்காட்சிகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டார்கள். அவர்கள் கற்பனாவாத சோஷலிசத்தின் இந்த அம்சத்தை மிகவும் பாராட்டினார்கள். ''ஜெர்மனியின் தத்துவார்த்த சோஷலிசம் சான்-சிமோன், ஃபூரியே, ஓவன் ஆகியோருடைய தோள்களின்மீது உட்கார்ந்திருப்பதை ஒருபோதும் மறக்காது. அவர்கள் எல்லா விசித்திரமான கருத்துகளையும்

---

* ''விஞ்ஞான சோஷலிசம்'' மற்றும் ''விஞ்ஞான கம்யூனிசம்'' என்னும் கருதுகோள்கள் ஒரே பொருளைத்தான் குறிக்கின்றன. சோஷலிசத்தை நிர்மாணித்து கம்யூனிசத்துக்குப் படிப்படியாக மாறுகின்ற வழிமுறைகளைப் பற்றிய விஞ்ஞானத் தத்துவத்தையே அவை குறிக்கின்றன.

எல்லாவிதக் கற்பனாவாதத்தையும் கொண்டிருந்தாலும் இம்மூவரும் எல்லாக் காலத்திலும் ஆகச் சிறந்த சிந்தனையாளர்கள் மத்தியில் இடம் பெற்றிருக்கிறார்கள்; அவர்களுடைய மேதாவிலாசம் எண்ணற்ற பல விஷயங்களை முன்னூகித்தது; அவை சரியானவை என்பதை நாம் இப்பொழுது விஞ்ஞான ரீதியாக நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்'' என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை இருப்பது மனிதர்கள் மத்தியில் பொருளாதார ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துகிறது என்பதைக் கற்பனாவாத சோஷலிஸ்டுகள் உணர்ந்தார்கள்; எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற புதிய, நியாயமான சமூகம் உற்பத்திச் சாதனங்களில் பொது உடைமையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். மேலும் சான்-சிமோன் ஒன்றுபடுத்தப்பட்ட, மத்தியப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தையும் பொருளாதாரத் திட்டமிடுதலையும் அமைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி மிகவும் அரிய கருத்தைக் கூறினார்.

கற்பனாவாத சோஷலிஸ்டுகள் உழைப்பு சம்பந்தமான பிரச்சினைகளில் அதிகமான கவனத்தைச் செலுத்தினார்கள். அவர்கள், சுரண்டலையும் சோம்பேறித்தனத்தையும் கண்டித்ததுடன் சமூகத்தில் ஒவ்வொரு நபருக்கும் உழைப்பு முக்கியமான கடமை என்ற கருதுகோளை முன்வைத்தார்கள். அவர்கள் வேலைகளை மாற்றுகின்ற சாத்தியங்களைப் பற்றியும் உழைப்பை ஒரு படைப்பு நடவடிக்கையாக, மனிதனுடைய ஜீவாதாரமான தேவையாகச் செய்வதைப் பற்றியும் மிகவும் பயனுள்ள கருத்துகளைக் கூறினார்கள்.

அவர்கள் வினியோகத்தைப் பற்றிக் கூறிய கருத்துகளும்

---

* F. Engels, *The Peasant War in Germany,* Moscow, Progress Publishers, 1965, p. 22.

அதே அளவுக்கு முக்கியமானவையே. ஏனென்றால் பொருளாயத மற்றும் ஆன்மிக மதிப்புகளின் வினியோகத்தைப் பற்றிய கோட்பாடு மனித வாழ்க்கையில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. அது மக்களுடைய வாழ்க்கைத் தரங்களை நிர்ணயிப்பதுடன் உற்பத்தி மேலும் வளர்ச்சியடைவதில் கணிசமான தாக்கத்தைச் செலுத்துகிறது. நியாயமான, மனிதத் தன்மையுள்ள வினியோகக் கோட்பாட்டை சான்-சிமோனும் அவருடைய ஆதரவாளர்களும் முன்வைத்தார்கள். ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப்புக்கு ஏற்ப'' என்னும் அக்கோட்பாடு இப்பொழுது எல்லா சோஷலிச நாடுகளிலும் அமுலாக்கப்பட்டு வருகிறது.

கற்பனாவாத சோஷலிஸ்டுகள் பெண்களுக்குச் சம உரிமை, குழந்தைகளை வளர்த்தல் சமூகத்தின் பொதுக் கடமை, நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையில் வேற்றுமைகளை ஒழித்தல் மற்றும் இதர விஷயங்களைப் பற்றிக் கூறிய கருத்துகளை விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு தனிநபரும் எல்லாத் துறைகளிலும் ஒத்திசைவான வளர்ச்சி அடைவதற்குரிய நிலைமைகளை உருவாக்குவதன் அவசியத்தைப் பற்றி அவர்களுடைய கருத்து மிகவும் சிறந்ததாகும். மனித நேயத்தில் ஆழமான இக்கருத்து விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தில் இடம் பெற்றிருக்கிறது; சோஷலிச நாடுகள் புதிய சமூகத்தை நிர்மாணிப்பதில் மேன்மேலும் வளர்ச்சியடைகின்ற பொழுது அது நிறைவேற்றப்படுகிறது.

மூன்றாவதாக, கற்பனாவாத சோஷலிசம் மனிதகுலத்துக்கு மற்றொரு சேவையையும் செய்திருக்கிறது.

சான்-சிமோன், ஃபூரியே, ஓவன் ஆகியோருடைய தத்துவங்கள் கற்பனாவாத சோஷலிசத்தின் சாதனை ஆகும்.

அக்கருத்துகளைச் செய்முறையில் நிறைவேற்றுவதற்கு எண்ணற்ற, இடைவிடாத முயற்சிகள் செய்யப்பட்டன. அவை வெற்றியடையவில்லை. எனவே அக்கருத்துகளைச் செய்முறையில் நிறைவேற்ற முடியாது என்பது தெளி வாயிற்று. ஒரு தத்துவம் உண்மையானதா, விஞ்ஞான ரீதியானதா என்று சோதித்துப் பார்ப்பதற்கு செய்முறையே உரைகல்; எந்த சமூகத் தத்துவத்துக்கும் முடிவான தீர்ப்பு வழங்குவது அதுவே. ஆகவே கற்பனாவாத சோஷலிஸ்டு களின் திட்டங்கள் நிறைவேற முடியாதவை என்ற உண்மை அவை குறைபாடுள்ளவை, தத்துவ ரீதியில் செல்லத் தகாதவை என்பதை எடுத்துக்காட்டியது.

கற்பனாவாத சோஷலிசம் ''குழந்தைப் பருவ நோய்''. மனிதகுலம் சமூகத்தின் வளர்ச்சியைப் பற்றிய விதிகளையும் அதை மாற்றுகின்ற வழிமுறைகளையும் பற்றி எதார்த்த மான, விஞ்ஞான ரீதியான அறிவைப் பெற வேண்டு மென்றால் அந்தக் கட்டத்தைக் கடந்து வர வேண்டும். கற்பனாவாத சோஷலிஸ்டுகளின் அனுபவம் உதாரணமாக இல்லையென்றால் மனிதர்கள் வெறும் நீதிக் கருத்துகளைப் போதிப்பதன் மூலம் உலகத்தை மாற்றுவதற்குத் திரும்பத் திரும்ப முயன்றிருப்பார்கள். மனிதகுலம் புதிய வாழ்க் கைக்கு மாற வேண்டுமென்றால் முற்றிலும் வேறு வழிகளைத் தேட வேண்டும் என்பதை அவர்களுடைய உதாரணம் மிக நன்றாக எடுத்துக்காட்டியது. ஆகவே கற்பனாவாத சோஷலிசம் சோஷலிசச் சிந்தனையின் வர லாற்றில் இன்றியமையாத கட்டமாக இருந்தது. அது விஞ்ஞான ரீதியான தத்துவம் தோன்றுவதற்குக் களத்தைத் தயாரிப்பதில் உதவியது. அதனால்தான் முற்போக்கான மனிதகுலம், மகிழ்ச்சி நிரம்பிய வாழ்க்கைக்கு மாறுவதற்கு வழிகளைக் கண்டுபிடிக்க முயற்சிகளைச் செய்ததற்காக, அந்த முட்பாதையில் நடந்த பொழுது துன்பங்களைச்

சகித்துக் கொண்டதற்காக இத்தலைசிறந்த சோஷலிஸ்ட் சிந்தனையாளர்களைப் போற்றுகிறது.

19ஆம் நூற்றாண்டில் அவர்களுடைய கருத்துகள் ஐரோப் பாவில் மட்டுமின்றி, மற்ற கண்டங்களிலும் பரவின. அவை லத்தீன் அமெரிக்க நாடுகளில் பரவி மக்களினங்கள் தேசிய சுதந்திரத்துக்கு நடத்திய போராட்டத்துக்கு உத்வேகமூட் டின.

ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா வில் கற்பனாவாத சோஷலிச மற்றும் ஜனநாயகக் கருத்துகள் உலகம் முழுவதும் மார்க்சியக் கருத்துகள் பரவு வதற்கு வழிவகுத்தன.

## அவர்கள் கற்பனாவாதிகளாக இருந்தது ஏன்?

*கற்பனாவாத சோஷலிசத்தின் பிரத்யேகமான வரலாற்று வரையறைகள் எவை?*

கற்பனாவாத சோஷலிஸ்டுகள் முதலாளித்துவ அமைப் பைக் குறை கூறினார்கள்; ஆனால் அந்த அமைப்பின் விதிகளை, அதன் செயல்முறை மற்றும் வளர்ச்சியை அதாவது அதை அழிக்கப்போகின்ற முரண்பாடுகளைப் புரிந்து கொள்வதற்குத் தவறினார்கள். அவர்கள் வெளித் தோற்றங்களை மட்டுமே பார்த்தார்கள். ஒரு நபர் மிகவும் ஆழமான, வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்ற ஆற்றின் கரை யிலிருந்து அதைப் பார்க்கும் பொழுது மேற்பரப்புக்குக் கீழே இருக்கின்ற சக்திவாய்ந்த நீரோட்டத்தைப் பார்ப்ப தில்லை; ஆற்றின் மேற்பரப்பின் மீது ஏற்படுகின்ற நுரையை யும் வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்ற அல்லது நீர்ச் சுழலுக்குள் இழுக்கப்படுகின்ற இலைகளையும் குச்சிகளை யும்தான் பார்க்கிறார்.

அதைப் போலவே கற்பனாவாத சோஷலிஸ்டுகளும் முதலாளித்துவத்தின் மேற்பரப்பை மட்டுமே பார்த்தார்கள்; அவர்களால் முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படையான குறைகளை எடுத்துக் கூற முடியவில்லை. முதலாளித்துவத்தை ஒழித்து புதிய, நியாயமான சமூகத்தைப் படைக்கக் கூடிய தகுதிவாய்ந்த உண்மையான சக்தியை அவர்கள் பார்ப்பதற்குத் தவறினார்கள். பாட்டாளி வர்க்கம் அப்பொழுதுதான் தோன்றிக் கொண்டிருந்தது; அது சுயேச்சையான அரசியல் நடவடிக்கையைச் செய்ய முடியாது. அதனால்தான் சோஷலிஸ்டுகள் உழைக்கும் மக்களைத் துன்பங்களில் வாடுகின்ற, ஒடுக்கப்படுகின்ற மக்களாக, பரோபகார உணர்ச்சியுடைய தனிநபர்களால் வெளியிலிருந்து உதவி செய்யப்பட வேண்டிய மக்களாகக் கண்டார்கள். புதிய சமூகத்தை அமைப்பதற்கு இட்டுச் செல்கின்ற மெய்யான பாதையை, புரட்சிகரப் போராட்டம் மற்றும் சோஷலிஸ்ட் புரட்சி என்ற பாதையை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. அவர்கள் மனமாற்றத்திலும் கருத்துகளைப் பிரசாரம் செய்வதிலும் முழு நம்பிக்கை வைத்தார்கள். ''பழைய சமூகத்தில் புதிய சமூகத்தின் கூறுகள் அன்று இன்னும் வெளியே தெரியாததால் அவர்கள் அவற்றைத் தங்களுடைய மூளையில் உற்பத்தி செய்ய வேண்டியிருந்தது.'' *

முதலாளித்துவ சமூகத்தின் முரண்பாடுகளைப் புரிந்து கொண்டால் மட்டுமே சோஷலிச மாற்றத்துக்குரிய சரியான வழிகளை, எதிர்கால சமூகத்தின் நியதிகளைக் கண்டுபிடிக்க முடியும். கற்பனாவாதிகளால் இதைச் செய்ய முடியவில்லை; எனவே அவர்களால் மற்ற பிரச்சினைகளையும் விஞ்ஞான ரீதியாக ஆராய முடியவில்லை.

---

* F. Engels, *Anti-Dühring*, pp. 314—315.

கற்பனாவாத சோஷலிசத்தின் வரையறைகளுக்குக் காரணம் என்ன? அந்த சகாப்தத்தின் புறவய நிலைமைகள் அவற்றுக்குக் காரணம் எனலாம். தத்துவம் எப்பொழுதுமே நடைமுறையை ஏதாவதொரு வழியில் பிரதிபலிக்கிறது. அக்காலத்தின் சமூக வாழ்க்கை சோஷலிச மாற்றத்துக்கு இன்னும் முதிர்ச்சியடையவில்லை. அதில் ஏற்படுகின்ற சோஷலிஸ்ட் கருதுகோள்கள் முதிர்ச்சியற்ற நிலையில்தான் இருக்க முடியும்.

கற்பனாவாத சோஷலிசத்திலிருந்து எத்தகைய முடிவு களைப் பெற முடியும்? அதை ஏன் கற்க வேண்டும்?

முதலாவதாக, கற்பனாவாத சோஷலிசத்தைக் கற்பதன் மூலம் பல்வேறு நாடுகளிலுள்ள சிறந்த மேதைகள் நியாய மான சமூகம் ஏற்பட வேண்டுமென்று நெடுங்காலத்துக்கு முன்பே விரும்பியதை அறிகிறோம். ஆகவே இன்றுள்ள சோஷலிசம் என்பது வரலாற்றில் தற்செயலான நிகழ்வு அல்ல; அது மனிதகுலத்தின் நெடுங்காலக் கனவின் ஈடேற்ற மாகும்.

இரண்டாவதாக, கற்பனாவாத சோஷலிசம் முதிர்ச்சி யில்லாத முதலாளித்துவ உறவுகளின் படைப்பாகும். அத் தகைய உறவுகள் பல நாடுகளில் முடிவடைந்து விட்டன; ஆனால் எல்லா நாடுகளிலும் அப்படி முடிவடையவில்லை. இன்று பல நாடுகளும் மக்களினங்களும் வரலாற்று வளர்ச்சி யில் அத்தகைய கட்டத்தில் இருக்கின்றன. அதனால்தான் கற்பனாவாத சோஷலிசத்தை மிகவும் ஒத்திருக்கின்ற தத்து வங்கள் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் அவ்வப் பொழுது தோன்றுகின்றன. ஆகவே கற்பனாவாத சோஷ லிசத்தைக் கற்பது இன்றைய சித்தாந்தப் போக்குகளுக்கு மத்தியில் நம்முடைய நிலையை அறிந்து கொள்வதற்கு உதவுகிறது. சில தத்துவங்கள் புதியவை போலத் தோன்று கின்றன; ஆனால் அவை உண்மையிலேயே பழமையான

வை, வாழ்க்கையே அவற்றை ஒழித்தது. கற்பனாவாத சோஷலிசத்தைப் பற்றிய நமது அறிவு அவற்றைச் சரியான முறையில் மதிப்பிடுவதற்கு உதவுகிறது.

மூன்றாவதாக, பூர்ஷ்வா சித்தாந்திகள் சோஷலிசச் சிந்தனை வரலாற்றைத் திரித்து மறைப்பதன் மூலம் சோஷலிசத் தத்துவத்தையும் அதன் செய்முறையையும் மாசுபடுத்த முயற்சி செய்கிறார்கள். அவர்கள் கற்பனாவாத சோஷலிசத்தின் மிகவும் பலவீனமான கருத்துகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் திரித்துக் கூறுகிறார்கள், அவற்றை விஞ்ஞான கம்யூனிசத்துடன் இனங்காணுகிறார்கள். உதாரணமாக, கம்யூனிஸ்டுகள் குடியிருப்புகள், உடைகள், உணவு, மனிதனுடைய தேவைகள், விருப்பங்கள் ஆகியவற்றில் ஒரே ரகத்தை ஏற்படுத்துகின்ற அமைப்பை நிறுவுவதற்குப் பாடுபடுகிறார்கள் என்று முதலாளித்துவ ஆதரவாளர்கள் அடிக்கடி பிரசாரம் செய்கின்றனர். அத்தகைய சமூகத்தில் எல்லோரும் எறும்புப் புற்றில் உள்ள எறும்புகளைப் போல ஒரே மாதிரியாக இருப்பார்கள், தனித்தன்மை என்பது இருக்காது என்று சொல்கின்றனர். சோஷலிச சமூகத்தில் தனிநபரைப் பற்றி இத்தகைய கருத்துகளைக் காட்டிலும் உண்மைக்கு மாறானவை வேறு இருக்க முடியாது.

நான்காவதாக, கற்பனாவாத சோஷலிசத்தை அறிதல் விஞ்ஞான கம்யூனிசத்துடன் அதன் தொடர்பைப் பார்ப்பதற்கு மட்டுமின்றி இரண்டுக்கும் இடையிலுள்ள அடிப்படையான வேறுபாட்டைப் புரிந்து கொள்வதற்கும் உதவுகிறது. கற்பனாவாத சோஷலிசம் ஒரு கனவு, கற்பனை; விஞ்ஞான கம்யூனிசமானது பல்வேறு கண்டங்களில் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்ற விஞ்ஞான தத்துவம்.

ஒரு காலத்தில் கற்பனாவாதமாக இருந்த சோஷலிசம் விஞ்ஞானமாக எப்படி வளர்ச்சி அடைந்தது? அடுத்த அத்தியாயத்தில் இதற்கு பதிலளிப்போம்.

அத்தியாயம் இரண்டு

# விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தை உருவாக்குதல்

கடந்த கால சோஷலிசத் தத்துவங்கள் விஞ்ஞான கம்யூனிசத்துக்குப் பாதை அமைத்தன; ஆனால் அது சமூக எதார்த்தத்தின் அவசியங்களினால் மெய்யாகத் தோன்றியது. அந்த விஞ்ஞானத்தைப் படைத்த நிலைமைகள் யாவை?

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றியது. அக்காலத்திலேயே முதலாளித் துவம் சில ஐரோப்பிய நாடுகளில் மிக அதிகமான வளர்ச்சி நிலையை எட்டியிருந்தது. அதற்கு இயல்பான உள் முரண்பாடுகளும் வளர்ச்சியடைந்திருந்தன; பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் தீவிர மான போராட்டம் மேன்மேலும் அதிகரித்துக் கொண் டிருந்தது. தொழிலாளி வர்க்கம் புதிய, சுதந்திரமான அரசியல் சக்தியாக வரலாற்றுக் களத்தில் தோன்றியது. பிரான்சில் லியோனில் நடைபெற்ற எழுச்சியும் பிரிட்டனில் சாசனவாத இயக்கமும் ஜெர்மனியில் சிலேசிய நெசவாளர் களின் எழுச்சிகளும் இதர சமூக இயக்கங்களும் தொழிலாளி வர்க்கத்தின் வருகையை அறிவித்தன. முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட் டம் மேன்மேலும் உறுதியாகவும் பரந்த அளவிலும் நடை

பெற்றது. அந்தப் போராட்டத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் அன்றைய எதார்த்தங்களை ஆராய்வதோ, எதிர்கால சமூகத்தைப் பற்றித் திட்டமிடுவதோ இனி ஒருபோதும் சாத்தியமல்ல என்ற நிலை ஏற்பட்டது. அன்றைய காலகட்டத்தின் தொழிலாளர் இயக்கம், நடை பெற்றுக் கொண்டிருந்த சம்பவங்களைப் பற்றிப் புதிய அணுகுமுறை அவசியம் என்று வலியுறுத்தியது.

சமூக வாழ்க்கையை அறிதல் லாபகரமாக, சுதந்திரப் போட்டியை ஊக்குவிப்பதாக, முதலாளிகளின் வர்க்க ஆதிக்கத்தை வலுப்படுத்துவதாக இருக்கின்ற அளவில் மட்டுமே முதலாளி வர்க்கம் அதை அறிந்து கொள்வதற்கு விரும்புகிறது. ஆனால் பாட்டாளி வர்க்கம் அதற்கு எதிரிடை யானது. அது சமூக வாழ்க்கை முழுவதையும், சமூகத் தின் செயல்முறை மற்றும் வளர்ச்சியின் விதிகளை ஆழமாக அறிவதில் அக்கறை கொண்டிருக்கிறது. ஏனென்றால் பாட் டாளி வர்க்கத்தின் வாழ்க்கை சமூகத்தின் எல்லாத் துறை களுடனும் தொடர்புடையதாக இருக்கிறது. அது சமூக வளர்ச்சியின் முற்போக்கான போக்குகளை எடுத்துரைக் கிறது. அது தன் விடுதலையைச் சாதிக்க வேண்டுமென்றால் தன்னுடைய சொந்த இயல்பை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொண்டிருப்பது மட்டுமன்றி முதலாளித்துவ சமூகத் தின் உள் செயல்முறைகளை எவ்விதமான கற்பனையுமில்லா மல் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் முதலாளித்துவம் மனிதகுலத்தின் வளர்ச்சி என்ற ஏணியில் ஒரு படி மட்டுமே. ஆகவே அந்தப் படியைப் புரிந்து கொள்வதற்கும் அதற்கு மேலே செல்வதற்கும் மனிதகுலத்தின் மொத்த வரலாற்றை யும் புரிந்து கொள்வது அவசியம்.

ஆகவே சமூக வளர்ச்சியின் விதிகளைப் பற்றி விஞ்ஞான ரீதியான அறிவு பாட்டாளி வர்க்கத்தின் முக்கியமான தேவை; ஏனென்றால் அந்த அறிவைப் பெறாமல் பாட்

டாளி வர்க்கம் தன்னுடைய நிலையை அபிவிருத்தி செய்வதற்கும் அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கும் வெற்றிகரமான போராட்டத்தை நடத்த முடியாது. உழைக்கும் மக்கள் வலிமையான ஆன்மீக ஆயுதம் என்ற முறையில் விஞ்ஞானத் தத்துவத்தைக் கோரினார்கள். கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் அத்தகைய ஆயுதத்தைக் கொடுத்தார்கள். அவர்கள் விஞ்ஞான சோஷலிசத் தத்துவத்தை உருவாக்கி ஒரு காலத்தில் கனவாக, கற்பனையாக இருந்த சோஷலிசத்தை விஞ்ஞானமாக மாற்றினார்கள்; இத்தத்துவம் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆயுதமாகியது.

## கற்பனாவாதத்திலிருந்து விஞ்ஞானத்தை நோக்கி

**வரலாற்றுப் பொருள்முதல்வாதம்.** மார்க்ஸ் மற்றும் எங்கெல்சுக்கு முந்திய சிந்தனையாளர்கள் எல்லோரும் மனிதகுலத்தின் வரலாற்றைக் கருத்துமுதல்வாத நோக்கில் பார்த்தார்கள். அவர்கள் கருத்துகளிலும் தத்துவங்களிலும் மனித உணர்விலும் சமூக வளர்ச்சியின் பிரதான இயக்கு சக்தியைக் கண்டார்கள். ஆகவே அவர்களுக்கு சமூக முன்னேற்றம் என்பது புதிய கோட்பாடுகள், அறிவுப் பெருக்கம், இதரவற்றின் உந்துதலினால் ஏற்பட்டது. சில தத்துவஞானிகள் மனிதகுலம் புதிய வளர்ச்சிக் கட்டத்துக்கு மாறியதை மதங்கள் மாறியதுடன் தொடர்புடையதாகக் கருதினார்கள்; வேறு சிலர் கலையின் மாற்றங்களுடனும் இன்னும் சிலர் விஞ்ஞான வளர்ச்சியுடனும் சம்பந்தப்படுத்தினார்கள். அவர்கள் பின்வரும் முறையில் வாதிட்டார்கள்.

மனிதனுடைய புறச்சூழல், அவனுடைய வாழ்க்கை நிலைமைகள் அவன் எந்த அளவுக்கு நல்லவன் அல்லது கெட்டவன்

என்பதை நிர்ணயிக்கின்றன. ஆகவே மனிதனை முன்னேற்ற வேண்டுமென்றால் அவனுடைய வாழ்க்கைச் சூழலை மாற்றி யமைக்க வேண்டும். இது மிகவும் உண்மையே. ஆனால் புறச்சூழலில், மனிதனுடைய வாழ்க்கை நிலைமைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் எதை அடிப்படையாகக் கொண் டிருக்கின்றன? இவை அரசர்கள், இராணுவத் தலைவர்கள், அரசாங்கத் தலைவர்கள், சிந்தனையாளர்கள் ஆகிய தனிநபர்களின் கருத்துகள், சித்தம், உணர்வு, இரக்கம், கல்வித் தரம் ஆகியவற்றைச் சார்ந்திருக்கின்றன என்று கருத்துமுதல்வாதிகள் கூறினார்கள். ஆனால் இவர்கள் தம்முடைய சொந்த விருப்பத்தின்படி உலகத்தை மாற்றிவிட இயலுமா? மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் முன்னால் எந்த சிந்தனையாளரும் இந்த முக்கியமான கேள்விக்குச் சரியான, விஞ்ஞான ரீதியான பதிலை அளிக்க முடியவில்லை.

மார்க்சுக்கு முந்திய சிந்தனையாளர்கள் வரலாற்றைப் பற்றிக் கருத்துமுதல்வாத நோக்கைக் கொண்டிருந்தார் கள்; எனவே புதிய கருத்துகளைப் பரப்புவதும் கல்விப் பெருக்கமும் சமூகத்தை மாற்றுவதற்குரிய வழி என்று கருதினார்கள். மனிதகுலத்தின் தலைசிறந்த மேதைகள் அன்றைய சமூக அமைப்பிலிருந்த குறைகளை அகற்ற வேண்டும், புதிய, இன்னும் பூரணமான ஒரு சமூக அமைப் பைக் கண்டுபிடிக்க வேண்டும், அதைப் பிரசாரத்தின் மூலமாகவும் இயலுமானால் நேரடியான உதாரணங்களின் மூலமாகவும் சமூகத்தின் மீது சுமத்த வேண்டும் என்று அவர் கள் கருதினார்கள்.

கற்பனாவாத சோஷலிஸ்டுகள் சமூக வாழ்க்கையைப் பற்றிய கருத்தில் கருத்துமுதல்வாதிகளாக இருந்தார்கள். அவர்களுடைய கோட்பாடுகளின் உள்ளடக்கமும் அவர்கள் சமூக மாற்றத்துக்கு முன்வைத்த வழிமுறைகளும் அதைப் பிரதிபலித்தன. கருத்துமுதல்வாதம் தவிர்க்க முடியாதபடி

கற்பனாவாதத்துக்கு இட்டுச் செல்லும். ஆகவே சமூக வளர்ச்சியை சரியாகப் புரிந்து விளக்க வேண்டுமென்றால் பொருள்முதல்வாதத்தைப் பின்பற்ற வேண்டும். அதன் சாராம்சம் என்ன?

மார்க்சும் எங்கெல்சும் பொருள்முதல்வாத அணுகு முறையை இயற்கை நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தியதுடன் சமூக வாழ்க்கையின் மெய்விவரங்களுக்கும் பயன்படுத்தினார் கள். முந்தியதைக் காட்டிலும் பிந்தியது மிகவும் முக்கிய மானதாகும். அவர்கள் சமூக வாழ்க்கையை ஆராய்கின்ற பொழுது மக்கள் வாழ்க்கைக்கு அவசியமான பொருட்களை எப்படி உற்பத்தி செய்கின்றார்கள் என்பதிலிருந்து முன் னேறிச் சென்றார்கள். மக்கள் உணவு, உடைகளை உற்பத்தி செய்கின்ற பொழுது, கட்டிடங்கள், தொழில்கள் முதலிய வற்றை நிர்மாணிக்கின்ற பொழுது பல்விதமான கருவிகளை யும் பொருளாயத மற்றும் தொழில்நுட்பச் சாதனங்களையும் உபயோகிக்கிறார்கள். அவற்றின் வளர்ச்சி நிலை முடிவில் அக்காலகட்டத்தின் தனித்தன்மைகளை நிர்ணயிக்கிறது. ஒரு சகாப்தம் மற்றொரு சகாப்தத்திலிருந்து உற்பத்தி செய்யப் படுகின்ற பொருட்களினால் வேறுபடவில்லை, வாழ்க்கைக்கு அவசியமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு எத்த கைய கருவிகள் உபயோகிக்கப்படுகின்றன என்பதே அந்த வேறுபாட்டை நிர்ணயிக்கிறது என்று மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். அதன்படி மனிதர்கள் திட்டவட்டமான (உற்பத்தி) உறவுகளின் அமைப்பில் ஈடுபடுகிறார்கள். உற்பத்தி உறவுகள் அரசியல் அமைப்பு, சமூக வர்க்கக் கட்டமைப்பு, சமூகத்தின் ஆன்மீக வாழ்க்கை ஆகியவற்றின் தனிக் கூறுகளை நிர்ணயிக்கின்றன.

கருத்துமுதல்வாதிகள் கூறியதைப் போல, சமூக வளர்ச்சி கருத்துகள் அல்லது தத்துவங்களை, உணர்வை அடிப்படை யாகக் கொண்டிருக்கவில்லை; அது பொருளாயத மதிப்பு

களின் உற்பத்தி முறையை அதாவது உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தி உறவுகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்று வரலாற்றுப் பொருள்முதல்வாதம் எடுத்துக்காட்டியது. உற்பத்திச் சக்திகளின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் அதற்குத் தகுந்த உற்பத்தி உறவுகளின் ரகத்தைக் கோருகிறது; உற்பத்தி உறவுகள் சமூக வாழ்க்கையின் மற்ற பிரிவுகளின் தனித்தன்மைகளை நிர்ணயிக்கின்றன.

வரலாற்றுப் பொருள்முதல்வாதத்திலிருந்து பெறப்படுகின்ற முக்கியமான முடிவு என்ன? இருக்கின்ற சமூக அமைப்பை மாற்றுவதற்கு பொருளாயத மதிப்புகளின் உற்பத்தி முறை என்னும் சமூகத்தின் அடிப்படையை — உற்பத்தி முறையின் பகுதி என்ற வகையில் உற்பத்தி உறவுகளின் இயல்பை — மாற்றுவது இன்றியமையாதது. உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமையை ஒழித்து சமூக உடைமையை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு உற்பத்திச் சக்திகள் முதிர்ச்சி அடைந்திருக்கின்றனவா என்பதை அரசியல் பொருளாதாரம் என்னும் மற்றொரு விஞ்ஞானம் ஆராய்கிறது.

ஒரு புதிய சமூக அமைப்புக்கு மாறிச் செல்வதன் இன்றியமையாமை மற்றும் சாத்தியத்தை சமூக வாழ்க்கையின் எந்தத் துறையில் தேட வேண்டும் என்பதைப் பொருள்முதல்வாதத் தத்துவஞானம் சுட்டிக் காட்டுகிறது. சமூகத்தை மாற்றியமைப்பதற்குரிய வழிமுறைகளைத் தேடுகின்ற முயற்சியில் அது கருத்துமுதல்வாதத்துக்கு எதிராகச் சரியான பாதையில் இருந்தது. முதலாளித்துவ சமூகத்தின் பொருளாதாரத் துறையை, உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளை ஸ்தூலமாகப் பகுப்பாய்வு செய்வதற்கு முன்னேற வேண்டும். கற்பனாவாதிகளைப் போல மனம் போனபடி சமூக அமைப்புகளைக் கற்பனை செய்வதற்குப் பதிலாக எதார்த்தத்தைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும். தத்துவஞானம் இந்தப் பிரச்சினையின் தீர்வை அரசியல்

பொருளாதாரத்துக்கு ஒதுக்கியது.

மார்க்ஸ் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை உருவாக்கியதைப் போல அந்தப் பிரச்சினையையும் மேதாவிலாசத்துடன் தீர்த்தார். அவர் முதலாளித்துவ உற்பத்தி முறையின் அடிப்படையான விதியைக் கண்டுபிடித்தார். அவர் வாழ்க்கையின் சாதனையாகக் கருதிய **மூலதனம்** என்னும் நூலில் அந்த விதி வகுத்தளிக்கப்பட்டு, ஒவ்வொரு வழியிலும் நிரூபிக்கப்பட்டது. அந்த நூலின் முதல் தொகுதி மார்க்சினுடைய வாழ்க்கைக் காலத்தில் 1867ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. மார்க்ஸ் மரணமடைந்த பிறகு எங்கெல்ஸ் அடுத்த மூன்று தொகுதிகளைப் பிரசுரத்துக்குத் தயாரித்து வெளியிட்டார்.

**உபரி மதிப்பு விதியைக் கண்டுபிடித்தல்.** முதலாளித்துவ சமூக வளர்ச்சியின் அடிப்படைப் பொருளாதார விதி உபரி மதிப்பு விதி ஆகும். ‘‘உபரி மதிப்பை உற்பத்தி செய்தல் இந்த உற்பத்தி முறையின் தனிமுதலான விதி’’ என்று மார்க்ஸ் எழுதினார்.* அந்த விதி முதலாளித்துவச் சுரண்டலின் சாராம்சத்தை, முதலாளி வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் ஜீவாதார நலன்கள் நேரெதிரானவை, சமரசப்படுத்த முடியாதவை என்ற உண்மையை வெளியிட்டது.

முதலாளி தொழிலாளியை வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்; தொழிலாளி முதலாளியிடம் தன்னுடைய உழைப்பை விற்பனை செய்கிறார். இந்த நடவடிக்கை முற்றிலும் சமத்துவத்தைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. நிலப்பிரபுத்துவ அமைப்பில் இருந்ததைப் போல, அவர்களுக்கு இடையில் தனிப்பட்ட சார்புநிலை இல்லை. ஆனால்

---

* K. Marx, *Capital*, vol. 1, Moscow, Progress Publishers, 1974, p. 580.

பெயரளவிலான இந்த சமத்துவத்துக்குப் பின்னால் ஆழமான சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வு இருக்கிறது.

முதலாவதாக, தொழிலாளி தன்னுடைய உழைப்பை விற்பனை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார். அப்படிச் செய்யவில்லை என்றால் அவர் உயிர்வாழ முடியாது. ஏனென்றால் அவர் உழைப்பதற்கு அவசியமான உற்பத்திச் சாதனங்கள் முதலாளியின் உடைமையாக இருக்கின்றன. இரண்டாவதாக, தொழிலாளி ஒரு நாளில் உழைக்கின்ற நேரம் அவசியமான நேரம், உபரி நேரம் என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கிறது. தொழிலாளி அவசியமான நேரத்தில் அவசியமான பொருளை உற்பத்தி செய்கிறார். அதன் மதிப்பு அவருடைய உழைப்புச் சக்தியின் மதிப்புக்குச் சமமாக இருக்கிறது. தொழிலாளி உபரி நேரத்தில் உபரிப் பொருளை உற்பத்தி செய்கிறார். அதன் மதிப்பு உபரி மதிப்பு எனப்படுகிறது. இந்தப் பொருளை முதலாளி கூலி கொடுக்காமல் சுவீகரித்துக் கொள்கிறார். அது உபரி உற்பத்திப் பொருள் அல்லது லாபம் எனப்படுகிறது.

முதலாளி தனக்கு அதிகமான லாபத்துக்காக முயல்கின்ற பொழுது தொழிலாளர்களை மிகவும் தீவிரமாகச் சுரண்டு கிறார்; அதைப் பல்வேறு வழிகளில் செய்கிறார். வேலை நேரத்தை அதிகப்படுத்துவது மிகவும் சாதாரண முறை யாகும். வேலை நேரம் அதிகரிக்கின்ற அளவுக்கு முதலாளி சுவீகரிக்கின்ற உபரி உற்பத்திப் பொருளும் அதிகமாக இருக்கும். ஆனால் வேலை நேரத்தை அதிகப்படுத்துவதற்கு இயற்கையான வரையறைகள் இருக்கின்றன. ஏனென்றால் தொழிலாளி உணவருந்த வேண்டும், உறங்க வேண்டும், ஓய்வெடுக்க வேண்டும், இதரவை. அவர் இன்று ஓய் வெடுத்துக்கொண்டு தன்னுடைய சக்தியைத் திரும்பப் பெறா விட்டால் நாளை அவர் குறைவாகவே உற்பத்தி செய்வார். மேலும் சமூக இயக்கத்தின் ஆரம்பகால முதலே தொழிலா

ளர்கள் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று இடைவிடாமல் போராடி வந்திருக்கிறார்கள்; முதலாளித் துவ அரசு அத்திசைவழியில் சில சட்டங்களை நிறை வேற்றியிருக்கிறது. அதனால்தான் முதலாளிகள் லாபத்தை அதிகமாக்குவதற்கு அதிகப் பயனுள்ள மற்றொரு முறை யைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் உழைப்புச் சக்தியின் மதிப்பைக் குறைப்பதற்குத் தொடர்ச்சியாக முயல்கிறார் கள். வேலை நேரத்தைக் குறைக்காதிருக்கின்ற பொழுது, உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைகின்ற அளவுக்கு முதலாளி சுவீகரித்துக் கொள்கின்ற உபரி மதிப்பு அதிகமாக இருக்கும்.

ஆனால் உழைப்புச் சக்தியின் மதிப்பைக் குறைப்பது எப்படி? அதற்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களின் விலை மலிவாக இருக்க வேண்டும். பிரதானமாக உழைப்பின் உற்பத்தித் திறனை இடைவிடாது அதிகப்படுத்துவதன் மூலம், புதிய இயந்திரங்களையும் தொழில்நுட்பத்தையும் உபயோகிப்பதன் மூலம், தொழிலாளர்களின் உழைப்பைத் தீவிரமாக்குவதன் மூலம் இதை நிறைவேற்ற முடியும். ஆகவே முதலாளி தன்னுடைய சுயநல நோக்கங்களுக்காக, அதாவது லாப வேட்டைக்காக உற்பத்தியை அபிவிருத்தி செய்வதும் வளர்ப்பதும் அவசியமாகிறது. இதன் விளைவு என்ன?

முதலாவதாக, உழைப்பின் மீது மூலதனத்தின் சக்தி, உழைக்கும் மக்கள் மீது சுரண்டுபவரின் சக்தி அதிகரிக்கத் தொடங்குகிறது. உழைப்புச் சக்தியின் தேவை குறைகிறது. அதன் விளைவாக தொழில்துறை சேமப்படை, அதாவது வேலையில்லாதவர்கள் படை உருவாகிறது. மூலதனம் பெரும்பான்மையும் இரண்டு காரணங்களுக்காக அதை விரும்புகிறது. முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்தி தன்னிச் சையாக நடைபெறுகிறது, அதாவது மந்தமான கட்டங் களும் மீட்சிக் கட்டங்களும் மாறிமாறி வருகின்றன. எனவே

உழைப்புச் சக்தியின் தேவை மாறிக் கொண்டே இருக்கிறது. உற்பத்தி மந்தமாக இருக்கின்ற பொழுது வேலையில்லாதவர் களுடைய எண்ணிக்கை அமோகமாகப் பெருகிவிடுகிறது. உற்பத்தியில் மீட்சி ஏற்படுகின்ற பொழுது அதிகமாகத் தேவைப்படுகின்ற தொழிலாளர்களைத் தருவதற்கு சேமப் படை உதவுகிறது. இதைத் தவிர வேலையில்லாத் திண் டாட்டம், முதலாளி வேலையில் இருப்பவர்களைத் தீவிர மாகச் சுரண்டுவதற்கு உதவுகிறது. அவர்கள் வேலை போய் விடுமோ என்று அஞ்சிக்கொண்டே இருக்கிறார்கள்; ஆகவே முதலாளிகளை எதிர்த்துப் போராடுவதற்கு முன்வரு வதில்லை. மிகையுற்பத்தியின் நெருக்கடிகள் தொடர்ச்சி யாக ஏற்படுதல், பணவீக்கம், விலை ஏற்றம், பொருளா தாரம் இராணுவமயமாக்கப்படுதல் ஆகியவை முத லாளித்துவ உற்பத்தி முறை வளர்ச்சி அடைவதன் தவிர்க்க முடியாத விளைவுகளாகும்.

ஆனால் மார்க்ஸ் அந்த உற்பத்தி முறையின் பிற் போக்கான போக்குகளை எடுத்துக்காட்டுவதுடன் நின்று விடவில்லை; அவர் அதிலிருந்து பிறக்கின்ற வேறு சில முற்போக்கான போக்குகளையும் சுட்டிக் காட்டினார். உற்பத்தியின் குவிப்பு மற்றும் மத்தியப்படுத்துதல், உழைப் பின் கூட்டு வடிவத்தின் வளர்ச்சி, விஞ்ஞானத்தின் சாதனை களை உணர்வு பூர்வமாகப் பயன்படுத்துதல் ஆகிய நிகழ்வுப் போக்குகள் மேன்மேலும் தீவிரமடைகின்ற பொழுது அவை உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமையுடன் மோது கின்றன. சமூக உற்பத்தி என்பது தனிநபர்களுடைய நன் மைக்காக இல்லாமல் சமூகத்தின் மொத்த நன்மைக்காகவும் நடைபெற வேண்டிய அவசியம் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் உற்பத்திச் சாதனங்கள் மொத்த சமூகத்தின் உடை மையாக மாறினால் மட்டுமே இது சாத்தியம்.

முதலாளித்துவ சமூகம் அதன் உள்ளுறையான விதிகளின்

அடிப்படையில் இயங்குதல் அதன் வளர்ச்சிக்கும் சுய மறுப்புக்கும் இட்டுச் செல்வதை மார்க்ஸ் மூலதனம் என்னும் நூலில் எடுத்துக்காட்டினார். ஆகவே முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிசத்தை ஏற்படுத்துதல் அவசியம் என்பது ஒரு தனிநபருடைய கற்பனையில் தோன்றவில்லை; அது முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி உருவாக்கிய அவசியமாகும். முதலாளித்துவ உற்பத்தி முறையின் இந்த விதியைக் கண்டுபிடித்த பிறகு மார்க்ஸ் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாற வேண்டிய அவசியத்தையும் சாத்தியத்தையும் பொருளாதார இனங்களில் நிறுவினார்.

முதலாளித்துவம் தவிர்க்க முடியாதபடி அழியும் என்ற முடிவுக்கு அது தானாகவே, தன்னியல்பான முறையில் மறைந்துவிடும் என்று அர்த்தமல்ல. முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கு விசேஷமான சமூக சக்தியும் அதன் சுறுசுறுப்பான நடவடிக்கையும் அவசியம். இன்றைக்கிருக்கின்ற வர்க்கங்களில் அத்தகைய சக்தியைக் கொண்ட வர்க்கம் எது? சுரண்டல், வறுமை, உரிமையற்ற நிலை ஆகியவற்றை ஒழிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? புதிய மற்றும் நியாயமான சமூகத்தை நிர்மாணிப்பதற்கு எந்தப் பாதையில் செல்ல வேண்டும்?

இவை கட்டாயமான கேள்விகள். இக்கேள்விகளுக்குப் பதில் கூறுமாறு வாழ்க்கை, உழைக்கும் மக்களின் போராட்டம் கோருகிறது. கற்பனாவாத சோஷலிசம் இவற்றுக்குப் பதிலளிக்க முடியவில்லை. ஆனால் மார்க்சும் எங்கெல்சும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மற்றும் உபரி மதிப்பு விதியின் உதவியுடன் இப்பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியான தீர்வுகளைக் கொடுத்தார்கள். அதன் மூலம் சோஷலிசம் என்ற நீண்டகாலக் கனவை ஒரு விஞ்ஞானமாக மாற்றினார்கள். அந்த விஞ்ஞானம் பிறகு வாழ்க்கையினால் நிரூபிக்கப்பட்டது.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் இயற்கையான விளைவாகப் பாட்டாளி வர்க்கம் தோன்றியிருக்கிறது என்று மார்க்சும் எங்கெல்சும் எடுத்துக்காட்டினார்கள். முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடு, உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடு உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமை மீது மிகவும் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்கிறது.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் உற்பத்தியின் வளர்ச்சியுடன் உழைக்கும் மக்களின் தேவைகளும் அதிகரிப்பதற்கு முற்படுகின்றன. ஆனால் ஒரு சராசரி வாழ்க்கைக்கு அவசியமான அளவுக்குக் கூட அவை நிறைவேற்றப்படுவதில்லை. உழைக்கும் மக்களின் தேவைகளுக்கும் அவை நிறைவேற்றப்படுகின்ற அளவுக்கும் இடையிலான இடைவெளி உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமையினால் ஏற்படுகிறது. உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்டிருக்கின்ற முதலாளி உபரி மதிப்பைத் தொழிலாளர்கள் நலனுக்கு உபயோகிக்காமல் தனக்கு உரியதாக்கிக் கொள்கிறார்.

ஆனால் தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டுவது தீவிரமடைகின்ற பொழுது அதன் அரசியல் முதிர்ச்சி அதற்கேற்ப வளர்ச்சி அடைகிறது. அதன் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கிறது. பிரதானமாக, முதலாளித்துவ உற்பத்தி நிகழ்வுப் போக்கின் பொறியமைவினாலேயே தொழிலாளர்கள் கல்வி கற்றிருக்கிறார்கள், ஒற்றுமையாக இருக்கிறார்கள், அமைப்பு ரீதியாகத் திரட்டப்படுகிறார்கள். ஆகவே அதன் புறவய நிலை சுரண்டல் அமைப்பைத் தூக்கியெறியக் கூடிய தகுதியுள்ள ஒரே வர்க்கமாக அதை ஆக்குகிறது. கற்பனாவாத சோஷலிஸ்டுகள் தலைசிறந்த

மேதைகள்தான் சமூகத்தை மாற்ற முடியும் என்று கருதி அவர்கள் மீது முழு நம்பிக்கை வைத்தார்கள்; ஆனால் மார்க்சும் எங்கெல்சும் முதலாளித்துவத்தை ஒழித்து சோஷலிசத்தை நிறுவக் கூடிய தகுதியுடைய மெய்யான ஒரே சக்தி பாட்டாளி வர்க்கம் என்பதை அங்கீகரித்தார்கள். முதலாளித்துவ அமைப்புக்கு சவக்குழி தோண்டுவது பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமை என்னும் விஞ்ஞான சோஷலிசத்தின் கேந்திரமான கருதுகோளை அவர்கள் நிறுவினார்கள்.

பாட்டாளி வர்க்கம் தன்னையும் எல்லா உழைக்கும் மக்களையும் சமூக ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை செய்வதற்கு என்ன செய்ய வேண்டும், அதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்று எடுத்துக்காட்டுகின்ற விஞ்ஞான ரீதியான செயல்திட்டத்தைத் தயாரிப்பது உடனடிக் கடமையாக இருந்தது. ''யாராவது ஒரு பாட்டாளி அல்லது மொத்தப் பாட்டாளி வர்க்கமே கூட இத்தருணத்தில் தம்முடைய நோக்கம் என்று எதைக் கருதுகிறார்கள் என்பதல்ல பிரச்சினை. பாட்டாளி வர்க்கம் என்பது எப்படிப் பட்டது, இந்த இருத்தலுக்கு ஏற்ற முறையில் அது வரலாற்று ரீதியில் எதைச் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படும் என்பதே பிரச்சினை'' என்று மார்க்சும் எங்கெல்சும் எழுதினார்கள்.*

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கொடுக்கிறது. அது ஒடுக்கப்பட்டிருக்கின்ற அனைத்து மக்களுடைய விடுதலைக்கு வழிகளைக் காட்டுகிறது, சோஷலிஸ்ட் புரட்சியின் மூலமாக நியாயமான சமூகத்தை அமைப்பதற்கு இட்டுச் செல்கின்ற வர்க்கப்

---

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 4, Moscow, Progress Publishers, 1975, p. 37.

போராட்டத்தின் நியதிகளை எடுத்துக் கூறுகிறது. விஞ்ஞான கம்யூனிசத்தின் பாத்திரத்தை வரையறுக்கின்ற பொழுது எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''இந்த நடவடிக்கையின் வரலாற்று நிலைமைகளையும் ஆகவே அதன் இயல்பையும் முற்றாகப் புரிந்து கொள்வதன் மூலம் இப்பொழுது ஒடுக்கப்பட்டிருக்கின்ற பாட்டாளி வர்க்கத் துக்கு அது நிறைவேற்றுமாறு பணிக்கப்பட்டுள்ள மகத்தான நடவடிக்கையின் நிலைமைகளையும் அர்த்தத்தையும் பற்றி முழுமையான அறிவைக் கொடுப்பதுதான் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தத்துவ வெளியீடான விஞ்ஞான சோஷலிசத் தின் கடமை ஆகும்.'' *

பாட்டாளி வர்க்கம் தன்னை ஸ்தாபன ரீதியில் ஒழுங் கமைப்பதற்கு உணர்வு பூர்வமான முயற்சிகளைச் செய் கிறது, தன்னுடைய சொந்த அரசியல் கட்சிகளை நிறுவு கிறது; அவற்றின் தலைமையின் கீழ் சமூகத்தில் ஆட்சியதி காரத்தைப் பெறுவதற்குப் போராட்டத்தை ஆரம்பிக்கிறது. ஆட்சியதிகாரத்தைப் பற்றிய பிரச்சினை வர்க்கப் போராட் டத்தில் கேந்திரமாக இருக்கிறது. புரட்சியில் உழைக்கும் மக்கள் சமூகத்தில் ஆட்சியதிகாரத்தைப் பெற்று சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் உழைக்கும் மக்களின் நலன்களுக்காக உணர்வு பூர்வமாக, குறிவழிப்பட்ட முறை யில் மாற்றியமைக்கின்ற நோக்கத்துடன் பொருளாதார, சமூக, கலாசாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஆகவே விஞ்ஞான கம்யூனிசம் சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கும் சோஷலிசக் கோட்பாடுகளின் அடிப் படையில் அதை மேலும் வளர்ப்பதற்கும் உணர்வு

---

* K. Marx, F. Engles, *Selected Works*, in three volumes, vol. 3, Moscow, Progress Publishers, 1970, p. 151.

பூர்வமாகச் செய்யப்படுகின்ற நடவடிக்கையின் தத்துவம் ஆகும். தொழிலாளி வர்க்கம் இதர உழைக்கும் மக்களுடன் கூட்டணி அமைத்து மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் வழிகாட்டுதலில் செய்கின்ற குறிவழிப்பட்ட நடவடிக்கையில் உருவாக்கப்படுகின்ற கம்யூனிச சமூகத்தின் தயாரிப்பு, தோற்றம் மற்றும் வளர்ச்சியை இத்தத்துவம் பகுப்பாய்வு செய்கிறது.

விஞ்ஞான கம்யூனிசம் மார்க்சிய தத்துவஞானம் மற்றும் அரசியல் பொருளாதாரத்தின் தர்க்க ரீதியான தொடர்ச்சியும் முழுநிறைவுபடுத்தலும் ஆகும். இவற்றில் ஏற்பட்ட அடிப்படையான கண்டுபிடிப்புகளாகிய வரலாற்றுப் பொருள் முதல்வாதம், உபரி மதிப்பு விதி ஆகியவற்றின் அடிப்படையில் அதன் தோற்றம் சாத்தியமாயிற்று. உலகம் அறவழி சோஷலிசம், தேசிய சோஷலிசம், பிராந்திய சோஷலிசம் மற்றும் இதர பெயர்களில் உருவாக்கப்பட்ட பல சோஷலிசக் கருதுகோள்களை அறிந்திருக்கிறது. இவை அனைத்தும் சமூக வாழ்க்கையைப் பற்றி கருத்துமுதல்வாத நோக்கை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார ரீதியில் ஆதாரமில்லாதவை. இத்தகைய கருத்துகள் முதலில் எவ்வளவு கவர்ச்சிகரமாகத் தோன்றினாலும் விஞ்ஞானத்துக்குப் புறம்பாகவும் கற்பனாவாதமாகவும் இருக்கின்றன.

உண்மையான சமூக விஞ்ஞானத்தின் கடமை உலகத்தை விளக்குவது மட்டுமல்ல, அதை மனிதகுலத்தின் நலன்களுக்காக மாற்றுவதே. இக்கடமை விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தில் மிகவும் முழுமையான வடிவத்தை அடைந்திருக்கிறது. அதனால்தான் வி. இ. லெனின் அதை ''உலகிலுள்ள நாகரிக நாடுகளிலெல்லாம் தொழிலாளர் இயக்கத்தின் தத்துவமாகவும் வேலைத்திட்டமாகவும்'' கூறினார்.* தத்து

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1979, பக்கம் 49.

வஞான மற்றும் பொருளாதார இனங்களில் செல்தகைமையைக் கொண்டிருக்கின்ற விஞ்ஞான ரீதியான தத்துவம் மட்டுமே, எல்லா நாடுகளின் உழைக்கும் மக்களின் போராட்டம் மற்றும் நிர்மாணத்தின் அனுபவத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அதைப் பொதுமைப்படுத்துகின்ற தத்துவம் மட்டுமே, அவர்களுடைய செய்முறை நடவடிக்கைக்கு வழிகாட்டியாக இருக்க முடியும்.

ஆகவே விஞ்ஞான கம்யூனிசம் என்பது தொழிலாளி வர்க்கத்தின் சமூக பொருளாதார நலன்களின் தத்துவ ரீதியான வெளியீடாகும். உழைக்கும் மக்கள் தங்களுடைய விடுதலைக் கடமையை நிறைவேற்றுவதற்குத் தாங்கள் அணிதிரண்டு ஸ்தாபன ரீதியாக ஒழுங்கமைக்க வேண்டும் என்பதுடன் அவர்கள் தங்களுடைய முன்னணிப் படையாகிய கட்சியின் வழிகாட்டுதலில் இந்த சக்தி மிக்க தத்துவத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

எந்த நாட்டிலும் மார்க்சியத்தைப் பரப்புதல் பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வாத் தத்துவங்களை அம்பலப்படுத்துவதுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. வரலாறு இதை மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. உதாரணமாக, 19ஆம் நூற்றாண்டின் கடைசியில் ருஷ்யாவில் சில சிந்தனையாளர்கள், ருஷ்யா மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து மிகவும் வேறுபட்டிருக்கிறது, அங்கே மார்க்சியத் தத்துவத்தைக் கடைப்பிடிக்க முடியாது என்று கூறினார்கள். லெனின் இத்தத்துவங்களை மறுத்தார்; ருஷ்யாவின் தனித்தன்மைகள் எப்படியிருந்தாலும் அந்த நாடு மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் போலவே முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறது என்று நிரூபித்தார். ஆகவே மார்க்ஸ், எங்கெல்சின் தத்துவம் ருஷ்யாவுக்கும் முழுமையாகப் பொருந்தியது. லெனினுடைய முடிவுகளை வாழ்க்கை சிறப்பாக நிரூபித்திருக்கிறது.

உலகத்தின் மற்ற பிரதேசங்களிலும் இதே நிலையை நாம் பார்க்கிறோம். உதாரணமாக, 1920க்களிலிருந்து லத்தீன் அமெரிக்காவில் பரவிய கருத்தமைப்பு மார்க்சிய-லெனினியம் அக்கண்டத்துக்குப் பொருந்தாது என்று கூறியது. லத்தீன் அமெரிக்க மார்க்சிஸ்டுகள் (குறிப்பாக, பெரு நாட்டவர் ஹொர்சே கார்லஸ் மாரியாதெகி மற்றும் கியூபா நாட்டவர் ஹூலியோ அன்தோனியோ மேலியா) இக்கருத்துகள் தவறானவை, மார்க்சிய-லெனினியம் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் பொருந்தும் என்பதை நிரூபித்தார் கள்.

மார்க்சிய-லெனினியத் தத்துவம் ஐரோப்பா, அமெரிக் கா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் பரவிக் கொண்டிருப் பதை அண்மைக்கால நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன. மார்க்சிய-லெனினியம் புறவய நிகழ்வுகளை சரியான முறை யில் எடுத்துக்காட்டுகிறது, உழைக்கின்ற பெருந்திரளான மக்களுடைய அடிப்படையான நலன்களையும் தேவைகளை யும் வெளியிடுகிறது, அவர்களுடைய புரட்சிகரமான போ ராட்டத்துக்கு வழிகாட்டுகிறது என்பவை இதற்கு முக் கியமான காரணங்களாகும்.

உலகத்தைப் புரட்சிகரமாகப் புத்தாக்கம் செய்கின்ற நேரடியான தத்துவம் என்ற முறையில் விஞ்ஞான கம்யூனி சம் உழைக்கும் மக்களின் புரட்சிகரமான நடவடிக்கை விரிவடைகின்ற பொழுது வளர்ச்சியடைந்து வருகிறது. அதன் ஆராய்ச்சிப் பொருள் மாறாமல் இருக்கவில்லை. சமூக வாழ்க்கையில் புதிதாகத் தோன்றுகின்ற துறைகளை யும் தனிநாடு, சர்வதேச அளவு என்னும் இரண்டு சுற்றுவட்டங்களுக்குள்ளாகவும் சேர்த்துக் கொண்டு அது தொடர்ச்சியாக விரிவடைந்து கொண்டிருக்கிறது.

விஞ்ஞான கம்யூனிசம் பாட்டாளி வர்க்கத்தின் புறவய நிலைமை, தேவைகள், இலட்சியங்கள் மற்றும் போராட்டத்தைத் தத்துவ ரீதியான வடிவத்தில் வெளியிடுகிறது. அதே சமயத்தில் அது மற்ற எல்லா உழைக்கும் மக்களுடைய நலன்களைப் பிரதிபலிக்கிறது; ஏனென்றால் அவை தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள் மற்றும் இலட்சியங்களுடன் பொருந்துகின்றன.

தொழிலாளி வர்க்கம் இயல்பாகவே ஆழமான சர்வதேசியவாதத் தன்மையைக் கொண்ட வர்க்கமாகும். உற்பத்திச் சக்திகள் வரலாற்றில் முதல் தடவையாக சர்வதேசப் பரிமாணத்தை அடைகின்ற வளர்ச்சிக் கட்டத்துடன் அது இணைந்திருக்கிறது. அதனால்தான் அதனுடைய மொத்தப் போராட்டமும் புரட்சியும் புதிய சமூக நிர்மாணமும் சர்வதேச ஒருமைப்பாட்டுத் திசைவழியில் அமைந்திருக்கின்றன. பாட்டாளி வர்க்கம் சர்வதேசியவாதத் தன்மையைக் கொண்டிருக்கிறது என்றால் முதலாளி வர்க்கம் சாராம்சத்தில் தேசியவாதத் தன்மையைக் கொண்டிருக்கிறது.

பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்கு முற்றிலும் எதிரான முறையில் சர்வதேசியவாதப் பதாகையின் கீழ் தன்னுடைய போராட்டத்தை நடத்தி வெற்றிகளைக் குவிக்கிறது. அதே சமயத்தில் அது பெயரளவில் இல்லாத, உண்மையான தேசிய சுதந்திரத்தை ஆதரிக்கிறது; ஏனென்றால் இந்த சுதந்திரம் ஆழமான சர்வதேசியக் கூட்டமைப்புக்கு அடிப்படை ஆகும். பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியவாதம் அதன் மேன்மையான புரட்சிகர உணர்ச்சியுடன் பொருந்துகிறது. அப்புரட்சிகர உணர்ச்சி சமூக மற்றும் தேசிய ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் ஒழிப்

நியதிகள் மீது எப்பொழுதுமே கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள். இன்று உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திடம் தத்துவ முறையில் செல்தகைமையான, செய்முறையில் பரிசோதிக்கப்பட்ட புரட்சிகரப் போராட்டம் மற்றும் சோஷலிச, கம்யூனிச நிர்மாணத்தின் நியதிகள் இருக்கின்றன; கம்யூனிச எதிர்ப்பாளர்களும் திருத்தல்வாதிகளும் இவற்றை உக்கிரமாகத் தாக்குதல் இயற்கையே.

அடுத்த கடமை, ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் ஸ்தலத்திலுள்ள தனித்தன்மைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பொதுவான நியதிகளைப் படைப்பாற்றலுடன் உபயோகிப்பதாகும். இதன் தொடர்பாகக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கடமையை லெனின் பின்வருமாறு வரையறுக்கிறார்: "...ஒருமித்த சர்வதேசப் பணியை அந்தந்த நாடும் நிறைவேற்றிட வேண்டிய ஸ்தூலமான முறைகளில் தேசிய வழியில் பிரத்தியேகமானவற்றையும் தேசிய வழியில் தனிச்சிறப்பானவற்றையும் அலசி ஆராய வேண்டும், தேடிப்பிடித்தாக வேண்டும், வருவது அறிந்து கூற வேண்டும், உணர்ந்து கொண்டாக வேண்டும்..."*. இந்த லெனினுடைய சூத்திரத்தை சமூக நடைமுறை இன்று நிரூபித்திருக்கிறது.

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தில், இக்கடமைகள் புரட்சிகரப் போராட்டத்தைப் பற்றி ஸ்தூலமான வரலாற்று பகுப்பாய்வு மற்றும் சோஷலிச நிர்மாண அனுபவத்தைப் பொதுமைப்படுத்தலின் அடிப்படையில் நிறைவேற்றப்படுகின்றன. இங்கே மார்க்சியப் போராட்டம் இரு முனைகளைக் கொண்டிருக்கிறது. முதலாவதாக, அது பொதுவான நியதிகளைப் பற்றி வறட்டுச் சூத்திரவாத அணுகுமுறையை — அது அவற்றைப் படைப்பாற்றலுடன் உபயோ

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 303.

கிப்பதை நிராகரிக்கிறது — எதிர்க்கிறது; இரண்டாவதாக, பொதுவான நியதிகளின் சாராம்சத்தையும் உள்ளடக்கத்தையும் திரித்துக் கூறுகின்ற திருத்தல்வாதிகளை எதிர்க்கிறது.

## உலகத்தைப் புரட்சிகரமான முறையில் புத்தாக்கம் செய்கின்ற கருவி

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் நம்முடைய சகாப்தத்தில், மனிதகுலம் சுரண்டல் அமைப்பிலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற சகாப்தத்தில் மேன்மேலும் அதிகமான பாத்திரத்தை வகிக்கிறது. இக்காலத்தில் நடைபெறுகின்ற மாற்றங்களின் பரிமாணம் மற்றும் சிக்கலான தன்மையின் காரணமாக அவற்றை விஞ்ஞான அறிவின் அடிப்படையில் மட்டுமே வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

பிற்போக்குச் சக்திகளின் எதிர்ப்பு எப்படியிருந்த போதிலும் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கு விரிவு மற்றும் ஆழமடைந்து கொண்டிருக்கிறது. சோஷலிசம் உலக ரீதியாகப் பரந்த நிலைகளை வென்றிருக்கிறது, அது நடைமுறையில் நிறைவேற்றப்படுகின்ற களம் தொடர்ச்சியாக விரிவடைந்து கொண்டிருக்கிறது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்தின் கோட்டைகளில் இடைவிடாத வர்க்கப் போராட்டத்தை நடத்திவருகிறது. அந்தப் போராட்டத்தின் நிலைமைகள் மாறிக் கொண்டிருக்கின்றபடியால் சோஷலிசத்துக்கு மாறுவதற்குப் புதிய வடிவங்களை ஆராய்வது அவசியமாகும்.

காலனியாதிக்க அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடைந்துள்ள மக்களினங்களின் போராட்டம் இப்பொழுது

குண ரீதியில் புதிய மட்டத்தை அடைந்துள்ளது. அந்த நாடுகளில் பல நூற்றாண்டுகளாக நிலவியிருக்கின்ற பின் தங்கிய நிலையை ஒழித்து உண்மையான சுதந்திரம் மற்றும் சமூக விடுதலையை அடைவதற்குப் புதிய வாய்ப்புகள் தோன்றியிருக்கின்றன.

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தின் சமூகக் கடமை இவற்றுக்கும் இதர பல பிரச்சினைகளுக்கும் சரியான தீர்வுகளைக் கண்டுபிடித்தலே.

சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையும் அடிப்படையில் மாற்றுகின்ற புதிய அமைப்பை உழைக்கும் மக்கள் தான் படைக்க முடியும். இன்று எல்லாக் கண்டங்களிலும் கோடிக்கணக்கான மக்கள் உலகத்தை மாற்றியமைக்கின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த நிகழ்வுப் போக்கு வெற்றியடைவது அதில் பங்கெடுப்பவர்களுடைய சமூக உணர்வின் அளவு, புரட்சிகரமான தத்துவமும் பெருந்திரளான மக்கள் இயக்கமும் எவ்வளவு சிறப்பாக இணைக்கப்பட்டிருக்கின்றன என்பவற்றைப் பொறுத்திருக் கிறது.

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், விஞ்ஞான கம்யூனிசம் மக்கள் சிக்கலான சமூக நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கு உதவி புரிவது மட்டுமன்றி மனிதகுலத்தின் மிகவும் உயர்ந்த இலட்சியங்களுக்கு, சோஷலிச மற்றும் கம்யூனிச இலட்சியங்களுக்குப் போராடுவதற்கு உண்மை யான பாதைகளையும் காட்டுகிறது. அதனால்தான் இத்தத் துவத்தில் சிறப்பான தேர்ச்சி அடைந்திருப்பது நியாயமான சமூகத்துக்குப் போராடுவதற்கு உணர்வு பூர்வமான மற்றும் சுறுசுறுப்பான போராளிகளை உருவாக்குவதற்கு முக்கிய மான நிபந்தனைகளில் ஒன்றாகும். ‘‘சோஷலிசம் ஒரு விஞ்ஞானமாகியிருப்பதால் அதை ஒரு விஞ்ஞானம் என்ற முறையில் நடத்த வேண்டும், அதாவது அதைக் கற்க

வேண்டும் என்று கோருகிறது.''* எங்கெல்ஸ் மேற்கண்டவாறு எழுதி ஒரு நூற்றாண்டுக்கு அதிகமான காலம் கழிந்துவிட்டது, ஆனால் அவருடைய கருத்து இன்றும் பொருத்தமாக இருக்கிறது. ஒரு நபர் நம் காலத்தில் நடைபெறுகின்ற சிக்கலான சம்பவங்களைப் புரிந்து கொள்ள விரும்பினால், நியாயமான கோட்பாடுகளின் அடிப்படையில் உலகத்தை மாற்றியமைக்கின்ற போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு, ஆகவே சுவாரசியமான, அர்த்தமுள்ள வாழ்க்கையை நடத்துவதற்கு விரும்பினால் அவர் விஞ்ஞான கம்யூனிசத்தை நன்றாகக் கற்க வேண்டும்.

விஞ்ஞான கம்யூனிசத்தைக் கற்கும் வழி எது?

முதலாவதாக, அதன் சமூக நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும். விஞ்ஞான கம்யூனிசம் பழைய சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கின்ற, புதிய சமூகத்தை நிர்மாணிக்கின்ற தத்துவம் மற்றும் செயல் திட்டம்; அது நடைமுறையுடன் நெருக்கமாக இணைந் திருக்கிறது.

இரண்டாவதாக, விஞ்ஞான கம்யூனிசத்தைக் கற்கின்ற பொழுது, மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் எழுதிய நூல்களையும் இந்த விஞ்ஞானம் கூட்டு முயற்சியினால் விரித்துரைக்கப்படுகின்ற கம்யூனிச மற்றும் தொழிலாளர் கட்சிகளின் ஆவணங்களையும் தொடர்ந்து படிக்க வேண் டும்.

மூன்றாவதாக, விஞ்ஞான கம்யூனிசம் மார்க்சியத் தத் துவஞானம் மற்றும் அரசியல் பொருளாதாரத்தின் தர்க்க ரீதியான தொடர்ச்சியும் நிரூபணமும் ஆகும். ஆகவே அதில் தேர்ச்சி பெறுவதற்கு இவற்றை நன்றாகக் கற்றிருக்க வேண்டும்.

---

* F. Engels, *The Peasant War in Germany*, p. 23.

நான்காவதாக, விஞ்ஞான கம்யூனிசத்தை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு அதை இதர, எதிர்ப் போக்குகளுடனும் கற்பனாவாத சோஷலிசம் மற்றும் அதன் நவீன வடிவங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஐந்தாவதாக, விஞ்ஞான கம்யூனிசத்தை அறிவின் ஒருங்கிணைந்த அமைப்பாக, தத்துவங்கள், கருதுகோள்கள் மற்றும் கருத்தினங்கள் இடையுறவு கொண்ட அமைப்பாகக் கற்க வேண்டும்.

இந்த விஞ்ஞானத்தின் உள்ளடக்கத்தை, நம் காலத்தின் சமூகப் பிரச்சினைகளை அது தீர்க்கின்ற முறையை, இத் தீர்வுகள் எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்பதை நாம் அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

## அத்தியாயம் மூன்று

# நம் சகாப்தத்தின் பிரதான உள்ளடக்கம்

ஒவ்வொரு புதிய சமூக அமைப்பும் கடுமையான பிரசவ வேதனைக்கு உள்ளாகித்தான் பிறக்கிறது. சோஷலிசம் அதற்கு முன்பிருந்த சமூக பொருளாதார அமைப்புகள் எல்லாவற்றிலிருந்தும் மிகவும் வேறுபட்டிருப்பதால் அதை அமைக்கின்ற நிகழ்வுப் போக்கும் பிரத்யேகமானதாக இருக் கிறது. அது ஒரு தனி நாட்டுக்கு அல்லது சில நாடுகளுக்கு மட்டுமே உரியதாக இல்லாமல் சர்வதேசப் பரிமாணத்தைப் பெறுகிறது.

இன்றைய உலகம் மிகவும் சிக்கலானதாக, முரண்பாடு உள்ளதாக இருக்கிறது. அதில் சுமார் 150 அரசுகள் இருக் கின்றன; இவை மிகவும் வித்தியாசமான சமூக பொருளா தார அமைப்புகளைக் கொண்டிருக்கின்றன. சில அரசு கள் சோஷலிசப் பாதையைப் பின்பற்றுகின்றன; வேறு சில அரசுகள் முதலாளித்துவக் கட்டத்தில் இருக்கின்றன, அவற் றில் நெருக்கடிகளும் கொந்தளிப்புகளும் ஏற்பட்ட வண்ண மிருக்கின்றன; இன்னும் சில அரசுகளில் நிலப்பிரபுத்துவ அமைப்பு நிலவுகிறது. சில மக்களினங்கள் அரை நிலப் பிரபுத்துவ, தந்தைவழிச் சமூக உறவுகளில் இன்னும் இருக் கின்றன. ஆகவே மனிதகுலம் பல நூற்றாண்டுகளாகக் கடந்து வந்துள்ள சமூக அமைப்புகளில் பெரும்பான்மை

யானவை இன்றைய உலகத்தில் ஒத்துவாழ்ந்து கொண்டிருக்கின்றன. அரசுகள் மற்றும் மக்களினங்களின் வளர்ச்சி நிலையில் இத்தகைய ஏற்றத்தாழ்வை முன்பிருந்த எந்தத் தலைமுறையும் கண்டதில்லை.

வேறுபாடுகள் எப்படியிருந்தாலும், நம் உலகம் ஒருங்கிணைந்த மொத்தமாக இருக்கிறது. இன்று எந்த மக்களினமும் — அதன் சமூக வளர்ச்சிக் கட்டம் எப்படியிருந்தாலும் — மற்ற மக்களினங்களிலிருந்து தனித்து வாழ்வதில்லை. ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுடன் ஆயிரக்கணக்கான இணைப்புகளைக் கொண்டிருக்கிறது. உலகத்தின் ஒரு பகுதியில் நடைபெறுகின்ற சம்பவங்கள் உலகத்தின் மற்ற பகுதிகளில் வசிப்பவர்களை ஏதாவதொரு முறையில் பாதிக்கின்றன. நம் காலத்தின் முக்கியமான சம்பவங்களில் ஒன்றைக் கூட ஸ்தல அளவிலான சம்பவம் என்று தற்பொழுது கூற முடியாது. ஆயுதச் சண்டைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆபத்தானவையாக இருக்கின்றன. அவை உலகத்தின் எந்த மூலையில் நடைபெற்றாலும் உலகப் போராக வளர்ச்சியடையக் கூடிய ஆபத்து இருக்கிறது. ஏகாதிபத்தியவாதிகளால் தூண்டப்பட்டு மேன்மேலும் அதிகரிக்கின்ற ஆயுதப் போட்டி தனிப்பட்ட மக்களினங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி மனிதகுலம் உயிரோடிருப்பதற்கே ஆபத்தாக இருக்கிறது.

இன்றைய உலகம் இப்படி நெருக்கமாக ஒன்று சேர்ந்திருப்பது வரலாற்று வளர்ச்சியின் விளைவு ஆகும். இதை நம் காலத்து மக்களில் பெரும்பான்மையானவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் மனிதகுலத்தின் எதிர்காலத்தைப் பற்றிக் காட்டுகின்ற அக்கறையில், மனிதகுலத்துக்குப் பேராபத்தை ஏற்படுத்துகின்ற சக்திகளை எதிர்த்துப் போராடுவதில் இந்த உணர்வு வெளிப்படுகிறது.

இந்த ஒருங்கிணைப்பின் ஸ்தூலமான வெளிப்பாடுகள்

எவை? நம் காலத்தை வரலாற்றின் கடந்த காலங்களி லிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற அம்சங்கள் எவை? அதிலுள்ள தனித்தன்மை எது? இக்கேள்விகளுக்கு பதிலளிப் பதற்கு முன்னர் ''சகாப்தம்'' என்ற கருதுகோளை நாம் ஆராய்வோம்.

### சகாப்தம் என்றால் என்ன?

மனிதகுலத்தின் வரலாற்றை போர்கள், புரட்சிகள், புதிய வர்க்கங்கள் ஆட்சியைப் பெறுதல், இதரவை ஆகிய முக் கியமான சம்பவங்களைக் கொண்ட நீண்ட காலகட்டங் களாகப் பிரிக்க முடியும். இக்காலகட்டம் ஒவ்வொன்றும் வரலாற்றில் அதற்கு முந்திய மற்றும் அதனை அடுத்து வருகின்ற எல்லாக் காலகட்டங்களிலிருந்தும் முற்றாக வேறுபட்டிருப்பதுடன் தனக்குரிய தனித்தன்மையையும் கொண்டிருக்கிறது. உலக வரலாற்றில் அத்தகைய காலகட் டங்கள் வரலாற்றுச் சகாப்தங்கள் என்று சொல்லப்படு கின்றன. இத்தகைய வெவ்வேறு சகாப்தங்களின் தொடர் வரிசையே மனிதகுலத்தின் வரலாறு ஆகும்.

சகாப்தங்களுக்கு இடையிலுள்ள ஸ்தூலமான வேறுபாடு கள் எவை? இந்த ஒருங்கிணைந்த வரலாற்று நிகழ்வுப் போக்கை எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் சகாப் தங்களாகப் பிரிக்கிறோம்? சகாப்தங்களுக்கு இடையில் வேறுபாடு கலையின் தரத்திலும் ரகத்திலும் அடங்கியிருக் கிறது என்று சிந்தனையாளர்களில் சிலர் கருதுகிறார்கள்; வேறு சிலர் சமயத்திலும் இன்னும் சிலர் விஞ்ஞான கண்டு பிடிப்புகளிலும் சாதனைகளிலும் அந்த வேறுபாடு இருப் பதாகக் கூறுகிறார்கள்.

கற்பனாவாத சோஷலிஸ்டுகள் இதே விதமான கருத்து

முதல்வாதக் கருத்துகளைக் கொண்டிருந்தார்கள் என்பதை இங்கே நினைவுபடுத்திக் கொள்வோம். ஆனால் கற்பனாவாத சோஷலிஸ்டுகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வளர்ச்சியைப் பற்றி கருத்துமுதல்வாதக் கருத்துகளைக் கொண்டிருந்தார்கள் என்றால் இங்கே மனிதகுலத்தின் மொத்த வரலாறுமே கருத்துமுதல்வாத நோக்கில் விளக்கப்படுவதைப் பார்க்கிறோம். சமூக வாழ்க்கையை ஆராய்வதற்கு இத்தகைய அணுகுமுறையைப் பின்பற்றுதல் விஞ்ஞானத்துக்கு மாறானது என்பதை மீண்டும் நிரூபிப்பது அவசியமல்ல.

நம்முடைய சகாப்தம் கலையின் தரத்தில், சமயக் கருத்துகளின் பரவலில், விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பவியலிலும் முக்கியமான கண்டுபிடிப்புகளில் முந்திய சகாப்தத்திலிருந்து வேறுபடுகிறது என்பது உண்மையே. ஆனால் சகாப்தங்களுக்கு இடையில் முக்கியமான வேறுபாடு இன்னும் ஆழமானது. அது சமூக வாழ்க்கையின் அடிப்படையில், பொருளாயத மதிப்புகளின் உற்பத்தி முறையில் அமைந்திருக்கிறது. இந்த அடிப்படையில் எல்லா நாடுகளும் அரசுகளும் கம்யூனிச, முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ, இதர சமூக பொருளாதார அமைப்புகளைச் சேர்ந்த குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.

தனிப்பட்ட நாடுகள் ஒன்றுக்கொன்று கடந்தகால வரலாற்றில், இயற்கை நிலைமைகளில், மக்களின் இனக் கட்டமைப்பில் வேறுபடுகின்றன. ஆனால் சமூகத்தின் வாழ்க்கையை நிர்ணயிக்கின்ற உற்பத்தி முறை எப்படிப்பட்டது, உற்பத்திச் சாதனங்கள் யாருடைய உடைமையாக இருக்கின்றன என்பதை அறிவது இன்னும் அதிக முக்கியமானதாகும். சோவியத் யூனியனும் கியூபாவும் தோற்றத்தில் அதிகமாக வேற்றுமைகளைக் கொண்டிருந்தாலும் அவை ஒரே கம்யூனிச உருவாக்கத்தைச் சேர்ந்தவை. முன்னர் ஒரே

விதமான அமைப்பில் வசித்த மக்கள் இன்று இரண்டு வெவ்வேறு உருவாக்கங்களில் வசிக்க முடியும் (உதாரண மாக, கிழக்கு ஜெர்மனியிலுள்ள ஜெர்மானியர்கள் கம்யூனிச அமைப்பிலும் மேற்கு ஜெர்மனியிலுள்ள ஜெர்மானியர்கள் முதலாளித்துவ அமைப்பிலும் வசிக்கிறார்கள்).

ஒவ்வொரு சமூக அமைப்பும் ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; ஒவ்வொரு உற்பத்தி முறையும் குறிப்பிட்ட வர்க்கத்தை (நிலப்பிரபுக் கள், முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம், விவசாய வர்க்கம்) ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சமூக அமைப்புக்கும் ஒரு திட்டவட்டமான வர்க்கம் அடிப்படை யாக இருப்பதால் ஒரு சகாப்தத்தின் தனித்தன்மைகளை ஆராய்கின்ற பொழுது ஆட்சி செய்கின்ற வர்க்கத்தை எப்பொழுதுமே சுட்டிக் காட்ட வேண்டும். ''ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தில் பல்விதமான வரலாற்று இயக்கங்கள் எவ்வளவு வேகமாக, வெற்றிகரமாக வளர்ச்சி அடையக் கூடும் என் பதை நாம் அறிய முடியாது. ஆனால் ஏதாவதொரு சகாப் தத்தின் அச்சாணியாக இருந்து கொண்டு அதன் பிரதான உள்ளடக்கத்தை, அதன் வளர்ச்சியின் முக்கியமான திசை வழியை, அந்த சகாப்தத்தின் வரலாற்று நிலைமையின் முக்கியமான குணாம்சங்களை நிர்ணயிப்பது எந்த வர்க்கம் என்பதை நாம் அறிய முடியும், அதை நாம் அறிவோம்'' என்று லெனின் எழுதினார்.* விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் பல்வேறு சகாப்தங்களின் தனித்தன்மைகளை நிர்ணயிப்பதற்கு, நம் சகாப்தத்தின் உள்ளடக்கத்தை வெளிக் காட்டுவதற்கு உதவுகிறது.

வரலாற்று சகாப்தத்தைப் பகுப்பாய்வு செய்வது கம் யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் செயல்திட்டம்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 21, Moscow, Progress Publishers, 1977, p. 145.

மற்றும் செயல்தந்திரத்தின் தொடக்க நிலையாக இருக்கிறது. ''இந்த அடிப்படையில் அதாவது, முதலாவதாக பல்வேறு 'சகாப்தங்களின்' (தனிப்பட்ட நாடுகளின் வரலாற்றில் தனிப்பட்ட சம்பவங்களை அல்ல) அடிப்படையான, பிரத்யேகமான கூறுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வதன் மூலமாக மட்டுமே நாம் நம்முடைய செயல்தந்திரத்தைச் சரியாக உருவாக்க முடியும்; ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தின் அடிப்படையான கூறுகளைப் பற்றிய அறிவு மட்டுமே ஏதாவதொரு நாட்டின் தனிக் கூறுகளைப் புரிந்து கொள்வதற்கு உதவ முடியும்'' என்று லெனின் வலியுறுத்தினார்.*

ஒரு சகாப்தத்தின் குணாம்சத்தைச் சரியாக வரையறுப்பது சரியான அரசியல் பாதையைத் தேர்ந்தெடுப்பதில் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதை சமூக அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் இப்பிரச்சினையில் தலையாய கவனம் செலுத்தினார்கள். இப்பிரச்சினை 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அப்பொழுதுதான் லெனின் நவீன கால மற்றும் அண்மைக் கால வரலாற்றைக் கால முறைப்படி பகுத்துக் கூறினார். அவர் பின்வரும் வரலாற்றுச் சகாப்தங்களைக் குறிப்பிட்டார்.

**முதல் சகாப்தம்:** மாபெரும் பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சியிலிருந்து பிரெஞ்சு-பிரஷ்யப் போர் மற்றும் பாரிஸ் கம்யூன் வரை (1789—1871). அது முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சி மற்றும் முழு வெற்றியடைந்த சகாப்தம்; அப்பொழுது முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ அமைப்பை எதிர்த்து பொதுப் போராட்டத்தை நடத்தியது; அதில் தொழிலாளி வர்க்கமும் பங்கெடுத்தது.

---

* *Ibid.*

**இரண்டாவது சகாப்தம்:** இது முதலாளி வர்க்கம் முழு அளவில் ஆதிக்கம் செலுத்திப் பின்னர் சிதைவடைந்த, ஏகாதிபத்தியத்துக்கு மாறிய சகாப்தம் (1871–1917). இக் காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சக்தி யைத் திரட்டிக் கொண்டு முதலாளி வர்க்கத்தை எதிர்த்துத் தீர்மானமாகப் போராடுவதற்குத் தயாரித்தது. ''முதலாளி வர்க்கம் வளர்ச்சியடைகின்ற, முற்போக்கான வர்க்கம் என்னும் நிலையிலிருந்து தேய்வடைகின்ற, கெட்டுப் போன, தனக்குள் உயிரற்ற, பிற்போக்கான வர்க்கமாக மாறிவிட்டது. பரந்த வரலாற்று அளவில் இப்பொழுது முன் னேறிக் கொண்டிருப்பது முற்றிலும் வேறொரு வர்க்கம்'' என்று லெனின் எழுதினார்.* புதிய சகாப்தம் பாட்டாளி வர்க்கம், நடத்தை மற்றும் போராட்டத்தில் புதிய அரசியல் திசைவழியைப் பின்பற்றக் கோரியது. முதலாளித்துவத்தின் மீது தாக்குதலுக்குத் தலைமை தாங்கக் கூடிய, புதிய ரகத்தைச் சேர்ந்த கட்சிகளை அமைக்கும்படி கோரியது.

**மூன்றாவது சகாப்தம்:** இது முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற சகாப்தம்; 1917இல் ருஷ்யா வில் மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றி இந்த சகாப்தத்தைத் தொடக்கியது.

''சோவியத் அரசு ஒன்றைக் கட்டியமைக்க முற்படும் நற்பேறு, இவ்விதம் உலக வரலாற்றில் ஒரு புது யுகத்தை — முதலாளித்துவ நாடு ஒவ்வொன்றிலும் ஒடுக்கப்பட்ட வர்க்க மாய் இருப்பதும், ஆனால் புது வாழ்வினை நோக்கி, முதலாளி வர்க்கத்தின் மீதான வெற்றியை நோக்கி, பாட் டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நோக்கி, மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்தும் ஏகாதிபத்தியப் போர்களிலிருந்தும் மனிதகுலத்தை விடுதலை பெறச் செய்வதை நோக்கி

---

* *Ibid.*, p. 149.

எங்கும் முன்னேற்ற நடை போடும் வர்க்கமாய் இருப்பது மாகிய ஒரு புதிய வர்க்கத்தின் ஆட்சிக்கான புது யுகத்தை — துவக்கி வைக்கும் நற்பேறு நமக்குக் கிட்டியுள்ளது குறித்துப் பெருமை கொள்ள நமக்கு உரிமை உண்டு, நாம் பெருமை கொள்ளவும் செய்கிறோம்'' என்று லெனின் எழுதினார். *

ஆகவே சகாப்தம் என்பது உலக வரலாற்றில் நீண்ட காலகட்டம்; மாபெரும் சம்பவங்களுக்கு இடைப்பட்ட காலகட்டம்; அது ஒரு சமூக பொருளாதார உருவாக்கத்தின் வளர்ச்சியில் முக்கியமான கட்டங்களுடன் அல்லது உருவாக் கங்களின் மாற்றத்துடன் தொடர்புள்ளது.

முதல் இரண்டு சகாப்தங்களும் ஒரே முதலாளித்துவ அமைப்பின் உருவாக்கத்துடன் தொடர்பு கொண்டிருக் கின்றன. மூன்றாவது சகாப்தம் அடிப்படையில் வேறானது. அது சுரண்டல் சமூக அமைப்புகளிலிருந்து புதிய, கம்யூனிச உருவாக்கத்துக்கு மாறுதலுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய சமூகத்தில் மனிதனை மனிதன் ஒடுக்குதல் கிடையாது; அங்கே சமூக சமத்துவம் நிலவும், ஒவ்வொரு தனிநபருடைய நல்வாழ்க்கையிலும் அக்கறை காட்டுவது சமூகத்தின் தலைமையான நோக்கமாக இருக்கும்.

சகாப்தத்தை சரியாக வரையறுப்பது கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளினுடைய செயல்திட்டம் மற்றும் செயல்தந்திரத்தை விரித்துரைப்பதில் மட்டுமின்றி ஒவ் வொரு தனிநபரும் சரியான உலகக் கண்ணோட்டத்தை உருவாக்குவதற்கும் வாழ்க்கையில் சரியான திசைவழியைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவி செய்வதில் மாபெரும் முக்கியத் துவத்தைக் கொண்டிருக்கிறது.

முதலாளித்துவ அமைப்பில் நெருக்கடிகள், இராணுவமய

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 12, பக்கங்கள் 55—56.

மாக்குதல், உழைக்கும் மக்களை ஒடுக்குதல் ஆகியவை நிலவுகின்றன. சோஷலிசம் ''எல்லாமே மனிதனுக்காக, எல்லாமே மனிதனுடைய நன்மைக்காக'' என்பதைத் தன்னுடைய கோஷமாகக் கொண்டிருக்கிறது. இவை இரண்டில் நவீன உலகத்தை உண்மையாகவே பிரதிநிதித்துவம் செய்வது எது? எந்த அமைப்புக்கு எதிர்காலம் இருக்கிறது? முதலாளித்துவம் எதிர்காலத்தைப் பற்றி அவநம்பிக்கையையும் அச்சத்தையும் ஏற்படுத்துகிறது; தனி மனிதனுடைய சக்தியை அழித்து அவனைக் குருட்டுச் சக்திகளின் கருவியாக மாற்றுகிறது. சோஷலிசம் தன்னம்பிக்கையையும் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையையும் உருவாக்குகிறது. மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு, போர், ஒடுக்குமுறை, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகியவற்றை வேரோடு ஒழிப்பதற்குப் போராடுபவர்களின் அணியில் தனிநபர் சேரும்படி செய்கிறது.

நம்முடைய சகாப்தத்தின் உள்ளடக்கம் என்ன என்ற கேள்வி சித்தாந்தப் போராட்டத்தின் குவிமுனையாக இருக்கிறது. முதலாளித்துவப் பிரசாரம் இந்த சகாப்தத்தை எப்படி சித்திரிக்கிறது? அதன் நோக்கங்கள் யாவை?

## பூர்ஷ்வா சித்தாந்தம் என்னும் உருச்சிதைந்த கண்ணாடி

எண்ணற்ற பூர்ஷ்வாத் தத்துவங்கள் நம்முடைய சகாப்தத்தை வெவ்வேறு முறையில் விளக்குகின்றன. எனினும் இவை எல்லாமே முதலாளித்துவத்தை ஆதரித்து ''ஆக்கபூர்வமான'' பூர்ஷ்வா இலட்சியங்களைக் கொண்டு சோஷலிசத்தை சமநிலைப்படுத்துகின்ற பொதுவான நோக்கத்தைக் கொண்டிருக்கின்றன. சோஷலிசம் தன்னுடைய

இலட்சியங்களையும் அவற்றுக்காக நடத்தப் போகின்ற போராட்டத்தின் அடிப்படைகளையும் பகிரங்கமாக அறிவிக்கிறது. கருத்துகளும் இலட்சியங்களும் போதிய அளவுக்கு இல்லாத முதலாளித்துவ சித்தாந்திகளும் ஒரு நபர் எந்த இலட்சியத்துக்குப் போராட வேண்டும் என்று எடுத்துக் காட்டுவதற்கு முயல்கிறார்கள்.

ஆகவே, ஒரு நபர் எந்த இலட்சியத்துக்குப் பாடுபட வேண்டும்? நம்முடைய சகாப்தத்தின் தன்மையை நிர்ணயிப்பது எது? இக்கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு அண்மைக் கால வரலாற்றை அறிந்திருக்க வேண்டும்.

இரண்டாவது உலகப் போர் (1939–1945) முடிவடைந்தவுடன் மேற்கு ஐரோப்பிய சித்தாந்திகள் ''உடைமையைப் பரவலாக்குதல்'', ''வருமானங்களைச் சமப்படுத்துதல்'', ''வருமானங்களில் புரட்சி'', ''மூலதனத்தை ஜனநாயகப் படுத்துதல்'', ''நடுத்தர வர்க்கம்'', ''வர்க்கங்கள் மறைதல்'' மற்றும் இதர கருதுகோள்களை முன்வைத்தார்கள். பிற்காலத்தில் இவை ''மக்கள் முதலாளித்துவம்'' என்னும் தத்துவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டன; பின்னர் ''சர்வப் பொது நல்வாழ்வு'' அரசு என்ற கருதுகோளும் இதில் சேர்ந்தது. முதலாளித்துவம் மாறிவிட்டது என்று இந்தக் கருதுகோள்களின் ஆசிரியர்கள் நிரூபிக்க முயன்றார்கள். கடந்தகாலத்தில் அது தீங்கான அமைப்பாக இருந்தது, உழைக்கும் மக்கள் மீது துன்பத்தையும் ஒடுக்குமுறையையும் சுமத்தியது என்பது மெய்யே; ஆனால் இப்பொழுது அது மக்களுடைய, ''ஜனநாயகமான'', ''இரக்க உணர்ச்சியுடைய'' சமூகமாக, எல்லா குடிமக்கள் நலத்திலும் அக்கறை கொண்டதாக மாறியிருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள். முதலாளித்துவம் மாற்றமடைந்து விட்டபடியால் அதுவே எதிர்கால அமைப்பாக இருக்க வேண்டும் என்று பூர்ஷ்வா சித்தாந்திகள் கூறினார்கள். அப்படியானால் ஏற்கெனவே

எதார்த்தமாகியுள்ள சோஷலிசத்தை என்ன செய்வது? அவர்கள் அதைப் புறக்கணித்தார்கள், இன்றைய உலகத்தைப் பற்றித் தங்களுடைய ஆராய்ச்சியில் சோஷலிச அமைப்பைக் கணக்கிலெடுத்துக் கொள்வதற்கு மறுத்தார்கள்.

இத்தகைய கற்பனைகளை வாழ்க்கை வெகு சீக்கிரத்தில் ஒழித்தது. முதலாவதாக, முதலாளித்துவத்தின் உண்மையான இயல்பு முன்னைக் காட்டிலும் அதிகமான தீவிரத்தோடு வெகு சீக்கிரத்திலேயே வெளிப்பட்டது. சமூக ஒடுக்குமுறை, வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், இராணுவமயமாக்கல் ஆகியவை வெடித்தன.

இரண்டாவதாக, சமீப காலத்தில் சோஷலிச நிர்மாணப் பாதையைப் பின்பற்றிய நாடுகள் பொருளாதாரம், அரசியல், கலாசாரம், விஞ்ஞானம், கலை ஆகிய துறைகளில் முக்கியமான வெற்றிகளை அடைந்து கொண்டிருந்தன. சோஷலிச உலகம் வளர்ச்சியடைந்து, முதிர்ச்சியடைந்து, பலமடைந்து கொண்டிருந்தது. உதாரணமாக, 1937இல் சோஷலிச அரசுகள் உலகப் பிரதேசத்தில் சுமார் 17 சதவிகிதத்தையும் மக்கள் தொகையில் 9 சதவிகிதத்தையும் கொண்டிருந்தன; 1960இல் அவை முறையே 25.9 மற்றும் 35 சதவிகிதமாக இருந்தன. 1937இல் உலகத் தொழில்துறை உற்பத்தியில் அவற்றின் பங்கு 10 சதவிகிதத்துக்குக் கீழாக இருந்தது; ஆனால் 1950இல் 20 ஆகவும் 1955இல் 27 ஆகவும் 1960இல் 36 சதவிகிதமாகவும் இருந்தது. ஆகவே சோஷலிசத்தைப் புறக்கணிப்பது சாத்தியமல்ல.

பூர்ஷ்வா ஆராய்ச்சியாளர்கள் முதலாளித்துவம் மற்றும் சோஷலிசத்தின் வளர்ச்சியை, அதாவது மனிதகுலத்தின் முன்னேற்றத்தின் சர்வதேச அம்சங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு, முதலாளித்துவத்தின் பிரச்சினைகளையும் சோஷலிசத்தின் முன்னேற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்



5*

பதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்கள் இந்த ஒப்பீட்டை எப்படிச் செய்கிறார்கள்?

உதாரணமாக, ''ஒற்றைத் தொழில்துறைச் சமூகம்'' என்ற கோட்பாட்டை எடுத்துக்கொள்வோம். தொழில் துறையில் வளர்ச்சியடைந்த எல்லா நாடுகளும், முதலாளித்துவ நாடுகள், சோஷலிச நாடுகள் ஆகியவை ''ஒற்றை'' தொழில்துறை மொத்தத்தின் பகுதிகளே, அவற்றுக்கு இடையில் வேற்றுமைகளைக் காட்டிலும் ஒற்றுமைகளே அதிகம் என்று இத்தத்துவாசிரியர்கள் கூறினார்கள். உற்பத்திச் சாதனங்கள் யாருடைய உடைமையாக இருக்கின்றன என்பது முக்கியமல்ல, தொழில்நுட்ப வளர்ச்சி என்ற நோக்கிலிருந்து பார்க்கும் பொழுது வளர்ச்சியடைந்த எல்லா நாடுகளுமே ஒரே விதமாகவே இருக்கின்றன என்பதே முக்கியம் என்று இவர்கள் கூறினார்கள். இங்கே முக்கியமான பிரச்சினை மறைக்கப்படுகிறது. உற்பத்திச் சாதனங்கள் யாருக்குச் சொந்தம், உழைக்கும் மக்களுக்கா அல்லது முதலாளிகளுக்கா என்பதைப் பொறுத்தே சமூகத்தின் பொருளாயத மற்றும் ஆன்மீக மதிப்புகள் வினியோகிக்கப்படுகின்றன, பொருளாதாரம் திட்டமிடப்பட்டதாக அல்லது தொடர்ச்சியான நெருக்கடிகள், வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம் நிலவுகின்ற அராஜக அமைப்பாக இருக்கும். உடைமையின் வடிவம் உற்பத்தி வளர்ச்சியின் வேகத்தையும் பொருளாதார நிர்வாகத்தின் வடிவங்களையும் முறைகளையும் நிர்ணயிக்கிறது. பூர்ஷ்வா ஆராய்ச்சியாளர்கள் இதைப் பற்றி எதுவும் சொல்வதில்லை. சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள அடிப்படையான வேற்றுமைகளை மழுப்புவது புதிய சமூகத்தின் சாதகங்களை மறைப்பதற்கு, அதன் முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கு, அதை முதலாளித்துவத்துடன் சேர்ப்பதற்கு உதவுகிறது. எதிர்காலத்தில் முதலாளித்

துவத்துக்குப் பதிலாக ஏற்படப் போகின்ற சமூக அமைப்பு சோஷலிசம் என்ற உண்மையை அது மறைக்கிறது.

மேற்கூறிய ''ஒற்றைத் தொழில்துறைச் சமூகம்'' ''தொழில்துறைக்குப் பிந்திய சமூகமாக'' அல்லது ''தொழில் நுட்ப சமூகமாக'' மாறும் என்னும் கருதுகோள்கள் பிற் காலத்தில் கூறப்பட்டன. இத்தத்துவங்களுக்கு இடையில் சிற்சில வேறுபாடுகள் இருந்த போதிலும் சமூக சாராம்சம் ஒரே விதமானதே: முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத் துக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை மறைத்தல், காலாவதியாகிவிட்ட சமூக அமைப்பை அலங்காரம் செய்தல் மற்றும் அதை சோஷலிசத்துக்கு நிகராக வைத்தல்.

பூர்ஷ்வாத் தத்துவங்களில் ஒன்றுதான் ஒன்றுகுவிதல் தத்துவம். அதன் ஆசிரியர்கள் சோஷலிசத்துக்கும் முத லாளித்துவத்துக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை ஒத்துக் கொள்கிறார்கள்; ஆனால் சோஷலிச நாடுகளும் முதலா ளித்துவ நாடுகளும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் என்னும் ஒத்த நிலைமைகளில் இருப்பதால் அவை காலப் போக்கில் ஒன்றுகுவிதல் அதாவது நெருங்கி வருதல் நிச்சய மானது என்கிறார்கள். இரண்டு சமூக அமைப்புகளும் இப்படி நெருங்கி வருகின்ற பொழுது தம்முடைய எதிர் மறையான அம்சங்களைக் கைவிட்டு ஆரோக்கியமான, ஆக்க பூர்வமான குணாம்சங்களைப் பெறும். முடிவில் சோஷலிச நாடுகளும் முதலாளித்துவ நாடுகளும் ஒன்றுக் கொன்று வேறுபாடு இல்லாத நிலையை அடைந்து விடும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இத்தத்துவத்தின் ஆசிரியர்கள், வளர்ச்சியடைந்த முத லாளித்துவ நாடுகளில் சோஷலிசத்தின் திட்டவட்டமான சமூக பொருளாதார முன்நிபந்தனைகள் உருவெடுக்கின்றன என்ற புறவய உண்மையை முதன்மைப்படுத்தி ஊகங்களில்

ஈடுபடுகிறார்கள். மிகவும் அதிகமான தொழில் வளர்ச்சி, அதிகமான கல்விப் பெருக்கம், தேர்ச்சி மிக்க தொழிலாளர்கள், அறிவுப் பகுதியினரின் வளர்ச்சி ஆகியவை இம் முன்நிபந்தனைகளில் சில. இவை முதலாளித்துவம் சோஷலிசத்தைப் போலவே செயல்பட்டு வருகிறது என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்தலாம். ஆனால் இந்த நிகழ்வுப் போக்குகள் முதலாளித்துவத்தின் சுற்றுவட்டத்திற்குள் நடைபெறுகின்றன; அவை முதலாளித்துவத்தின் சாராம் சத்தை மாற்றவில்லை அல்லது அதை சோஷலிசத்துக்கு நெருக்கமாகக் கொண்டுவரவில்லை என்பதை நாம் நினைவிலிருத்த வேண்டும்.

பூர்ஷ்வா ஆராய்ச்சியாளர்கள் சோஷலிசத்தையும் முதலாளித்துவத்தையும் ஒப்பிடுகின்ற பொழுது இரண்டு அமைப்புகளும் வெவ்வேறு வரலாற்றைக் கொண்டிருக்கின்றன என்னும் முக்கியமான உண்மையை மறைப்பதற்கு முயல்கிறார்கள். முதலாளித்துவத்தின் வயது இருநூறு ஆண்டுகளுக்கு அதிகம் என்றால் சோஷலிசத்தின் வயது எழுபது ஆண்டுகள் மட்டுமே; அதில் பல ஆண்டுகள் விடுதலைப் போர்களிலும் பொருளாதாரப் புனரமைப்பிலும் கழிந்தன. அதனால்தான் சமூக பொருளாதார அமைப்பு என்ற முறையில் சோஷலிசம் முழுமை செய்யப்படுகின்ற கட்டத்தில் இன்னும் இருக்கிறது.

இன்று சோஷலிசம் மேன்மேலும் வெற்றி அடைந்து கொண்டிருக்கிறது; முதலாளித்துவத்தின் குறைகளைக் கோடிக்கணக்கான மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையின் விளைவாக எல்லா பூர்ஷ்வாத் தத்துவங்களும் தோன்றுகின்றன. முதலாளித்துவத்துக்கு வரலாற்று ரீதியில் எதிர்காலம் கிடையாது என்பதைப் புரிந்து கொண்டிருக்கின்ற பூர்ஷ்வா சித்தாந்திகள் சோஷலிசத்தின் வரலாற்று ரீதியான வாய்ப்புகளையும் எதிர்காலத்தையும்

பயன்படுத்தி முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்கு முயல்கிறார்கள். ஒன்றுகுவிதல் தத்துவம் அதனை ஒத்த மற்ற தத்துவங்களைப் போல உலகத்தின் நிகழ்வுப் போக்குகளையும் நமது சகாப்தத்தின் இயல்பு மற்றும் உள்ளடக்கத்தையும் உருத்திரிபான முறையில் சித்திரிக்கிறது, முதலாளி வர்க்கத்துக்குச் சார்பான முறையில் விளக்குகிறது.

பூர்ஷ்வாப் பிரசாரம் மேற்கூறிய தத்துவங்களைத் தவிர, ஏகாதிபத்திய வட்டாரங்களின் கொள்கையினால் ஊக்குவிக்கப்பட்டு வெளிப்படையான பிற்போக்கு கோஷங்களை ஆதரிக்கிறது. சோஷலிசம் வரலாற்று ரீதியில் மாபெரும் வழு, சில மக்களினங்கள் செய்த ''தவறு'', அதைத் ''திருத்துவதற்காக'' ஒரு புனிதப் போரை நடத்த வேண்டும் என்று இவை கூறுகின்றன. உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் புதிய வாழ்க்கையை நம்பிக்கையுடன் நிர்மாணித்துக் கொண்டிருக்கின்ற ஒரு டஜனுக்கு மேற்பட்ட அரசுகள் ''வழி தவறிவிட்டன'' என்று நம் காலத்தில் கூறுவது சாத்தியமா? கோடிக்கணக்கான உழைக்கும் மக்களும் மொத்த நாடுகளும் சமூக விடுதலைக்கும் தேசிய சுதந்திரத்துக்கும் போராடுவதைப் புறக்கணிப்பது சரியா? இக்கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு நமது சகாப்தத்தின் உண்மையான இயல்பை ஆராய வேண்டும்.

### நமது சகாப்தத்தின் தனித்தன்மைகள்

நம்முடைய சகாப்தத்தைக் கவனமாக, முழுமையாக ஆராய்வது அதன் முக்கியமான சம்பவங்களையும் நிகழ்வுப் போக்குகளையும் எடுத்துக்காட்டுவதற்கு உதவுகிறது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தை நோக்கிய மாற்றமும், இரண்டு உலக அமைப்புகளுக்கு இடையிலான வரலாற்று

ரீதியான போராட்டமும்தான் நம்முடைய சகாப்தத்தின் பிரதான உள்ளடக்கமாகும். இது சோஷலிஸ்ட் மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகள் நடைபெறுகின்ற சகாப்தம், காலனியாதிக்க அமைப்பு தகர்ந்து விழும் சகாப்தம், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு எதிராகவும் ஜனநாயகம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்காகவும் சமூக வளர்ச்சியின் முக்கிய இயக்கு சக்திகளாகிய உலக சோஷலிச அமைப்பும் தொழிலாளர் மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கமும் சுதந்திரமடைந்த அரசுகளின் மக்களும் வெகுஜன ஜனநாயக இயக்கங்களும் நடத்துகின்ற போராட்டத்தின் சகாப்தம்.

உலக சோஷலிச அமைப்பு நம்முடைய சகாப்தத்தின் மையமாக இருக்கிறது. உழைக்கும் மக்கள் தம்முடைய ஆட்சியை உலக ரீதியில் வலியுறுத்துவது நம் கால வளர்ச்சியின் முக்கியமான திசைவழி. இதை சோஷலிச நாடுகள் வெளியிடுகின்றன. உலக சோஷலிசம் சர்வதேச நிகழ்ச்சிகளின் வளர்ச்சியின் மீது மேன்மேலும் அதிகமான தாக்கத்தைச் செலுத்துகிறது, சமாதானப் போராட்டத்தை நடத்துவதன் மூலம் நேர்மையான மக்கள் எல்லோருடைய விருப்பார்வங்களையும் வெளியிடுகிறது என்ற மெய்விவரம் இத்திசைவழியின் வெளியீடு ஆகும்.

நம்முடைய சகாப்தத்தின் முக்கியமான கூறுகள், தனித்தன்மைகள் யாவை?

**நம் சகாப்தத்தின் குறியடையாளம் அதன் மாறும் தன்மை.** ஒரு சமூக அமைப்பிலிருந்து மற்றொரு அமைப்புக்கு மாறும் இத்தகைய காலகட்டங்களை மனிதகுலத்தின் வரலாறு முன்னெப்போதாவது பார்த்ததுண்டா? ஆம். உதாரணமாக, நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்துக்கு மாறும் காலகட்டம். ஆனால் அது ஒரு சுரண்டல் அமைப்பிலிருந்து மற்றொரு சுரண்டல் அமைப்புக்கு மாறுவதாகவே இருந்தது. இரண்டு அமைப்புகளிலும் சமூகம் செல்வந்தர்

கள், ஏழைகள் என்னும் இரண்டு எதிரெதிரான வர்க்கங்களாகப் பிரிந்திருந்தது. இப்பொழுது நடைபெறுகின்ற மாற்றம் வேறுவிதமானது. அது ஒடுக்குமுறை இல்லாத, செல்வந்தர்கள் மற்றும் ஏழைகள் இல்லாத முற்றிலும் புதிய சமூகத்துக்கு, சமத்துவ சமூகத்துக்கு, உழைக்கும் மக்களுக்கு எல்லா அதிகாரமும் சொந்தமாக இருக்கின்ற சமூகத்துக்கு மாறுவதைக் குறிக்கிறது. அதனால் புதியவற்றுக்கும் பழைய வற்றுக்கும் இடையில் போராட்டம் மிகவும் தீவிரமாக இருக்கிறது. முதலாளிகள் தங்களுடைய ஆட்சியை நிரந்தரப் படுத்துவதற்கு எதையும் செய்வதற்குத் தயங்க மாட்டார் கள்.

தேசிய விடுதலைப் போராட்டப் பாதையைப் பின்பற்றிய பல மக்களினங்கள், சுரண்டல் சமூக அமைப்பை ஒழிப்பதன் மூலமாகவே உண்மையான சுதந்திரத்தைப் பெற முடியும் என்பதை உணர்ந்து விட்டன. அதனால்தான் இன்று பல நாடுகள் சோஷலிஸ்ட் திசைவழிப் பாதையைப் பின்பற்று கின்றன.

**நமது சகாப்தம் புரட்சிகர சகாப்தம்.** புரட்சிகரமான மாற்றங்களின் விளைவாக மட்டுமே புதிய சமூக அமைப்புக்கு மாற முடியும் என்பதை மார்க்சியம் விளக்கியிருக்கிறது; அதை நடைமுறை நிரூபித்திருக்கிறது. உலகம் சோஷலிசத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதைப் பலர் மறுப்பதில்லை; ஆனால் புரட்சி செய்யாமல் படிப்படியான மாற்றங்கள் மற்றும் சீர்திருத்தங்களின் மூலம் முதலாளித் துவத்தை சோஷலிசமாக மாற்ற முடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள். சமூக-ஜனநாயக இயக்கத்தின் தலைவர்கள் இப்படிக் கூறுவதைப் பார்க்கிறோம். அவர்கள் சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பல ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்தாலும் அந்த நாடுகள் சோஷலிசத்தை நெருங்கிவிட வில்லை. முதலாளித்துவ உலகத்திலுள்ள எல்லாத் தீமைகளும்

அந்த நாடுகளில் உள்ளன.

நம்முடைய சகாப்தத்தின் புரட்சிகரத் தன்மையை அங்கீகரிப்பது அதன் உள்ளடக்கத்தை, இயக்கு சக்திகளை, வரலாற்று எல்லைகளைப் புரிந்து கொள்வதற்கு அவசியம் ஆகும். மேற்கூறிய அம்சத்தை மறுப்பவர்கள் இன்றைய எதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் நடைபெறுகின்ற தொழிலாளி வர்க்கப் போராட்டத்தைத் தவிர ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிகளும் (இவை சோஷலிச மாற்றங்களாக வளர்ச்சியடைகின்றன) தேசிய விடுதலைப் புரட்சிகளும் அடங்கியிருக்கின்றன. தொழிலாளி வர்க்கம் தேசிய அளவிலும் சர்வதேசிய அளவிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் அனைத்தையும் ஒன்றுபடுத்துகிறது.

**நம்முடைய சகாப்தத்தின் பிரத்யேகமான தன்மை அதன் அடிப்படையான முரண்பாட்டில் அடங்கியிருக்கிறது.** இன்றைய உலகத்தில் சர்வதேச ரீதியில் பல முரண்பாடுகள் இருக்கின்றன. சோஷலிச அரசுகளுக்கும் முதலாளித்துவ அரசுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகள், முதலாளித்துவ உலகத்திற்குள் (வெவ்வேறு நாடுகள் மற்றும் நாடுகளின் கோஷ்டிகளுக்கு இடையில்) உள்ள முரண்பாடுகள் இவற்றிலடங்கும். புதிய சுரண்டல் முறைகளை உபயோகிக்கின்ற முந்திய தலைமை நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் மேன்மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. எனினும் சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் உள்ளதே அடிப்படையான முரண்பாடு. இந்த சகாப்தத்தின் மற்ற எல்லா முரண்பாடுகளையும் தீர்ப்பதில் அது தீர்மானகரமான தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. உலகில் மக்களினங்களின் எதிர்காலம், பூமியில் சமாதானத்தின் எதிர்காலம் இம்முரண்பாடு எப்படித்

தீர்க்கப்படும் என்பதைப் பொறுத்திருக்கிறது. ஒன்றுக் கொன்று எதிரான சமூக அரசியல் அமைப்புகளுக்கு இடை யில் வரலாற்று ரீதியான போட்டி சமாதான சகவாழ்க்கைச் செயல்முறையில் தீர்க்கப்பட வேண்டும், அதுவே புதிய சமூகத்தின் உள்ளார்ந்த இயல்புடன் முழுமையாகப் பொருந்துகிறது என்பது முக்கியமாகும். சோஷலிசம் ஆயுதப் போராட்டத்தின் மூலமன்றி, பழைய அமைப்பைக் காட் டிலும் புதிய அமைப்பில் வரலாற்று ரீதியான சாதகங்கள் இருப்பதை விளக்கிக் காட்டுவதன் மூலம் உலகில் வெற்றி அடையும்.

சோஷலிச நாடுகளின் பலம் அதிகரிக்கின்ற அளவுக்கு உலக சமாதானம் நிலையாக இருக்கும், சமூக விடுதலைக்கும் தேசிய சுதந்திரத்துக்கும் எல்லா மக்களினங்களும் நடத்து கின்ற போராட்டங்கள் வெற்றியடைவதற்கு உண்மையான வாய்ப்புகள் பெருகும் என்பதை வரலாறு மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது. ஆதனால்தான் இந்த உலகத் திலுள்ள நேர்மையான மக்கள் அனைவரும் சமாதானம், முன்னேற்றம், சமூக நீதி ஆகியவற்றின் அரணாகிய சோஷ லிசத்தின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குப் பாடுபடுகிறார் கள். ஆனால் மறு பக்கத்தில் முதலாளி வர்க்கம் மக்கள் சோஷலிசப் பாதையைப் பின்பற்றாமல் தடுப்பதற்கு எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறது.

**உலகத்தில் சக்திகளின் நிலவரம் சோஷலிசத்துக்குச் சாதக மாக மாறுவது நம்முடைய சகாப்தத்தின் முக்கியமான அம்சமா கும்.** உலக சோஷலிச அமைப்பு சமூக வளர்ச்சியின் தீர் மானகரமான காரணியாகப் படிப்படியாக மாறுவது நம் காலத்தின் பிரத்யேகமான அம்சம். இது மிகவும் நீண்ட காலம் நடைபெறுகின்ற, சிக்கலான நிகழ்வுப் போக்கு; அது ஒரு மொத்த வரலாற்றுச் சகாப்தத்தின் உள்ளடக்கம் ஆகும். உலகத்தில் முதலாளித்துவம் இனியும் ஆதிக்கம்

செலுத்தவில்லை; அது அழிவது நிச்சயம்; அது இனிமேல் உலக நிகழ்ச்சிகளின் போக்கில் தீர்மானகரமான தாக்கத் தைச் செலுத்த முடியாது. ஏகாதிபத்தியம் இனிமேல் நம் சகாப்தத்தின் கேந்திரமான பிரச்சினைகளை, போரா, சமாதானமா என்ற முக்கியமான பிரச்சினையை மக்களு டைய சித்தத்தைப் பற்றி அக்கறையின்றித் தீர்க்க முடியாது. அது தேசிய விடுதலை இயக்கத்தை அடக்க முடியாது அல்லது சோஷலிசத்தின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது. வரலாற்றுப் போக்கின் மீது சோஷலிசத்தின் தாக்கம் அதிகரிக்கின்ற பொழுது சர்வதேசப் பிரச்சினை களைத் தீர்ப்பதில் அது மேன்மேலும் அதிகமான முன் முயற்சிகளைச் செய்கிறது. மனிதகுலம் இன்னும் சிறப்பான வாழ்க்கையை, போர்கள், சுரண்டல் அல்லது ஒடுக்குமுறை இல்லாத வாழ்க்கையை நோக்கி முன்னேறுவதற்கு இது உத்தரவாதம் ஆகும்.

ஆனால் இந்தப் பாதையில் முன்னோக்கி நடைபோட ஏகாதிபத்தியமும் அதன் ஆக்கிரமிப்புக் கொள்கையும் தடை யாக உள்ளன. பல லட்சக்கணக்கான மனித உயிர்களைக் குடித்த, இரண்டு உலக யுத்தங்களைக் கட்டவிழ்த்து விட்ட ஏகாதிபத்தியம் இன்று மூன்றாவது உலக யுத்தத்தைத் துவக்கப் போவதாக அச்சுறுத்துகிறது. மனித மேதமையின் சாதனைகளை இது படுபயங்கர அழிவு சக்தியுள்ள ஆயுதங் களைத் தோற்றுவிக்கப் பயன்படுத்துகிறது. முழு மக்களினங் களின் விதியையே பலியிடத் தயாராயுள்ள ஏகாதிபத்திய வட்டங்களின் கொள்கை, இத்தகைய ஆயுதங்கள் பயன் படுத்தப்படும் அபாயத்தை அதிகரிக்கிறது. இறுதியில் இது உலகளாவிய இராணுவ மோதலுக்குத்தான் இட்டுச் செல் லும், இம்மோதலில் வெற்றி பெற்றவர்களும் இருக்க மாட் டார்கள், தோல்வியடைந்தவர்களும் இருக்க மாட்டார்கள், மாறாக மனித நாகரிகமே அழிந்து போகக் கூடும்.

எனவேதான் இன்றைய உலகின் மிக முக்கிய பிரச்சினை யாகிய சமாதானப் பிரச்சினையைத் தீர்க்க சோஷலிச உலகம் பெரும் முயற்சிகளை மேற்கொள்கிறது. 2000ஆம் ஆண்டு வாக்கில் சகலவித அணு ஆயுதங்களையும் எல்லா இடங்களிலும் ஒழித்துக் கட்ட வேண்டும், மனிதகுலத்தை சுய அழிவு அபாயத்திலிருந்து காப்பாற்ற வேண்டும், இன் றைய தலைமுறையினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் நம்பகமான பாதுகாப்பிற்கு வகை செய்ய வேண்டும் என்ற ஒரு செயல்திட்டத்தை சோவியத் யூனியன் முன்வைத் துள்ளது. இச்செயல்திட்டத்தை நிறைவேற்றுவதென்பது எல்லா மக்களினங்கள் மற்றும் அரசுகளின், எல்லா சமூக சக்திகள் மற்றும் நல்லெண்ணமுள்ள மக்களின் ஜீவாதார முக்கியத்துவமுள்ள கடமையாகும்.

அத்தியாயம் நான்கு

# சோஷலிஸ்ட் புரட்சி பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவம்

சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிய தத்துவம் விஞ்ஞான கம்யூனிசத்தின் முக்கியமான சாதனைகளில் ஒன்று ஆகும். மனிதகுலத்தின் வரலாற்றில் பல வெகுஜன இயக்கங்கள், மக்கள் எழுச்சிகள், போர்கள் ஆகியவை நடைபெற்றிருக் கின்றன. இவை சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஆழமான மாற்றங்களுக்கு, காலாவதியான சமூக பொரு ளாதார உருவாக்கங்களுக்குப் பதிலாக புதிய உருவாக்கங் களை ஏற்படுத்துவதற்கு இட்டுச் சென்றன. ஆனால் கடந்து சென்ற வரலாற்றுச் சகாப்தங்களின் சமூகப் புரட்சிகள் அனைத்துமே தன்னியல்பான முறையில் ஏற்பட்டன. அவை தோன்றப் போவதை, அவற்றின் வளர்ச்சிப் போக்கை அல்லது சாத்தியமான விளைவுகளை அவற்றின் சித்தாந்தி களால் முன்னறிய இயலவில்லை. விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம், சோஷலிஸ்ட் புரட்சி தவிர்க்க முடியாதது, முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கும் சோஷலிச அமைப்பை நிறுவுவதற்கும் உழைக்கும் மக்கள் உணர்வு பூர்வமாகப் போராடுவது அவசியம் ஆகியவற்றை வரலாற்றில் முதன் முறையாக நிறுவியது.

விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவர்களாகிய மார்க்சும் எங்கெல்சும் முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சியை ஆள்கின்ற புறவய விதிகளைக் கண்டுபிடித்த பிறகு முதலாளித்துவ அமைப்பில் உள்ளுறையாக இருக்கின்ற பகை முரண்பாடுகள் தீவிரமடைவதன் விளைவாக சோஷலிஸ்ட் புரட்சியைத் தவிர்க்க முடியாது என்ற தத்துவ ரீதியான முடிவை வகுத்தளித்தார்கள். சமூகத்தில் புரட்சிகள் தற்செயலாக அல்லது வரலாற்றின் ''வழக்கமான'' போக்கை மீறி ஏற்படுவதில்லை. அவை சமூக வளர்ச்சியில் சிற்சில கட்டங்கள்; அவை வரலாற்று விதிகளின்படி நடைபெறுகின்றன; புறநிலையான முரண்பாடுகள் அவற்றின் சுற்றுவட்டத்துக்குள் தீர்க்கப்படுகின்றன என்று அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். புரட்சிகளைப் பிரசவிக்கின்ற சமூக முரண்பாடுகளைப் போலவே புரட்சிகளும் தவிர்க்க முடியாதவை ஆகும்.

சமூக முரண்பாடுகளின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படை எது? மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளாயத மதிப்புகளைப் படைப்பதற்கு வரலாற்று ரீதியில் தோன்றிய உற்பத்தி முறை அந்த அடிப்படையைத் தருகிறது. உற்பத்தி முறை என்பது உற்பத்திச் சக்திகள் (சமூக உற்பத்தியைச் செய்பவர்கள் என்ற முறையில் மக்கள், உழைப்புக் கருவிகள், உழைப்புப் பொருட்கள் இவற்றில் அடங்கும்) மற்றும் உற்பத்தி உறவுகளின் (சமூக உற்பத்தி நிகழ்வுப் போக்கில் மக்களுக்கு இடையிலான உறவுகள், வர்க்க சமூகத்தில் அவை ஆதிக்க உறவுகளாக, அடிமைப்படுகின்ற உறவுகளாக இருக்கும்) ஒற்றுமை ஆகும். உற்பத்திச் சக்திகள் உற்பத்தி முறையில் தலைமையான கூறாக இருக்

கின்றன. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்துக்கும் உரிய முறையில் உற்பத்தி உறவுகள் இருக்கின்றன. உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் தடுக்கத் தொடங்குகின்ற பொழுது முரண்பாடு ஏற்படுகிறது. பழைய உற்பத்தி உறவுகளைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதன் மூலம், ஆகவே பழைய உற்பத்தி முறைக்குப் பதிலாகப் புதிய உற்பத்தி முறையை அமைப்பதன் மூலம் அந்த முரண்பாடு தீர்க்கப்படுகிறது. பொருளாதார உறவுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்ற பொழுது அவை அரசியல், சித்தாந்த, கலாசார மற்றும் இதர உறவுகளின் அமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இப்படி ஒரு சமூக பொருளாதார உருவாக்கத்தை மற்றொன்று அகற்றுகிறது. உதாரணமாக, மனித சமூக வரலாற்றில் பூர்விகக் கூட்டு வாழ்க்கை அமைப்புக்கு அடுத்தபடியாக அடிமையுடைமை அமைப்பு ஏற்பட்டது. நிலப்பிரபுத்துவம் அதை அகற்றியது. அதன் பிறகு கடைசி சுரண்டல் அமைப்பாகிய முதலாளித்துவம் ஏற்பட்டது.

உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்திச் சக்திகளின் தன்மை மற்றும் வளர்ச்சி நிலைக்கும் இடையில் இசைவை மீண்டும் ஏற்படுத்துவது எந்த சமூகப் புரட்சிக்கும் பிரதான உள்ளடக்கம் ஆகும். ஆகவே ஒரு சமூகப் புரட்சியின் வெற்றி என்பது பிரதானமாக, புதிய மற்றும் முற்போக்கான உற்பத்தி உறவுகள் தம்மை நிறுவிக் கொள்வதைக் குறிக்கிறது.

ஆனால் அந்தப் புரட்சிகர மாற்றம் தானாகவே ஏற்படுவதில்லை. வளர்ச்சியடைகின்ற உற்பத்திச் சக்திகள் சமூக உறவுகளின் மீது தாக்கம் செலுத்துகின்றன. புதிய உற்பத்தி உறவுகளை நிறுவுவதில் அல்லது பழைய உற்பத்தி உறவுகளைப் பாதுகாப்பதில் அக்கறையுள்ள மக்களை அத்தாக்கம் செயல்படுத்துகிறது. இம்முறையில் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலுள்ள முரண்

பாடு ஏதாவதொரு ரகத்தைச் சேர்ந்த உறவுகளைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடாக வெளிப்படுகிறது.

அந்த முரண்பாடு வர்க்கப் போராட்டத்தில் தீர்க்கப் படுகிறது. அதன் முடிவு பொருளாதார உறவுகளின் தன் மையை நிர்ணயிக்கிறது; உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை வேகப்படுத்துகிறது அல்லது அதன் வேகத்தைக் குறைக் கிறது.

ஒவ்வொரு சமூகப் புரட்சியும் வர்க்கங்களின் நிலையில் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்துகிறது; வரலாற்று ரீதி யில் முற்போக்கான வர்க்கம் வெற்றியடைகிறது. அந்த வெற்றி சமூக உறவுகளின் ஒவ்வொரு துறையிலும் வர்க்க ஆதிக்கத்தில் மாற்றத்தைக் குறிக்கிறது. வெற்றியடைந்த வர்க்கம் அரசியல் துறையில் ஆட்சியதிகாரத்தைப் பிடிக் கிறது, தன்னுடைய ஆட்சியின் பிரதான கருவியாக அரசு நிர்வாகத்தை மேற்கொள்கிறது. அந்த வர்க்கம் பொரு ளாதாரத் துறையில் அடிப்படையான உற்பத்திச் சாதனங் களுக்கு உடைமையாளராகிறது, தன் வர்க்க நலன்களுக்கு மிகவும் உசிதமான உடைமை வடிவம் நிலவுவதை உறுதிப் படுத்துகிறது. பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஆதிக்கம் செலுத்துகின்ற வர்க்கத்தின் சித்தாந்தம் படிப்படியாக சமுதாயத்தின் சமூக உணர்வின் தலைமையான கூறா கிறது.

சமூகப் புரட்சி அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம் ஆகிய துறைகளில் ஏற்படுத்துகின்ற அடிப்படையான மாற்றங்கள் இயக்கவியல் ஒற்றுமையாக இருக்கின்றன. பொருளாதார உறவுகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சமூகப் புரட்சிக்கு அடிப்படை என்றால் அதன் விளைவாக ஏற்படு கின்ற அரசியல் மற்றும் சித்தாந்த மாற்றங்கள் பொருளா தார வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்றன. வளர்ச்சி

யின் சில கட்டங்களில் அரசியல் மாற்றங்கள் பொருளாதாரத்தில் மாற்றங்களுக்கு அவசியமான நிபந்தனை ஆக முடியும்; சித்தாந்தத்தில் மாற்றங்கள் பொருளாதாரத்திலும் அரசியலிலும் மாற்றங்களைக் கொண்டுவர முடியும். சமூக வாழ்க்கையின் முக்கியமான துறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களின் இயக்கவியல் தொடர்பு பிரத்யேகமான முறையில் வெவ்வேறு ரகங்களைச் சேர்ந்த சமூகப் புரட்சிகளில் பிரதிபலிக்கப்படுகிறது. சமூகப் புரட்சியின் ரகம் அதன் வர்க்க உள்ளடக்கத்தினால் — அது அழிந்து கொண்டிருக்கின்ற வர்க்கத்தையும் ஆட்சிக்கு வந்து கொண்டிருக்கின்ற வர்க்கத்தையும் இனம் காட்டுகிறது — நிர்ணயிக்கப்படுகிறது.

### சமூகப் புரட்சி ரகம்
### என்ற முறையில் சோஷலிஸ்ட் புரட்சி

சமூகப் புரட்சி ரகம் என்ற முறையில் சோஷலிஸ்ட் புரட்சியின் தனித்தன்மைகள் யாவை? அது ஓர் ஆளும் வர்க்கத்துக்குப் பதிலாக இன்னொரு ஆளும் வர்க்கம் ஏற்படுவதை மட்டும் வெறுமனே குறிக்கவில்லை; ஆனால் வர்க்க சமூகங்களின் சகாப்தத்திலிருந்து வர்க்கம் இல்லாத கம்யூனிஸ்ட் சமூகத்தின் சகாப்தத்திற்கு மாறுதல் ஆரம்பமாவதைக் குறிக்கிறது. முதலாளித்துவத்தின் கீழ் ஏற்பட்ட உற்பத்தியின் சமூகமயமாக்கல் உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமையை நிறுவுவதற்கும் சுரண்டுகின்ற வர்க்கங்கள், சுரண்டப்படுகின்ற வர்க்கங்கள் என்று சமூகத்தில் நிலவுகின்ற பிரிவினையை ஒழிப்பதற்கும் அவசியமான முன்நிபந்தனைகளைப் படைக்கிறது.

உழைக்கும் மக்கள் மற்றும் சுரண்டப்படுகின்ற மக்களின் நலன்களுக்காக நடைபெறுகின்ற புரட்சி என்ற முறையில் சோஷலிஸ்ட் புரட்சியின் இந்த அடிப்படையான வேறுபாடு புரட்சிகர மாற்றங்களின் மொத்தத்தில் அரசியல் மாற்றங் களின் தீர்மானகரமான பாத்திரத்தை முன்நிர்ணயம் செய் கிறது. முதலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைத் தன்னிடம் வைத்திருக்கின்ற வரை முதலாளித்துவ சமூகத்தின் வயிற்றில் உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமையை ஒழிப்பதை அடிப்படையாகக் கொண்ட சோஷலிஸ்ட் உற்பத்தி உறவு கள் வளர்ச்சியடைய ஒருபோதும் அனுமதிக்காது.

முதலாளி வர்க்கத்தின் பொருளாதார ஆதிக்கத்தை அகற்றுவதற்கு முதலில் அதன் அரசியல் சக்தியைப் பறிப் பதே வழியாகும். அதனால்தான் உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரத்தை நிறுவி சோஷலிஸ்ட் அரசை உரு வாக்குவதற்கு இட்டுச் செல்கின்ற அரசியல் புரட்சி பொரு ளாதாரத்தில் சோஷலிஸ்ட் உறவுகள் வெற்றிபெறுவதற்கு முக்கியமான நிபந்தனையாக இருக்கிறது. உழைக்கும் மக் களின் வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கம் வரலாற்றில் முதல் தடவையாக ஆட்சியதிகாரத்தைப் பெறுகிறது; பொரு ளாதார மற்றும் சித்தாந்த ஆதிக்கத்துடன் தன்னுடைய அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு அந்த ஆட்சியதி காரத்தைப் பயன்படுத்துகிறது.

சோஷலிஸ்ட் புரட்சி உற்பத்திச் சாதனங்களில் தனியுடை மையை அகற்றி சமூக உடைமையை நிறுவுகிறது. அது சுரண்டல் ரகத்தைச் சேர்ந்த அரசை ஒழித்து புதிய ரகத் தைச் சேர்ந்த அரசை நிறுவுகிறது. அந்த அரசு வரலாற்றில் முதல் தடவையாகப் பெரும்பான்மையான மக்களுடைய நலன்களுக்குப் பாடுபடுகிறது. அது, சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதில் சுறுசுறுப்பாகப் பங்கெடுக்கின்ற இலட்சியங்கள் மற்றும் கடமைகளுக்கேற்ப மனித உணர்வில்

அடிப்படையான மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது.*

இத்தகைய புரட்சிகர மாற்றங்கள் அனைத்தையும் உடனடியாக நிறைவேற்ற முடியாது என்பது இயற்கையே. அவை நிறைவேறுவதற்குத் திட்டவட்டமான காலப்பகுதி அவசியம். அது எவ்வளவு காலம் என்பது ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிஸ்ட் புரட்சி வளர்ச்சியடைகின்ற பிரத்யேகமான நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது.

ஆகவே சோஷலிஸ்ட் புரட்சி விரிவான அர்த்தத்தில் பொருளாதார, அரசியல் மற்றும் சித்தாந்த மாற்றங்களின் ஒற்றுமையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகப் புரட்சியாகும்; குறுகிய அர்த்தத்தில், அது முதலாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சிக்குப் பதிலாக உழைக்கும் மக்களின் ஆட்சியை ஏற்படுத்துகின்ற அரசியல் புரட்சியாகும்.

நாம் முதலில் தொழிலாளி வர்க்கமும் இதர உழைக்கும் மக்களும் அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்கின்ற நியதிகள், நிலைமைகள், வழிமுறைகள் மற்றும் வடிவங்கள் என்ற நோக்கிலிருந்து சோஷலிஸ்ட் புரட்சியை ஆராய்வோம். அடுத்தபடியாக, உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரம் நிறுவப்பட்டதும் சமூக வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் புரட்சிகரமான புத்தாக்கத்தின் பிரச்சினைகளை எடுத்துக் கொள்வோம்.

### சோஷலிஸ்ட் புரட்சியின் பிரதான நியதிகள்

சோஷலிசம் முதலாளித்துவத்தை அகற்றுவதை வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாது என்று விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் எடுத்துக்காட்டுகிறது. புரட்சிகர மாற்றங்களை

* V. I. Lenin, *Collected Works,* vol. 29, p. 137; vol. 30, pp. 263–265 பார்க்க.

ஆதரிப்பவர்களில் சிலர், அவற்றை எதிர்ப்பவர்கள் ஆகிய இரு சாராருமே சதித்திட்டங்கள், திடீர்ப் புரட்சிகள் அல்லது கவிழ்ப்பு நடவடிக்கை, எழுச்சிகளையும் ஆயுதப் போராட்டங்களையும் தூண்டுதல் ஆகியவற்றின் மூலம் உடனடியாக சோஷலிசத்தைக் கொண்டுவருகின்ற • சாத்தியத்தை நிறுவுவதற்கு மேற்கூறிய கருத்தை உபயோகித்துக் கொண்டார்கள். முதல் தரப்பினர் தனிப்பட்ட புரட்சிக் காரர்களின் சித்தம், மன உறுதி புரட்சியை நிறைவேற்றுவதற்குப் போதுமானது; ஏனென்றால் பெருந்திரளான மக்கள் அவர்களைப் பின்பற்றுவார்கள் என்று கூறினார்கள். ஆனால் இரண்டாம் தரப்பினர் எல்லாப் புரட்சிக் காரர்களையும் — பிரதானமாக, கம்யூனிஸ்டுகளை — ஆட்சியைக் கைப்பற்றி சர்வாதிகார, ஜனநாயக விரோத ஆட்சிகளை ஏற்படுத்துவதற்குப் பாடுபடுகின்ற சதிகாரர்களாக, பயங்கரவாதிகளாகச் சித்திரித்தார்கள். சோஷலிஸ்ட் புரட்சியின் வழிமுறைகளைப் பற்றி இப்படிப்பட்ட ''விளக்கம்'' விஞ்ஞான கம்யூனிசத்தின் இன்றியமையாத தத்துவக் கருதுகோள்களைத் திரித்துக் கூறுவது மட்டுமின்றி அதற்கு எதிராக ஏகாதிபத்தியப் பிற்போக்குவாதத்துக்கு உதவி செய்கிறது. மேற்கூறிய கற்பனைகளுக்கு மாறாக, சோஷலிஸ்ட் புரட்சிகள் உத்தரவின்படி, சில தனிநபர்களுடைய விருப்பத்தின்படி நிறைவேற்றப்படுபவை அல்ல, வரலாற்று வளர்ச்சிப் போக்கில் உருவெடுக்கின்ற திட்டவட்டமான முன்நிபந்தனைகளும் நிலைமைகளும் அவற்றுக்கு அவசியம், இப்புரட்சிகள் உள்ளுறையான நியதிகளுக்கு ஏற்ப நடைபெறுகின்றன என்று விஞ்ஞான கம்யூனிசம் தத்துவ ரீதியாக நிரூபிக்கிறது.

**புரட்சியின் புறவய முன்நிபந்தனைகள்.** சோஷலிஸ்ட் புரட்சி விதிமுறைப்படி நடைபெறுகிறது என்பதை நிறுவிய விஞ்ஞான கம்யூனிசத் தத்துவாசிரியர்கள் முதலாளித்துவம்

சோஷலிசத்தினால் ஒழிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாதபடி செய்கின்ற புறவய முன்நிபந்தனைகளை எடுத்துக் கூறினார்கள். உற்பத்திச் சக்திகளின் அதிகமான வளர்ச்சி மட்டம் தலைமையான நிபந்தனையாகும்; அந்த வளர்ச்சி அவற்றை சமூகமயமாக்குவதை இன்றியமையாததாக்குகிறது. பெரிய அளவான பாக்டரித் தொழில்துறையின் வளர்ச்சி (சில தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்), உற்பத்தியின் தனிப் பிரிவுகளும் தொழில்துறைகளும் ஒற்றைப் பொருளாதார அமைப்பாக ஒன்று சேர்ந்திருத்தல், உலகச் சந்தையின் வேகமான வளர்ச்சி ஆகிய நிகழ்வுப் போக்குகள் அனைத்தும் தனியார் முதலாளித்துவ சுவீகரிப்பு வடிவத்துடன் முரண்படுகின்றன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் திரும்பத் திரும்ப ஏற்படுகின்ற நெருக்கடிகள், உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையில் மேன்மேலும் தீவிரமடைகின்ற வர்க்கப் போராட்டம் ஆகிய இரண்டுமே இதை வெளிப்படையாக எடுத்துக்காட்டுகின்றன.

முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த பொழுது உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் சுவீகரிப்பின் தனியார் முதலாளித்துவ வடிவத்துக்கும் இடையிலுள்ள அதன் அடிப்படையான முரண்பாடு முதலாளித்துவத்தின் உச்ச கட்டமான ஏகாதிபத்தியத்தின் கீழ் வெடிப்பு நிலையை அடைந்தது. "...அரசு-ஏகபோக முதலாளித்துவம் சோஷலிசத்திற்கான முழுமையான பொருளாயதத் தயாரிப்பாகும், சோஷலிசத்தின் நுழைவாயிலாகும், வரலாற்று ஏணியில் ஒரு படியாகும். இந்தப் படிக்கும் சோஷலிசம் என்றழைக்கப்படும் படிக்கும் இடையே இடைப்பட்ட படிகள் எதுவும் கிடையாது'' என்று லெனின் எழுதினார். *

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கங்கள் 377–378.

இன்றைய விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சி பொரு ளாதாரத்தை சமூகமயமாக்குவதை விரைவுபடுத்துகிறது. ஏகபோக ஆட்சியில் சமூக பகை முரண்ணியல்புகள் தீவிரமடை கின்றன; முதலாளித்துவம் புதிய முரண்பாடுகளைப் பிரசவிக் கிறது.

ஆனால் இந்த முரண்பாடுகள் தாமாகவே ஒரு சோஷ லிஸ்ட் புரட்சிக்கு இட்டுச் செல்வதில்லை; அவை வெகுஜனங் களின் நடவடிக்கையின் மூலம்தான் தீர்க்கப்படுகின்றன. உழைக்கும் மக்கள் புரட்சி செய்வதற்குக் கிளர்ந்தெழ வேண்டுமென்றால் சமூக மற்றும் அரசியல் முரண்பாடுகள் குறிப்பிட்ட அளவுக்குத் தீவிரமான நிலையை அடைய வேண்டும். சோஷலிஸ்ட் புரட்சியை சாத்தியமாக்குகின்ற புறவய மற்றும் அகவய சமூக அரசியல் முன்நிபந்தனைகள் எவை?

**புரட்சிகரமான நிலைமை.** பெருந்திரளான மக்கள் புரட்சிகர நடவடிக்கைக்குத் தயாராக வேண்டுமென்றால் ஆழமான அரசியல் நெருக்கடி புரட்சிகரமான நிலைமையை உருவாக்க வேண்டும். அத்தகைய நிலைமை பின்வரும் மூன்று முக்கியமான கூறுகளைக் கொண்டிருக்கும்.

முதலாவதாக, ஆளும் வர்க்கத்தினர் மற்றும் கோஷ்டி கள் மத்தியில் முரண்பாடுகள் தீவிரமடைந்து அவர்கள் வர்க்க ஆதிக்கத்தை இனிமேலும் நீடிப்பது அல்லது பழைய முறையிலேயே சமூகத்தை ஆட்சி செய்வது இயலாது என்ற நிலை ஏற்பட வேண்டும்; ஒடுக்கப்பட்டிருக்கின்ற வர்க்கங் கள் பழைய முறையில் வாழ விரும்பாத நிலை ஏற்பட வேண்டும்.

இரண்டாவதாக, உழைக்கும் மக்களின் பொருளாயத, சமூக மற்றும் அரசியல் நிலைமைகள் மிகவும் தீவிரமாகச் சீர்கேடடைய வேண்டும்.

மூன்றாவதாக, உழைக்கும் மக்களின் அரசியல் நடவடிக்

43

கை தீவிரமடைந்து அதிகரிக்க வேண்டும்; அமைதியான காலங்களில் அவர்களிடம் இருக்கின்ற செயலற்ற தன்மை, சடத்துவம் ஒழிய வேண்டும்.*

ஆகவே புரட்சிகரமான நிலைமை என்பது சமூக அரசியல் முரண்பாடுகள் அதிகமாகத் தீவிரமடைந்திருப்பதன் வெளியீடாகும். நம் காலத்தில் புரட்சிகரமான நிலைமைக்கு உழைக்கும் மக்களின் பொருளாயத நிலைமை தீவிரமாகச் சீர்கேடடைவது இன்றியமையாத காரணியல்ல; உழைக்கும் மக்களின் சமூக அரசியல் உரிமைகளுக்கான வர்க்கப் போராட்டம் தீவிரமடைதல், யுத்தத்துக்கு எதிராக சமாதானத்துக்கு, காலனியாதிக்கத்துக்கு எதிராக தேசிய விடுதலைக்கும் ஜனநாயகத்துக்கும் வெகுஜன இயக்கத்தின் மாபெரும் எழுச்சி அத்தகைய நிலைமையை ஏற்படுத்த முடியும். புரட்சிகரமான நிலைமை உருவாதல் ஏராளமான புறவயக் காரணிகள் ஒன்று சேருதலில் நிர்ணயிக்கப்படுகிறது; ஆனால் அது புரட்சியாக வளர்ச்சியடைதல் பெரும்பான்மையும் உழைக்கின்ற பெருந்திரளான மக்களும் கம்யூனிஸ்ட் கட்சியும் அத்தகைய புரட்சிக்கு எத்தகைய சிறப்பான தயாரிப்புடன் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது.

கம்யூனிஸ்டுகள் பெருந்திரளான மக்கள் மத்தியில் செல்வாக்கு பெறுவதற்கு நீண்ட, இடைவிடாத இயக்கத்தை நடத்த வேண்டும் என்று லெனின் கற்பித்தார். ‘‘விதையை ஊன்றுவதிலிருந்து அறுவடை செய்வதற்குப் பல பத்தாண்டுகள் ஆனாலும் புரட்சிக்குத் தன்னலமற்ற அர்ப்பணிப்பும் மக்கள் மத்தியில் புரட்சிகரப் பிரசாரமும் வீணாகாது...’’ என்று லெனின் கூறினார்.**

---

* V. I. Lenin, *Collected Works,* vol. 21, pp. 213–214; வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 291 பார்க்க.

** V. I. Lenin, *Collected Works*, vol. 18, p. 31.

சோஷலிஸ்ட் புரட்சியின் நியதி என்ற முறையில் அகவயக் காரணியை, அதாவது வெகுஜன நடவடிக்கைக்கு உழைக்கும் மக்கள் தயாராவதை எது நிர்ணயிக்கிறது?

**புரட்சியின் அகவய முன்நிபந்தனைகள்.** ஒரு சமூகப் புரட்சியின் வரலாற்று அவசியம் தம் நலன்களையும் நோக்கங்களையும் அறிந்த, சிந்திக்கின்ற மக்களின் நடவடிக்கைகளின் மூலம் நிறைவேற்றப்படுகிறது; ஆகவே புரட்சி என்பது விடுதலை இயக்கத்தின் புறவய ரீதியில் அவசியமான, விதிவழிப்பட்ட கட்டமாக இருப்பது மட்டுமன்றி அதே சமயத்தில் அதன் இலட்சியமாகவும் இருக்கிறது. பெருந்திரளான மக்களுடைய புரட்சிகர உணர்வு எவ்வளவு ஆழமாக இருக்கிறதோ, புரட்சிகரப் போராட்டத்தின் கொள்கை மாறாமையும் ஒழுங்கமைப்பும் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு புறவய நிகழ்வுப் போக்கு என்ற முறையில் சமூகத்தின் புரட்சிகரமான மாற்றத்தின் மீது அகவயக் காரணியின் தாக்கம் அதிகமான செல்தகைமையுடன் இருக்கும்.

புரட்சிக்குத் தயாரிக்கின்ற பொழுது சமூக வர்க்க சக்திகளின் நிலையைப் புரிந்து கொள்வதும் புரட்சியில் எந்த வர்க்கங்களும் சமூகப் பிரிவினரும் முற்போக்கான பாத்திரத்தை வகிப்பார்கள், எந்த வர்க்கத்தை எதிர்த்து புரட்சிகரப் போராட்டத்தை நடத்த வேண்டும், அந்தப் போராட்டத்தில் எந்த வர்க்கங்களும் சமூகப் பிரிவினரும் நடுநிலைமை வகிப்பார்கள், அவர்களின் நடுநிலைமை யாருக்குச் சாதகமாக இருக்கும் ஆகியவற்றை நிர்ணயிப்பதும் அவசியம். புரட்சியில் புறவய ரீதியில் அக்கறை கொண்டுள்ள, அதன் வெற்றிக்குத் தீவிரமாகப் போராடுகின்ற வர்க்கங்களும் சமூகப் பிரிவுகளும் **புரட்சியின் இயக்கு சக்திகள்** ஆகும்.

நம் காலத்தில் விவசாய வர்க்கம், அலுவலர்கள், அறிவுப்

பகுதியினர், மாணவர்கள் மற்றும் படைவீரர்களில் கணிச மான பிரிவினர் மேன்மேலும் அதிகமாகத் தொழிலாளி வர்க்கத்துடன் சேர்ந்து அடிப்படையான சமூக மாற்றங் களுக்காகப் போராடுகிறார்கள்.

லெனின் சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிய தன்னுடைய தத்துவத்தில் தொழிலாளி வர்க்கத்தை, உழைக்கின்ற பெருந் திரளான மக்களைப் புரட்சிக்குத் தயாரிக்கின்ற வழிமுறை களையும் அந்தப் போராட்டத்தின் போர்த்திட்டம் மற்றும் செயல்தந்திரத்தையும் பகுப்பாய்வு செய்தார். கட்சியைப் பற்றிய லெனினுடைய கோட்பாடு எல்லாப் பிரச்சினைகளி லும் மையம் கொண்டிருந்தது. கட்சி என்பது உழைக்கும் மக் களின் முன்னணிப்படை, அது தொழிலாளர் இயக்கத் துக்குப் புரட்சிகரமான தத்துவத்தைக் கொடுத்து பெருந் திரளான மக்களைப் புரட்சிகரப் போராட்டத்துக்குத் திரட்டு கின்றது. ''போராட்டத்தில் புடம் போடப்பட்டு உருக்கு உறுதி கொண்ட ஒரு கட்சி இல்லையேல், குறிப்பிட்ட அந்த வர்க்கத்திலுள்ள நேர்மையானோர் அனைவரின் நம்பிக் கைக்குப் பாத்திரமான ஒரு கட்சி இல்லையேல், வெகுஜனங் களது மனப்பாங்கைக் கவனித்து வருவதற்கும் வயப்படுத்து வதற்குமான திறன் கொண்ட ஒரு கட்சி இல்லையேல், இத்தகைய ஒரு போராட்டத்தை வெற்றிகரமாய் நடத்த முடியாது'' என்று லெனின் எழுதினார்.* ''தன்னியல் பான'' தொழிலாளர் இயக்கம் என்னும் சந்தர்ப்பவாதத் தத்துவத்தை உறுதியாக எதிர்த்த லெனின், புரட்சிகரமான கட்சியின் வழிகாட்டுதல் இல்லாவிட்டால் தொழிலாளர் இயக்கம் சீர்குலையத் தொடங்கும், முதலாளி வர்க்கத்தின் செல்வாக்குக்கு உட்படும், தன்னுடைய அரசியல் சுதந் திரத்தை இழந்து விடும் என்று வலியுறுத்தினார். விஞ்ஞான

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 223.

கம்யூனிசத் தத்துவத்தைப் பின்பற்றுகின்ற, புரட்சிகர மாற்றங்களை நிறைவேற்றுவதற்கு உழைக்கும் மக்களுக்குத் தலைமை தாங்குகின்ற தகுதியுடைய கட்சி இருப்பது அத்தகைய புரட்சி வெற்றியடைவதற்கு மிகவும் முக்கிய மான, கேந்திரமான அகநிலை முன்நிபந்தனை என்பதைக் கடந்த காலத்தில் நடைபெற்றிருக்கின்ற சோஷலிஸ்ட் புரட்சி கள் நிரூபித்திருக்கின்றன.

**பெருந்திரளான மக்களைப் புரட்சிக்குத் திரட்டுதல்.** கம் யூனிஸ்ட் கட்சியின் பலம் உழைக்கும் மக்களின் பரந்த பகுதியினருடன் அதன் இணைப்புகளில் அடங்கியிருக்கிறது; ஏனென்றால் அவர்கள்தான் சோஷலிஸ்ட் புரட்சியின் சிற்பி கள். அவர்கள் சோஷலிஸ்ட் புரட்சியில் பங்கெடுப்பது புறநிலையான நிகழ்வுப் போக்கு; பகை முரணியல்பான சமூகத்திலுள்ள முரண்பாடுகளின் வளர்ச்சியினால் அது உருவாகிறது. இந்த முரண்பாடுகளின் இயல்பு சோஷலிஸ்ட் புரட்சியில் வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவினரது பாத் திரத்தை நிர்ணயிக்கிறது. அரசியல் நெருக்கடி வெடிக்கின்ற பொழுது அத்தகைய புரட்சியின் பால் வெவ்வேறு வர்க்கங் களின் அணுகுமுறை வெளியாகிறது. பெருந்திரளான மக்கள் புரட்சிகரப் போராட்டத்திற்கு எப்படித் தயாரிக்கப்பட்டிருக் கிறார்கள், அவர்கள் தம்முடைய உடனடியான மற்றும் முடிவான நலன்களையும் நோக்கங்களையும் எவ்வளவு நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அரசியல் நெருக்கடி வெற்றிகரமான புரட்சியில் அல்லது எதிர்ப்புரட்சியின் வெற்றியில் அல்லது ஏதாவதொரு தற்காலிகமான சமரசத்தில் முடிவடையும்.

பெருந்திரளான மக்களுடைய அரசியல் நிலைகள் புறவய நிலைமைகளினால் உருவாக்கப்படுவது மட்டுமன்றி சித் தாந்த, அரசியல் போராட்டச் செயல்முறையின் போது முனைப்பாக உருவாக்கப்படுகின்றன. புரட்சிகரப் போராட்

டத்துக்குத் தலைமையேற்கின்ற கட்சி பெருந்திரளான மக்களுடைய அனுபவத்தை விரிவுபடுத்துவதன் புறவய நிலைமைகளைத் தன்னுடைய நடவடிக்கையில் உரிய முறையில் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்; அதே சமயத்தில் பெருந்திரளான மக்கள் அரசியல் போராட்டத்துக்கு உணர்வு பூர்வமான ஆதரவளிக்கும்படி வழிகாட்டுவதற்கு இந்த நிலைமைகளை எப்படி உபயோகிப்பது என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

**சோஷலிஸ்ட் புரட்சியின் சமாதானமான மற்றும் சமாதானம் அல்லாத வளர்ச்சிப் பாதை.** *மார்க்சிய-லெனினியக் கட்சிகள் பெருந்திரளான மக்களை சோஷலிஸ்ட் புரட்சிக்குத் தயாரிக்கின்ற பொழுது சமாதானமான மற்றும் சமாதானம் அல்லாத வழியின் சாத்தியத்தை நினைவில் கொண்டிருக்க வேண்டும். அது, ஒவ்வொரு நாட்டிலும் வர்க்க சக்திகளின் மெய்யான சமநிலையை, பெருந்திரளான மக்களின் ஒழுங்கமைப்பு மற்றும் முதிர்ச்சியை, ஆளும் வர்க்கத்தினர் காட்டுகின்ற எதிர்ப்பை மற்றும் சர்வதேச நிலைமையைப் பொறுத்திருக்கிறது. ஆனால் சோஷலிஸ்ட் புரட்சியின் வடிவம் எப்படியிருந்தாலும் அதன் பிரதான உள்ளடக்கம் உழைக்கும் மக்களுடைய ஆட்சியதிகாரத்தை நிறுவுதலே. வரலாறு சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றுவதற்கு ஆயுதப் போராட்டம் (ருஷ்யாவில் 1917இல் நடைபெற்ற அக்டோபர் புரட்சி, கியூபாவில் 1959இல் நடைபெற்ற புரட்சி), சமாதான வழி (கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் நடைபெற்ற புரட்சிகள்) ஆகிய இரண்டையுமே அறிந்திருக்கிறது.*

*கம்யூனிஸ்டுகள் புரட்சியை சமாதான வழியில் செலுத்துவதற்குப் பாடுபடுகிறார்கள்; ஏனென்றால் அந்த வழியே மக்களுடைய நலன்களுக்கு மிகச் சிறப்பானது. மேலும் அந்த வழியில் உயிர்ச் சேதம், அழிவு, துன்பம் ஆகியவற்றைத் தவிர்ப்பது சாத்தியமாகும். ஆனால் தொழிலாளி வர்க்கம்,*

உழைக்கின்ற பெருந்திரளான மக்கள் புரட்சியின் வடிவத்தை சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்க முடியாது. சுரண்டும் வர்க்கங்கள் மக்களுக்கு எதிராக வன்முறையை உபயோகிக்கின்ற பொழுது சோஷலிசத்துக்கு மாறுகின்ற அடுத்த சாத்தியத்தை, சமாதானம் அல்லாத வழியை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி, வர்க்கப் போராட்டத்தின் எல்லா வடிவங்களிலும் முறைகளிலும் அது எப்படித் தேர்ச்சி கொண்டிருக்கிறது, வெவ்வேறு நாடுகளின் எதார்த்த நிலைமைக்கு மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் கோட்பாடுகளைப் படைப்பாற்றலுடன் எப்படி கடைப்பிடிக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது என்று வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

ஏகாதிபத்தியம் உலகம் முழுவதும் நிறுவிய ஆதிக்கம் மற்றும் அடிமைமுறை உறவுகள் பல நாடுகளின் தேசியப் பொருளாதாரத்தில் சமமற்ற வளர்ச்சிக்கு இட்டுச் சென்றன. சோஷலிஸ்ட் புரட்சி முதலில் ஒரு நாட்டில் அல்லது சில நாடுகளில் வெற்றியடைய முடியும் என்று லெனின் இதை ஆதாரமாக வைத்து முடிவு செய்தார். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுவதற்கு மொத்த வரலாற்று சகாப்தகாலம் பிடிக்கும், அந்த நிகழ்வுப் போக்கின் போது மேன்மேலும் புதிய நாடுகள் அல்லது நாடுகளின் கோஷ்டிகள் முதலாளித்துவ அமைப்பிலிருந்து வெளியேறி சோஷலிஸ்ட் நிர்மாணப் பாதையைப் பின்பற்றும் என்று அவர் கூறினார். அந்த நிகழ்வுப் போக்கின் போது முதலாளித்துவ உலகத்தின் ஏதாவதொரு பகுதியில் நடைபெறுகின்ற புரட்சிகரக் கொந்தளிப்பு உலக முதலாளித்துவ அமைப்பு முழுவதையும் பாதிக்கும்.

சோஷலிஸ்ட் புரட்சிக்கான முன்நிபந்தனைகள் ஒவ்வொரு நாட்டிலும் உள் முரண்பாடுகள் மற்றும் வெளி முரண்பாடுகளின் கலப்பினால் முதிர்ச்சி அடைகின்றன;

அத்தகைய முன்நிபந்தனைகள் மிகவும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் மட்டுமே தீவிரமடைந்து முனைக் கோடி நிலையை அடையும் என்பது சரியல்ல. உதாரணமாக, முதலில் சோஷலிஸ்ட் புரட்சி ஒப்பு நோக்கில் குறைவான வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடாகிய ருஷ்யாவில் வெற்றியடைந்தது; ஆனால் அதன் தாக்கத்தில் புரட்சிகர இயக்கம் ஏகாதிபத்திய அரசுகளில் உள்ள தொழிலாளி வர்க்கத்துக்கும் காலனி நாடுகள் மற்றும் சார்பு நாடுகளின் உழைக்கும் பெருந்திரளான மக்களிடையிலும் பரவியது.

சோஷலிசத்துக்கு மாறுகின்ற நிலைமைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. முதலாளித்துவத்தின் வளர்ச்சி நிலையிலுள்ள வேறுபாடு புரட்சியின் போது தேசிய வேறு பாடுகளை உருவாக்குகின்ற தீர்மானகரமான காரணி என்று லெனின் கருதினார். ''நாட்டில் ஆதிக்கம் செலுத்துகின்றவை பெரிய அளவு முதலாளித்துவ உறவுகளா அல்லது சிறிய அளவு உற்பத்தி உறவுகளா என்பதைப் பொறுத்து முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாற்றம் வெவ்வேறு வடிவங்களில் நடைபெற முடியும்'' என்று அவர் எழுதினார்.* குறைவான வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் புரட்சியை ஆரம்பிப்பது சுலபம், ஆனால் சோஷலிசத்தை நிர்மாணிப்பது அதிகக் கடினமானது; ஏனென்றால் ''நிர்மூலம் செய்யும் கடமைகளுடன் நம்ப முடியாத அளவு கஷ்டமான புதிய கடமைகள், ஸ்தாபனக் கடமைகள் சேர்ந்து நிற்கின்றன.''** இதன் மறுதலை: ஒரு நாட்டின் வளர்ச்சி எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்குப் புரட்சியைத் தொடங்குவதும் நிறைவேற்றுவதும் அதிகக் கடினமாக இருக்கும்; ஆனால் சோஷலிஸ்ட் புரட்சி

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 32, p. 233.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 7, பக்கம் 216.

வெற்றியடைவது மிகவும் சுலபமாக இருக்கும்.*

முன்பு காலனிகளாக இருந்த நாடுகள் சோஷலிசத்துக்கு மாறுவதற்கு மேன்மேலும் அதிகமாகப் பாடுபடுதல் இன்றைய புரட்சிகர வளர்ச்சியில் புதிய காரணியாக உள்ளது. வளர்ச்சியில் பின்தங்கிய மக்களினங்கள் சோஷலிச நாடுகளின் உதவியைப் பயன்படுத்திக் கொண்டு, முதலாளித்துவத்துக்கு முந்திய உறவுகள் அல்லது தொடக்க கால முதலாளித்துவ உறவுகளிலிருந்து முதலாளித்துவக் கட்டத்தைத் தவிர்த்து, சோஷலிசத்துக்குப் போக முடியும்.

இன்று சோஷலிச முகாம் இருப்பதால் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையின் மூலம் சோஷலிசத்தை நோக்கி முன்னேறுதல் புதிதாக விடுதலையடைந்த மக்களினங்களின் போராட்டத்தில் மெய்யான தொலைக்காட்சியாக இருக்கிறது. ஆனால் முதலாளித்துவம் அல்லாத பாதை வரலாற்று ரீதியில் அவசியமான கட்டம் ஆகும்; அக்கட்டத்தில் எதிர்கால சோஷலிஸ்ட் புரட்சிக்கான முன்நிபந்தனைகள் உருவாக்கப்படுகின்றன. சோஷலிசத்துக்கு ''இப்பொழுதே'' மாற வேண்டும், அவசியமான முன்நிபந்தனைகள் இல்லாமலே சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்ற வேண்டும் என்ற துடிப்பு அரசியல் துர்ச்சாகசத்துக்கு வழிவகுக்கும். அது புரட்சிகர இயக்கத்துக்குத் தீங்கு விளைவிக்கும்.

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பல நாடுகளில் மற்றும் கியூபாவில் சோஷலிஸ்ட் புரட்சிகளின் வெற்றி, முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் இயக்கங்களின் வளர்ச்சி, இளம் தேசிய அரசுகள் சோஷலிஸ்ட் திசைவழியைப் பின்பற்றுதல் ஆகியவை மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் விரித்துக் கூறிய சோஷலிஸ்ட் புரட்சி பற்றிய தத்துவத்தின் விஞ்ஞானச் செல்தகைமை மற்றும் காலப் பொருத்தத்தை நிரூபிக்கின்றன.

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 2, p. 547 பார்க்க.

*அத்தியாயம் ஐந்து*

# கம்யூனிஸ்ட் சமூகத்தின் தனித்தன்மையான கூறுகள்

சோஷலிஸ்ட் புரட்சியின் விளைவாகத் தோன்றுகின்ற கம்யூனிஸ்ட் சமூகம் முந்திய சமூக பொருளாதார உருவாக்கங்கள் எல்லாவற்றிலிருந்தும் உள்ளடக்கத்தில் வேறுபடுகின்றது.

கம்யூனிஸ்ட் சமூகத்தைப் பற்றிய மார்க்சியக் கருதுகோள் முந்திய, எதார்த்தமாகவே இருக்கின்ற முதலாளித்துவ சமூகத்தின் வளர்ச்சிப் போக்குகளையும் நியதிகளையும் பற்றிய பகுப்பாய்விலிருந்து பிறக்கிறது; அது முற்றிலும் விஞ்ஞான ரீதியானது. ''கற்பனைப் படைப்பை உருவாக்கும் முயற்சியினை, தெரிந்து கொள்ள முடியாத ஒன்றைப் பற்றிய பயனற்ற ஊகங்களில் இறங்கும் முயற்சியினை மார்க்சிடம் இம்மியும் காண முடியாது. உதாரணமாய் ஒரு புதிய உயிர் வகை குறிப்பிட்ட இந்த வழியில்தான் தோன்றியது.... உயிரியல் விஞ்ஞானி ஒருவர் இந்த உயிர் வகையின் வளர்ச்சியைப் பற்றிய பிரச்சினையை எப்படி ஆராய்வாரோ அதே முறையில்தான் மார்க்ஸ் கம்யூனிசத்தைப் பற்றிய பிரச்சினையை ஆராய்ந்தார்'' என்று லெனின் எழுதினார். *

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, நான்கு பாகங்களில், இரண்டாம் பாகம், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1977, பக்கம் 329.

புதிய சமூகத்தைப் பற்றிய விஞ்ஞானக் கருதுகோளில் மக்கள் எப்படி உடை அணிய வேண்டும், உணவு சாப்பிட வேண்டும், உழைக்க வேண்டும் அல்லது ஓய்வு நேரத்தைக் கழிக்க வேண்டும் என்னும் நுணுக்கமான வர்ணனையைப் பார்க்க முடியாது. விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் சமூக வாழ்க்கையின் பிரதான உள்ளடக்கத்தை, அதன் வளர்ச்சி யின் அடிப்படையான கூறுகள், விதிகள் மற்றும் போக்கு களை விவரிக்கிறது.

புதிய சமூகத்தைப் பற்றிய விஞ்ஞானக் கருதுகோள் ஏற்கெனவே சோஷலிஸ்ட் பாதையைப் பின்பற்றுகின்ற மக்களினங்களின் வாழ்க்கையை ஆராய்வதன் மூலம் வளர்ச்சி யடைகிறது, செழுமை அடைகிறது என்பதை இங்கு வலியுறுத் துதல் அவசியம். சமூகத்தின் நடைமுறையில் நிரூபிக்கப் படுகின்ற ஒவ்வொன்றுமே பொதுமைப்படுத்தப்பட்டு கம் யூனிஸ்ட் சமூகத்தின் தத்துவத்தில் சேர்க்கப்படுகிறது. சோஷ லிஸ்ட் நிர்மாணப் பாதையைப் பின்பற்றுகின்ற ஒவ்வொரு நாடும் தனக்கே உரிய பங்களிப்பை வழங்கி, புதிய சமூகத் தைப் பற்றிய கருதுகோளைச் செழுமைப்படுத்துகிறது. அந்த நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற அளவுக்கு கம்யூனிசம் என்ற விஞ்ஞானத்தின் உள்ளடக்கமும் அதிக மாகச் செழுமை அடையும். விஞ்ஞான கம்யூனிசம் படைப்புச் சக்தியுள்ள கோட்பாடு. அது வாழ்க்கையின் வளர்ச்சியுடன் வளர்ச்சி அடைகிறது; ஏனென்றால் அது வாழ்க்கையினால் படைக்கப்பட்டது. அது எதார்த்தத்துடன் சேர்ந்து முன்னேறுகிறது; எதிர்கால வாழ்க்கையைப் பிரகாசமாகக் காட்டுவதற்கு மட்டுமே எதார்த்தத்தை விட்டு விலகி முன்னே செல்கிறது.

புதிய சமூகத்தில் கெட்டிதட்டிப் போன அல்லது மாற்றமில்லாத அம்சம் எதுவும் கிடையாது. அதற்கு மாறாக, அதன் தோற்றம் சமூக வாழ்க்கையின் எல்லா

அம்சங்களின் சுறுசுறுப்பான வளர்ச்சியைத் தூண்டுகிறது.

கம்யூனிஸ்ட் சமூகத்தின் பிரத்யேகமான கூறுகள் எவை?

## நாகரிகத்தின் ஆக உயர்ந்த கட்டம்

ஒரு சமூகத்தை அது முன்வைத்துள்ள இலட்சியங்களின் இயல்பு மற்றும் உள்ளடக்கத்தைக் கொண்டு மதிப்பிட முடியும். இந்த இலட்சியங்கள் அவற்றை அடைவதற்குரிய வழிமுறைகளையும் சாதனங்களையும் நிர்ணயிக்கின்றன. சமூகம் உழைக்கும் மக்களுடைய நலத்தை உறுதிப்படுத்த முயன்றால், அவர்களுடைய ஆன்மீக, உடலியல் வளர்ச்சியை மேம்படுத்த முயன்றால் அந்த நோக்கங்களை அடைவதற்கு உபயோகிக்கப்படுகின்ற வழிகளும் சாதனங்களும் அதே அளவுக்கு மனிதநேயம் கொண்டவையாக இருக்க வேண்டும். அதற்கு மாறாக, ஒரு சிலரிடம் செல்வத்தைக் குவிப்பது சமூகத்தின் நோக்கமாக இருந்தால் மிகவும் மனிதத் தன்மையற்ற சுரண்டல் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

புதிய சமூக அமைப்பின் இலட்சியங்கள் எவை? அவை நிறைவேற்றப்படுதல் சமூக அவசியமாக அமைதல் ஏன்? இந்த இலட்சியங்களை நிறைவேற்றுவது எப்படி?

மார்க்சும் எங்கெல்சும் கம்யூனிசத்தை விவரிக்கின்ற பொழுது பின்வருமாறு எழுதினார்கள்: ‘‘வர்க்கங்களையும் வர்க்கப் பகைமைகளையும் கொண்டிருந்த பழைய முதலாளித்துவ சமுதாயத்துக்குப் பதிலாய், ஒவ்வொருவரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதையே எல்லோரும் தங்குதடையின்றி சுதந்திரமாய் வளர்வதற்கான நிபந்தனையாய்க் கொண்ட மக்கட்கூட்டு ஒன்று எழுந்து விடும்.’’ *

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1983, பக்கம் 228.

சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுடைய முழுமையான நலத்தையும் அவர்களுடைய சுதந்திரமான, பல்துறை வளர்ச்சியையும் உறுதிப்படுத்துவது புதிய சமூகத்தின் தலை மையான இலட்சியம் என்று லெனினும் வலியுறுத்தினார். கம்யூனிஸ்ட் சமூகத்தின், அதன் உற்பத்தி முறையின் தன்மை தனிநபர் எல்லாத் துறையிலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்று கோருகிறது. அதனால்தான் புதிய சமூக அமைப்பு தோன்றியதுமே எல்லா உழைக்கும் மக்களுடைய வாழ்க் கைத் தரத்தை உயர்த்துவதையும் ஒவ்வொரு குடிமகனும் உடல் மற்றும் ஆன்மீக ரீதியில் முழுமை பெறுவதை ஊக்குவிப்பதையும் தன்னுடைய கடமையெனக் கொள் கிறது.

அந்த சிக்கலான, பன்முகக் கடமையை உடனடியாக நிறைவேற்ற முடியாது; அவசியமான பொருளாயத, தொழில்நுட்ப, சமூக மற்றும் ஆன்மீக நிலைமைகள் உரு வாகின்ற பொழுது அதை படிப்படியாகவே நிறைவேற்ற வேண்டும். இதற்குப் பதிலாக வேறு வழியில் சிந்திப்பது கற்பனாவாதத்திற்குள், வீண் கனவுகளுக்குள் விழுவதாகும். இந்த இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு சமூக வாழ்க்கை யின் ஒவ்வொரு அம்சத்திலும் அடிப்படையான மாற்றம் அவசியம். அதற்கு அவகாசமும் கோடிக்கணக்கான மக் களுடைய உழைப்பும் தேவையாகும்.

சமூக முழுமைக்கும் பொதுவான இலட்சியங்களை நிறுவுதல் எப்படி சாத்தியமாகிறது?

சோஷலிஸ்ட் புரட்சி தனிநபரின் தனியுடைமையாக இருந்த சமூக உற்பத்திச் சாதனங்களை அனைத்து மக் களின் உடைமையாக மாற்றுகிறது. ஆகவே அது மக்களின் பெரும் பிரிவுகளின் — சுரண்டுபவர்கள் மற்றும் சுரண்டப் படுபவர்கள் — நலன்களுக்கு இடையிலான எதிர்நிலையை அகற்றுகிறது. முதலாளித்துவ சமூகத்தில் முதலாளி வர்க்கத்

தின் லாபவேட்டை மற்றும் செல்வத்திரட்சி, பிரதானமாக ஒரே மாதிரியான நலன்களைக் கொண்ட உழைக்கும் மக்களின் எல்லாப் பிரிவினருடைய நிலைமையையும் பாதிக் கின்றன. உழைக்கும் மக்களுடைய நலன்கள் மற்றும் தேவை களின் ஒற்றுமை புதிய சமூக நிர்மாணம் வெற்றியடைகின்ற பொழுது அதிகரிக்க முற்படுகிறது. சமூகத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் சம அளவில் பலனளிக்கின்ற பொது இலட்சியங்களை வகுப்பதையும் அவற்றை நிறைவேற்று வதற்கு எல்லா உறுப்பினர்களுடைய உணர்வு பூர்வமான முயற்சியையும் திரட்டுவதையும் அது சாத்தியமாக்கு கிறது.

சுரண்டல்காரர்களை ஒழிப்பதும் மக்களிடையில் எல்லா வர்க்க வேற்றுமைகளையும் படிப்படியாக அகற்றுவதும் சமூகம் ஒவ்வொரு தனிநபரின் நலம் மற்றும் பல்துறை வளர்ச்சி என்னும் பொது இலட்சியத்தைத் தனக்கு முன் வைப்பதற்கு உதவுகின்றன. சமூகம் வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகள் என்று பிரிந்திருப்பதால் ஏற்படுகின்ற விளைவு என்ன? சில வர்க்கங்களையும் சமூகப் பிரிவுகளை யும் சேர்ந்த மக்கள் — அவர்களுடைய பொருளாயதத் தரங் கள் மற்றும் வளர்ச்சி என்ற நோக்கிலிருந்து பார்க்கும் பொழுது — வேண்டுமென்றே சமத்துவமற்ற நிலைமைகளில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால்தான் புதிய சமூக அமைப்பு சுரண்டுகின்ற வர்க்கங்களை ஒழிப்பதுடன் எல்லா வர்க்க வேற்றுமைகளையும் தொடர்ச்சியாக அகற்றுகிறது; எல்லாக் குடிமக்களின் வாழ்க்கை, வேலை, கல்வி, ஓய்வு மற்றும் பொழுதுபோக்குக்கு ஒரே மாதிரி சாதகமான நிலைமைகளை ஏற்படுத்துகின்ற சமூக ஓரினத் தன்மைக்குப் பாடுபடுகிறது. அந்த நிகழ்வுப் போக்கு சோஷலிசத்தில் மட்டுமே நடைபெறுகிறது. புதிய சமூகம் தீவிரமான வர்க்க வேற்றுமைகளையும் மனித விரோத இலட்சியங்களையும்

கொண்ட முதலாளித்துவ அமைப்பிலிருந்து வேறுபடுகின்ற முக்கியமான அம்சம் இது.

வர்க்கங்கள் ஒன்றுசேருதலும் மக்களிடையில் வர்க்க மற்றும் சமூக வேற்றுமைகள் மறைதலும் சுயேச்சையான நிகழ்வுப் போக்கா? புதிய சமூகத்தில் அது மற்ற மாற்றங் களிலிருந்து தனியாக நடைபெறுகிறதா? அல்ல. சமூகத்தில் நடைபெறுகின்ற எல்லா முக்கியமான மாற்றங்களுக்கும் மூல காரணம் பொருளாயத மதிப்புகளின் உற்பத்தி முறை யின் வளர்ச்சியில் அடங்கியிருக்கிறது. சமூக ஓரினத் தன் மைக்கான இயக்கம் பிரதானமாக உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளை அபிவிருத்தி செய்வதில் சமூகத்தின் வெற்றிகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. அதனால்தான் பொருளாதார முன்னேற்றம், அதன் அடிப் படையில் உழைப்பு மற்றும் உற்பத்தியின் சமூகமயமாக்கல் வளர்ச்சியடைகின்ற கம்யூனிஸ்ட் சமூகத்தின் தலைமையான நியதியாக இருக்கின்றன. அத்தகைய முன்னேற்றம் எல்லா உழைக்கும் மக்களுடைய முயற்சிகளால், அவர்களுடைய கூட்டு உழைப்பினால் உறுதிப்படுத்தப்படுகிறது. சமூக உற் பத்தி எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்குத் தாங்கள் நன்றாக வாழ முடியும், தங்களுடைய தேவைகளை அதிக முழுமையாகத் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை அவர்கள் உணர்கிறார்கள்.

ஆனால் சமூகத்தின் பிரதான கடமையைப் பொருளா தார வளர்ச்சியின் மூலமாக மட்டுமே நிறைவேற்ற முடி யாது. எல்லா குடிமக்களும் உழைப்பதற்கு, படிப்பதற்கு, ஓய்வு கொள்வதற்கு மற்றும் ஆன்மீக, உடலியல் வளர்ச்சியை நோக்கி முன்னேறுவதற்கு வாய்ப்புப் பெற வேண்டுமென் றால் சமூகம் பொதுக் கல்வி, தொழிற்கல்வி, பொது சுகாதாரம், உடல் வளர்ச்சி, விளையாட்டு, சமூக பாது காப்பு, சேவைத் துறைகள், இதர அமைப்புகளை வளர்க்க

வேண்டும். அதனால்தான் பொருளாதாரத்தை மட்டுமன்றி சமூகத்தின் ஒவ்வொரு துறையையும் வளர்த்தல் புதிய கம்யூனிஸ்ட் சமூகத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பிரத்யேகமான கூறாக இருக்கிறது. இது சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் மற்றொரு அடிப்படையான வேறுபாடு ஆகும்.

புதிய சமூகம் தன்னுடைய இலட்சியங்களை எப்படி நிறைவேற்றுகிறது? அதற்கு எத்தகைய வழிமுறைகளை உபயோகிக்கிறது? முதலாவதாக, பெருந்திரளான மக்களுடைய உணர்வு பூர்வமான நடவடிக்கை. புதிய சமூகத்தைச் சேர்ந்த தனிநபர் எந்தத் துறையில் ஈடுபட்டிருந்தாலும் தன்னுடைய தகுதிகளை, திறமைகளை, ஆற்றல்களைப் பெருக்கிக் கொண்டே இருக்கிறார்; அவர் உழைப்பை ஜீவாதாரமான அவசியமாகக் கருதுகிறார்.

புதிய சமூகம் வாழ்க்கையை மேம்படுத்துவது மற்றும் ஒவ்வொரு தனிநபருக்கும் வளர்ச்சி ஏற்படுவதை நோக்கமாகக் கொண்ட கடமைகளைக் கொள்கிறது. ஆனால் இந்தக் கடமைகள் பெரிய அளவில், சிக்கலானவையாக இருப்பதால், குடிமக்கள் எல்லோரும் உணர்வு பூர்வமாகப் பாடுபட்டால் மட்டுமே அவற்றை நிறைவேற்ற முடியும். வரலாற்றில் பெருந்திரளான மக்களின் பாத்திரம் வளர்ச்சியடைதலைப் பற்றிய விதியை மார்க்சும் எங்கெல்சும் கண்டுபிடித்தார்கள். அந்த விதி கம்யூனிஸ்ட் சமூகத்தில் முழுமையாக வெளிப்படுகிறது. ''வரலாற்று நடவடிக்கையின் முற்றான தன்மையுடன், அதில் ஈடுபட்டிருக்கின்ற பெருந்திரளான மக்களின் அளவு... அதிகரிக்கும்'' என்று அவர்கள் எழுதினார்கள்.* இந்த விதி மார்க்சியத்தின் மிகவும் ஆழமான கருதுகோள்களில் ஒன்று என்று லெனின் கூறினார். ''வரலாற்று நிகழ்ச்சிகளின் வீச்சும் விரிவும்

* K. Marx, F. Engels, *Collected Works*, vol. 4, p. 82.

எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அவற்றில் பங்குபற்றும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். இதற்கு நேர்மாறாக, நாம் கொண்டுவர விரும்பும் மாறுதல் எந்த அளவுக்கு அதிக ஆழமாக இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நாம் அதன்பாலான அக்கறையையும் அறிவார்ந்த போக்கையும் அதிகமாக ஊக்குவித்து அது அவசியம் என்பதை மேலும் லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான மக்கள் திடமாக நம்பும்படி செய்ய வேண்டும்'' என்று லெனின் எழுதினார். *

சோஷலிசத்தை எதிரிடுகின்ற புறவயக் கடமைகளின் இயல்பும் உள்ளடக்கமும் மெய்யான மக்களுடைய அதிகாரக் கோட்பாட்டினால் நிர்ணயிக்கப்படுகின்றன. இக்கோட்பாடு சோஷலிஸ்ட் புரட்சி வெற்றியடைந்த பிறகு உடனே முரணில்லாத முறையில் அமுலாக்கப்படுகிறது. மக்களுடைய வாழ்க்கை மற்றும் கலாசாரத் தரங்களை உயர்த்துகின்ற நிகழ்வுப் போக்கை மக்களுடைய சொந்தப் பிரதிநிதிகளைத் தவிர வேறு யார் சமூகத்துக்கு வழிகாட்டி இயக்க முடியும்? சோஷலிஸ்ட் ஜனநாயகத்தை முரணில்லாதபடி வளர்த்தல், அரசையும் சமூகத்தையும் நடத்துவதில் மேன்மேலும் அதிகமான மக்களை ஈடுபடுத்துதல் ஆகியவை வெற்றிக்கு இன்றியமையாத நிபந்தனை ஆகும். புதிய சமூகத்தின் அரசியல் அமைப்பு அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்றதாக இருக்கிறது.

இந்த சிக்கலான, பன்முக நிகழ்வுப் போக்கை விஞ்ஞான ரீதியான தத்துவத்தைக் கொண்டுள்ள, கொள்கையிலும் நடைமுறையிலும் அதன் கருதுகோள்களை நிறைவேற்றுகின்ற கட்சிகள் மட்டுமே இயக்க முடியும். மார்க்சிய-லெனினியக் கட்சிகள் அத்தகையவை.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 11, பக்கம் 151.

கம்யூனிஸ்ட் சமூகத்தின் பிரத்யேகமான கூறுகள் அது நிறுவப்படுகின்ற பொழுது படிப்படியாக உருவாக்கப்படுகின்றன. சமூக அங்கஜீவி உட்பட எந்த அங்கஜீவியும் படிப்படியாகவும் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியடைகிறது. கம்யூனிஸ்ட் சமூகத்தின் விதிவழிப்பட்ட வளர்ச்சி கீழ்நிலையான கட்டங்களிலிருந்து உயர்நிலையான மற்றும் அதிகப் பூரணமான கட்டங்களை நோக்கி முன்னேறுகிறது.

ஒரு குழந்தை பிறந்த உடனே வளர்ந்து விட முடியாது, அது குழந்தைப் பருவத்தையும் இளமைப் பருவத்தையும் கடந்து வளர வேண்டும் என்பதைப் போல சமூகம் தன்னுடைய வளர்ச்சியில் சில கட்டங்களைத் தாவிக் குதிக்க முடியாது. சமூகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி கண்டிப்பான முறையில் தொடர்வரிசையாக அமைந்திருப்பது ஏன்? சமூகத்தின் வளர்ச்சியில் ஒவ்வொரு புதிய கட்டத்துக்கும் அவசியமான முன்நிபந்தனைகளும் நிலைமைகளும் முந்திய கட்டங்களில் படைக்கப்படுவது அதற்குக் காரணமாகும். வளர்ச்சியின் புதிய கட்டம் ஒவ்வொன்றிலும் உள்ள புறவய நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு உழைக்கும் மக்களுடைய தேவைகளை நிர்ணயிப்பதும் அதற்குரிய இலட்சியங்களையும் கடமைகளையும் சமூகத்துக்கு முன்பாக வைப்பதும் அவற்றை நிறைவேற்றுவதற்கு செயல்திட்டத்தைத் தயாரிப்பதும் செய்முறை நடவடிக்கைக்குப் பெருந்திரளான மக்களை அமைப்பதும் அவசியம்.

சோஷலிசத்தை நிர்மாணிக்கின்ற மக்களினங்கள் கம்யூனிஸ்ட் சமூகத்தைப் பற்றிய விஞ்ஞானத் தத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. புதிய சமூகம் பின்வரும் வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டிருக்கிறது என்பது தத்துவ ரீதி

யிலும் பல நாடுகளின் நடைமுறை அனுபவத்திலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது: 1) முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டம்; 2) சோஷலிசம் (முதல் கட்டம்); 3) கம்யூனிசம் (ஆக உயர்ந்த கட்டம்). ஒவ்வொரு கட்டமும் தனக்குரிய கால அளவுகளைக் கொண்டிருக்கின்றது; அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும் அதிகமான ஒற்றுமைகளைக் கொண்டிருக்கின்றன; ஏனென்றால் அவை ஒரே சமூக அமைப்பின் (கம்யூனிஸ்ட் சமூகத்தின்) வெவ்வேறு பகுதிகள் ஆகும்.

கம்யூனிஸ்ட் சமூகத்தின் வளர்ச்சியில் மேற்கூறிய கட்டங்கள் விதிமுறைப்படி ஒன்றையொன்று தொடர்கின்றன. சோஷலிஸ்ட் புரட்சி வெற்றியடைந்தவுடன் சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டுவிட்டது என்று சொல்ல முடியாது; ஏனென்றால் அது மாறும் காலகட்டத்தின் போது நிர்மாணிக்கப்படுகிறது. அதைப் போல, சோஷலிஸ்ட் நிர்மாணம் என்ற நீண்ட வரலாற்றுக் காலகட்டத்தைக் கடந்து வராமல் கம்யூனிசத்தை அடைய முடியாது. மார்ச்சிய-லெனினியத்தின் சித்தாந்த எதிரிகள் சோஷலிசத்தின் மீது அதீதமான கோரிக்கைகளைச் சுமத்தி — இக்கோரிக்கைகளைப் புதிய சமூகத்தின் ஆக உயர்ந்த கட்டத்தில்தான் நிறைவேற்ற முடியும் — அதற்குக் கெட்ட பெயரை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள். விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் புதிய சமூகம் அதன் ஆக உயர்ந்த கட்டத்துக்கு வளர்ச்சியடைகின்ற தொடர்வரிசை நிகழ்வுப் போக்கை எடுத்துக்காட்டுகிறது; அதன் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்தின் மெய்யான சாத்தியங்களை வெளிக்கொணர்கிறது. அது இம்முறையில் சமூக இலட்சியத்தின் ஈடேற்றத்தை நோக்கி மக்களை இயக்குகிறது; சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை இல்லாத, புதிய மனிதநேய சமூகம் தோன்றி நிறுவப்படுகின்ற பொழுது ஏற்படுகின்ற பிரமைகளையும் பொய்யான

குற்றச்சாட்டுகளையும் ஒழிக்கிறது.

புதிய சமூகத்தை அலங்காரம் செய்து பகட்டாகக் காட்ட வேண்டிய அவசியமில்லை; அதன் சாதகங்களைக் குறைத்துப் பேச வேண்டியதுமில்லை. அது தொடர்ச்சியாக, முரணில்லாமல் வளர்ச்சியடைகிறது, ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கு முன்னேறுகிறது; வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு, ஒவ்வொரு தனிநபருக்கும் அதிகமான நன்மை மற்றும் வளர்ச்சி ஏற்படுவதற்கு மேன்மேலும் புதிய வாய்ப்புகளைப் படைக்கிறது.

அத்தியாயம் ஆறு

# முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டம்

## மாறும் காலகட்டத்தின் அவசியம்

கம்யூனிஸ்ட் சமூகம் அமைக்கப்படுதலில் ஒரு பிரத்யேகமான தன்மை, புரட்சியில் பிறந்த இந்த சமூகம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு ஒரு மாறும் காலகட்டத்தின் மூலம் முன்னேறுகிறது என்பதாகும். கடந்த காலத்தில் புதிய சமூகங்கள் மாறும் காலகட்டத்தின் அவசியமின்றி பழைய சமூகங்களை அகற்றின (உதாரணமாக, முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தை அகற்றியது) என்பது தெரிந்ததே. இதற்குக் காரணம் என்ன? நிலப்பிரபுத்துவத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் எவ்வளவு வேறுபாடுகள் இருந்தாலும் அவை ஒரு அடிப்படையான அம்சத்தில் ஒத்திருப்பது அதற்குக் காரணமாகும். இரண்டு அமைப்புகளும் சுரண்டல் அமைப்புகள். இரண்டும் சிலர் மற்றவர்களை அடிமைப்படுத்தி ஒடுக்குவதை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; ஒடுக்குமுறையின் வடிவங்கள் மட்டுமே வேறுபடுகின்றன.

பூர்ஷ்வாப் புரட்சிகள், சமூகத்தின் வர்க்க பகை முரணியல்புகளை அப்படியே வைத்துக்கொண்டு நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களின் அதிகாரத்துக்குப் பதிலாக முதலாளிகளின் அதிகாரத்தைக் கொண்டுவருகின்றன; சோஷலிசம் முதலாளித்துவத்தை அகற்றுகின்ற பொழுது அப்படிப்பட்ட

ஏதாவதொன்று நடைபெற முடியுமா? நடைபெற முடியாது. ஏனென்றால் புதிய சமூக அரசியல் அமைப்பு பழைய அமைப்பிலிருந்து அடிப்படையாகவே மாறுபட்டிருக்கிறது. அந்த சமூகத்தில் ஒடுக்குமுறையும் சுரண்டலும் ஒழிக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் சோஷலிஸ்ட் நடைமுறைகளும் உறவுகளும் முதலாளித்துவ சமூகத்தின் சுற்றுவட்டத்திற்குள் தோன்றவோ, வளர்ச்சியடையவோ முடியாது. உதாரணமாக, ஒரு சுரண்டல் அமைப்பின் நிலைமைகளுக்குள் வேலைக்கேற்ற வினியோகம் என்ற சோஷலிஸ்ட் கோட்பாட்டை அமுலாக்க முடியாது; தொழிலாளிக்கும் முதலாளிக்கும் அவர்கள் வேலைக்குத் தகுந்தாற்போல ஊதியம் அளிக்க முடியாது.

சோஷலிஸ்ட் உறவுகள் புரட்சிக்குப் பிறகு திட்டமிடப்பட்ட முறையில் உருவாக்கப்பட வேண்டும். இக்கடமை திட்டவட்டமான காலத்தில், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தில் நிறைவேற்றப்படுகிறது.

சுரண்டல் வர்க்கங்களையும் ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் நிரந்தரமாக ஒழிப்பதற்கு மாறும் காலகட்டம் இன்றியமையாததாக இருக்கிறது. சோஷலிஸ்ட் புரட்சி தனிநபர்களின் பெரிய அளவு உடைமையை மொத்த மக்களின் உடைமையாக மாற்றுகிறது. ஆனால் உடைமைகளை இழந்தவர்கள் உழைக்கும் மக்களிடம் தமக்குள்ள செல்வாக்கை, சர்வதேசத் தொடர்புகளைப் பயன்படுத்தி சிக்கல்களை ஏற்படுத்துகிறார்கள்; அச்சிக்கல்கள் வளர்ச்சி அடைகின்ற பொழுது அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள். பழைய அமைப்பு வரலாற்றுக் களத்திலிருந்து தானாகவே வெளியேறுவதில்லை. எந்த அமைப்பு வெற்றியடையப் போகிறது, சோஷலிசமா, முதலாளித்துவமா என்ற கேள்வி மாறும் காலகட்டத்தின் முக்

கியமான அம்சத்தை வெளியிடுகிறது. சுரண்டிக் கொண்டிருந்த வர்க்கங்களின் எதிர்ப்பை உழைக்கும் மக்கள் குறைவாக மதிப்பிடக் கூடாது; அப்படி மதிப்பிட்டால் அபாயங்கள் ஏற்படும் என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

மாறும் காலகட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுதல் எப்படி? உழைக்கும் மக்கள் ஆட்சியதிகாரத்தைத் தாமே எடுத்துக் கொண்டு தங்களுடைய அரசியல் ஆட்சியை, சர்வாதிகாரத்தை நிறுவினால் மட்டுமே அவற்றை நிறைவேற்ற முடியும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் உண்மையான நோக்கத்தைத் திரித்துக் கூறுவதற்கு, மக்கள் அதைப் பற்றி அஞ்சும்படி செய்வதற்குப் பலவிதமான தத்துவங்கள் பரப்பப்படுகின்றன. ஆனால் இலட்சியங்களுக்கும் அவற்றை அடைவதற்குரிய சாதனங்களுக்கும் இடையில் திட்டவட்டமான ஒத்திசைவு உண்டு. ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலின் எல்லா வடிவங்களையும் அகற்றுதல், சோஷலிசத்தின் அடிப்படைகளை நிர்மாணித்தல் ஆகிய கடமைகள் மிகவும் மேன்மையானவை, மனிதப் பண்புள்ளவை என்பதால் அவற்றை நிறைவேற்றுகின்ற முக்கியமான கருவி—உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரம்—மனிதத் தன்மையற்றதாக இருக்க முடியாது. சமூகத் தீமையாகிய மூலதனத்தின் ஆதிக்கத்தை (ஆகவே அதன் விளைவுகளாகிய எல்லாத் தீமைகளையும்) பாதுகாப்பதற்குப் பாடுபடுகின்ற எல்லோரிடமும் அந்த அதிகாரம் ஈவிரக்கமின்றி நடந்து கொள்கிறது.

பாட்டாளி வர்க்க அரசு அமுலாக்குகின்ற ஒடுக்குமுறை நடவடிக்கைகள் அதன் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டவை என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. அவை எதிர்ப்புரட்சிச் சக்திகளின் காட்டுமிராண்டித்தனம், வன்முறை, பயங்கரவாதம் ஆகியவற்றின் எதிர்விளைவு ஆகும்.

ஆகவே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு

மாறும் காலகட்டம் சமூகத்தின் வளர்ச்சியில் ஒரு விசேஷமான கட்டம் ஆகும். அது உழைக்கும் மக்கள் அரசியல் அதிகாரத்தை எடுத்துக் கொள்வதில் தொடங்கி சோஷலிசத்தின் அடிப்படைகளை நிறுவுகின்ற பொழுது முடிவடைகிறது. அத்தகைய காலகட்டம் அவசியம் என்பதை மார்க்ஸ் **கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம்** என்ற நூலில் தத்துவ ரீதியாக நிறுவினார். "...முதலாளித்துவ சமுதாயத்துக்கும் கம்யூனிச சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்கால கட்டமும் ஒன்று உள்ளது. இந்த இடைக்காலத்தில் அரசு **பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம்** என்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது" என்று அவர் எழுதினார்.* வாழ்க்கை மேலே தரப்பட்ட முன்னறிவிப்பை நிரூபித்துவிட்டது. அதே சமயத்தில் பல மக்களினங்களின் நடைமுறை கம்யூனிஸ்ட் சமூகத்தின் முதலாவது கட்டத்தைப் பற்றிய விஞ்ஞானக் கருதுகோள்களைச் செழுமைப்படுத்தியிருப்பதும் ஸ்தூலமாக்கியிருப்பதும் இயற்கையே.

## சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் தனித்தன்மையான கூறுகள்

இக்காலத்தில் மேன்மேலும் அதிகமான நாடுகள் சோஷலிசத்துக்கு முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த நாடுகள் ஒன்றுக்கொன்று வேறுபடுவதால் சோஷ

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின், **கம்யூனிஸ்டு சமூகம்**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1983, பக்கங்கள் 56—57.

லிசத்துக்கு மாறுவதற்குப் பொதுவான நியதிகள் ஏதேனும் இருக்கின்றனவா அல்லது ஒவ்வொரு நாடும் தன்னுடைய சொந்த வழியைப் பின்பற்ற வேண்டுமா என்னும் கேள்வி எழுகிறது. இது சிக்கலான கேள்வி. இதற்கு அளிக்கப்படு கின்ற பதில் நேரடியான அரசியல் மற்றும் செய்முறை முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

சோஷலிஸ்ட் நிர்மாணத்துக்கென்று பொதுவான நியதி கள் ஒன்றுமில்லை, ஒவ்வொரு நாடும் தன்னுடைய தேசியச் சிறப்பியல்புகளுக்கு ஏற்ப தன்னுடைய சொந்த வழியில் மட்டுமே சோஷலிசத்தை நிர்மாணிக்க வேண்டும் என்று நிரூபிப்பதற்கு சில தத்துவாசிரியர்கள் முயல்கிறார்கள். எனவே ஒரு நாட்டில் நிர்மாணிக்கப்படுகின்ற சோஷலிச சமூகம் மற்ற நாடுகளிலுள்ள சோஷலிச சமூகங்களிலிருந்து குறிப்பிடத்தக்க முறையில் வேறுபட்டிருக்கும் என்பது இதி லிருந்து பெறப்படும். இதுதான் ''சோஷலிசத்தின் தேசிய மாதிரிகள்'' என்னும் கருதுகோள் ஆகும். மற்ற நாடு களில் நிர்மாணிக்கப்படுகின்ற சோஷலிசம் இருக்கின்ற சோஷலிசத்திலிருந்து அவசியமான எந்த முறையிலாவது வேறுபட்டிருக்க முடியுமா? முடியாது என்பதே பதிலாகும். சோஷலிசம், அதன் நிர்மாணம் இரண்டுமே எந்த நாட்டில் நடைபெற்றாலும் பொதுவான நியதிகளுக்கு ஏற்பவே நடை பெறுகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிச நிர்மாணத் தின் பிரத்யேகத் தன்மைகளை மறுக்கின்ற, அதன் பொது வான நியதிகள் பல்விதமான வடிவங்களில் வெளிப்படு வதை நிராகரிக்கின்ற எதிர்ப் போக்கும் அதே அளவுக்குத் தவறானதாகும். விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் இரண்டு கருதுகோள்களையும் உறுதியாக நிராகரிக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிஸ்ட் நிர்மாணம் என்னும் நிகழ்வுப் போக்கு பொதுவான மற்றும் பிரத்யேகமான தன்மை

களின் அங்கக ரீதியான ஒற்றுமை என்று அது கருதுகிறது.

சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் வடிவங்களிலும் முறைகளிலும் ஒரு நாடு மற்றொரு நாட்டிலிருந்து வேறுபடுவது ஏன்? வெவ்வேறு நாடுகளில் சோஷலிசத்துக்கு மாற்றம் வெவ்வேறு பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாசார வளர்ச்சி மட்டத்தில் நடைபெறுதல் அதற்குக் காரணமாகும். ஒவ்வொரு நாட்டிலும் மாறும் காலகட்டத்தின் பிரத்யேகத் தன்மைகளை தேசிய இன வேறுபாடுகள், நாட்டிலும் சர்வதேச அளவிலும் வர்க்க சக்திகளின் பலத்தில் உள்ள வேறுபாடுகள் ஆகியவை நிர்ணயிக்கின்றன. இவை எல்லாவற்றின் காரணமாக சோஷலிசத்துக்கு மாறுதல் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பிரத்யேக வடிவங்களை அடைகிறது.

அதனால்தான் கம்யூனிஸ்ட் கட்சிகள் தம்முடைய நாடுகள் சோஷலிசத்துக்கு முன்னேறிச் செல்கின்ற தனித்தன்மைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்கின்றன; சோஷலிஸ்ட் நிர்மாணத்துக்கு மிகவும் சிறந்த வழிகளைப் படைப்பாற்றலுடன் தேடுகின்றன. லெனின் கூறியுள்ள பின்வரும் கருதுகோள் அக்கட்சிகளுக்கு வழிகாட்டுகின்றது: மார்க்சின் தத்துவம் ‘‘...பொதுவான **வழிகாட்டும்** கோட்பாடுகளையே அளித்திடுகிறது; **தனிப்பட்ட முறையில்** அவை பிரான்சிலிருந்து வேறு விதமாய் இங்கிலாந்திலும், ஜெர்மனியிலிருந்து வேறு விதமாய் பிரான்சிலும், ருஷ்யாவிலிருந்து வேறு விதமாய் ஜெர்மனியிலும் கையாளப்படுகின்றன’’ *.

பல்வேறு நாடுகளிலும் சோஷலிச முன்னேற்றத்தின் தனித்தன்மைகளை கவனத்திலிறுத்துகின்ற பொழுது, அவற்றுக்கிடையில் பொதுவாக இருப்பதையும் ஒருவர் பார்க்க வேண்டும். பொதுப்படையானவை சமூக வாழ்க்கையின்

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, முதற் பாகம், பக்கம் 54.

மாற்றத்துக்கு முக்கியமானவை, அடிப்படையானவை ஆகும்.

1950க்களின் கடைசியில் பல சோஷலிச நாடுகளில் மாறும் காலகட்டம் முடிவடைந்தது. கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தின் நியதிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும் வகுத்தளிப்பதற்கும் அது உதவியது. பின்வரும் பொதுவான நியதிகள் சுட்டிக் காட்டப்பட்டன:

—சோஷலிஸ்ட் புரட்சி மற்றும் உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரம் ஏதாவதொரு வடிவத்தில் நிறுவப்படுதல்;

—தொழிலாளி வர்க்கம் விவசாய வர்க்கத்தின் பெரும்பான்மையினருடனும் உழைக்கும் மக்களின் இதர பிரிவினருடனும் கூட்டணி அமைத்தல்;

— அடிப்படையான உற்பத்திச் சாதனங்களில் முதலாளித்துவ உடைமையை ஒழித்து சமூக உடைமையை நிறுவுதல்;

— விவசாயத் துறையில் சோஷலிஸ்ட் மாற்றத்தைப் படிப்படியாக அமுலாக்குதல்;

— உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற நோக்கத்துடன் தேசியப் பொருளாதாரத்தைத் திட்டமிட்ட முறையில் வளர்த்துச் செல்லுதல்;

— சித்தாந்தம், கலாசாரம் ஆகிய துறைகளில் சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றுதல்; மக்களுக்கு, சோஷலிஸ்ட் இலட்சியத்துக்கு விசுவாசமான புதிய அறிவுப் பகுதியினரை உருவாக்குதல்;

—தேசிய இன ஒடுக்குமுறையை ஒழித்தல், மக்களினங்களுக்கு இடையில் சமத்துவம் மற்றும் சகோதர ரீதியான நட்புறவை அமைத்தல்;

—வெளிநாட்டு எதிரிகள் மற்றும் உள்நாட்டு எதிரிகளின் அத்துமீறல்களை எதிர்த்து சோஷலிச வெற்றிகளைப் பாதுகாத்தல்;

— நாட்டிலுள்ள உழைக்கும் மக்கள் மற்ற நாடுகளின் உழைக்கும் மக்களுடன் ஒருமைப்பாடு, அதாவது பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தின் பொதுவான கடமைகள் இவை.

## உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரமும் அதன் வடிவங்களும்

தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுதல் மாறும் காலகட்டத்தின் பிரத்யேகமான அம்சமாகும். அதன் அர்த்தமென்ன? அதன் வடிவங்கள் யாவை?

ஆட்சியதிகாரத்தைப் பற்றிய பிரச்சினை எந்தப் புரட்சிக்கும் அதன் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் அடிப்படையாக இருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவ வேண்டிய அவசியத்தைப் பற்றிய கருதுகோள் ஒரு அடிப்படையான கண்டுபிடிப்பு என்று மார்க்ஸ் கருதினார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிய கோட்பாடு மார்க்சியத் தத்துவத்தின் இதயம் என்று லெனின் கருதினார்.

மாறும் காலகட்டத்தில் சோஷலிஸ்ட் மாற்றங்களை நிறைவேற்றுவதற்குப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இன்றியமையாத கருவி ஆகும். முதலில் முதலாளித்துவ உடைமையை ஒழித்து சுரண்டும் வர்க்கங்களின் எதிர்ப்பை முறியடிக்க வேண்டும். சில சமயங்களில் அதற்கு வன்முறையைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிரான வன்முறையின் அளவும் வடிவங்களும் வர்க்க சக்திகளின் பரஸ்பர பலத்தைப் பொறுத்திருக்கின்றன; பிரதானமாக, வர்க்க எதிரிகளுடைய எதிர்ப்பின் சக்தியைப் பொறுத்திருக்கின்றன.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது வன்முறை மட்டுமே அல்ல. அதன் கடமைகள் பல: மற்ற உழைக்கும் பிரிவினருடன் கூட்டணி அமைத்து வலுப்படுத்துதல், அறிவுப் பகுதியினரை சோஷலிசத் தரப்புக்கு வென்றெடுத்தல், தொழிலாளி வர்க்கத்திடமும் மற்ற உழைக்கும் மக்கள் அனைவரிடமும் உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டை வளர்த்தல்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முக்கியமான அம்சம் அதன் வன்முறை அல்ல; அதன் ஆக்க பூர்வமான செயல்கள், பொருளாதார மற்றும் கல்விப் பணி, உற்பத்தி மற்றும் வினியோகத்தில் புதிய உறவுகளை ஏற்படுத்துவதற்கு அதன் முயற்சிகள் ஆகியவை அதன் முக்கியமான அம்சமாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பின்வரும் கடமைகளைக் கொண்டிருக்கிறது:

— நிர்வாக ஒழுங்கமைப்பு, கலாசார, கல்வித் துறை;

— சுரண்டும் வர்க்கங்களின் எதிர்ப்பை ஒடுக்குதல்;

— சோஷலிஸ்ட் உடைமை, சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாத்தல்;

— உழைப்பின் அளவையும் நுகர்வின் அளவையும் கண்காணித்தல்;

— தாய்நாட்டைப் பாதுகாத்தல், மற்ற சோஷலிச அரசுகளுடன் நட்புறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்துதல்.

உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரத்தின் வடிவம் என்ற முறையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சோவியத்துகள் (சுப்ரீம் சோவியத்திலிருந்து ஸ்தல சோவியத்துகள் வரை), மார்க்சிய-லெனினியக் கட்சிகள், கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கம், தொழிற்சங்கங்கள், கூட்டுறவு, கலாசார, கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் இதர அமைப்புகளையும் கழகங்களையும் கொண்ட அரசு மற்றும் சமூக ஸ்தாபனங்களின் மொத்த அமைப்பாகும். அந்த அரசியல்

அமைப்பு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சோஷலிஸ்ட் ஜனநாயகத்தின் அமைப்பாக, பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் அமைப்பாக இருக்கிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அடிப்படையில் அதன் புதிய வர்க்க சாராம்சத்தின் காரணமாக எந்த பூர்ஷ்வா அரசியல் அமைப்பையும் காட்டிலும் அளவிட முடியாத அளவுக்கு அதிக ஜனநாயகத்தைக் கொண்டிருக்கிறது. புதிய அரசின் சர்வாதிகாரச் செயல்முறை சுரண்டுகின்ற சிறுபான் மையினருக்கு எதிராக மட்டுமே இயக்கப்படுகிறது; ஆனால் புதிய ஆட்சியதிகாரம் வழங்குகின்ற ஜனநாயக வாய்ப்பு களை நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் அனுபவிக் கிறார்கள். எந்த பூர்ஷ்வா ஜனநாயகமும் முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு வடிவமே; அது உழைக்கின்ற பெரும்பான்மை மக்களுக்கு எதிராக இயக்கப்படுகிறது; ஆகவே அது பெயரளவுக்குத்தான் ஜனநாயகமாக இருக் கிறது. ஆனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், உழைக்கும் மக்களுடைய ஆட்சியதிகாரம் பெரும்பான்மையினருடைய ஆட்சியதிகாரமாக, உண்மை ஜனநாயகமாக இருக்கிறது.

சர்வாதிகாரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையி லுள்ள உறவைச் சரியாகப் புரிந்து கொள்வது முதலாளித்து வத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் காலகட்டத்தின் உள் ளடக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் அவசியமாகும். வன்முறை மற்றும் ஒடுக்குமுறைக்கும் ஜனநாயகத்துக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை என்ற கருத்து ஜனநாய கத்தைத் தவறாகப் புரிந்து கொள்வதால் ஏற்படுகிறது; மேலும் பூர்ஷ்வாப் பிரசாரம் இக்கருத்தை வேண்டுமென்றே பரப்புகிறது. உண்மை என்னவென்றால் சுரண்டல்காரர் களுக்கு எதிராக மக்களுடைய வன்முறை மெய்யான மக் களுடைய ஆட்சியதிகாரம் என்ற முறையில் துல்லியமாக ஜனநாயகத்தின் வெளிப்பாடு ஆகும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சாராம்சத்திலும் நோக்கத்திலும் ஒருமையாக இருக்கிறது. ஆனால் வெவ் வேறு நாடுகளின் பிரத்யேகத் தன்மைகளைப் பொறுத்து அது பல்விதமான வடிவங்களில் வெளிப்படுகிறது. தொழி லாளி வர்க்க சர்வாதிகாரம் பின்வரும் வடிவங்களை அடைந்திருக்கிறது:

— பாரிஸ் கம்யூன்;

— சோவியத்துகள்;

— மக்கள் ஜனநாயக வடிவம்.

பிரான்சில் 1871 மார்ச் 18 முதல் மே 28 வரை ஆட்சி செய்த **பாரிஸ் கம்யூன்** பழைய அரசு இயந்திரத்தை நொறுக் கியது, பழைய இராணுவம், போலீஸ் மற்றும் நீதிமன்றத் தைக் கலைத்தது; சட்டமியற்றும் மற்றும் நிர்வாகச் செயல் முறைகளை ஒன்றிணைத்த புதிய ஆட்சியதிகார உறுப்பு களை நிறுவியது. அதிகாரிகள் அனுபவித்து வந்த தனிச் சலுகைகளை ஒழித்தது; அதிகாரிகள் தொழிலாளிகளின் ஊதியத்தைப் பெற்று அரசுப் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்று கம்யூன் முடிவு செய்தது. பாரிஸ் கம்யூன் ஆயுதமேந்திய மக்களின் ஜனநாயகமாக இருந்தது அதன் சிறப்பான அம்சமாகும். கம்யூனில் நிரந்தர இராணுவமோ, போலீசுப் படையோ கிடையாது; மக்களே இச்செயல்முறை களை நிறைவேற்றினார்கள்.

ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் **சோவியத் வடிவத்தைப்** பெற்றது; அது தனித்தன்மைகளைக் கொண் டிருந்தது. முதலாவதாக, முதலாளித்துவ சமூகத்தின் எல்லா அரசு மற்றும் சமூக அமைப்புகளும் முற்றிலும் ஒழிக்கப்படு வதை அது குறித்தது; இரண்டாவதாக, முன்னர் ஆட்சி செய்த உறுப்பினர்களின் தேர்தல் உரிமைகள் ரத்து செய் யப்பட்டன; மூன்றாவதாக, அரசு உறுப்புகளில் தொழி லாளர்களுக்கும் விவாசாயிகளுக்கும் ஓரளவுக்கு ஏற்றத்

தாழ்வான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருந்தது; நான் காவதாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சோவியத் வடிவம் ஒரு கட்சி அமைப்பைக் கொண்டிருந்தது.

மேற்கூறிய பிரத்யேகமான அம்சங்கள் அனைத்தும் வர்க்கப் போராட்டத்தின் தீவிரத்தினால், சுரண் டும் வர்க்கங்களின் உக்கிரமான எதிர்ப்பினால் ஏற் பட்டன.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் **மக்கள் ஜனநாயக வடிவம்** புதிய வரலாற்று நிலைமைகளில் உருவெடுத்தது. இரண்டாவது உலகப் போரில் *(1939 – 1945)* பாசிசம் முறியடிக்கப்பட்ட பிறகு உலகத்தில் சமூக வர்க்க சக்திகளின் நிலவரம் சோஷலிசத்துக்குச் சாதகமான முறையில் தீவிரமாக மாற்றமடைந்தது. இச்சந்தர்ப்பங் களின் காரணமாக மக்கள் ஜனநாயக நாடுகளில் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரம் ஆரம்பத்திலிருந்தே தொழிலாளி வர்க்கத்துடன் ஏழை விவசாய வர்க்கம் மட்டுமின்றி நடுத்தர விவசாய வர்க்கத்தின் கூட்டணியைச் சார்ந் திருக்க முடிந்தது. இது சோஷலிஸ்ட் மாற்றங்களுக்கு தேசிய முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பையும் குறைத்தது. மக்கள் ஜனநாயக நாடுகளில் ஒப்பீட்டளவில் புதிய ஆட்சி யதிகாரத்தின் பரந்த மற்றும் கலப்பான சமூக அடித்தளம் பொதுஜன, தேசபக்த மற்றும் தேசியக் கூட்டணிகளின் தோற்றத்தில் சிறப்பாக வெளிப்பட்டது. சில நாடுகளில் சோஷலிஸ்ட் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட சில அரசியல் கட்சிகள் இந்தக் கூட்டணிகளில் இருந்தன; வேறு சில நாடுகளில் பல்வேறு அரசியல் ஸ்தாபனங்கள் ஒரு கட்சி அமைப்புக்குள் செயலாற்றின. மக்கள் ஜனநாயக நாடுகளில் முன்னர் ஆட்சி செய்த வர்க்கங்களின் தேர்தல் உரிமைகள் நீடித்தன. அரசு அமைப்பில் புரட்சிக்கு முந்திய சில உறுப்பு கள் அவற்றின் உள்ளடக்கத்தில் தீவிரமான மாற்றங்களுடன்

சில நாடுகளில் உபயோகிக்கப்பட்டது மற்றொரு பிரத்யேகமான அம்சமாகும்.

சோஷலிஸ்ட் புரட்சியுடன் ஆரம்பமாகின்ற மாறும் காலகட்டம் சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்ட பிறகு முடிவடைகிறது. கம்யூனிஸ்ட் சமூகத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய, உயர்ந்த கட்டம் ஏற்படுகிறது, அதன் இலட்சியங்கள் அதிக முழுமையாக நிறைவேற்றப்படுகின்றன. அந்த வரலாற்றுக் கட்டத்தின், வெற்றிகரமான சோஷலிஸ்ட் கட்டத்தின் உள்ளடக்கம் என்ன?

அத்தியாயம் ஏழு

# சோஷலிசத்தின் வளர்ச்சிக் கட்டங்கள்

## சோஷலிசத்தின் அடிப்படையை நிர்மாணித்தல்

சோஷலிசம் என்பது கம்யூனிச சமூக அமைப்பின் முதல் கட்டமாகும். இது தன் பொருளாதார அமைப்பு, சமூகக் கட்டமைவு, அரசியல் முறை, சமுதாயத்தின் ஆன்மீக வாழ்க்கை ஆகியவற்றில் மாறும் காலகட்டத்திலிருந்து—இதைப் பற்றி முந்திய அத்தியாயத்தில் பார்த்தோம்—குணாம்ச ரீதியாக மாறுபடுகிறது. சோஷலிசத்தில் எல்லா தனியுடைமை வடிவங்களும் ஒழிக்கப்பட்டு விட்டன. ஆலைகள், தொழிற்சாலைகள், இருப்புப் பாதைகள், மின்நிலையங்கள், நிலம், விவசாய மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஆகியவை எல்லாமே மக்கள் அனைவரின் உடைமையாகின்றன. உற்பத்தி சாதனங்களின் மீதான பொது உடைமை அரசு உடைமை, கூட்டுறவு உடைமை என்ற இரண்டு வடிவங்களில் உள்ளது.

சுரண்டும் வர்க்கங்களை ஒழித்து விட்டதாலும், விவசாயிகளையும் சிறுதொழில் புரிவோரையும் கூட்டுறவுகளில் ஒன்றிணைத்ததாலும் சோஷலிச சமுதாயம் தன் சமூக வர்க்கக் கட்டமைவில் பகை முரணியல்பு இல்லாத சமுதாயமாகிறது. இதில் தொழிலாளி வர்க்கம், கூட்டுறவில் இணைக்கப்பட்ட

விவசாயிகள், உழைப்பாளிகளின் மத்தியிலிருந்து வந்த அறிவுஜீவிகள் ஆகியோர் இருக்கின்றனர்.

அரசு என்பது உழைப்பாளிகளாகிய சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களின் சித்தத்தையும் நலன்களையும் வெளிப்படுத்தும் பொதுமக்களின் அரசியல் ஸ்தாபனமாகிறது. மக்கள் அனைவரின் கல்வி, கலாசார மட்டம் உயருகிறது. சமுதாயத்தில் புதிய, சோஷலிச கலாசாரமும் விஞ்ஞான பூர்வமான பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டமும் கோலோச்சுகின்றன.

சோஷலிசத்தில் ஒரு புது வகையான சமூக மனிதன் தோன்றி வளருகிறான், முதலாளித்துவத்திலிருந்து வேறுபட்ட சோஷலிச வாழ்க்கை முறை உருவாகிறது. மனிதாபிமான கோட்பாடுகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட இப்படிப்பட்ட சமுதாயத்தில் எதிர்கால நன்னம்பிக்கையும் கூட்டு மனப்பாங்கும் சர்வதேசியவாத உணர்வும் மேன் மேலும் நிலைபெறுகின்றன.

சோஷலிசம் என்பது உழைப்பாளிகளின் சமுதாயம். இதில் உழைக்கும் திறனுள்ள ஒவ்வொருவரும் தத்தம் திறமைகளுக்கேற்ப நேர்மையாக உழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொருவரின் அறிவு, திறமை ஆகிய வற்றிற்கேற்ப அவரவர் செய்த வேலைகளின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ற ஊதியம் வழங்கப்படும். ''திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற ஊதியம்'' என்பதுதான் சோஷலிசத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். சில நேரங்களில் இக்கோட்பாடு ''வேலை செய்யாதவருக்கு சோறு கிடையாது'' என்ற கோஷத்தால் வெளியிடப்படுகிறது. சோஷலிச சமுதாயம், ஒவ்வொரு மனிதனின் தரமான பயன்மிகு உழைப்பிற்கும் பொருளாயத ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் ஊக்கமளிக்கிறது. உழைப்பு மற்றும் நுகர்வு அளவுகளைப் பற்றிய கறாரான கண்காணிப்பும், உயரிய ஒழுங்

கமைப்பு, கட்டுப்பாட்டிற்காக சோஷலிசத்தில் நடைபெறும் போராட்டமும் இதிலிருந்து தெட்டத் தெளிவாகத் தெரிகின்றன.

முந்திய சுரண்டும் அமைப்புகளுடன் ஒப்பிடுகையில் சோஷலிசத்திற்குள்ள ஒரு முக்கிய அம்சம், பொருளாதாரம், கலாசாரம், அன்றாட வாழ்க்கையில் விரைவாக ஏற்பட்டு வரும் குணாம்ச ரீதியான மாற்றங்களாகும். இவற்றின் இலட்சியம் என்ன? சோஷலிசத்தில் எல்லா மாற்றங்களும் இறுதியாகப் பார்க்கும் பொழுது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும், ஒவ்வொரு மனிதனின் பன்முக வளர்ச்சிக்காக தலைசிறந்த சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதையும் நோக்கமாகக் கொண்டவையாகும். எனவேதான் உழைப்பாளிகள் இம்மாற்றங்களில் அக்கறை காட்டுகின்றனர். இவற்றில் உணர்வு பூர்வமாக, தீவிரமாகப் பங்கேற்பதன் மூலம் சமூக வளர்ச்சி வேகங்கள் துரிதப்பட இவர்கள் உதவுகின்றனர்.

சோஷலிசம் என்பது ஒத்திசைவான சமூக அமைப்பாகும். ''...சோஷலிசத்தில் **மட்டும்தான்** சமூக வாழ்க்கை மற்றும் தனியார் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலுமே மிக வேகமான, மெய்யான, உண்மையிலேயே பிரம்மாண்டத் திரளானோரைக் கொண்ட, முதலில் **பெரும்பான்மையோரையும்** பிறகு மக்கள் தொகை அனைவரையுமே கொண்ட முன்னேற்றப் பேரியக்கம் தொடங்கும்...'' என்று லெனின் எழுதினார்.* சோஷலிசத்தின் அடிப்படைகள் தோற்றுவிக்கப்பட்ட பின் சோஷலிசம் விரிந்து, பரவத் துவங்குகிறது, சோஷலிச சமுதாயம் மேம்படுத்தப்படுகிறது; இதற்கு அதன் போக்கில் தனியான கட்டங்கள் உண்டு.

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, இரண்டாம் பாகம், பக்கம் 352.

சோஷலிசம் எந்த அளவிற்கு முதிர்ச்சியடைந்துள்ளது என்பது, உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தரம் உண்மையில் எப்படி உயர்ந்துள்ளது என்பதை வைத்தும், அனைத்து மக்களின் பன்முக வளர்ச்சிக்கு நடைமுறையில் எப்படி வழியமைக்கப்படுகிறது என்பதை வைத்தும் நிர்ணயிக்கப்படு கிறது. பொருளாயத தொழில்நுட்ப, பொருளாதார, சமூக, அரசியல், ஆன்மீக அவசியமான சூழ்நிலைகளின் அடிப்படை யில்தான் உயர்வான வாழ்க்கைத் தரத்தை அளிக்க முடியும், ஒவ்வொரு மனிதனின் பன்முக வளர்ச்சிக்கு வழியமைக்க இயலும். இத்தகைய சூழ்நிலைகளை உடனடியாகத் தோற்று விக்க இயலாது என்பது தெளிவு. இதற்கு நேரமும், சமுதாயத்திலுள்ள அனைவரின் உணர்வு பூர்வமான, நேர் மையான உழைப்பும் தேவை.

உற்பத்திச் சாதனங்களை மக்கள் அனைவரின் உடை மையாக மாற்றிய பின் தொழில்துறை, விவசாயம், போக்கு வரத்து, சேவைத் துறை போன்றவற்றை ஒரே திட்டத் தின்படி, உழைக்கும் மக்கள் திரளினரின் தேவைகள், நலன் களுக்கேற்ப வளர்க்கும் வாய்ப்பு வரலாற்றிலேயே முதன் முதலாகத் தோன்றியது. அனைத்து மக்களின் தேவை களையும் மேன்மேலும் பூர்த்தி செய்து, அவர்களின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்த உறுதியான பொருளாயத, ஆன்மீக அடிப்படையை ஏற்படுத்தும் பொருட்டு சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் மேலும் வளர்ப்பதுதான் சோஷ லிசத்தில் முன்னேற்றத்தின் நோக்கமாகும்.

முதலாளித்துவத்தில் சமூக உற்பத்தி முதலாளி வர்க்கத் தின் நலன்களுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் கட்டுப் பட்டது. பல தொழில் நிறுவனங்கள் அவற்றின் முதலாளி களுக்கு உரிய லாபத்தைத் தராவிடில் மூடப்படுகின்றன.

முழு உற்பத்தித் துறைகளே மூடப்படுவதால் எண்ணற்ற தொழிலாளர்கள் வேலைகளை இழக்கின்றனர். முதலாளி களுக்கு லாபம் கிடைக்கும் அதே நேரத்தில் உழைப்பாளிகள் வறுமையில் வாடுகின்றனர். எனவே உற்பத்திச் சாதனங்கள் பொது மக்களின் உடைமையாக மாற்றப்பட்டதையடுத்து, சமூக உற்பத்தியில் மாற்றங்கள் மிக முக்கிய சமூகத் தேவை யாகின்றன. குறிப்பாக இம்மாற்றங்கள், அதிகம் வளர்ச்சி யடையாத உற்பத்திச் சக்திகளையுடைய நாடுகளுக்கு (இவை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு நீண்ட கால மாக விவசாய, மூலப்பொருள் சப்ளை நாடுகளாயிருந்தன) மிகவும் முக்கியமானவையாகும். இந்நாடுகளின் பொரு ளாதாரம் ஒருதலைப்பட்சமாக வளர்ந்து வந்தது. எனவே சோஷலிச மாற்றங்களின் போக்கில், தொழில்துறையில் புதிய பிரிவுகளை ஏற்படுத்துவதும், விவசாயத் துறை, போக்குவரத்தை வளர்ப்பதும், இருப்புப் பாதைகள், சாலை களை அமைப்பதும், மின்சாரம், எரிவாயுவை அளிப்பதும் அவசியமாகின்றன. கூட்டுப் பண்ணைகளுக்கு டிராக்டர்கள், அறுவடை எந்திரங்கள், மற்ற விவசாய எந்திரங்கள், இரசாயன உரங்கள் போன்றவை போதுமான அளவில் கிடைத்தால்தான் விவசாயிகளின் கூட்டுறவுகள் பொரு ளாதார, சமூக ஆதாயத்தைத் தரும். சோஷலிசத் தொழில் துறைமயமாக்கலின் அடிப்படையில்தான், பெருவீதத் தொழில்துறையை, முதலில் கனரகத் தொழில்துறையை திட்டமிட்ட ரீதியில் வளர்ப்பதன் அடிப்படையில்தான் இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

''நவீன விஞ்ஞானத்தில் கடைசியாக வந்த கண்டுபிடிப்பு களின் அடிப்படையில் அமைந்த... தொழில்நுட்பம் இல்லா மல் சோஷலிசத்தைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது. உற்பத்தியிலும் வினியோகத்திலும் ஒரே தரத்தை மிக மிகக் கண்டிப்புடன் பின்பற்றி வருமாறு பல கோடிக்கணக்

கான மக்களை வைக்கிற திட்டமிட்ட அரசு அமைப்பு இல்லாமல் அதைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது'' என்று லெனின் வற்புறுத்தினார்.*

சோஷலிசத்தின் அடிப்படைகள் நிர்மாணிக்கப்பட்ட பின் வர்க்கங்கள், சமூகப் பிரிவுகளில் என்ன மாற்றங்கள் நடைபெறுகின்றன? உற்பத்தியின் வளர்ச்சி மட்டம் அவ்வளவு அதிகமில்லாத நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை ஓரளவு விரைவாகக் கூடுகிறது, நவீனத் தொழில் துறைகளில் மேன்மேலும் அதிகமான தொழிலாளர்கள் உழைக்க வருகின்றனர். தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலை மேம்படுகிறது, வாழ்க்கைத் தரம், தொழில் பயிற்சி, கலாசாரத் தரம் உயருகின்றன, வீட்டு வசதிகள் மேம்படுகின்றன, இதரவை.

விவசாயிகளின் வாழ்க்கையும் சமூகத் தன்மையும் அடிப்படை ரீதியாக மாற்றமடைகின்றன, விவசாயியின் உழைப்பு வேறு விதமானதாகிறது. கடினமான, அயர்வேற்படுத்தும், தன்னந்தனிய விவசாய உழைப்பு எந்திரங்களைப் பயன்படுத்தும் கூட்டு உழைப்பாகிறது. பள்ளிகள், மருத்துவமனைகள், நூலகங்கள், பொழுதுபோக்கு மன்றங்கள் ஆகியவை கட்டப்படுகின்றன. சுயநலத்திற்குப் பதில் பொது நலம் வருகிறது. விவசாயிகளைப் பரந்த பொது நலன்கள் ஆட்கொள்ளத் துவங்குகின்றன, இவர்கள் விஞ்ஞான, கலாசார சாதனைகளைப் படிப்படியாகக் கிரகிக்கத் துவங்குகின்றனர், கல்வி மட்டத்தை மேம்படுத்துகின்றனர்.

உழைப்பாளிகளின் மத்தியிலிருந்து வரும் அறிவுத் துறையினர் உண்மையான மக்கள் அறிவுத் துறையினராகின்றனர். அறிவுத் துறையினரின் எண்ணிக்கை இடைவிடாது அதிகரிக்கிறது. உயர் தேர்ச்சி பெற்ற, மக்களின்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 11, பக்கம் 315.

நலன்களுக்குத் தம்மை அர்ப்பணித்த விஞ்ஞானிகள், பொறி யியலாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், இன்ன பிற நிபுணர்களின்றி சோஷலிச சமுதாயத்தால் தன் முன் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

சமுதாயத்தின் அரசியல் முறை மேம்பாடு அடைகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு, மக்களனைவரின் நலன்களையும் பிரதிபலிக்கும் பொது மக்கள் அரசாகிறது. பல்வேறு மக்களாட்சி உறுப்புகளின் பங்கு மட்டுமின்றி தொழிற்சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், படைப்புக் குழுக் கள் போன்ற பல சமூக ஸ்தாபனங்களின் பங்கும் அதிகரிக் கின்றன. ஒவ்வொரு மனிதனின் உரிமைகளும் கடமைகளும் கூடுகின்றன.

மேன்மேலும் சிக்கலான, பரவலான கடமைகள் சமுதாயத்தின் முன் நிற்பதால், ஆளும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் பங்கும் பொறுப்புணர்வும் அதிகரிக்கின்றன. சமுதாயம், அரசின் நிர்வாகத்தில் பரவலான உழைக்கும் மக்கள் திரளினரை ஈடுபடுத்துவதுதான் சோஷலிசத்தின் அரசியல் முறையை மேம்படுத்துவதன் முக்கிய இலட்சியமா கும். உழைப்பாளிகளுக்காக சோஷலிசம் தோற்றுவிக்கப் படுகிறது என்பது ஒரு புறமிருக்க, உழைப்பாளிகள்தான் இதைத் தோற்றுவிக்கின்றனர் என்பதை மறந்து விடக் கூடாது.

புதிய வாழ்க்கையை உணர்வு பூர்வமாக நிர்மாணிக்க முதலில் நல்ல கல்வியறிவு அவசியம். இல்லாவிடில் நடை பெறும் சம்பவங்களை ஆராய்வது கடினம், புதிய சமூக அமைப்பு உழைப்பாளிகளுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதையும் இது முதலாளித்துவத்தை விட எவ்வளவு மேம்பட்டது என்பதையும் புரிந்து கொள்ள இயலாது. சோஷலிசத்தின் விரோதிகள் மக்கள் திரளினரின் அறியா மையையும் கல்வியறிவின்மையையும் தம் சுயநல நோக்கங்

களுக்காக, புதிய சமுதாயத்திற்கு எதிரான போராட்டத் திற்குப் பயன்படுத்துவது தற்செயல் அல்ல. மக்கள் திரளி னரின் ஆன்மீக வளர்ச்சியின்றி சோஷலிசத்தைப் பற்றி சிந்திக்கவே முடியாது. சோஷலிசப் புரட்சிக்குப் பின் உடனடியாக கல்வியறிவின்மை அகற்றப்பட்டு சர்வப் பொது ஆரம்பக் கல்வி முறை கொண்டு வரப்படுகிறது என்றால் பின்னால் இன்னும் உயர்வான இலட்சியங்கள் முன்வைக்கப் படுகின்றன. ஒவ்வொரு குடிமகனும் செகண்டரி கல்வியைப் பெற்றாக வேண்டும். தொழில் கல்வி முறை மேம்படுத்தப்படு கிறது, பல்வேறு பள்ளிகள், தொழில் கல்விக் கூடங்கள், உயர் கல்வி நிலையங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. ஒவ் வொரு மனிதனும் விஞ்ஞான ஆராய்ச்சியில் மேன்மேலும் அதிகமாக ஈடுபடவும் கலை, கலாசார சாதனைகளை மேன்மேலும் அதிகமாகப் பயன்படுத்தவும் சமுதாயத்தில் அதிகமாகச் செய்யப்படுகிறது.

மேற்கூறிய மாற்றங்களின் விளைவாக சோஷலிசத்தைப் பன்முக ரீதியில் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படு கின்றன. இப்படியே மேம்படுத்துவதன் விளைவாக, குணாம்ச ரீதியாகப் புதிய சமுதாயம், ஒரு முதிர்ச்சியடைந்த சோஷ லிசம் அல்லது லெனினின் வார்த்தைகளில் சொன்னால் ''நிறைவான சோஷலிசம்'' தோன்றும்; இது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தன் மாபெரும் அனுகூலங்களை வெளிப்படுத்தும். முதிர்ச்சியடைந்த சோஷலிசம் நேரடியாக கம்யூனிச சமுதாயமாக வளர்ச்சியடையும்.

சமூக இலட்சியங்களின்றி மனிதகுலத்தால் வளர முடி யாது. முதிர்ச்சியடைந்த சோஷலிசம் என்பது சமூக இலட்சி யமாகும்; இது தத்துவார்த்த ரீதியாக ஆதாரப்படுத்தப்பட்டு பல சோஷலிச நாடுகளிலுள்ள மக்களால் நடைமுறையில் நிறைவேற்றப்படுகிறது. சோஷலிசமானது தன் விரோதி களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து

வளர்ச்சியடைந்து வருவதையும், முதலாளித்துவத்தைக் காட்டிலும் தனக்குள்ள மேம்பாடுகளைத் தெட்டத் தெளி வாக வெளிப்படுத்துவதையும், சமூக முன்னேற்றத்தின் சிகரமாக விளங்கும் புதிய சமுதாயத்திற்காக உழைக்கும் மக்கள் நடத்துகின்ற போராட்டத்திற்கு வலிமை சேர்ப் பதையும் இது நிரூபிக்கிறது.

எதார்த்த சோஷலிசம் என்றால் என்னவென்று உலகம் முழுவதன் முன்னும் கம்யூனிஸ்டுகள் தெளிவாகக் கூறு கின்றனர். இவர்கள் இதன் சாதனைகளையும் வெற்றிகளை யும் மட்டுமின்றி தம் முன்னுள்ள பிரச்சினைகளையும் எடுத்துரைக்கின்றனர். ''எல்லாம் மனிதனின் பொருட்டு, எல்லாம் மனித நன்மைக்காக'' என்ற புதிய சமுதாயத்தின் முக்கிய மனிதாபிமானக் கோட்பாட்டை இன்னமும் முழு மையாக நிறைவேற்றுவதுதான் முக்கியமாகும். சமு தாயத்தில் நிறைவேற்றப்படும் எல்லா மாற்றங்களின் நோக்க மும் இதுதான்.

முதலாளித்துவத்தின் தன்மை ஏதோ மாறி வருவதாக வும், இது ''சர்வப் பொது நல்வாழ்வு சமுதாயமாக'' மாறி வருவதாகவும் பூர்ஷ்வா சித்தாந்திகள் ஒரு மாயை யைத் தோற்றுவித்துள்ளனர். ஆனால் உழைப்பாளிகளின் வாழ்க்கையை இதனால் எப்படி மேம்படுத்த இயலும் என் பதை எதார்த்தமே நன்கு காட்டி வருகிறது. உதாரணமாக, பரவலான ரீதியில் விளம்பரப்படுத்தப்பட்ட அமெரிக்க ''சர்வப் பொது நல்வாழ்வு சமுதாயத்தில்'' 30 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வீடில்லை. அதிகாரப் பூர்வமான தகவல்களின்படி அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு 13 உழைக்கும் திறனுள்ளவர்கள் மத்தியிலும் ஒருவருக்கு வேலை யில்லை; தொழிற்சங்கங்களின் கணக்குப்படியோ, ஒவ்வொரு 6 நபரிலும் ஒருவருக்கு வேலையில்லை. 350 லட்சம் அமெரிக்கர்கள் அதிகாரப் பூர்வமாக ''வறுமைக் கோட்

டிற்குக்'' கீழ் வாழ்கின்றனர். அமெரிக்கப் பத்திரிகைகள் தரும் தகவல்களின்படி நாட்டில் தொடர்ச்சியாக உணவின்றி வாடுபவர்களின் எண்ணிக்கை 200 முதல் 400 லட்சம் ஆகும். அமெரிக்க நகரங்களின் தெருக்களில் 10 லட்சத்திற் கும் மேற்பட்ட வீடில்லாத குழந்தைகள் கவனிப்பாரின்றி அலைகின்றனர்.

கல்வியறிவின்மையை அகற்றும் பிரச்சினை உட்பட இன்னும் பல ஜீவாதாரப் பிரச்சினைகளுக்கும் முதலாளித் துவத்தால் தீர்வு காண முடியவில்லை. மேலையப் பத் திரிகைத் தகவல்களின்படி ஐரோப்பியப் பொதுச் சந்தை நாடுகளைச் சேர்ந்த 270 மில்லியன் நபர்களில் சுமார் 21 மில்லியன் மக்கள் கல்வியறிவற்றவர்கள் அல்லது மிகக் குறைவான கல்வியறிவுடையவர்கள். சோவியத் யூனியனில் இப்பிரச்சினைகள் எல்லாம் என்றோ தீர்க்கப்பட்டுள்ளன என்பது தெரிந்ததே. இன்று சோஷலிசத்தைப் பன்முக ரீதியாக மேம்படுத்தும் பாதையில் நடைபோடும் சோவியத் சமுதாயம் இன்னமும் பெரிய இலட்சியங்களை முன்வைத்து செயல்படுகிறது. ''சமுதாயத்தில் உள்ள எல்லா உறுப்பினர் களின் முழு நல்வாழ்வையும் சுதந்திரமான பன்முக வளர்ச்சி யையும்''* அடையும் இலட்சியத்தை நோக்கி விரைந்து நடைபோடும் கடமை இன்று முன்வைக்கப்படுகிறது.

சோஷலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டு முயற்சிகளால், சோஷலிசத்தைப் பன்முக ரீதியில் மேம்படுத்தும் தத்துவம் உருவாக்கப்படுகிறது. ஒரு புறம், இத்தத்துவம் எதார்த்த நடைமுறையின் அடிப்படை யிலானது, இந்நடைமுறையைப் பொதுமைப்படுத்துகிறது, மறு புறம், இது நடைமுறை செயல்திட்டமாகவும் திகழு கிறது. சமுதாயத்தின் நடைமுறைச் செயல்திட்டம் என்ற

* V. I. Lenin, *Collected Works*, vol. 6, p. 54.



9–596

வகையில் இது உடனடியான மற்றும் எதிர்கால இலட்சியங் களை முன்வைப்பதோடு கூட, இவற்றை அடையும் வழிகள், முறைகள், சாதனங்களையும் சுட்டிக் காட்டுகிறது. நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது இப் படிப்பட்ட வழிகளில் ஒன்றாகும்; சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங்களில் இதைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன் உள்ளடக்கம், சிறப்பியல்புகள் பற்றி இப்போது பார்ப்போம்.

### சமூக, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது சோஷலிசத்தை மேம்படுத்தும் வழியாகும்

முதலாளித்துவத்தோடு ஒப்பிடும் பொழுது சோஷலிசம் விரைவாக வளருகிறது. புதிய அமைப்பின் இந்த சிறப்பு அம்சம் அதன் வளர்ச்சியின் முதல் கட்டங்களிலேயே வெளிப்படுகிறது. குறிப்பாக சோஷலிசம் எங்கே அதிக முதிர்ச்சியான வடிவங்களை அடைகிறதோ அங்கே இது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. தனியுடைமை யும் வர்க்கப் பகை முரண்பாடுகளும் அழித்தொழிக்கப்பட்ட தாலும் சமூக முன்னேற்றத்தின் பாதையில் உள்ள மற்ற இடையூறுகள் அகற்றப்பட்டதாலும்தான் இத்தகைய உயரிய வேகங்களை அடைய முடிந்தது. நாம் எவ்வளவுக்கெவ்வளவு சிறப்பாக வேலை செய்கின்றோமோ, எவ்வளவுக்கெவ்வளவு நன்றாக நிர்வகிக்கின்றோமோ, அரசு, சமூக காரியங்களின் நிறைவேற்றத்தில் தீவிரமாகப் பங்கேற்கின்றோமோ அவ் வளவுக்கவ்வளவு நம் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்ற உணர்வு சோஷலிசத்தில் எல்லோரையும் மேன்மேலும் ஆட் கொள்கிறது. சோஷலிசம் நிலைநாட்டப்படும் எல்லா இடங்

களிலும் உழைக்கும் மக்கள் திரளினரின் நிலை அடிப் படையிலேயே மாறுபடுகிறது என்று வரலாறு ஆணித்தரமாக மெய்ப்பிக்கிறது.

இன்று சோவியத் யூனியனில் சோஷலிச நிர்மாணத்தில் அடையப்பட்ட வெற்றிகள், நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் துரிதப்படுத்துவதைப் பிரதான கடமையாக முன்வைக்க உதவியுள்ளன. இந்த வழியில்தான் மிகக் குறுகிய காலகட்டத்தில் முதிர்ச்சியடைந்த சோஷலிசத் தின் சிகரத்தை எட்டிப் பிடித்து அதன் மூலம் கம்யூனிசத்தை நெருங்கி வர முடியும்.

சோவியத் சமுதாயத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சி யைத் துரிதப்படுத்தும் திட்டம், சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் குணாம்ச ரீதியாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது.

முதலாவதாக, விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளின் அடிப்படையில் சமுதாயத்தின் பொருளாயத தொழில்நுட்ப அடித்தளத்தை அடியோடு மாற்ற வேண்டும். உழைப்பின் உற்பத்தித் திறனில் உயர்ந்த உலக மட்டத்தை அடையும் கடமை முன்வைக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி, தொழில் நுட்பத்தில் அடிப்படை மாற்றங்களைச் செய்து, சகலவித தொழில்நுட்ப, ஸ்தாபன, பொருளாதார, சமூக காரணி களை அணி திரட்டித்தான் வரலாற்று முக்கியத்துவமுடைய இக்கடமையை நிறைவேற்ற முடியும்.

சமூக, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது என்பது சமூக உறவுகளை, எல்லாவற்றிற்கும் மேலாக பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதை முன்னனு மானிக்கிறது. வினியோக உறவுகள் மீதும், சமூக நீதி பற்றிய கோட்பாட்டை முழுமையாக நிறைவேற்றுவதன் மீதும் குறிப்பாகப் பெரும் கவனம் செலுத்தப்படுகிறது.

உழைப்பு மற்றும் நுகர்வின் அளவு மீதான கண்காணிப்பு பற்றி லெனின் கூறிய கருத்துதான் சோவியத் மக்களைப் பொறுத்தமட்டில் நீதியின் வெளிப்பாடாகும். தன் உழைப்பின் அளவிற்கும் தரத்திற்கும் ஒவ்வாத பலனை சமுதாயத்திட மிருந்து எதிர்பார்க்கவோ, தனக்குப் பொருந்தாத மரி யாதையையும் கவனத்தையும் கோரவோ யாருக்கும் உரிமை யில்லை.

நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதானது உழைப்பின் உள்ளடக்கத்திலும் தன் மையிலும் ஆழ்ந்த மாற்றங்களை ஏற்படுத்துவதை நோக்க மாகக் கொண்டது. இதில் உழைப்பின் ஆக்க பூர்வமான உள்ளடக்கத்தையும் கூட்டுமனப்பாங்கையும் பலப்படுத்துவ தன் மீதும், உழைப்புச் சூழ்நிலையை மேம்படுத்துவதன் மீதும், சமூக நலன்களை நோக்கமாகக் கொண்டு நன்கு உழைப் பவர்களுக்கு ஊக்கமளிப்பதன் மீதும் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. இவையெல்லாம், உழைப்பை ஒவ்வொரு மனிதனின் முதல் ஜீவாதாரத் தேவையாக மாற்ற உதவும்.

சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை குணாம்ச ரீதியாகப் புதிய மட்டத்திற்கு உயர்த்துவது, ஒத்திசைவாக வளர்ச்சியடைந்த, ஆன்மீக ரீதியாகச் செழுமையான தனி நபரை உருவாக்கும் இலட்சியங்களுக்கு அதிகபட்சம் உதவும் அளவிற்குப் பொருளாயத, சமூக, கலாசார மதிப்புகளின் நுகர்வு மட்டத்திற்கும் கட்டமைப்பிற்கும் வகை செய்வது என்பவைதான் துரிதப்படுத்துதலின் முக்கிய சமூக இலட்சிய மாகும். சமுதாய நலன்களுக்காக மனிதர்களின் திறமைகள், சிறப்பியல்புகள் முழுமையாக வெளிப்படுவதற்கு அவசியமான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது.

நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதானது, அனைத்து அரசியல், சமூக ஸ்தாபனங்கள்,

நிறுவனங்களின் நடவடிக்கையையும் தீவிரப்படுத்துவது மற்றும் மேம்படுத்துவதை முன்னனுமானிக்கிறது. அரசு மற்றும் சமூக காரியங்களின் நிர்வகிப்பில் குடிமக்களை மேன்மேலும் முழுமையாக ஈடுபடுத்துவதன் மூலமும், மக்களாட்சியின் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்புகளின் பணிகளை மேம்படுத்துவதன் மூலமும், தொழிற்சங்கங்கள், உழைப்பாளிகளின் மற்ற வெகுஜன ஸ்தாபனங்களின் பங்கை உயர்த்துவதன் மூலமும் மக்களின் சோஷலிச சுயநிர்வாகத்தை வளர்ப்பது விசேஷ முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

ஒவ்வொரு தனிநபரின் பங்கையும் உணர்வையும் கலாசாரத் தரத்தையும் உயர்த்துவதன் மூலம்தான் இந்தச் சிக்கலான, பன்முகக் கடமைகளை நிறைவேற்ற இயலும். சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மக்கள் திரளினரின் ஆக்க பூர்வமான நடவடிக்கையை மேம்படுத்தும் புதிய வழிகளைக் கண்டுபிடிக்காமல் சோஷலிச சமுதாயத்தால் பயன்மிகு வகையில் வளர்ச்சியடைய முடியாது. வரலாற்றுக் கடமைகள் எவ்வளவுக்கெவ்வளவு பெரியவையோ, இவற்றை நிறைவேற்றுவதில் கோடானுகோடி மக்களின் அக்கறையுள்ள, பொறுப்பு மிக்க, உணர்வு பூர்வமான, தீவிரமான பங்கேற்பு அவ்வளவுக்கவ்வளவு முக்கியமானது. மக்கள் திரளினரின் முன்முயற்சி, உற்சாகம், உயிர்த்துடிப்புள்ள படைப்பாற்றல், புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கும் கடமைகளின் பால் இவர்களின் உணர்வு பூர்வமான, அக்கறையுள்ள உறவு ஆகியவற்றில்தான் சோஷலிசத்தின் சக்தி, உயிரோட்டத்தின் மிக முக்கிய மூல ஊற்று, இதன் வெற்றிகளின் அடிப்படை அடங்கியுள்ளன. சோஷலிசத்தைப் பன்முக ரீதியில் மேம்படுத்தும் போக்கில் முன்வைக்கப்பட்டுள்ள உயரிய மனிதாபிமான இலட்சியங்களை நிறைவேற்ற அதே போன்ற மனிதாபிமான, மானுட சாதனங்கள் தேவை. சோஷலிசத்தின் மிக முதிர்ச்சியடைந்த வடிவம்

மனிதனுக்குப் பாதகம் ஏற்படுத்தும் வகையில் தோற்றுவிக்கப்படவில்லை, மாறாக, மனிதனின் ஆக்க பூர்வமான உள்ளாற்றல்களை வெளிப்படுத்தி, அவனுடைய திறமைகளை வளர்ப்பதன் மூலம் இது தோற்றுவிக்கப்படுகிறது.

உறுதியான சமாதானம் நிலவினால்தான் சோஷலிசத்தின் அனுகூலங்களையும் வாய்ப்புகளையும் முழுமையாகப் பயன்படுத்த முடியும். எனவேதான் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும், சர்வதேச பதட்ட நிலைத் தணிவை ஆழப்படுத்தவும், எல்லா மக்களுக்கும் இடையிலும் நட்புறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்தவும் தொடர்ச்சியாகப் போராடுகின்றன. உலகின் முதல் சோஷலிச நாடு புதிய முன்மொழிவை முன்வைத்தது முற்றிலும் பொருத்தமானதே. மனிதகுலத்தை அணு ஆயுதத்திலிருந்து விடுவித்து, யுத்தம் தோன்றுவதற்கான அடிப்படையை ஒழிப்பதுதான் இதன் சாரமாகும். இந்த இலட்சியங்கள் புதிய சமூக அமைப்பின் உண்மையான மனிதாபிமானத்தையும் — இது உள்நாட்டுக் கொள்கையிலும் வெளிநாட்டுக் கொள்கையிலும் வெளிப்படுகிறது — சுரண்டல், கொடூரம், இராணுவவெறி ஆகியவை ஆதிக்கம் செலுத்தும் பழைய உலகிலிருந்து இது கோட்பாட்டு ரீதியில் எப்படி வேறுபடுகிறது என்பதையும் பறைசாற்றுகின்றன.

## அத்தியாயம் எட்டு

# சோஷலிஸ்ட் வாழ்க்கை முறை

வளர்ச்சியடைந்த சோஷலிசத்தின் சகாப்தம் மக்களுடைய வாழ்க்கை முறையை, அவர்களுடைய வேலை, சமூக நடவடிக்கை, கல்வி, ஓய்வு, பொழுதுபோக்கு, குழந்தைகளை வளர்த்தல், இதரவற்றை மாற்றுகிறது. ஒரு தனிநபருடைய வாழ்க்கை புதிய சமூக அமைப்பின் எல்லாச் சாதனைகளை, அதன் முக்கியமான அம்சங்களைப் பிரதிபலிக்கிறது. தனிநபர் வாழ்க்கையைப் பூரணமாக அனுபவிக்கிறாரா அல்லது சமூக இயந்திரத்தில் தான் ஒரு ''திருகாணி'' என்ற உணர்ச்சியில் உலகத்திலிருந்து அந்நியமாகிவிடுகிறாரா என்பது அவருடைய நடவடிக்கையின் இயல்பு மற்றும் உள்ளடக்கத்தைப் பொறுத்திருக்கிறது. ஆனால் தனிநபருடைய நடவடிக்கையின் ரகம் அவருடைய வாழ்க்கை நிலைமைகளில் மாற்றங்களின் விளைவு என்பதுடன் சமூகத்தையும் தனிநபரையும் மேலும் பரிபூரணமாக்குகின்ற கருவியாகவும் இருக்கிறது. அதனால்தான் வாழ்க்கை முறையைப் பற்றிய பிரச்சினைகள் சித்தாந்தப் போராட்டத்தில் மேன்மேலும் முன்னணிக்கு வருகின்றன. இரண்டு (சோஷலிச மற்றும் பூர்ஷ்வா) வாழ்க்கை முறைகளும் இரண்டு உலகங்களை, இரண்டு எதிரிடையான சமூக பொருளாதார அமைப்புகளைப் பிரதிபலிக்கின்றன.

சோஷலிசத்தின் கீழ் மிகவும் முழுமையாக வளர்ச்சியடைந்துள்ள புதிய வாழ்க்கை முறை என்பது என்ன? இரண்டு உலகங்களை ஒப்பிடுகின்ற பொழுது இதுதான் முக்கியமான கேள்வி ஆகும்.

சோஷலிஸ்ட் வாழ்க்கை முறை பிரதானமாக சோஷலிஸ்ட் உற்பத்தி முறையினால் நிர்ணயிக்கப்படுகிறது. வாழ்க்கையின் ஒரு முறையிலிருந்து மற்றொரு முறைக்கு மாறுதல் பழைய உற்பத்தி முறை மாற்றமடைவதன் மூலமாக மட்டுமே சாத்தியம். ஆனால் வாழ்க்கை முறையைத் தனிநபருடைய ஜீவனத்தின் பொருளாயத நிலைமைகளாக அல்லது மனித வாழ்க்கை மற்றும் நடத்தையின் பல்வேறு அம்சங்களாக மட்டும் குறுக்கிவிட முடியாது. மனித நடவடிக்கைக் களத்தின் விரிவான பரப்பு சோஷலிஸ்ட் வாழ்க்கை முறையின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சோஷலிச அமைப்பில் தனிநபருடைய நடவடிக்கை அதிகமான அளவுக்குப் பல்விதமாக இருக்கிறது. வேலை மற்றும் சமூக அரசியல் வாழ்க்கையில் ஈடுபாடு, கல்வி மற்றும் கலைப் படைப்பில் பல ரகங்கள், கலைப் படைப்புகளை ரசிக்கின்ற வாய்ப்புப் பெறுதல், மற்ற மக்களுடன் தொடர்புகள், உடல்நலம் பேணுதல், விளையாட்டுகள் ஆகியவை அதில் அடங்கும்.

சோஷலிச அமைப்பில் உழைப்பு அதிகமான படைப்புத் தன்மையைப் பெறுகின்ற பொழுது, உழைக்கும் மக்களுடைய தேர்ச்சித் தரங்கள் உயர்கின்ற பொழுது அங்கே உழைப்பின் உள்ளடக்கம் மாபெரும் மாற்றத்தை அடைகிறது. சோவியத் யூனியனில் கடுமையான உடல் உழைப்பை, கை உழைப்பை, தேர்ச்சிக் குறைவான உழைப்பைக் குறைப்பதற்கும், முடிவில் அகற்றுவதற்கும் எல்லா நடவடிக்கை

களும் மேற்கொள்ளப்படுகின்றன.

சோஷலிஸ்ட் வாழ்க்கை முறை என்பது பிரதானமாக, ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப்புக்கு ஏற்ப'' என்னும் கோட்பாட்டைப் பின்பற்றி உழைக்கின்ற வாழ்க்கை முறை ஆகும்.

வேலை நேரம் குறைக்கப்பட்டு ஓய்வு நேரம் அதிகரிக்கின்ற பொழுது உழைக்கும் மக்கள் தம்முடைய ஓய்வு நேரத்தை அதிக அர்த்தமுள்ள, பல்விதமான வழிகளில் செலவிடுகிறார்கள். ஆனால் முக்கியமான விஷயம் என்னவென்றால் உழைப்பு மற்றும் ஓய்வு, வேலை மற்றும் கல்வி, படைப்பு முயற்சிகள் மற்றும் பொழுதுபோக்கு ஒன்றையொன்று செழுமைப்படுத்துகின்றன. தனிநபருடைய நடவடிக்கையின் எல்லா ரகங்களும் அவர் தன்னுடைய விருப்பார்வங்களையும் திறமைகளையும், உடலியல் மற்றும் ஆன்மீக சக்திகளையும் சுதந்திரமாக வளர்ப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் உதவுகின்றன. தனிநபருடைய பல்துறை வளர்ச்சிக்குத் தேவையான எல்லா சாத்தியங்களையும் சோஷலிசம் படைக்கிறது.

ஆனால் தனிநபர் ஒருபோதும் தனியாகச் செயல்படுவதில்லை; அவர் எப்பொழுதும் ஏதாவதொரு உழைப்புக் குழுவை, வர்க்கம் அல்லது தேசிய இனத்தைச் சேர்ந்தவராக இருக்கிறார். சோஷலிஸ்ட் வாழ்க்கை முறை பல்வேறு சமூக மக்கள் குழுக்களின் உறுப்பினர்கள் என்ற முறையில் மக்களுக்கு இடையிலான விசேஷ உறவுகளையும் நிர்ணயிக்கிறது. சோஷலிஸ்ட் உற்பத்தி உறவுகளின் கீழ் தனிநபருடைய இலட்சியங்கள் உழைப்புக் குழு மற்றும் சமூகத்தின் இலட்சியங்களுடன் பொருந்துகின்றன. உழைக்கும் மக்களுடைய கூட்டு முயற்சிகளின் மூலம் சமூகச் செல்வம் அதிகரிக்கின்ற பொழுது தனிநபருடைய பொருளாயத மற்றும்

கலாசாரத் தரமும் உயர முடியும், அவருடைய பல்துறை வளர்ச்சி நிறைவேற முடியும். அதனால்தான் சோஷலிஸ்ட் புரட்சி மக்களுக்கு இடையிலான உறவுகளை மாற்றுவதை உள்ளடக்கியிருக்கிறது. தனிமனிதவாதம் மேன்மேலும் கூட்டாண்மைக்கு இடமளிக்கிறது; போட்டி மறைந்து சோஷலிஸ்ட் முன்னுதாரணமும் ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் வளர்கின்றன; மற்றவர்களைப் பற்றி அச்சம், பகைமை, அவநம்பிக்கை மறைந்து மனிதநேயம், நல்லெண்ணம், இதரவை வளர்கின்றன.

சோஷலிஸ்ட் வாழ்க்கை முறையில் கூட்டாண்மை, தோழமை, பரஸ்பர உதவி, உயர்ந்த தார்மிகத் தரங்கள், எல்லா தேசிய இனத்தவர்களுடனும் நட்புறவு ஆகியவை நிலவுகின்றன. சோவியத் மக்களிடம் சுய மரியாதை இருக்கிறது; அதே சமயத்தில் அவர்கள் மற்ற மக்களினங்களின் பால் மரியாதை காட்டுகிறார்கள். அவர்கள் தேசிய சுதந்திரத்துக்கும் சமூக விடுதலைக்கும் போராடுகின்ற ஒடுக்கப்பட்ட எல்லா மக்களினங்களுக்கும் உதவி செய்வதற்கு முயல்கிறார்கள்.

## சிந்தனா முறையும் வாழ்க்கை முறையும்

தனிநபருக்கு அளிக்கப்படுகின்ற மிகவும் சாதகமான நிலைமைகளும் வாய்ப்புகளும் சோஷலிஸ்ட் வாழ்க்கை முறை செய்முறையில் நிறைவேறுவதற்குப் போதுமானவை அல்ல. தனிநபருடைய சொந்தப் பண்புகள், அவருடைய உலகக் கண்ணோட்டம், மதிப்புத் திசையமைவுகள் மற்றும் நம்பிக்கைகள் இங்கே முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன.

உழைக்கின்ற பெருந்திரளான மக்கள் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான

ரீதியான உலகக் கண்ணோட்டத்தை வளர்ப்பதற்கு சோஷலிஸ்ட் சமூகம் உதவி செய்கிறது. சில சமயங்களில் தனிநபர் உலகத்தைப் பற்றிப் பல தப்பெண்ணங்களைக் கொண்டிருக்கிறார்; எனவே அவர் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடுகின்ற பொழுது சரியான முடிவுக்கு வர இயலாமல் தடுமாறுகிறார். இக்குறை அவர் தன்னுடைய முழுத் தகுதிக்கு உயர்வதைத் தடுக்கிறது, அவருடைய நடவடிக்கையைத் தடை செய்கிறது அல்லது திசை திருப்புகிறது. மார்க்சிய-லெனினியம் மகத்தான சமூக உள்ளடக்கத்தைக் கொண்ட, திருப்திமிக்க வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற திசை காட்டும் கருவி. தனிநபருடைய உலகக் கண்ணோட்டத்துக்கும் அவருடைய நடவடிக்கையின் தன்மைக்கும் நேரடியான தொடர்பு இருக்கிறது. உணர்ச்சிகரமான, உற்சாகமான வாழ்க்கையை நடத்த விரும்புபவர்கள் புரட்சிகரமான தத்துவத்தைக் கற்க வேண்டும், அனைத்து உழைக்கும் மக்களின் விடுதலைக்கு, உலக சமாதானத்துக்கு, சமூக முன்னேற்றத்துக்கு நடைபெறுகின்ற போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும்.

விஞ்ஞான கம்யூனிசத் தத்துவத்தைக் கற்பது எதார்த்தத்தைச் செய்முறையில் மாற்றியமைக்கின்ற, புதிய உலகத்தை நிறுவுகின்ற, மேலும் முன்னேறுகின்ற வழிகளையும் முறைகளையும் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. ஆனால் விஞ்ஞான ரீதியான, கம்யூனிஸ்ட் உலகக் கண்ணோட்டம் தனிநபருடைய தத்துவ ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வின் விளைவாக மட்டும் உருவெடுக்காது; தனிநபர் சமூக அரசியல் நடவடிக்கையில் சுறுசுறுப்பாகப் பங்கெடுக்கின்ற பொழுது அது உருவாகிறது. தனிநபர் புதிய சமூக அமைப்புக்கு நடைமுறையில் போராடுகின்ற பொழுது அவர் சித்தாந்த ரீதியிலும் தத்துவ ரீதியிலும் முன்னேறுகிறார்.

பழைய உலகத்தின் எதிர்ப்புகளை மீறி புதிய சமூக அமைப்பு ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன்

அமெரிக்காவில் பல நாடுகளில் தொடர்ச்சியாக வளர்ச்சி யடைந்து கொண்டிருக்கிறது. புதிய மனிதனைப் படைத் திருப்பது சோஷலிசத்தின் முக்கியமான சாதனை ஆகும். இன்றைய சோஷலிசம் உலகத்தின் ஆறிலொரு பகுதியில் வேரூன்றியிருக்கிறது; எதிர்காலம் சோஷலிசத்துக்குச் சொந்தமானது, சோஷலிசம் சமாதானமான, மகிழ்ச்சி நிரம்பிய வாழ்க்கையை, படைப்புத் தேடல்களும் சாத்தியங் களும் நிறைந்த வாழ்க்கையைக் குறிக்கிறது என்று மக்கள் நம்புகிறார்கள். ஆனால் அந்த வாழ்க்கைக்குப் போராட வேண்டும். பழைய உலகத்தின், சுரண்டல் உலகத்தின் சக்திகள் தாமாகவே வரலாற்றுக் களத்தை விட்டு வெளி யேற மாட்டா; மக்களினங்கள் ஒன்றுபட்ட, சர்வதேச நடவடிக்கையின் மூலம் அவற்றை ஒழிக்க வேண்டும்.

## அத்தியாயம் ஒன்பது

# உலக சோஷலிச அமைப்பு

### சர்வதேச உறவுகளில் புதிய ரகம்

மக்களினங்கள் சோஷலிசத்துக்கு மாறுதல் ஒரு நீண்ட வரலாற்று நிகழ்வுப் போக்கு; அச்செயல்முறையின் போது தனிப்பட்ட நாடுகள் அல்லது நாடுகளின் குழுக்கள் உள் நிலைமைகள் மற்றும் சர்வதேச நிலைமைகளின் தோற்றத் தினால் முதலாளித்துவ அமைப்பிலிருந்து பிரிந்து சோஷ லிசப் பாதையைப் பின்பற்றுகின்றன. ருஷ்யாவில் 1917இல் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி உலக சோஷலிச அமைப்பின் உருவாக்கத்தை ஆரம்பித்தது. இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் சில நாடுகளில் புரட்சிகள் வெற்றியடைந்ததன் விளைவாக சோஷலிசம் நிறுவப்பட்டது. இவ்விதத்தில் உருவாகிய உலக சோஷலிச அமைப்பு உலகத்தில் சக்தி களின் பரஸ்பர நிலையில் சோஷலிசத்துக்குச் சாதகமான முறையில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தியது. இதற்குப் பிறகு ஆசியாவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் சில நாடுகளில் நடைபெற்ற சோஷலிஸ்ட் புரட்சிகள் புதிதாக சுதந்திரமடைந்த தேசிய அரசுகள் சோஷலிசத் துக்கு மாறுகின்ற போக்கை உறுதிப்படுத்தின.

1980க்களில் மனிதகுலத்தில் மூன்றிலொரு பங்குக்கும்

அதிகமானவர்கள் சோஷலிஸ்ட் நிர்மாணப் பாதையைப் பின் பற்றி சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையை நிரந்தரமாக ஒழித்துவிட்டார்கள். மேன்மேலும் அதிகமான மக்களினங் கள் இப்பாதையில் வந்து கொண்டிருக்கின்றன. உலக சோஷ லிச அமைப்பு வளர்க்கப்பட்டு, முழுநிறைவாக்கப்பட்டு வரு கிறது; புதிய சமூகத்தின் சாதகங்கள் முனைப்பாக வெளிப் படுகின்றன.

உலக சோஷலிசம் முதலாளித்துவத்தைக் காட்டிலும் சிறப்பானது என்பதைத் தன்னுடைய ஸ்தூலமான சாதனை களின் மூலம் எடுத்துக்காட்டுகிறது. சோஷலிச அமைப்பில் சமூக உற்பத்தி வளர்ச்சியடைகின்ற வேகத்துடன் முத லாளித்துவம் ஒருபோதும் போட்டியிட முடியாது. உதார ணமாக, 1950இலிருந்து 1982 முடிய சிஎம்இஏ அமைப்பைச் சேர்ந்த சோஷலிஸ்ட் நாடுகளின் தேசிய வருமானம் 8.3 மடங்கும், மொத்த தொழில்துறை உற்பத்தி 13 மடங்கும், வெளிநாடுகளுடன் வர்த்தகம் 30 மடங்கும் அதிகரித்தது. 1980க்களின் நடுப்பகுதியில் உலகத்தின் தேசிய வருமானத்தில் சோஷலிஸ்ட் நாடுகளின் பங்கு 25 சதவிகிதமாகவும் உலகத் தொழில்துறை உற்பத்தியில் அவற்றின் பங்கு 33 சத விகிதமாகவும் இருக்கிறது. பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லோருக்கும் வேலை, தேர்ச்சிக்கும் பயிற்சிக்கும் ஏற்ற வேலை வாய்ப்பு, இலவசக் கல்வி மற்றும் வைத்திய சேவை, தாய் மற்றும் குழந்தை நல வசதிகள், ஓய்வூதியப் பாதுகாப்பு மற்றும் இதர சமூக நலச் சாதனைகள் சோஷலிஸ்ட் நாடுகளின் வாழ்க்கை முறையில் சகஜமாகிவிட்டன. மக்களுடைய ஆட்சியதிகாரம், சமூகத்தின் அரசியல் ஒருமை, தேசிய இனங்களுக்கு மத்தியில் சமத்துவம் மற்றும் நட்புறவை உறுதிப்படுத்துகிறது; சமா தானமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்

கிறது; ஏகாதிபத்தியத்தையும் காலனியாதிக்கத்தையும் எதிர்த்து மக்களினங்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கிறது.

புதிய சமூகத்தை நிர்மாணிப்பதில் சோஷலிஸ்ட் நாடுகளில் வெற்றிகளுக்கு முக்கியமான காரணம் அவை உலக சோஷலிச முகாமின் உறுப்பினர்களாக இருப்பது என்று கூறலாம். அந்த நாடுகளின் சமூக பொருளாதார அமைப்பு மற்றும் அரசு அதிகாரத்தின் வர்க்க சாராம்சம், அவற்றின் மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டம் அவற்றின் ஒத்துழைப்புக்குப் புறவய அடிப்படையாக இருக்கின்றன. உலக சோஷலிச அமைப்பு சுதந்திரமான, அரசுரிமையுள்ள மக்களினங்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கூட்டமைப்பு; அவை சோஷலிசப் பாதையைப் பின்பற்றுகின்றன; பொது நலன்களாலும் இலட்சியங்களாலும் சர்வதேச சோஷலிஸ்ட் ஒருமைப்பாட்டின் நெருக்கமான பிணைப்புகளாலும் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. உலக சோஷலிச அமைப்பு நாடுகளுக்கு இடையில் பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளில் புதிய ரகம் ஆகும்.

சர்வதேச உறவுகளின் இப்புதிய ரகம் சமூக அமைப்பு என்ற முறையில் சோஷலிசத்தின் சாராம்சத்திலிருந்து தோன்றுகிறது. மார்க்சும் எங்கெல்சும் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்** சோஷலிசத்தின் கீழ் மக்களினங்களுக்கு இடையிலுள்ள உறவுகளுக்கும் பூர்ஷ்வா தேசிய இனங்களுக்கும் அரசுகளுக்கும் இடையிலுள்ள உறவுகளுக்கும் உள்ள முக்கியமான வேறுபாட்டைச் சுட்டிக் காட்டினார்கள்: ‘‘தனியொருவர் பிறர் ஒருவரைச் சுரண்டுதல் எந்த அளவுக்கு ஒழிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு ஒரு தேசிய இனம் பிறிதொன்றைச் சுரண்டுதலும் ஒழிக்கப்படும்.

‘‘தேசிய இனங்களினுள் வர்க்கங்களுக்கிடையிலான பகைநிலை எந்த அளவுக்கு மறைகிறதோ, அதே அளவுக்குத்

தேசிய இனங்களுக்கிடையிலான பகைமையும் இல்லாதொழியும்.'' *

அவர்களுக்குப் பிறகு லெனின் சர்வதேச உறவுகளின் புதிய ரகத்தின் கோட்பாடுகளை விரித்துக் கூறினார். அவர் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தின் சாராம்சத்தை விளக்குகின்ற பொழுது பின்வருமாறு எழுதினார்:

''மூலதனம் ஒரு சர்வதேச சக்தி. அதைத் தோற்கடிப்பதற்கு ஒரு சர்வதேசத் தொழிலாளர் நேச அணி, ஒரு சர்வதேசத் தொழிலாளர் சகோதரத்துவம் அவசியம்.

''நாம் தேசிய இனப் பகைமை மற்றும் பிணக்கு, தேசிய இனத் தனி விதிவிலக்குத் தன்மை ஆகியவற்றை எதிர்க்கிறோம். நாம் சர்வதேசியவாதிகள்.'' ** ருஷ்யாவில் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றியடைந்து ஓர் ஆண்டுக்குப் பிறகு, 1918 நவம்பர் 13ஆம் தேதியன்று லெனின் கையொப்பமிட்ட வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றிய சோவியத் அரசாணை ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையடைந்த மக்களினங்களுக்கு இடையிலான உறவுகளைப் பின்வருமாறு வரையறுக்கிறது: ''இராணுவவெறி, ஏகாதிபத்தியம் மற்றும் பொருளாதார அடிமைத்தனத்தின் அமைப்பின் இடிபாடுகளிலிருந்து சோஷலிச அமைப்பை நிறுவி வலுப்படுத்துவதற்கு எல்லா தேசிய இனங்களின் உழைக்கின்ற பெருந்திரளான மக்களின் கூட்டணியாக இது இருக்கும்.'' *** வரலாற்றில் முதல் தடவையாக பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதக் கருத்துகள் சோவியத் யூனியனில், சமத்துவமான மக்களினங்களைக் கொண்ட பல தேசிய இன

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **தேர்வு நூல்கள்**, தொகுதி 1, பக்கம் 223.

** வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கம் 125.

*** **சோவியத் யூனியன் வெளிநாட்டுக் கொள்கை ஆவணங்கள்**, தொகுதி 1, மாஸ்கோ, 1957, பக்கம் 5 (ருஷ்ய மொழியில்).

அரசில் — அங்கே பரஸ்பர உறவுகளில் வர்க்க மற்றும் தேசிய இனப் பகைமைகள் ஒழிக்கப்பட்டிருந்தன — அமுலாக்கப் பட்டன. சோவியத் மக்களினங்களின் நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி உலக சோஷலிச அமைப்பிலுள்ள அரசுகளை ஒன்று சேர்க்கின்ற புதிய உறவுகளின் தன்மையை நிர்ணயித்தன.

சோஷலிச அரசுகளுக்கு இடையிலுள்ள உறவுகள் சோஷலிஸ்ட் சர்வதேசியவாதக் கோட்பாடுகளை அடிப் படையாகக் கொண்டிருக்கின்றன. அது, உழைக்கும் மக்கள் அதிகாரத்தைப் பெற்றிருக்கின்ற பொழுது, மார்க்சிய-லெனி னியக் கட்சிகள் ஆளும் கட்சிகளாக வளர்ச்சியடைந்திருக் கின்ற பொழுது, அவை சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் செய்முறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, அரசுகளுக்கு இடையிலான சோஷலிஸ்ட் உறவுகளை வலுப்படுத்து வதற்கு, சோஷலிச முகாமைக் கூட்டாகத் தற்காப் பதற்குப் பாடுபடுகின்ற பொழுது சர்வதேச ஒருமைப் பாட்டின் வளர்ச்சியில் ஒரு கட்டமாகும்.

சர்வதேச உறவுகளின் இப்புதிய ரகத்தின் மூலவேரான சோஷலிஸ்ட் சர்வதேசியவாதக் கோட்பாடுகளில், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, பிரதேச ஒருமைப்பாடு, அரசுரிமை மற்றும் சுதந்திரத்தை மதித்தல், அரசுகளுக்கிடை யில் சமத்துவம், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை ஆகியவை முக்கியமானவை ஆகும். அரசுகளுக்கு இடை யிலான உறவுகளில் இத்தகைய முற்போக்கான கோட்பாடு களைப் பின்பற்ற வேண்டுமென்று வெகுஜனங்கள் மத்திய காலத்திலிருந்தே போராடி வருகிறார்கள். முதலாளி வர்க்கம் தன்னுடைய எழுச்சிக் கட்டத்தில் இக்கோட்பாடு களைப் பிரகடனம் செய்தது; ஆனால் பிறகு அவற்றை அமுல் நடத்துவதற்கு மறுத்தது. ஏகாதிபத்தியம் என்பது அரசுகளுக்கு இடையிலான உறவுகளில் ஜனநாயகக் கோட்

பாடுகளை மீறுதலே. இக்கோட்பாடுகள் வரலாற்றில் முதல் தடவையாக சோவியத் குடியரசுகளுக்கு இடையிலான உறவுகளிலும் சோஷலிச முகாமைச் சேர்ந்த அரசுகளுக்கு இடையிலான உறவுகளிலும் அமுலாக்கப்பட்டிருக்கின்றன.

இப்புதிய ரகத்தைச் சேர்ந்த உறவுகளின் அடிப்படைக் கோட்பாடு — சோஷலிஸ்ட் நிர்மாணத்தில், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் மற்றும் சோஷலிஸ்ட் சாதனைகளைத் தற்காப்பதில் பரஸ்பர, சகோதர உதவி — மனிதனை மனிதன் அல்லது ஒரு தேசிய இனத்தை மற்றொரு தேசிய இனம் சுரண்டுதலிலிருந்து விடுதலையடைந்த சமூகம் என்ற முறையில் சோஷலிசத்தின் இயல்பிலிருந்தே தோன்றுகிறது.

### நேர்மையான ஒத்துழைப்பு

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு மத்தியில் நெருக்கமான சகோதர ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் சோஷலிச முகாமைச் சேர்ந்த எல்லா நாடுகளிலும் சோஷலிஸ்ட் நிர்மாணத்துக்குச் சாதகமான சர்வதேசச் சூழலை உருவாக்கியிருக்கின்றன. தனிப்பட்ட ஒவ்வொரு சோஷலிச நாட்டின் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி மொத்த உலக சோஷலிச அமைப்பின் முன்னேற்றத்துக்குத் தீர்மானகரமான நிபந்தனையாக இருக்கிறது. தேசியப் பொருளாதாரத்தின் வெற்றிகரமான வளர்ச்சி, சமூக உறவுகள் முழுநிறைவாக்கப்படுதல், ஒவ்வொரு சகோதர நாட்டின் முன்னேற்றம் ஆகியவை பொதுவான சோஷலிஸ்ட் இலட்சியத்தின் நலன்களுக்கு உதவுகின்றன, அவற்றின் ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துகின்றன. சோஷலிச நாடுகளின் ஒத்துழைப்பு, தம்முடைய பொருளாதார மற்றும் தற்காப்பு பலத்தை

வலுப்படுத்திக் கொள்வதற்கும் மக்களுடைய வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கும் அவை சோஷலிச பொருளாதார அமைப்பு மற்றும் சர்வதேச சோஷலிஸ்ட் உழைப்புப் பிரிவினையின் சாதகங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும் உதவுகின்றன என்று சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் வலியுறுத்துகின்றன.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் அரசியல் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும். சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளும் அரசாங்கங்களும் புதிய சமூகத்தை நிர்மாணிக்கின்ற அதே தத்துவக் கோட்பாடுகளை, சமூக வளர்ச்சியின் நீண்ட கால மற்றும் இன்றைய பிரச்சினைகளைப் பற்றிய பொதுவான மதிப்பீட்டைப் பின்பற்றி மேலும் ஒத்துழைப்பதைப் பற்றி முறையான கூட்டங்கள், பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்துகின்றன. சகோதரக் கட்சிகள் மற்றும் அரசுகளின் தலைவர்கள் சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் அடிப்படையான பிரச்சினைகள், ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல், சர்வதேச அரங்கத்தில் கூட்டு நடவடிக்கை ஆகியவை பற்றி விவாதிப்பதற்காக நடத்துகின்ற கூட்டங்கள் மிகவும் முக்கியமானவை. இந்த உயர் மட்டக் கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற முடிவுகள் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கலாசாரம் ஆகிய துறைகளில் நிறைவேற்றப்படுகின்றன. சகோதர நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இடையில் பிரதேச, நகர, மாவட்ட மற்றும் பெரிய தொழில் நிலையங்களின் அளவில் அதிகமான தொடர்புகள் இருக்கின்றன. அவை கட்சி, அரசியல் மற்றும் சித்தாந்தத் துறையில் அனுபவங்களைப் பரிவர்த்தனை செய்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. அவை திட்டவட்டமான ஒத்துழைப்புச் செயல்திட்டங்களை விவாதித்து

எடுத்துக் கொள்கின்றன. அரசு உறுப்புகள், சமூக அமைப்புகள், தொழில் இணையங்கள் மற்றும் உழைப்புக் குழுக்களுக்கு இடையில் மிகவும் பல்விதமான ஒத்துழைப்பு நிலவுகிறது. சோஷலிஸ்ட் நிர்மாணத்தின் அவசரமான பிரச்சினைகளைக் கூட்டாகத் தீர்ப்பதில் லட்சக்கணக்கான மக்கள் பங்கெடுக்கிறார்கள். இது சோஷலிச நாடுகளின் உள்நாட்டுக் கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கையில் ஒன்றுபட்ட கருத்துகளை உருவாக்குவதற்கு உதவுகிறது; ஆகவே அவை எல்லா வழிகளிலும் நெருங்கி வர முடிகின்றது.

சோஷலிச நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பு மிகவும் முக்கியமாகும். சிஎம்இஏ நாடுகளின் உற்பத்திச் சக்திகள் உயர்ந்த வளர்ச்சியை அடைந்தன. ஒவ்வொரு நாட்டின் தேசியப் பொருளாதாரத்திலும் பல்துறையான தொழிற்கட்டமைப்பு ஏற்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சிகள், சோஷலிஸ்ட் சமூக அமைப்பின் சாதகங்களை விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் ஆக உயர்ந்த சாதனைகளுடன் ஒன்றிணைப்பதைப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையான கடமையாக முன்வைக்கின்றன. அதனால்தான் சிஎம்இஏ நாடுகளுக்கு இடையில் பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்ச்சியாக ஆழப்படுத்தப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படுகிறது. பொருளாயத உற்பத்தி மற்றும் வர்த்தகத் துறைகளில் அவற்றின் ஒத்துழைப்பு சோஷலிஸ்ட் பொருளாதார ஒருங்கிணைப்பின் உள்ளடக்கமாக இருக்கிறது; அது சோஷலிச நாடுகளை இன்னும் நெருக்கமாகக் கொண்டுவருகிறது.

உற்பத்தியை சர்வதேசமயமாக்குதல் மொத்த சமூக வாழ்க்கையையும் சர்வதேசமயமாக்குவதற்கு மூலவேராக இருக்கிறது என்று மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டினார்

கள். இதைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''ஏற்கெனவே முதலாளித்துவத்தின் கீழ் மனிதகுலத்தின் எல்லாப் பொருளாதார, அரசியல் மற்றும் ஆன்மீக வாழ்க்கையும் மேன்மேலும் அதிகமாக சர்வதேசத் தன்மையைப் பெற்றுக் கொண்டு வருகிறது.... சோஷலிசம் அதை முற்றிலும் சர்வதேசியமாக்கிவிடும்.''* அவர் ''ஒரு பொதுவான திட்டத்தின் கீழ், எல்லா நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தினாலும் ஒருங்கிணைந்த மொத்தமாக ஒழுங்குபடுத்தப்படுகின்ற, ஒற்றை உலகப் பொருளாதாரத்தை உருவாக்குவதை நோக்கிச் செல்கின்ற போக்கு'' ஏற்படுவதைச் சுட்டிக் காட்டினார். ''இந்தப் போக்கு முதலாளித்துவத்தின் கீழ் ஏற்கெனவே மிகவும் தெளிவாகத் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறது. சோஷலிசத்தின் கீழ் அது மேலும் வளர்ச்சியுற்று முழுமை அடையும்'' என்று அவர் எழுதினார்.**

நம் காலத்தில் இப்போக்கு சோஷலிஸ்ட் பொருளாதார ஒருங்கிணைப்பின் 1971ஆம் ஆண்டின் அகல்விரிவான செயல் திட்டத்தில் நிறைவேற்றப்படுகிறது. அத்திட்டம் சிஎம்இஏ நாடுகளில் நவீன உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு அந்த நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பின் புதிய வடிவங்களை (அதாவது உற்பத்தி உறவுகளின் புதிய வடிவங்களை) முன்வைக்கிறது. 1984இல் உயர் மட்டத்தில் நடைபெற்ற சிஎம்இஏ நாடுகளின் பொருளாதாரக் கூட்டம் பொருளாயத உற்பத்தியின் எல்லாத் துறைகளிலும் பரஸ்பர ஒத்துழைப்பை மேற்கொண்டு வளர்ப்பதற்கான பாதைகளை நிர்ணயித்தது. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றிய அகல்விரிவான செயல்திட்டம்

---

* வி. இ. லெனின், பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1984, பக்கங்கள் 92—93.

** V. I. Lenin, *Collected Works*, vol. 31, p. 147.

உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. உற்பத்தியின் பல்வேறு நவீன துறைகளில் தொழில்நுட்பக் கூட்டுறவு பற்றிய உடன்படிக்கைகள் இச்செயல்திட்டத்தில் அடங்கும்.

சோஷலிஸ்ட் பொருளாதார ஒருங்கிணைப்பு சர்வதேச சோஷலிஸ்ட் உழைப்புப் பிரிவினையின் முறைப்படுத்தப்பட்ட செயல்முறையாக, சோஷலிச நாடுகளின் தேசியப் பொரு ளாதாரங்கள் நெருங்கி வருகின்ற நிகழ்வுப் போக்காக, சர்வ தேசப் பொருளாதாரக் கூட்டமைப்பை உருவாக்குவதாக உள்ளது. சிஎம்இஏ நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மட்டங்கள் படிப்படியாக சமப்படுத்தப்படுகின்றன, பொரு ளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலின் முக்கியமான பிரிவுகளில் ஆழமான, நிரந்தரமான பிணைப்பு கள் உருவெடுக்கின்றன, இந்நாடுகளின் சர்வதேசச் சந்தை கள் விரிவடைகின்றன, பண்ட-பண உறவுகள் முழுநிறை வாக்கப்படுகின்றன.

சிஎம்இஏ நாடுகள் தங்களுடைய ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து, பொருளாயத உற்பத்தியின் அடிப்படைப் பிரிவுகளில் ஒத்துழைப்புக்கான நீண்ட காலத் திட்டங்களை அமுலாக்குவதன் மூலம் தொழில்துறை மற்றும் விவசாயம், விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் பொறி இயல் துறைகளில் சிறப்புத் தேர்ச்சியையும் ஒத்துழைப்பையும் வளர்க்கின்றன. ஒவ்வொரு நாட்டின் இயற்கை வளங்களை யும் உற்பத்தி வாய்ப்புகளையும் உரிய முறையில் கணக்கி லெடுத்துக் கொண்ட சர்வதேச உழைப்புப் பிரிவினையின் மூலம் சிஎம்இஏ நாடுகள் மிகவும் முக்கியமான, பொரு ளாதார ரீதியில் மிகவும் சாதகமான வளர்ச்சித் திசைவழி களில் தம்முடைய முயற்சிகளை ஒன்று குவிக்க முடிகிறது; அதன் மூலம் பொருளாயத மற்றும் உழைப்புத் துறைகளில் கணிசமான சிக்கனங்களை அமுலாக்க முடிகிறது. சிஎம்இஏ நாடுகளில் விசேஷமான தேர்ச்சி கொண்ட உற்பத்தி

அமைப்புகள் நிறுவப்பட்டு வளர்த்துச் செல்லப்படுகின்றன. அவை மிகச் சமீப காலத்திய தொழில்நுட்பத்தைக் கொண் டிருக்கின்றன; ஒருங்கிணைப்பில் பங்கெடுக்கின்ற எல்லா நாடு களின் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற முறையில் உற் பத்தி செய்யப்படுகிறது. இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தில் கேந்திரமான பிரிவுகளான அணுசக்தி உற்பத்தி, எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்ப்யூட்டர் தொழில் துறை, இயந்திரக் கட்டுமானத்தில் தானியங்கி இயந்திரங் கள் மற்றும் ராபட்டுகள், இரசாயன, உயிரியல் மற்றும் இதர தொழில் பிரிவுகளில் விசேஷ கவனம் செலுத்தப் படுகிறது.

நாடுகளின் அரசுரிமைக்கும் தேசிய நலன்களுக்கும் மதிப் பளிக்கின்ற அடிப்படையில் சிஎம்இஏ நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பு ஆழமாக்கப்பட்டு முழுநிறைவாக்கப்படுகிறது, அவற்றின் சோஷலிஸ்ட் பொருளாதார ஒருங்கிணைப்பு வளர்க்கப்படுகிறது. எல்லாக் கூட்டு நடவடிக்கைகளிலும் சிஎம்இஏ நாடுகள் விருப்ப பூர்வமாகப் பங்கெடுக்கின்றன. உள்நாட்டுத் திட்டமிடுதல் அல்லது தேசிய அமைப்புகளின் நிதி மற்றும் பொருளாதார சுய கணக்கீட்டு நடவடிக்கை பாதிக்கப்படுவதில்லை. சிஎம்இஏ மூடப்பட்ட பொருளாதார மண்டலம் அல்ல, அது மற்ற சோஷலிச நாடுகளுடனும் முதலாளித்துவ நாடுகள், வளர்முக நாடுகள் பலவற்றுடனும் ஒத்துழைக்கிறது என்பது முக்கியமானதாகும்.

சோஷலிச நாடுகள் கலாசாரம், விஞ்ஞானம், கல்வி ஆகிய துறைகளில் நெருக்கமான, பரந்த பிணைப்புகளைக் கொண்டிருக்கின்றன. அவற்றின் வளர்ச்சியடைகின்ற தேசி யக் கலாசாரங்கள் பரஸ்பரம் ஒன்றையொன்று செழுமைப் படுத்துகின்றன. சோஷலிச சமூகத்தில் புதிய மனிதனுடைய குணாம்சமாகிய சர்வதேசியக் கூறுகள் சுறுசுறுப்பாக உருவா கின்ற பொழுது அவை இன்னும் நெருக்கமாக வருகின்றன.

சோஷலிச நாடுகளின் மொழிகளிலிருந்து படைப்பிலக்கியம் மற்றும் விஞ்ஞானக் கட்டுரைகளை மொழிபெயர்த்து வெளியிடுதல், கலைக் கண்காட்சிகள், நாடகக் குழுக்கள் மற்றும் கலைஞர்களின் சுற்றுப்பயணங்கள், திரைப்பட விழாக்கள் ஆகியவற்றின் மூலம் இந்த நிகழ்வுப் போக்கு ஊக்குவிக்கப்படுகிறது. உயர்நிலைக் கல்வி, சிறப்புத் தேர்ச்சி கொண்ட செகண்டரி கல்வி மற்றும் பள்ளிக்கூடக் கல்வித் துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பு உயர்ந்த மட்டத்தை அடைந்திருக்கிறது. சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகள் சமூக விஞ்ஞானங்கள், இயற்கை விஞ்ஞானங்கள் மற்றும் தொழில் நுட்ப விஞ்ஞானத் துறைகளின் முக்கியமான பிரிவுகளில் விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களது முயற்சிகளை ஒருங்குவித்திருக்கின்றன. கலாசார மற்றும் விஞ்ஞானப் பிணைப்புகள் அதிகரிக்கின்ற பொழுது சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகள் இன்னும் நெருங்கி வருகின்றன.

சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகள் சமாதான பூர்வமான ஒத்துழைப்பை வளர்க்கின்ற பொழுதே உலகத்திலுள்ள இராணுவ, அரசியல் நிலையையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவை ஏகாதிபத்தியம் செய்யக் கூடிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தங்கள் நாடுகளைப் பாதுகாப்பதற்குரிய கூட்டுப் பாதுகாப்பு அமைப்பை நிறுவுவதற்கென்று அவசியமான நடவடிக்கைகளைச் செய்திருக்கின்றன. ஆக்கிரமிப்பாளனிடமிருந்து கூட்டுப் பாதுகாப்புக்காக ஐரோப்பிய சோஷலிச அரசுகள் வார்சா உடன்படிக்கை ஸ்தாபனம் என்ற தற்காப்புக் கூட்டணியை நிறுவியிருக்கின்றன. அவை அதன் சுற்றுவட்டத்திற்குள் தமது பாதுகாப்புக் கொள்கையை ஒருங்கிணைத்துக் கொள்கின்றன, தமது இராணுவங்களைப் பலப்படுத்துகின்றன.

அமெரிக்கா 1949இல் நேட்டோ என்னும் ஏகாதிபத்திய அரசுகளின் இராணுவக் கூட்டணியை நிறுவியது. நேட்டோ கூட்டணியின் நடவடிக்கைகளின் விளைவாக சோஷலிச நாடுகள் 1955இல் நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவிக்கான வார்சா உடன்படிக்கையை நிறைவேற்றின. உறுப்பினர் நாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் ஐரோப்பாவில் சமாதானத்தைப் பாதுகாத்தல் வார்சா உடன்படிக்கையின் முக்கியமான நோக்கமாகும். அதில் உறுப்பினராகவுள்ள நாடுகள் (பல்கேரியா, செக் கோஸ்லோவாக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி, போலந்து, ருமேனியா மற்றும் சோவியத் யூனியன்) ஆயுத பலத்தை உபயோகிப்பதை அல்லது அப்படி பயமுறுத்துவதைத் தவிர்ப்பது, தங்களில் எந்த நாட்டின் மீதாவது ஆயுத பலம் பிரயோகிக்கப்படு கின்ற பொழுது மட்டுமே ஆக்கிரமிப்புக்கு ஆளான நாட் டுக்கு இராணுவ உதவி உட்பட தம்மிடமுள்ள எல்லா சக்தியையும் பயன்படுத்தி உதவியளிப்பது என்று உறுதி செய்துள்ளன. வார்சா உடன்படிக்கை ஸ்தாபனம் தன்மை யிலும் ஸ்தூலமான அரசியல் நடவடிக்கையிலும் நேட்டோ ஸ்தாபனத்திலிருந்து அடிப்படையில் வேறுபடுகிறது. நேட்டோ ஸ்தாபனம் சர்வதேசப் பதட்ட நிலையை அதிகப் படுத்துவதை, ஆயுதப் போட்டியை வேகப்படுத்துவதை, சோஷலிச நாடுகளைக் காட்டிலும் அதிகமான இராணுவ பலத்தைப் பெறுவதை, அணு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதை அரசியல் நோக்கமாகக் கொண்டிருக்கிறது. ஆனால் வார்சா உடன்படிக்கை நாடுகள் வெவ்வேறு சமூக அமைப்பு களைக் கொண்ட அரசுகளுக்கு இடையில் சமாதான சக வாழ்க்கை மற்றும் ஒத்துழைப்பு, ஆயுதக் குறைப்பு மற்றும் படைக்கலைப்பு, அணு ஆயுதங்கள், இரசாயன குண்டுகள், கிருமிகளைப் பரப்பும் ஆயுதங்களை நிபந்தனையின்றித்

தடை செய்தல், ஐரோப்பாவிலும் உலகத்திலும் நிரந்தர சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகிய கொள்கைகளை முரணின்றி வலியுறுத்தி வருகின்றன. வார்சா உடன்படிக்கை ஸ்தாபனத்தின் தலைமை உறுப்பாகிய அரசியல் ஆலோசனைக் கமிட்டி 1983இல் பிராக் நகரத்தில் கூடிய பொழுது ஒரு அரசியல் பிரகடனத்தை நிறைவேற்றியது. உலகத்தின் அரசியல் சூழலை அபிவிருத்தி செய்வதற்கும் உலகம் அணு ஆயுதப் பேரழிவை நோக்கி மேலும் போய்விடாமல் தடுப்பதற்கும் சோஷலிச நாடுகள் பாடுபடுவதை அப்பிரகடனம் மறுபடியும் உறுதிப்பத்தியது. அப்பிரகடனம் இராணுவ பலத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதைப் பற்றியும் வார்சா உடன்படிக்கை ஸ்தாபனம் மற்றும் நேட்டோ ஸ்தாபனத்தின் உறுப்பினர் நாடுகளுக்கு இடையில் சமாதானத்தைக் கடைப் பிடிப்பதைப் பற்றியும் பிரேரணையை வெளியிட்டது. சோவியத் யூனியனின் தொடர்ச்சியான, சமாதானப் பற்றுள்ள வெளிநாட்டு கொள்கையின் விளைவாய் இடைதொலைவு மற்றும் குறைவான தூர ராக்கெட்டுகள் என்ற இரு வகையான ஆயுதங்களை அகற்றுவது பற்றிய சோவியத்-அமெரிக்க உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டிருக்கிறது. சோஷலிச நாடுகளின் இதர சமாதான முன்முயற்சிகளைப் போலவே இப்பிரேரணைக்கும் நேட்டோ நாடுகள் ஆக்க பூர்வமாகப் பதிலளிக்கவில்லை.

சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகளின் நெருக்கமான இராணுவ ஒத்துழைப்பு அவை ஒவ்வொன்றின் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்கிறது. சோவியத் யூனியனுடைய இராணுவ பொருளாதார சக்தி, அது மற்ற நாடுகளின் இராணுவங்களுக்கு நவீன ஆயுதங்கள், தளவாடங்கள், இராணுவப் பயிற்சி அளித்தல் ஆகியவை சோஷலிச முகாமின் வலிமையான தற்காப்புத் திறனுக்கு அடிப்படையாகும். கூட்டுப் பாதுகாப்பு அமைப்பு ஒவ்வொரு சோஷலிச நாடும்

தன்னுடைய இராணுவச் செலவுகளைக் குறைப்பதற்கும் கணிசமான பொருளாயத மற்றும் மனித வளங்களைப் பொருளாதாரத்தின் சமாதான பூர்வமான துறைகளுக்குத் திருப்புவதற்கும் உதவுகிறது. சோஷலிச நாடுகள் இராணுவச் செலவுகளை அதிகப்படுத்த விரும்பவில்லை; தமது தற்காப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அளவு மட்டுமே செலவிடுகின்றன.

## தேசிய அம்சத்திற்கும் சர்வதேசிய அம்சத்திற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு

ஒவ்வொரு நாட்டின் தேசிய நலன்களையும் சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகள் அனைத்தின் நலன்களுடனும் அதிகபட்சம் இணைப்பது என்பது சோஷலிச நாடுகளின் பரஸ்பர உறவுகளின் கோட்பாடுகளில் ஒன்றாகும். உலக சோஷலிச அமைப்பில் தேசிய அம்சத்திற்கும் சர்வதேசிய அம்சத்திற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு எப்படிப் பட்டது?

''தேசிய அம்சத்தையும்'' ''சர்வதேசிய அம்சத்தையும்'' ஒன்றிற்கெதிராக ஒன்று வைப்பது சரியாகாது, ஏனெனில் சோஷலிசச் சூழ்நிலையில் அடிப்படை தேசிய மற்றும் சர்வதேசிய நலன்கள் ஒத்துப் போகின்றன. ''சர்வதேசிய அம்சம்'' என்ற கருதுகோள், சோஷலிச நாடுகளிலுள்ள மக்களின் பொது நலன்கள், நாட்டங்கள், இலட்சியங்களின் அடிப்படையில் உருவாகிறது. ஆனால் ''சர்வதேசிய அம்சம்'' என்பதை தேசிய நலன்களின் வெறும் ஒட்டுமொத்தமெனப் புரிந்து கொள்ளக் கூடாது. உலக சோஷலிசப் போராட்டத்தின் பொது இலட்சியங்களும் திசையமைவுகளும் அதன் தனிப்பட்ட தேசிய அணிகளின் உடனடிக் கடமைகள்,

நாட்டங்களுடன் எப்பொழுதும் ஒத்துப் போகின்றன என்று கூற முடியாது. அதே போல் ஒவ்வொரு நாட்டின் சில தேசிய நலன்கள், மற்ற நாடுகளின், மொத்தமாக சோஷலிச அமைப்பின் நலன்களுடனும் எப்போதும், எல்லாவற்றிலும் ஒத்துப் போவதில்லை.

ஒவ்வொரு சோஷலிச நாட்டிற்கும் தேசிய சிறப்பியல் பையுடைய நலன்கள் தோன்ற வரலாற்றுக் காரணங்கள் உண்டு என்பதை முதலில் குறிப்பிட வேண்டும். வெவ்வேறு நாடுகள் சோஷலிசப் பாதையில் அடியெடுத்து வைக்கும் பொழுது அவற்றின் பொருளாதார, சமூக, அரசியல், கலாசார வளர்ச்சி மட்டம் வெவ்வேறானதாக இருக்கிறது. சோஷலிசப் புரட்சி வெற்றி பெறும் பொழுது ஒவ்வொரு மக்களினமும் தனக்கே உரித்தான வரலாற்று அனுபவத் தைப் பெறுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் சோஷலிசப் புரட்சி, மாறி வரும் சர்வதேசச் சூழ்நிலையில் நடைபெறு கிறது. இதனால் ஒவ்வொரு நாடும் சோஷலிஸ்ட் நிர்மாணத் தின் பொது (சர்வதேசிய) கடமைகளையும் விசேஷ (தேசிய) கடமைகளையும் நிறைவேற்றுகிறது. எல்லா நாடுகளுக்கும் பொதுவான புதிய சமுதாயத்தின் நிர்மாணக் கடமைகளின் நிறைவேற்றம் அந்தந்த நாட்டிற்கு உரித்தான வடிவங்களில் நடைபெறுகிறது. ''எல்லா தேசங்களும் சோஷலிசத்தை வந்தடையும் — இது தவிர்க்க இயலாதது. ஆனால் அவை அனைத்தும் ஒரே வழியில் வந்தடையா, ஒவ்வொரு தேசமும் ஜனநாயகத்தின் வடிவத்தில், பாட்டாளி வர்க்க சர்வாதி கார முறையில், சமூக வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் நடைபெறும் சோஷலிச மாற்றங்களின் வேகங்களில் தம் சொந்தப் பங்கை அளிக்கும்'' என்று லெனின் சுட்டிக் காட்டினார். *

* V. I. Lenin, *Collected Works,* vol. 23, pp. 69–70.

சோஷலிஸ்ட் நிர்மாணம் நடைபெறும் சூழ்நிலைகள், பாதைகள், வடிவங்கள், முறைகள், வேகங்களில் உள்ள வேறுபாடுகள் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கும் உலக சோஷலிச அமைப்பின் மற்ற நாடுகளுக்கும் இடையிலுள்ள உறவுகளைப் பெரிதும் நிர்ணயிக்கின்றன, இவற்றின் நலன்கள் வேறுபட வழிகோலுகின்றன, பரஸ்பர ஒத்துழைப்புப் பிரச்சினைகளில் தத்தம் அணுகுமுறையை நிர்ணயிக்கின்றன. சோஷலிச நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மட்டங்களை சமப்படுத்தும் போக்கு இடர்ப்பாடுகளை அகற்ற உதவுகிறது. முதலாளித்துவத்தில் ஏகாதிபத்திய அரசுகளும் ஏகபோகங்களும் வளர்ச்சி குன்றிய, பின்தங்கிய நாடுகளை ஒடுக்குகின்றன. இதற்கு மாறாக உலக சோஷலிச அமைப்பு இதற்குள்ள எல்லா அரசுகளுக்கும் இடையில் அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்துவதோடு கூட, சோஷலிச முகாமிலுள்ள எல்லா நாடுகளுக்கும் இடையில் நடைமுறை சமத்துவம் நிலவவும் பாடுபடுகிறது. இப்படிப்பட்ட சர்வதேசியவாதக் கொள்கையின் பயனாக, சோஷலிச நாடுகளில் நபர் ஒருவருக்கான உற்பத்தி மட்டங்களில் உள்ள பிளவு இடையறாது குறைந்து வருகிறது. சோஷலிச நாடுகள் படிப்படியாக நெருங்கி வரும் நிகழ்ச்சிப் போக்கு இன்று ஒரு நியதியாக வெளிப்படுகிறது. சோஷலிச நாடுகளின் சமூக வளர்ச்சி மட்டங்கள் எவ்வளவுக்கெவ்வளவு உயர்ந்து, ஒன்றையொன்று நெருங்கி வருகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் இடையே அதிகமான பரஸ்பர மன ஒற்றுமை நிலவும், அவற்றின் ஒத்துழைப்பு அவ்வளவுக்கவ்வளவு அங்கக ரீதியானதாக, ஆழமானதாக இருக்கும். ஆளும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் கொள்கை, ஒற்றுமையைப் பேணிக் காக்கவும், குறுகிய மனப்பாங்கு, தேசிய இனப் பிரிவுப் போக்குகளை எதிர்த்துப் போரிடவும், சர்வதேசியக் கடமைகளை கவனத்தில் கொள்ளவும், இக்கடமைகளின் நிறைவேற்றத்திற்காகச்

செயல்படவும் இவற்றிற்குள்ள திறமை ஆகியவற்றைப் பொறுத்து பல விஷயங்கள் அமையும் என்பது சொல்லாமலே விளங்கும். அந்தந்தப் பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு கள் தோன்றும் பொழுது, அவற்றை மார்க்சிய-லெனினிய, சோஷலிச சர்வதேசியவாத நிலைகளிலிருந்து இருதரப்பு, பல்தரப்பு விவாதங்களை நடத்துவதன் மூலம் அகற்றலாம்; அவை இப்படித்தான் அகற்றப்படுகின்றன.

தேசியவாதத்தைத் தூண்டி விடவும், சோஷலிச முகாமில் பிளவை ஏற்படுத்தவும் ஏகாதிபத்தியப் பிற்போக்கு எந்த வொரு வாய்ப்பையும் தீவிரமாகப் பயன்படுத்துகிறது. உதார ணமாக, சோஷலிச நாடுகளுக்கு இடையிலுள்ள உறவுகளில் பிளவை ஏற்படுத்தும் கொள்கையைப் பின்பற்றுமாறு கம் யூனிஸ்டு எதிரிகள் வெறித்தனமாகக் கோருகின்றனர். ஒரு குறிப்பிட்ட சோஷலிச நாட்டுடன் உறவுகளை வளர்க்கும் பொழுது, அந்நாடு சோஷலிச முகாமின் வரம்புகளுக்குள் தன் கடமைகளிலிருந்து ''விடுபட்டு'' நிற்க வேண்டுமென நிபந்தனை விதிக்கின்றனர். சோவியத் எதிர்ப்பு என்ற அடிப்படையில்தான் சோஷலிசத்தின் வெளிப்படையான விரோதிகளும் மறைவான விரோதிகளும் தேசியவாதத்தை மூட்டப் பார்க்கின்றனர். தேசியவாதத்துக்கு சோவியத் எதிர்ப்புத் தன்மையைத் தர சோஷலிசத்தின் விரோதிகள் செய்யும் முயற்சி புரியக் கூடியதே. ஏனெனில் சோவியத் யூனியன்தான் உலக சோஷலிசத்தின் முக்கிய பொருளா தார, அரசியல், இராணுவ சக்தியாகும். சோஷலிசத்தின் மீது கடும் தாக்குதலைத் தொடுக்க ஏகாதிபத்தியம் தேசிய வாத வெளிப்பாடுகளை சோவியத் எதிர்ப்புத் திசையில் திருப்ப எப்போதும் முயலுகிறது. சோஷலிச சர்வதேசிய வாதக் கோட்பாடுகளின் அடிப்படையிலான கொள்கை தேசியவாதத்தையும் சோவியத் எதிர்ப்பையும் பொறுத்துக் கொள்ளக் கூடாது என்று சோஷலிச நாடுகளுக்கு இடை

யிலான பரஸ்பர உறவுகளின் வரலாறு ஆணித்தரமாக மெய்ப்பித்துள்ளது. இக்கோட்பாட்டிலிருந்து சிறிது பிறழ்ந்தாலும் அது சோஷலிச முகாமிலிருந்து விலகும் நாட்டில் புரட்சியின் சாதனைகளுக்குப் பங்கமேற்படுத்தும்.

சோஷலிச சர்வதேசியவாதக் கோட்பாடுகளுக்கு விசுவாசமாக இருப்பதானது சோஷலிச அரசுகளின் பொது மற்றும் தேசிய நலன்களை சரிவர இணைக்க உதவுகிறது என்று அனுபவம் காட்டுகிறது. புதிய, அதிகபட்சம் முற்போக்கான சமூக அமைப்பை எதார்த்தமாக ஆக்கியுள்ள சோஷலிச நாடுகள் நவீன உலகின் வளர்ச்சி மீது மேன்மேலும் அதிகமான தாக்கம் செலுத்துகின்றன.

அத்தியாயம் பத்து

# ஏகாதிபத்தியக் கோட்டைகளில் வர்க்கப் போராட்டம்

## இன்றைய முதலாளித்துவம்

உலகத்தில் சோஷலிசத்தின் விரிவடைகின்ற தாக்கம், புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், வெகுஜன ஜனநாயக இயக்கங்கள் மற்றும் இதர சமூக நிகழ்வுகள் முன்னணியிலிருக்கின்ற முதலாளித்துவ நாடுகளில் உழைக்கும் மக்கள் சோஷலிசத்துக்கு வழிவகுக்கின்ற ஜனநாயக மாற்றங்களுக்கு நடத்துகின்ற போராட்டத்தின் மீது தாக்கம் செலுத்துகின்றன. இன்றைய கட்டத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் பிரத்யேகத் தன்மைகளும் அப்போராட்டத்தின் மீது தாக்கம் செலுத்துகின்றன.

முதலாவதாக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் புரட்சி. 1950க்களில் ஆரம்பமான இப்புரட்சி தொழில்நுட்பவியல் மற்றும் உற்பத்தியுடன் விஞ்ஞானத்தை இணைத்து உற்பத்திச் சக்திகளை மாற்றியமைத்திருக்கிறது. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் முன்னெப்போதுமில்லாத வேகத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. உற்பத்தி தானியங்கிமயமாகிவிட்டது; பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் மின்கணிதப் பொறிகள் உபயோகிக்கப்படுகின்றன; அணு சக்தி உட்பட சக்தியின் எல்லா ரகங்களும் உபயோகிக்கப்படுகின்றன; விவசாயம் இயந்திரமயமாக்கப்

பட்டுவிட்டது; அணுகுண்டு ஏவுகணை ஆயுதங்கள் தோற்றுவிக்கப்பட்டன; விண்வெளி ஆராய்ச்சி வளர்ச்சியடைந்திருக்கிறது.

விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தின் மீதும் தாக்கம் செலுத்துகிறது. அது புதிய வெகுஜன தொழில்களை உருவாக்கியிருக்கிறது. கல்வி, தேர்ச்சி மற்றும் கலாசாரத் தரங்கள் வளர்ச்சியடைந்திருக்கின்றன; மக்கள் தொகையில் கணிசமான பகுதியினருடைய வாழ்க்கைத் தரம் உயர்கின்ற பொழுது வாழ்க்கை நிலை மேம்பாடடைய வேண்டும் என்னும் கோரிக்கை கணிசமாக அதிகரித்திருக்கிறது.

ஆனால் முதலாளித்துவ அமைப்பில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சாதனைகள் பிரதானமாக ஏகபோகங்கள் மற்றும் இராணுவத் தொழில்துறை இணையத்தின் நன்மைக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் நீடிக்கின்ற வரை உற்பத்திச் சக்திகளும் விஞ்ஞானமும் சுயேச்சையாக வளர்ச்சி அடைய முடியாது; இதன் விளைவாக பொருளாதார முரண்பாடுகளும் சமூக மோதல்களும் தீவிரமடைகின்றன.

ஏகாதிபத்திய ஏகபோகங்கள் அரசின் உள்நாட்டுக் கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கை மீது மேன்மேலும் அதிகரிக்கின்ற தாக்கத்தைச் செலுத்துகின்றன. ஆட்சியில் இருக்கின்ற முதலாளி வர்க்கம் சமூக ரீதியான தந்திரங்களில் ஈடுபடுகிறது; உழைக்கும் மக்களுக்கு சில சலுகைகளை வழங்குகிறது; வர்க்க மற்றும் அரசியல் சமரசங்களைத் தேடுகிறது. ஆனால் இத்துறையில் அதன் சாத்தியங்கள் மிகக் குறைவே; அதன் விளைவாக எல்லாத் திசைவழிகளிலும் பிற்போக்குவாதம் தீவிரமாக அதிகரிக்கிறது. ஒடுக்குமுறை இயந்திரம் தொழிலாளர் மற்றும் ஜனநாயக இயக்கத்தை எதிர்த்துப் போராடுகின்ற முக்கியமான கருவியாகிவிட்டது; கம்யூனிச

எதிர்ப்பு அதிகார பூர்வமான அரசாங்கக் கொள்கை யாகிவிட்டது. ஏகாதிபத்தியம் ''கம்யூனிஸ்ட் அபாயத்தை எதிர்த்துப் பாதுகாப்பளித்தல்'' என்னும் பொய்யைச் சொல்லி பொருளாதாரம், அரசியல் மற்றும் சித்தாந்தத்தை இராணுவமயமாக்குகிறது, தன்னுடைய இராணுவப் படை களை அதிகப்படுத்துகிறது, இராணுவத் தொழில்துறை இணையத்தின் நடவடிக்கையை விரிவுபடுத்துகிறது.

மக்கள் மீது சித்தாந்தத் தாக்கத்தைச் செலுத்துவதற்கு செய்தி காட்சி அமைப்பு விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. தொலைக் காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகளின் வளர்ச்சி விரும்புகின்ற செய்தியைத் தாமதமின்றி மக்கள் மீது திணிப்பதைச் சாத்தியமாக்கியிருக்கிறது.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களுக்கு எதிராக இயக்கப்படுகின்ற சித்தாந்தத் தாக்குதலின் பிரதான திசைவழிகள் எவை?

பூர்ஷ்வாப் பிரசாரம் பூர்ஷ்வா வாழ்க்கை முறையை, நல்வாழ்க்கையின் பொருளாயதச் சிறப்புகளை விளம்பரப் படுத்துகிறது; வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகளின் நலன்களுக்கு மேலே நின்று கொண்டு எல்லோருக்கும் ''சம வாய்ப்புகளைத்'' தருவதாகக் கருதப்படுகின்ற ஜன நாயக அரசைப் பற்றிய கட்டுக்கதையைப் பரப்புகிறது; கம் யூனிஸ்ட் இயக்கத்தின் நோக்கங்கள் மற்றும் இன்றைய சோஷலிசத்தைப் பற்றி பொய்களை உற்பத்தி செய்கிறது; எந்த நேரமும் ''கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பு'' ஏற்பட முடியும் என்று கூறி இராணுவவெறியைத் தூண்டுகிறது; ஏகாதிபத்தி யம் அந்த ''ஆக்கிரமிப்பைக்'' காரணமாகக் காட்டி யுத்தத் தயாரிப்புகளில் தீவிரமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்று கூறுகிறது. இப்பிரசார உத்திகள் அடிக்கடி பயன் படுத்தப்படுகின்றன; இவை இன்றைய எதார்த்தங்களை உருமாற்றிக் காட்டுகின்றன.

நவீன முதலாளித்துவம் தன்னை நிரந்தரமாக்கிக் கொள்வதற்குத் தன்னுடைய முழு சக்தியையும் பயன்படுத்தி வருகிறது. அதனால்தான் கடந்த சில பத்தாண்டுகளில் உற்பத்தி ஓரளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆனால் இன்றைய முதலாளித்துவத்தில் காணப்படுகின்ற இப்பிரத்யேகத் தன்மைகள் கூலியுழைப்பைச் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு என்ற முறையில் அதன் சாராம்சத்தை மாற்றவில்லை, குணப்படுத்த முடியாத வேலையில்லாத் திண்டாட்டம், சமூக ஏற்றத்தாழ்வு, அரசியல் பிற்போக்குவாதம், தொடர்ச்சியான யுத்த பயமுறுத்தல் ஆகியவற்றை ஒழிக்கவில்லை. மேலும் முதலாளித்துவத்துக்கு உள்ளுறையான முரண்பாடுகள் அதிகமான வன்மையுடன் வெளிப்படுகின்றன, அவை இன்னும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

உதாரணமாக, ஏகாதிபத்திய அரசுகளின் பொருளாதார ரீதியான நிலையற்ற தன்மை அதிகரித்திருக்கிறது. 1970க்களிலும் 1980க்களின் ஆரம்பத்திலும் முதலாளித்துவம் மூன்று பெரிய மந்த நிலைகளுக்கு ஆளாகியிருக்கிறது. 1970க்களிலும் 1980க்களிலும் முன்னைக் காட்டிலும் அதிகமான பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன; அவை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் எல்லாவற்றுக்கும் பரவி அதிக ஆழமான முறையில் வெளிப்பட்டு அதிகமான நாசத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. மூலப்பொருள் நெருக்கடி, எரிபொருள் மற்றும் சக்தி நெருக்கடி, பணவியல் நெருக்கடி ஆகியவை ஏற்படுகின்ற பொழுது உற்பத்தி குறைகிறது. இந்த நெருக்கடி நிகழ்வுகளின் முனையைப் பணவீக்கம் கூர்மையாக்கி இருக்கிறது.

முதலாளித்துவம் பொருளாதாரத்தை மேலும் இராணுவமயமாக்குகின்ற பாதையைப் பின்பற்றித் தன்னுடைய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு முயல்கிறது. இராணுவச்

செலவுகள் முன்னெப்போதுமில்லாத அளவுகளுக்கு அதிகரித் திருக்கின்றன. அமெரிக்கா 1947 முதல் 1978 வரை ஆயுதப் பெருக்கத்துக்கு ஒரு டிரில்லியனுக்கு அதிகமான டாலர் களை அல்லது இரண்டாவது உலகப் போரில் அமெரிக்கா செலவிட்டதைப் போல மும்மடங்கு தொகையைச் செலவிட்டிருக்கிறது. 1981இலிருந்து 1983இல் இராணுவத் துறைக்கு அமெரிக்க பட்ஜெட் ஒதுக்கீடு 160 பில்லியன் டாலர்களிலிருந்து 232 பில்லியன் டாலர்களாக உயர்ந்திருக் கிறது. இந்த உயர்வு 45 சதவிகிதம் ஆகும். ஆனால் இராணுவமயமாக்குதல் பணவீக்கத்தையும் பொருளா தாரத்தின் அளவுப்பொருத்தத்தில் ஏற்றத்தாழ்வுகளையும் அதிகப்படுத்துகிறது, உற்பத்தி குறைகிறது, இராணுவம் அல்லாத துறைகளில் வேலைகள் குறைகின்றன.

இவை அனைத்தும் உழைக்கும் மக்களுடைய சமூகத் தீமைகளை, அவர்களுடைய பொருளாயத மற்றும் தார் மிகத் துன்பங்களைத் தீவிரமாக்க முற்படுகின்றன. கல்வி, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, வீட்டு வசதி ஆகிய துறை களில் அரசின் முதலீடுகள் குறைக்கப்படுகின்றன; தொழிலா ளர்கள் மற்றும் அலுவலர்களின் ஊதிய உயர்வுகள் மறுக்கப் படுகின்றன, ஊதியங்கள் குறைக்கப்படுகின்றன. முதலாளித் துவ நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் நெருக்கடி யான பிரச்சினையாக இருக்கிறது; அநேகமாக உழைக் கும் மக்களில் எல்லா ரகத்தினருமே அதனால் பாதிக்கப் படுகிறார்கள். 1983இல் இருபத்து நான்கு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் வேலையில்லாதவர்களின் எண் ணிக்கை 33 மில்லியனாக இருந்தது.

அரசியல் நெருக்கடிகள் இன்றைய முதலாளித்துவ சமூகத் தின் குறியடையாளமாக இருக்கின்றன; அரசாங்கங்கள் அடிக்கடி மாறுவதில் மற்றும் முற்கூட்டிய நாடாளுமன்றத் தேர்தல்களில் அவற்றைக் காண முடியும். பூர்ஷ்வா அதி

கார நிறுவனங்களும் அரசியல் கட்சிகளும் ஒரு மாபெரும் நெருக்கடியில் சிக்கியிருக்கின்றன. கிரிமினல் குற்ற நடவடிக்கைகள் அல்லது இரகசியப் பேரங்கள் அம்பலப்படுத்தப் படுகின்றன; இவை முதலாளித்துவ நாடுகளின் அரசியல் வாழ்க்கையில் அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டன. பூர்ஷ்வாத் தேர்தல் அமைப்பு ஆழமான நெருக்கடியில் இருக்கிறது. ஆட்சி செய்கின்ற கட்சிகள் மாறினாலும் அடிப்படையான கொள்கைகள் மாறுவதில்லை, தேர்தல் வாக்குறுதிகள் மற்றும் செயல்திட்டங்கள் பெரும்பாலும் நிறைவேற்றப் படுவதில்லை என்பதை வாக்காளர்கள் உணர்ந்து விட்டார்கள்.

1980க்களின் ஆரம்பத்திலிருந்து வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பிற்போக்கு, நவீன பழமைவாத மற்றும் நவீன பாசிசப் போக்குகள் தீவிரமடைந்திருக்கின்றன. ஏகாதிபத்தியம் தன்னுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக உழைக்கும் மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறை, எதேச்சாதிகார, சர்வாதிகாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறது. சர்வதேசப் பதட்ட நிலையை அதிகப்படுத்துதல், ஆயுதப் போட்டியைத் தீவிரப்படுத்துதல், இராணுவ நடவடிக்கைகள் மற்றும் அணு யுத்தத்துக்கு பகிரங்கமான தயாரிப்புகள் ஏகாதிபத்தியத்தின் பிற்போக்குத் தன்மையின் மிகவும் ஆபத்தான வெளிப்பாடு ஆகும்.

ஏகாதிபத்தியத்தின் சித்தாந்தமாகிய கம்யூனிச எதிர்ப்பில் அதன் பிற்போக்கான இயல்பு மிகவும் தீவிரமாக வெளிப்படுகிறது; அது பல்வேறு வடிவங்களை மேற்கொண்டு முதலாளித்துவ உலகத்தின் ஆன்மீக வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருக்கிறது. கம்யூனிச எதிர்ப்பு பூர்ஷ்வா சித்தாந்தத்தின் சூன்யத்தை, இன்றைய சமூக வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான எத்தகைய தத்துவத்தையும் முன்வைப்பதற்கு அதன் இயலாமையை எடுத்துக்காட்டுகிறது. பொருளாதார,

சமூக மற்றும் அரசியல் எதார்த்தங்களுக்கும் பூர்ஷ்வாத் தத்துவங்களுக்கும் இடையிலுள்ள இடைவெளி மேன்மேலும் அதிகரிக்கின்ற பொழுது மார்க்சிய-லெனினியத் தத்துவத்தில், விஞ்ஞான கம்யூனிசத்தில் அக்கறை வளர்கிறது.

ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கு மற்றும் ஆக்கிரமிப்புக் கூர்முனை கூர்மையடைதல், அது மேன்மேலும் மக்கள் விரோத, மனித விரோதக் கொள்கையைக் கடைப்பிடிப்பது அதன் தோல்விக்கு அறிகுறிகளாகும். முதலாளித்துவ நாடுகளில் உழைக்கும் மக்கள் ஏகபோகங்களின் ஆட்சியை எதிர்த்து, உலக சமாதானம், ஜனநாயகம் மற்றும் சமூக விடுதலைக்காக நடத்துகின்ற போராட்டம் முதலாளித்துவ சமூகத்தின் முட்டுச் சந்துகளிலிருந்து வெளியேறுவதற்கான வரலாற்றுப் பாதையாக இருக்கிறது.

## ஏகபோகங்களுக்கு எதிராக சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்கும் ஆதரவாக

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கம் ஏகபோக முதலாளித்துவத்தை எதிர்க்கின்ற முக்கியமான சமூக சக்தி ஆகும். அது நவீன உலகத்தின் பெரிய அளவான, தொழில்நுட்ப ரீதியில் முற்போக்கான பொருளாயத உற்பத்தி அடிப்படையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது; அது ஏகாதிபத்தியக் கோட்டைகளில், உலக முதலாளித்துவ அமைப்பின் முக்கியமான கேந்திரங்களில் வர்க்கப் போராட்டத்தை நடத்துகிறது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம் பொருளாயத மதிப்புகளின் பிரதான உற்பத்தியாளனாக இருக்கிறது; ஆனால் அது உற்பத்திச் சாதனங்களை இழந்து உழைப்புச் சக்தியை விற்று வாழ்க்கை நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறது; அது கடுமையான

சுரண்டலுக்கு ஆளாகிறது; அதற்குக் கிடைக்கின்ற கூலி அதன் உழைப்பின் பலனைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறது. அதே சமயத்தில் இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் புதிய நிகழ்வுகள் தொழிலாளி வர்க்கத்தின் அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான கட்டமைப்பைக் குறிப்பிடத்தக்க முறையில் மாற்றியிருக்கின்றன. தொழிலாளி வர்க்கத்தின் மூலக்கரு தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் ஆகும். அது மிகவும் அனுபவம் உடைய, ஒற்றுமையான, ஸ்தாபன ரீதியில் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கம். உற்பத்தி அல்லாத துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொழிலாளி வர்க்கத்தின் ஆகப் பெரிய பகுதியாக இருக்கிறார்க்ள். அவர்களில் பலர் பாட்டாளி வர்க்கம் அல்லாத மக்கள் பகுதியிலிருந்து வருகிறார்கள். அவர்களுடைய வேலை, கல்வித் தரம், கூலிகள், சமூக அந்தஸ்து மற்றும் வாழ்க்கை நிலைமைகளைச் சிந்திக்கின்ற பொழுது தொழிலாளி வர்க்கத்தில் ஆகக் குறைவான வசதி பெற்றவர்களாக இருக்கிறார்கள். விவசாயத்தின் குவிப்பு மேன்மேலும் அதிகரிப்பதன் விளைவாக விவசாயத் தொழிலாளர்கள் என்ற பகுதி சுருங்கிக் கொண்டிருக்கிறது.

தொழிலாளி வர்க்கத்தின் தொழில் மற்றும் நுட்பத் திறன் கட்டமைப்பும் மாறிக் கொண்டிருக்கிறது; பெருந் திரளானவர்கள் வேலை செய்கின்ற மரபு வழிப்பட்ட தொழில்களின் (டர்னர்கள், இயந்திர ஓட்டிகள், இதரவை) பங்கு குறைந்து புதிய தொழில்களின் (கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர்கள், புரோகிராமர்கள், அட்ஜஸ்டர்கள், இதரவை) பங்கு அதிகரித்து வருகிறது. அவர்களுடைய வேலையில் உடல் உழைப்பு அதிகமில்லாததால் பூர்ஷ்வாப் புள்ளியியலாளர்கள் அவர்களை அலுவலர்களுடன் சேர்த்துக் கணக்கிட்டுத் தொழிலாளி வர்க்கம் சுருங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள்.

உழைப்பைத் தீவிரப்படுத்துதல் கூர்மையாக அதிகரித்திருக்கிறது. உச்ச அளவு தொழிற் சீரமைப்பு மற்றும் உற்பத்தி நிகழ்வுப் போக்கைத் தீவிரப்படுத்துதலின் விளைவாக தொழிலாளர்களைச் சுரண்டுதல் பேரளவில் அதிகரிக்கிறது. அது சமூகத்தில் உழைக்கும் மக்களுடைய நிலையை, அவர்களுடைய வேலை நிலைமைகளை, அன்றாட வாழ்க்கை மற்றும் சமூகப் பாதுகாப்பை மோசமான முறையில் பாதிக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தரங்கள் கீழே இறங்கிக் கொண்டிருக்கின்றன; ஏனென்றால் பணவீக்கமும் விலை உயர்வுகளும் எல்லா ரகங்களையும் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் மத்தியில் உண்மையான கூலிகள் குறையும்படி செய்திருக்கின்றன. சமூக நலப் பணிகளுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகைகள் குறைக்கப்படுகின்ற பொழுது உடைமையற்ற மக்கள் பிரிவினருடைய வாழ்க்கை அதிகமாக பாதிக்கப்படுகிறது.

ஏகபோகங்கள் வர்க்க மோதல்கள் ஏற்படக் கூடும் என்று அஞ்சுகின்றன; எனவே அவை உழைக்கும் மக்களுடைய சமூக மற்றும் அரசியல் உரிமைகளுக்கு எதிராகத் தாக்குதலை நடத்துகின்றன. ஏகபோகக் கம்பெனிகள் தமக்கு அனுகூலமான கூட்டு ஒப்பந்தங்களைச் செய்வதற்கு தொழிற்சங்கங்களை நிர்ப்பந்திக்கின்றன, சில தொழிற்சங்கங்களை வெளியேற்றுவதற்குப் பாடுபடுகின்றன, தொழிற்சாலைகளில் தொழில் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு நடவடிக்கைகளை ரத்துச் செய்கின்றன. பிரிட்டனில் கன்சர்வேடிவ் அரசாங்கம் ''வேலை வாய்ப்புகளைப்'' பற்றி நிறைவேற்றியிருக்கின்ற புதிய சட்டங்கள் தொழிற்சங்க முன்னணி ஊழியர்களையும் தெருக்களில் மறியலில் ஈடுபடுபவர்களையும் கைது செய்வதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கின்றன. தொழிற்சங்கங்கள் ''சட்ட விரோதமான வேலைநிறுத்தங்களில்'' ஈடுபட்டதாக வழக்குத் தொடர்

வதற்கும் அபராதமாகப் பெருந்தொகைகளைக் கட்டச் செய்வதற்கும் முதலாளிகளுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கு ஜெர்மனியின் ஆளும் வட்டாரங்கள் ''உள் நாட்டுப் பாதுகாப்பு'' என்ற காரணத்தைக் கூறி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்ற உரிமையைக் கட்டுப்படுத்தியிருக்கின்றன, ''தொழில்களைத் தடை செய்கின்ற'' கொள்கையைக் கண்டிப்பான முறையில் அமுல் செய்கின்றன. ''தொழில்களைத் தடை செய்வதைப்'' பற்றிய சட்டத்தின்படி கம்யூனிஸ்டுகளும் இதர ''சதிகாரர்களும்'' அரசாங்க ஊழியர்களாக, ஆசிரியர்களாக, தபால், போக்குவரத்துத் துறை மற்றும் இதரவற்றில் இருக்க முடியாது. அந்தச் சட்டத்தின்படி சுமார் 2 மில்லியன் ஆண்களும் பெண்களும் போலீஸ் நிலையங்களில் மாதந்தோறும் ஆஜராக வேண்டும். அமெரிக்கா, ஜப்பான், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் அரசாங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வது தடை செய்யப்பட்டிருக்கிறது; அவர்கள் தொழிற்சங்கங்களை அமைப்பதற்குக் கூட பெரும்பாலும் அனுமதிக்கப்படுவதில்லை. இத்தகைய நிலைமைகளின் சமூகக் காரணத்தை லெனின் பின்வருமாறு வரையறுத்தார்: ''பணத்தின் சக்தியை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில், பெருந்திரளான உழைக்கும் மக்கள் ஏழ்மையிலும் மிகச் சிலர் செல்வ போகத்திலும் இருக்கின்ற சமூகத்தில் மெய்யான, செல்தகைமையான 'சுதந்திரம்' என்பது இருக்க முடியாது.'' *

பொருளாதார நெருக்கடிகளும் உழைக்கும் மக்களுடைய உரிமைகள் மீது ஏகபோகங்களின் தாக்குதலும் வர்க்கப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியிருக்கின்றன; மேன்மேலும் அதிகமான மக்கள் அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 10, p. 48.

வேலைநிறுத்தப் போராட்டங்களின் எழுச்சி அதை தத்ரூப மாக எடுத்துக்காட்டுகிறது: **1970**க்களில் வேலைநிறுத்தங் களில் பங்கெடுத்தவர்களின் மொத்த எண்ணிக்கை 250 மில்லி யன் ஆகிவிட்டது. **1980**க்களின் ஆரம்பத்தில் வேலைநிறுத்த இயக்கம் இன்னும் அதிகமாகத் தீவிரமடைந்திருந்தது; வர்க்கப் போராட்டத்தின் ஒழுங்கமைப்புத் தரம் உயர்ந் திருக்கிறது. பிரதானமாக, தொழிலாளர்கள் மொத்த நிறு வனங்கள், கம்பெனிகள், தொழில்துறைகள், பிரதேசங்கள் மற்றும் நாடுகளின் அளவிலும் கூட தங்களுடைய நடவடிக் கைகளை ஒருங்கிணைக்கிறார்கள். இப்பொழுது வேலை நிறுத்தப் போராட்டத்தில் அதிகமான செயல்தந்திர நெகிழ்ச்சியும் பல்விதமான வடிவங்களும் முறைகளும் (வெகுஜன மறியல், தொழிற்சாலைகளை முற்றுகையிடுதல், இதரவை) காணப்படுகின்றன. ஏகபோக முதலாளி வர்க்கத் துக்கு எதிரான வர்க்கப் போராட்டங்களில் அதிக நெகிழ்ச்சி யான செயல்தந்திரம் மிகவும் பலனளிக்கிறது, உழைக்கும் மக்கள் தங்களுடைய நலன்களை இயன்ற அளவுக்கு ஆகக் குறைவான இழப்பில் தற்காத்துக் கொள்வதற்கு உதவு கிறது.

உழைக்கும் மக்களுடைய போராட்டம் மேன்மேலும் போர்க்குணம் மிக்கதாகவும் உறுதியாகவும் இருக்கிறது; உழைக்கும் மக்கள் நடத்துகின்ற எதிர்ப்பு ஊர்வலங்கள், ''போராட்ட தினங்கள்'', ''நாடு தழுவிய நடவடிக்கை தினங்கள்'' மற்றும் இதர வெகுஜன நடவடிக்கையிலிருந்து இது தெளிவாகப் புலப்படும். ஜப்பானில் உழைக்கும் மக்கள் **1965**இலிருந்தே ஆண்டுதோறும் தங்களுடைய உரிமைகளுக் காக ''வசந்தகாலத் தாக்குதல்'' மற்றும் ''இலையுதிர் காலத் தாக்குதல்'' என்னும் வடிவங்களில் இயக்கங்களை தேசிய அளவில் நடத்துகிறார்கள். பல தொழிற்சாலை களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களையும்

பொதுக் கூட்டங்களையும் வேலைநிறுத்தங்களையும் உள்ளடக்கிய இந்த இயக்கங்களில் பங்கெடுக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள தொழிற்சங்கங்கள் முதலாளிகளுடன் கூட்டு ஒப்பந்தங்களை மீண்டும் செய்வதற்கு முந்திய காலகட்டத்தில் நீண்ட கால வேலைநிறுத்தங்களை நடத்துகின்றன; இந்த ஒப்பந்தங்களில் தொழிலாளர்களின் புதிய கோரிக்கைகளைச் சேர்க்க வேண்டும் என்று கூறுகின்றன. கார், உருக்கு, எண்ணெய் மற்றும் இதர தொழில்துறைகளில் இத்தகைய தீவிரமான போராட்டங்களில் பெரும்பாலானவற்றில் தொழிலாளர்கள் வெற்றியடைந்திருக்கிறார்கள். தேசிய அளவில் நடைபெறுகின்ற இத்தகைய உக்கிரமான போராட்டங்கள் ஏகபோகங்களின் மீது மட்டுமன்றி அரசாங்கக் கொள்கை மீதும் ''கீழேயிருந்து நிர்ப்பந்தத்தைப்'' பிரயோகிக்க முடியும் என்பதைக் கடந்த கால அனுபவம் எடுத்துக்காட்டுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக வர்க்கப் போராட்டம் அதிகத் திட்டவட்டமான அரசியல் தன்மையை அடைந்திருக்கிறது. முதலாவதாக, ஆயுதப் பெருக்கம், அணு யுத்த ஆபத்து, ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு முயற்சிகள், பிற்போக்குவாதம் மற்றும் பாசிசத்துக்கு எதிராக, ஜனநாயக சக்திகள் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவாக உழைக்கும் மக்களுடைய தீவிரமான நடவடிக்கையில் அது வெளிப்படுகிறது. இரண்டாவதாக, உள்நாட்டில் அரசாங்கத்தின் பிற்போக்குக் கொள்கைகளுக்கு எதிராக, போலீஸ் அடக்குமுறைக்கும் கொடுமைகளுக்கும் எதிராக, முதலாளித்துவ சமூகத்தின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பில் தீவிரமான மாற்றங்களுக்காக உழைக்கும் மக்களுடைய நாடு தழுவிய நடவடிக்கையில் அது வெளிப்படுகிறது. உழைக்கும் மக்கள் ஜனநாயக நாட்டுடைமையாக்கல், உற்பத்தியின் மீது தொழிலாளர் கண்காணிப்பை

நிறைவேற்றுதல், உண்மையான வேலை உரிமை, ஏகபோகங் களின் சக்தியைக் குறைத்தல் மற்றும் இதர கோரிக்கைகளை முன்வைக்கின்ற பொழுது அவர்கள் இன்றைய சமூக பொருளாதார அமைப்பின் அடிப்படையான கோட்பாடுகள் சிலவற்றை மாற்றுவதற்குப் பாடுபடுகிறார்கள். தொழி லாளிக்கு எதிரான, தொழிற்சங்கங்களுக்கு எதிரான சட் டங்களை எதிர்த்து அவர்களுடைய நடவடிக்கையில் இது சிறப்பாக வெளிப்படுகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் முதிர்ச்சி மற்றும் நடவடிக்கையின் தரம் அதன் கட்சிகளின் — மார்க்சிய-லெனி னிய, சீர்திருத்தவாதக் கட்சிகள் இரண்டிலும் — நடவடிக் கையில் தெரிகிறது. கம்யூனிஸ்ட் கட்சிகள் பிரான்ஸ், இத்தாலி, போர்த்துகல் மற்றும் பின்லாந்தில் செல்வாக் குள்ள அரசியல் சக்தியாக இருக்கின்றன. ஜப்பான், ஆஸ் திரேலியா, கிரீஸ், பின்லாந்து மற்றும் ஸ்காண்டிநேவிய நாடுகளில் சோஷலிஸ்டுகள் உலக சமாதானம் மற்றும் சர்வதேசப் பதட்ட நிலைத் தணிவுக்கு சுறுசுறுப்பாகப் பாடுபடுகிறார்கள்.

உழைக்கும் மக்களில் மேன்மேலும் புதிய ரகத்தினர் — சேவைத் துறைகளைச் சேர்ந்தவர்கள், மருத்துவத் துறை யைச் சேர்ந்தவர்கள், ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்கள், குடும்பத்தலைவியர், ஓய்வு பெற்றவர்கள் — அரசு ஏகபோக அமைப்புக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தில் இழுக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே ஏகபோக ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருப்பதால், நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டிருப்பதால் இது இயற்கையானதே. அவர்கள் எல்லோரும் உலக சமாதானத்தில், ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டுவருவதில் தீவிரமாக அக்கறை கொண் டிருக்கிறார்கள். முதலாளித்துவ அமைப்பிலுள்ள பெருந்

திரளான சமூகக் குழுக்கள் அநேகமாக எல்லாமே இப்பொழுது அரசு ஏகபோக அமைப்புடன் முரண்படுகின்றன.

## ஒன்றுசேர்ந்து போராடுதல்

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் ஆட்சி செய்கின்ற சிறு பிரிவினருக்கும் மக்களின் அதிகப் பெரும்பான்மையினருக்கும் இடையிலுள்ள முரண் நிலை மிகவும் அதிகரித்துவிட்டபடியால் ஏகாதிபத்தியத்தின் சமூக அடித்தளம் அரித்தழிக்கப்பட்டு மிகவும் வேகமாகச் சுருங்கும் என்று தோன்றும். ஆனால் ஏகபோக முதலாளித்துவம் நீடிக்கிறது, தொடர்ந்து செயல்படுகிறது. இது ஏன்?

ஏகாதிபத்திய அமைப்பு பல்விதக் காரணங்களால் நீடிக்கிறது. பிரதானமாக, சமூக வர்க்க மற்றும் அரசியல் சக்திகள் இரு கோடியாகப் பிரிதல் அவ்வளவு எளிமையான அல்லது நேரடியான நிகழ்வு அல்ல. புறநிலையில் ஏகபோகங்களை எதிர்க்கின்ற வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகளுக்கு இடையில் சமூக ரீதியில் கலப்பான கட்டமைப்பினால், வித்தியாசமான பொருளாதார நலன்களினால், சித்தாந்த மற்றும் அரசியல் கருத்து வேறுபாடுகளினால், குறிப்பிட்ட அரசியல் கட்சிகளைப் பரம்பரையாக ஆதரிப்பதனால் பிளவுகள் இருக்கின்றன. ஏகபோக முதலாளி வர்க்கம் சீர்திருத்தவாதக் கொள்கைகள் மற்றும் சித்தாந்தத் தந்திரோபாயங்களின் உதவியுடன் தன்னுடைய ஆதிக்கத்துக்கு அடிப்படையைத் தருகின்ற சமூகக் கூட்டணிகளைக் கொண்ட சொந்த அமைப்பை உருவாக்குகிறது. குட்டி மற்றும் நடுத்தர முதலாளிகள் மட்டுமன்றி அறிவுப் பகுதியினர், அலுவலர்கள், ஏகபோக மூலதனத்தினால் தொடர்ச்சியாகச் சுரண்டப்படுகின்ற விவசாயிகளும் கூட ஏகபோக மூலதனத்தின் மீது இன்னும் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

மேலும் தொழிலாளி வர்க்கத்தில் பிளவுகள் இருக்கின்றன: தொழிலாளர்களில் ஒரு பகுதி கம்யூனிஸ்டுகளையும் மற்றொரு பகுதி சமூக-ஜனநாயகவாதிகளையும் ஆதரிக்கிறது; மூன்றாவது பகுதி தொழிற்சங்க நடவடிக்கைகளுடன் நின்று விடுகிறது; நான்காவது பகுதி பகிரங்கமான பிற்போக்குக் கட்சிகள் மற்றும் ஸ்தாபனங்கள் உட்பட பல்வேறு பூர்ஷ்வாக் கட்சிகளையும் ஸ்தாபனங்களையும் பின்பற்றுகிறது; ஐந்தாவது பகுதி அரசியலிலிருந்து முற்றிலும் விலகியிருக்க முடியும் என்று நம்புகிறது. இவை அனைத்தும் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியைக் கணிசமாகத் தடை செய்கின்றன; உழைக்கும் மக்களுடைய போராட்டத்தின் முனைப்பைக் குறைக்கின்றன. ஆகவே இப்பிளவுகளை ஒழித்து உழைக்கும் மக்களைப் புரட்சிகரமான அடிப்படையில் கூட்டு நடவடிக்கைக்குத் தயாரிப்பது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கத்தின் கேந்திரமான பிரச்சினையாக இருந்தது, இன்றும் அப்படியே இருக்கிறது. தொழிலாளி வர்க்கம் தன்னுடைய சொந்த அணிகளை ஒற்றுமைப்படுத்துவதன் மூலமாக மட்டுமே ஒரு ஜனநாயகப் பெரும்பான்மையைத் திரட்டி அரசு ஏகபோக முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் மெய்யாகவே பெரும்பான்மையான சக்திகளை ஈடுபடுத்த முடியும்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் தொலைக்காட்சிகளைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த நிலைகளிலிருந்துதான் பார்க்கின்றன. சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவம், புதிய வரலாற்று நிலைமைகளில், வர்க்கப் போராட்டத்தின் புதிய அனுபவத்தின் ஒளியில் புரட்சிகரத் தத்துவத்தைப் படைப்பாற்றலுடன் வளர்த்தல் அவற்றின் நடவடிக்கைகளுக்குத் தத்துவ அடிப்படையைக் கொடுக்கின்றன.

மிகவும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் சோஷலிசத்துக்கு மாறுவதற்கு அவசியமான பொருளாயத முன்நிபந்தனைகள் முதிர்ச்சியடைந்திருந்தாலும் அங்கே புரட்சியின் பாதையில் பல இடர்கள் இருப்பதை லெனின் முன்னறிந்து கூறினார். அந்த நாடுகளின் உழைக்கும் மக்களுக்கு முன்னால் அதிகச் சக்தி வாய்ந்த, மிகவும் சிறந்த முறையில் ஸ்தாபன ரீதியாக ஒழுங்கமைந்த, அதிக மான அனுபவமுள்ள முதலாளி வர்க்கம் இருப்பதை அவர் உணர்ந்தார்.* அதனால்தான் ஏகபோக முதலாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை ஒழித்தலும் சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றுவதும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தை எதிரிடுகின்ற ஆகக் கடினமான கடமையாகும். புரட்சிகரப் போராட்டத்தின் செயல்திட்டம் மற்றும் செயல்தந்திரத்தை விரித்துரைக்கின்ற பொழுது படைப்பு ரீதியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும்படி லெனின் வற்புறுத்தினார். ''மெய்யான, தீர்மானகரமான, இறுதியான, மாபெரும் புரட்சிப் போராட்டத்துக்கு வெகுஜனங்களை அழைத்துச் செல்லக் கூடிய பிரத்யேகப் பாதையை அல்லது நிகழ்ச்சிகளின் குறிப்பிட்ட திருப்பத்தைத் தேடி, கண்டறிந்து, பிழையின்றி நிர்ணயம் செய்யும் ஆற்றல் பெறுவதே—மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இன்று கம்யூனிசத்தின் தலையாய குறிக்கோள்'' என்று லெனின் கூறினார்.**

லெனின் சோஷலிஸ்ட் புரட்சியை ஆயுதந்தாங்கிய புரட்சிகர எழுச்சியுடன் ஒருபோதும் இனங்காணவில்லை. அவர் சோஷலிசத்துக்கு மாறுகின்ற பல்விதமான வடிவங்களைச் சுட்டிக்காட்டினார், புரட்சிக்கும் சீர்திருத்தங்களுக்

* V. I. Lenin, *Collected Works*, vol. 27, p. 547 பார்க்க.

** வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி *10*, பக்கம் *312*.

கும் இடையிலுள்ள இடைத் தொடர்பைப் பார்க்குமாறு போதித்தார். அவர் வலதுசாரி சீர்திருத்தவாதிகளுக்கு எதிராக உறுதியான நிலை எடுத்து சீர்திருத்தங்களுக்கும் புரட்சிக்கும் இடையிலான எதிர்நிலையை, குணரீதியான வேறுபாட்டை வலியுறுத்தினார். ''சீர்திருத்தங்கள் தன்னுடைய ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்கின்ற ஆளும் வர்க்கத்திடமிருந்து பெறுகின்ற சலுகைகள்; அந்த ஆளும் வர்க்கத்தைத் தூக்கியெறிதல் புரட்சி ஆகும்.''* ஆனால் லெனின் இக்கருதுகோளைத் தனிமுதலாக்கிவிடவில்லை. சீர்திருத்தத்துக்கும் புரட்சிக்கும் இடையிலுள்ள குணரீதியான வேறுபாட்டை எடுத்துக்காட்டுகின்ற பொழுது அவர் பின்வருமாறு எழுதினார்: ''இந்த எதிர்நிலையை நினைவிலிறுத்தத் தவறுதல், இந்த இரண்டு கருதுகோள்களையும் பிரிக்கின்ற கோட்டை நினைவிலிறுத்தத் தவறுதல் எல்லா வரலாற்று விவாதங்களிலும் மிகவும் மோசமான தவறுகளைச் செய்வதற்கு நம்மைத் தொடர்ச்சியாக இட்டுச் செல்கிறது. ஆனால் இந்த எதிர்நிலை தனிமுதலான ஒன்று அல்ல, அந்தப் பிரிவினைக் கோடு ஜீவனில்லாதது அல்ல. ஆனால் அது உயிருடன் இருக்கிறது, மாறிக்கொண்டிருக்கிறது, ஒருவர் ஒவ்வொரு குறிப்பிட்ட இனத்திலும் அதை வரையறுக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.''** மார்க்சியம் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்துவதில்லை, அவற்றை முற்றிலும் நிராகரிப்பதும் இல்லை. வலதுசாரி சீர்திருத்தவாதிகளைக் குறை கூறிய லெனின் ஒரு புரட்சிக்கு அவசியமான முன்நிபந்தனைகள் முதிர்ச்சி அடைந்திருக்கின்றனவா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் சமூக மாற்றத்தின் ''புரட்சிகர வடிவங்

* V. I. Lenin, *Collected Works*, vol. 29, p. 515.

** V. I. Lenin, *Collected Works*, vol. 17, pp. 115–116.

களை'' மட்டுமே அங்கீகரித்த இடதுசாரி சந்தார்ப்பவாதிகளுக்கு எதிராகவும் அதே அளவுக்கு உறுதியான நிலை எடுத்தார்.

சீர்திருத்தங்கள் இரட்டை விளைவை ஏற்படுத்தக் கூடும் என்பதை உழைக்கும் மக்களுடைய போராட்டத்தின் வரலாறு எடுத்துக்காட்டுகிறது: அவை புரட்சிகரமான மாற்றங்களுக்கு மாறிப் போகின்ற செயல்முறையை மெதுவாக்க முடியும் அல்லது வேகப்படுத்த முடியும். சீர்திருத்தங்களின் ஆழமும் சமூக விளைவுகளும் ஆளும் வர்க்கம் இருக்கின்ற அமைப்பைப் பாதுகாப்பதற்காக அச்சீர்திருத்தங்களை நிறைவேற்றுகிறதா அல்லது உழைக்கும் மக்களின் நிர்ப்பந்தத்தினால் அவை நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைப் பொறுத்திருக்கின்றன. முதலாவதாக, ஆளும் வர்க்கம் தொழிலாளர் இயக்கத்தைத் தாக்குவதற்கு சீர்திருத்தங்களை உபயோகிக்கிறது. இரண்டாவதாக, சீர்திருத்தங்கள் ஜனநாயகத் தன்மை கொண்டவை; ஏனென்றால் அவை தொழிலாளர் இயக்கத்தில் சக்திமிக்க எழுச்சியின் விளைவாக அல்லது ஆளும் வர்க்கங்களின் பகிரங்கமான எதிர்ப்பையும் மீறிக் ''கீழேயிருந்து வருகின்ற நிர்ப்பந்தத்தின்'' விளைவாக நடைபெறுகின்றன. கம்யூனிஸ்ட் கட்சிகள் இத்தகைய சீர்திருத்தங்களை உழைக்கும் மக்களுடைய இறுதி இலட்சியங்களுக்கான போராட்டத்தில் இடைநிலைக் கட்டங்களாக, பெருந்திரளான மக்களைப் புரட்சிகரமான மாற்றங்களுக்கு இட்டுச் செல்கின்ற வழியாகப் பார்க்கின்றன.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் அரசியல் வாழ்க்கையில் பரந்த ஜனநாயக இயக்கம் ஒரு கூறாக இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் இந்த நாடுகளின் அரசியல் வாழ்க்கையின் பிரத்யேகத் தன்மைகளை — ஜனநாயக மற்றும் நாடாளுமன்ற மரபுகள் மீது மக்களுடைய நம்பிக்கை, பல கட்சி அமைப்பு நிலவுதல், ஆளும் கட்சியும்

எதிர்க்கட்சியும் இருத்தல், இதரவை — கணக்கிலெடுத்துக் கொள்கிறார்கள். இந்த நாடுகளில் உழைக்கும் மக்கள் நீண்ட காலம் உறுதியாகப் போராடி ஜனநாயக உரிமை களை வென்றெடுத்திருக்கிறார்கள்; ஏகபோகங்களின் அத்து மீறல்களை எதிர்த்து இந்த சாதனைகளைப் பாதுகாப்பது ஜனநாயக இயக்கத்தின் முக்கியமான கடமைகளில் ஒன்று என்பதை நினைவிலிறுத்த வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சிகள் பூர்ஷ்வா ஜனநாயக சுதந்திரங்களை ஆதரிக்கின்ற பொழுது ஏகபோக முதலாளி வர்க்கத்தின் சக்தியைக் குறைத்து பிறகு அந்த வர்க்கத்தை அதிகாரத்திலிருந்து முற்றிலும் ஒழிப்பதன் மூலம் ஜனநாயகத்தின் புதிய மற்றும் உயர்ந்த கட்டத்துக்கு முன்னேறுவதற்கு அவற்றை ஒரு சாத்தியமாகக் கருது கின்றன.

கம்யூனிஸ்ட் கட்சிகள் ஜனநாயகப் புரட்சியின் இத்தகைய தொலைக்காட்சிகளைப் பற்றிய மதிப்பீட்டின் அடிப்படை யில் வாக்காளர்களில் பெரும்பான்மையினரைத் தொழி லாளி வர்க்கம் மற்றும் அதன் கூட்டாளிகளின் தரப்புக்கு வென்றெடுத்து, சமாதான பூர்வமான, நாடாளுமன்ற முறை யில் சோஷலிசத்துக்கு மாறுவதைப் பற்றிய கருதுகோளைத் தம்முடைய கொள்கை ஆவணங்களில் சேர்த்திருக்கின்றன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள பல கம்யூனிஸ்ட் கட்சிகள் 1970க்களிலும் 1980க்களின் ஆரம்பத் திலும் முன்வைத்த ''ஆக்க பூர்வமான நடவடிக்கையின்'' செயல்திட்டங்களில் இந்த அரசியல் கொள்கைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. கம்யூனிஸ்டுகள் ஒவ்வொரு நாட்டின் நிலைமையையும் கணக்கிலெடுத்துக் கொண்டு ஜனநாயக நாட்டுடைமையாக்கல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குரிய ஜனநாயக செயல்திட்டத்தை, பொரு ளாதார நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பரந்த அளவில் பங்கெடுப்பதை, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கு

வதற்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கும் அவசரமான விசேஷ நடவடிக்கைகளை, உழைக்கும் மக்களுக்குச் சாதகமான முறையில் தேசிய வருமானத்தை மறுபங்கீடு செய்வதைக் கோருகின்றனர். கல்வி அமைப்பு, சுகாதார அமைப்பு, செய்தி காட்சி சாதனங்கள் ஆகியவற்றை ஜனநாயக ரீதியில் திருத்தியமைத்தல், லஞ்ச ஊழல், குற்றச் செயல்கள், பயங்கரவாதம், போதை மருந்துகள் மற்றும் இன வேற்றுமைக்கு எதிரான போராட்டம் ஆகியவை பற்றிய ஸ்தூலமான பிரேரணைகள் இச்செயல் திட்டங்களில் இடம் பெற்றிருக்கின்றன. இச்செயல்திட்டங்களில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளும் பிரேரணைகளும் பெரும்பான்மையான சமூகக் குழுக்கள் மற்றும் மக்கள் பிரிவுகளின் நலன்களுக்கு ஏற்றவையாக இருப்பதால் அவை கூட்டு நடவடிக்கைக்கு அடிப்படையாக அமைகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசியல், ஸ்தாபன மற்றும் நடைமுறை நடவடிக்கை மிகவும் அவசியம். கம்யூனிஸ்டுகள் பங்கெடுக்கின்ற கூட்டு அரசாங்கங்களில், அவர்கள் தலைமை ஏற்றிருக்கின்ற நகர்மன்ற, மற்ற ஸ்தல அமைப்புகளில் இச்செயல் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. கம்யூனிஸ்டுகள் தம்முடைய அதிகாரச் சுற்றுவட்டத்திற்குள் ஜனநாயக மாற்றங்களை நிறைவேற்றுவதன் மூலம் உற்பத்தி வளர்ச்சிக்கு — மனிதனுடைய வளர்ச்சிக்கும் கூட — உருவாகியுள்ள புதிய வாய்ப்புகளுடன் முதலாளித்துவ உறவுகள் இனிமேல் பொருந்தாமலிருப்பதை எடுத்துக்காட்டி சோஷலிசத்துக்கு மாற வேண்டிய அவசியத்தை விளக்குகிறார்கள்.

## அத்தியாயம் பதினொன்று

# ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய சுதந்திரமும் சமூக விடுதலையும்

### சுதந்திரம் மற்றும் அரசுரிமைக்காக

நம்முடைய சகாப்தத்தில் உலகத்தின் சமூகப் புத்தாக்கம் முதலாளித்துவ ஒடுக்குமுறையை, ஏகாதிபத்தியப் பிற்போக்குவாதத்தின் மக்கள் விரோதக் கொள்கையை எதிர்க்கின்ற பெருந்திரளான மக்களால் நிறைவேற்றப்படுகிறது.
தேசிய விடுதலைக்க ... த்தை எதிர்த்து நடை
... பருந்திரளான புரட்சி
... ஆசியா, ஆப்பிரிக்கா
... சர்ந்த கோடிக்கணக்

... க்கத்தின் வெற்றிகள்
கம் ... வுதலுடன் பின்னிப்
திலும் ... மனிதனை மனிதன்
செயல்திட் ... சில தேசிய இனங்
கொள்ளப்பட் ... ண்டுகின்ற தேசிய
நாட்டின் நிலை ... றது. இருபதாம்
ஜனநாயக நாட்டுண் ... மக்களில் அதிக
வளர்ச்சிக்குரிய ஜனந ... ‘முன்னேறிய’
ளாதார நிர்வாகத்தில் தெ ... ம் நிதித் துறை
பங்கெடுப்பதை, புதிய வேலை ... ாக முதலாளித்

துவம் வளர்ந்து விட்டது''* என்று லெனின் எழுதினார். உலகம் ஒரு சில ஒடுக்குமுறை நாடுகள், பெரும்பான்மை யான காலனி மற்றும் சுரண்டப்படுகின்ற நாடுகள் என்று பிரிக்கப்பட்டிருத்தல் ஏகாதிபத்தியத்தின் முக்கியமான கூறு களில் ஒன்றாகும்.

மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டம் வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாக வளர்ச்சி யடைந்திருக்கிறது. காலனி மற்றும் சார்பு நாடுகள் ஏகாதி பத்திய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை அடைவது உலக ரீதியில் சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடை யில் சக்திகளின் நிலவரத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது. தேசிய விடுதலை இயக்கம் ஏகாதிபத்தியக் காலனியாதிக்க அமைப்பு தகர்வதற்கும், பல இளம் தேசிய அரசுகளைக் கொண்ட பெரிய குழு அமைவதற்கும் வழிவகுத்தது. அந்த நாடுகளைச் சேர்ந்த மக்களினங்கள் தேசிய அரசுரிமையைப் பெற்றது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மாபெரும் வெற்றி; அது தேசிய விடுதலைப் புரட்சிகளின் முதல் கட்டம் முடிவடைந்ததைக் குறித்தது. காலனி நாடுகளைச் சேர்ந்த மக்களினங்கள் அரசியல் சுதந்திரத்தை வென்றதன் விளை வாக அவை முக்கியமான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி என்ற முறையில் அரசியல் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுக்க முடிந்தது.

ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த மக்களினங்கள் காலனியாதிக்க ஒடுக்குமுறை யிலிருந்து விடுதலை அடைந்ததன் விளைவாகப் பல யுகங் களாக மக்களிடம் நிலவிய பின்தங்கிய நிலைமை மற்றும் வறுமையை ஒழிப்பதற்கு, நிலப்பிரபுத்துவ மற்றும் அரை நிலப்பிரபுத்துவச் செயல்முறைகளை ஒழிப்பதற்கு, ஏகாதி

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 4, பக்கம் 43.

## அத்தியாயம் பதினொன்று

# ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் தேசிய சுதந்திரமும் சமூக விடுதலையும்

### சுதந்திரம் மற்றும் அரசுரிமைக்காக

நம்முடைய சகாப்தத்தில் உலகத்தின் சமூகப் புத்தாக்கம் முதலாளித்துவ ஒடுக்குமுறையை, ஏகாதிபத்தியப் பிற்போக்குவாதத்தின் மக்கள் விரோதக் கொள்கையை எதிர்க்கின்ற பெருந்திரளான மக்களால் நிறைவேற்றப்படுகிறது. தேசிய விடுதலைக்காக, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெறுகின்ற போராட்டம் மிகவும் பெருந்திரளான புரட்சி இயக்கங்களில் ஒன்றாகும். அதில் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த கோடிக்கணக்கான மக்கள் பங்கெடுக்கிறார்கள்.

நம் காலத்தில் தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றிகள் உலகத்தில் சோஷலிஸ்ட் கருத்துகள் பரவுதலுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. முதலாளித்துவம் மனிதனை மனிதன் சுரண்டுகின்ற அமைப்பு மட்டுமல்ல; அது சில தேசிய இனங்கள் மற்ற தேசிய இனங்களைச் சுரண்டுகின்ற தேசிய ஒடுக்குமுறை அமைப்பாகவும் இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ''உலக மக்களில் அதிகமான பெரும்பான்மையினரை ஒரு சில 'முன்னேறிய' நாடுகள் காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கும் நிதித் துறை நசுக்குதலுக்கும் உள்ளாக்கும் உலக அமைப்பாக முதலாளித்

துவம் வளர்ந்து விட்டது'' * என்று லெனின் எழுதினார். உலகம் ஒரு சில ஒடுக்குமுறை நாடுகள், பெரும்பான்மை யான காலனி மற்றும் சுரண்டப்படுகின்ற நாடுகள் என்று பிரிக்கப்பட்டிருத்தல் ஏகாதிபத்தியத்தின் முக்கியமான கூறு களில் ஒன்றாகும்.

மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டம் வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாக வளர்ச்சி யடைந்திருக்கிறது. காலனி மற்றும் சார்பு நாடுகள் ஏகாதி பத்திய ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை அடைவது உலக ரீதியில் சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடை யில் சக்திகளின் நிலவரத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது. தேசிய விடுதலை இயக்கம் ஏகாதிபத்தியக் காலனியாதிக்க அமைப்பு தகர்வதற்கும், பல இளம் தேசிய அரசுகளைக் கொண்ட பெரிய குழு அமைவதற்கும் வழிவகுத்தது. அந்த நாடுகளைச் சேர்ந்த மக்களினங்கள் தேசிய அரசுரிமையைப் பெற்றது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மாபெரும் வெற்றி; அது தேசிய விடுதலைப் புரட்சிகளின் முதல் கட்டம் முடிவடைந்ததைக் குறித்தது. காலனி நாடுகளைச் சேர்ந்த மக்களினங்கள் அரசியல் சுதந்திரத்தை வென்றதன் விளை வாக அவை முக்கியமான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி என்ற முறையில் அரசியல் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுக்க முடிந்தது.

ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த மக்களினங்கள் காலனியாதிக்க ஒடுக்குமுறை யிலிருந்து விடுதலை அடைந்ததன் விளைவாகப் பல யுகங் களாக மக்களிடம் நிலவிய பின்தங்கிய நிலைமை மற்றும் வறுமையை ஒழிப்பதற்கு, நிலப்பிரபுத்துவ மற்றும் அரை நிலப்பிரபுத்துவச் செயல்முறைகளை ஒழிப்பதற்கு, ஏகாதி

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 4, பக்கம் 43.

பத்தியத்தின் பொருளாதார ஆதிக்கத்திற்கு முடிவு கட்டு வதற்கு அவசியமான சமூக, பொருளாதார மாற்றங்களை நிறைவேற்றுதல் சாத்தியமாயிற்று. பல நாடுகளில் இந்தப் பிரச்சினைகள் சுரண்டலின் எல்லா வடிவங்களையும் ஒழிப் பதை நோக்கமாகக் கொண்ட புரட்சிகர ஜனநாயக செயல் திட்டங்களின் அடிப்படையில் தீர்க்கப்பட்டு வருகின்றன. புதிதாக விடுதலையடைந்த நாடுகள் உண்மையான சுதந் திரத்தையும் சோஷலிச மாற்றத் திசைவழியில் சர்வாம்ச வளர்ச்சியையும் அடைவதற்குப் பாடுபடுதல் இன்றைய தேசிய விடுதலை இயக்கத்தின் முற்போக்கான போக்கின் வெளிப்பாடு ஆகும்.

புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளின் பிரத்யேகமான கூறுகள் எவை? அவற்றின் வெளிநாட்டுக் கொள்கை நோக்கங்கள் புறநிலையில் உலக சோஷலிச அமைப்பின் நோக்கங்களுடன், பிரதானமாக, ஏகாதிபுத்தியத்துக்கு எதிரான போராட்டத் தில், காலனியாதிக்கத்தை முற்றாக ஒழிப்பதில், நாடுகளுக்கு இடையில் சமாதானமும் நட்புறவும் நிலவச் செய்வதில் பொருந்துகின்றன. சோஷலிச நாடுகளும் புதிதாக விடுதலை யடைந்த அரசுகளும் சமத்துவ, தோழமையான நட்புறவு களை அமைத்துக் கொண்டுள்ளன.

எனினும் இந்த அரசுகள் பொருளாதார ரீதியில் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சுற்றுவட்டத்திற்குள் இருக்கின்றன. அவை நியாயப்படுத்த முடியாத, கீழ் நிலை யில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏகாதிபத்திய அரசுகளுக்கும் முந்திய காலனிகளுக்கும் இடையில் பொருளாதார வளர்ச்சி மட்டங்களில் மிகவும் அதிகமான இடைவெளி இன்னும் இருக்கிறது. ஏகாதிபத்தியவாதிகள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் டஜன்கணக்கான மக் களினங்களை இன்னும் கொள்ளையடித்துக் கொண்டிருக்

கிறார்கள்; ஆண்டுதோறும் பில்லியன்கணக்கான டாலர்கள் மதிப்பைக் கொண்ட செல்வத்தைத் தங்கள் நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சுரண்டலுக்கு முடிவு கட்ட வேண்டுமென்றால் வளர்முக நாடுகள் பொரு ளாதார சுதந்திரத்தைப் பெறுவதில் வெற்றியடைய வேண்டும். அது இல்லையென்றால் அவை அரசுரிமையை அல்லது தேசிய மறுவாழ்வை ஒருபோதும் அடைய முடியாது. அதனால்தான் பொருளாதார சுதந்திரத்துக்கும் ஆழமான சமூக மாற்றங்களுக்கும் போராடுதல் தேசிய விடுதலைப் புரட்சிகளின் வளர்ச்சியில் இன்றைய கட்டத்தின் உள்ளடக்க மாக இருக்கிறது.

இக்கொள்கையை நிறைவேற்றுதல் ஏகாதிபத்தியத்தின் புதிய காலனியாதிக்கக் கொள்கையினால் தடுக்கப்படுகிறது. அது நேரடியாக ஆக்கிரமித்தல், இராணுவக் கூட்டணி களை அமைத்தல், அரசியல்வாதிகளுக்கு லஞ்சமளித்தல், தனக்கு விரும்பத்தகாத அரசாங்கங்களை எதிர்த்து சதிகளை யும் திடீர்ப் புரட்சிகளையும் கூட நடத்துதல் ஆகிய பல்வேறு முறைகளைப் பயன்படுத்துகிறது. வளர்முக நாடு களை ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் சுற்றுவட்டத்திற்குள் வைத்திருத்தல், அவற்றின் சமூக மற்றும் கலாசார முன் னேற்றத்தைக் குறைத்தல், மெய்யான தேசிய சுதந்திரத்தை நோக்கி முன்னேறுவதைத் தாமதப்படுத்துதல் என்னும் புதிய காலனியாதிக்கக் கொள்கையின் உள்ளடக்கம் மாறாமல் இருக்கிறது.

ஏகாதிபத்தியம் வளர்முக நாடுகளின் பொருளாதார ரீதியில் சார்புத் தன்மையை நிரந்தரப்படுத்துவதற்கு முயற்சிப்பது மட்டுமன்றி அவற்றுக்குள்ளே முதலாளித்துவ உறவுகளை வலுப்படுத்துவதற்குப் பாடுபடுகிறது. ஏகாதி பத்திய அரசுகள் இச்செயல்களைத் தனித்தனியாகவும் கூட்டாகவும் நிறைவேற்றி வருகின்றன. ஐரோப்பியப்

பொதுச் சந்தையைச் சேர்ந்த அரசுகள் 54 வளர்முக அரசு களுடன் வைத்திருக்கின்ற உறவு புதிய காலனியாதிக்கம் கடைப்பிடிக்கின்ற கூட்டுக் கொள்கைக்கு ஒரு உதாரணமா கும். ஏகாதிபத்தியக் கூட்டாளிகள் இந்த உறவின் மூலம் வளர்முக நாடுகளை ஐரோப்பியப் பொதுச் சந்தையுடன் இன்னும் நெருக்கமாகப் பிணைப்பதற்கு, அதன் மூலம் இந்த நாடுகளில் சார்புப் பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதில் தீர்மானகரமான தாக்கத்தைச் செலுத்து வதற்கு விரும்புகிறார்கள்.

சுதந்திரம் கிடைத்த சில பத்தாண்டுகளுக்குப் பிறகும் கூட முதலாளித்துவப் பொருளாதார அமைப்பிற்குள் நீடிக்கின்ற பெரும்பான்மையான முந்திய காலனிகள் மற்றும் அரைக் காலனிகளின் நிலையில் முக்கியமான சமூக, பொருளாதார முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதைப் புள்ளி விவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் வளர்முக நாடுகளில் சீர்கேடடைகின்ற நிலைமையே ஏகாதிபத்தியம் மற்றும் புதிய காலனியாதிக்கத்துக்கு எதிராக அவற்றின் போராட்டத்தைத் தூண்டுகிறது. ஏகாதிபத்திய நிலை களைத் தாக்குவதற்கும் தங்களுடைய பொருளாதார சுதந் திரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்கும் அவற்றின் அரசியல் அரசுரிமை மற்றும் சாதகமான சர்வதேசச் சூழ்நிலையை வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதை அந்த நாடுகள் தம்முடைய சொந்த அனுபவத்திலிருந்து புரிந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, 1970க்கள் ''எண்ணெய் விலைகளில் புரட்சிக்'' காலகட்டம் என்று சொல்லப்படுகின்றன. அது எண்ணெய் உற்பத்தி செய்கின்ற வளர்முக நாடுகளின் கூட்டு நடவடிக்கையின் விளைவு ஆகும். இந்த நாடுகளின் அனுபவத்தைப் பயன்படுத்தி உலகச் சந்தைக்குக் கனிய மற்றும் விவசாய மூலப்பொருட் களில் முக்கியமான ரகங்களை அளிக்கின்ற மற்ற வளர்முக

நாடுகள் தங்களுடைய கோரிக்கைகளை இன்னும் தீவிரமான முறையில் வெளியிட்டன. தலைமையான ஏகாதிபத்திய நாடுகள் மூலப்பொருள் இறக்குமதிகளை நம்பியிருப்பதால் அதை ஏற்றுமதி செய்கின்ற நாடுகள் கனிய மூலப் பொருட்களை வெட்டிக் கொணர்தலில் புதிய விகிதங்கள், விலை உயர்வு, கனிய இருப்புக்களையும் புறச்சூழலையும் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் ஆகியவற்றை வலி யுறுத்துகின்றன. வளர்முக நாடுகள் இத்தகைய முறைகளின் மூலம் புதிய சர்வதேசப் பொருளாதார அமைப்பிற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன.

சோஷலிச நாடுகள் சர்வதேசப் பொருளாதார உறவு களை ஜனநாயக அடிப்படையில் திருத்தியமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதற்காகப் போராடிக் கொண்டிருக் கின்றன. அவை வளர்முக நாடுகளுடன் நியாயமான பொருளாதார உறவுகளை நிறுவியிருக்கின்றன; அந்த நாடு களின் பொருளாதார வளர்ச்சி நலன்களுக்கு அவை உதவு கின்றன. பரஸ்பரம் சாதகமான வர்த்தகத்தைத் தவிர புதிதாக விடுதலையடைந்த அரசுகள் தம்முடைய தேசியப் பொருளாதாரத்தில் கேந்திரமான துறைகளை வளர்த்துக் கொள்வதற்கு சோஷலிச நாடுகள் கணிசமான உதவியையும் கொடுக்கின்றன. உதாரணமாக, 1980க்களின் ஆரம்பத்தில் சிஎம்இஏ நாடுகள் 92 வளர்முக நாடுகளுக்குப் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவி அளித்தன; சுமார் 5,000 நிலையங்களை நிர்மாணிப்பதற்கு உதவி செய்திருக்கின்றன. அவற்றில் பாதிக்கு மேற்பட்ட நிலையங்கள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. வளர்முக நாடுகள் சோஷலிச முகாமின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை அரித்தழிப் பதற்கு பூர்ஷ்வா சித்தாந்திகள் பாடுபடுகிறார்கள். அவர்கள் ஏகாதிபத்தியத்துக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையில் நிலவுகின்ற முரண்பாடுகளை, உலகத்தை ''செல்வம் கொழிக்

கின்ற வடக்கு'', ''வறுமையில் வாடுகின்ற தெற்கு'' என்று பிரிப்பதன் மூலம் விளக்குவதற்கு முயல்கிறார்கள். புதிதாக விடுதலையடைந்த மக்களினங்களுக்கு ஏற்பட்டுள்ள பொரு ளாதாரக் கஷ்டங்களுக்குப் பொறுப்பை சோஷலிச முகா மைச் சேர்ந்த நாடுகளின் மீது சுமத்துவது, ஏகாதிபத்தியச் சுரண்டல் என்னும் சர்வதேச அமைப்பில் இந்த நாடுகளைக் கூட்டாளிகளாக்குவது இந்த சித்தாந்தத் தந்திரத்தின் அரசியல் அர்த்தமாகும். ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளைப் பிரிப்பது இத்தகைய சித்தாந்தச் சீர்குலைவு நடவடிக்கை களின் நோக்கம். சில நாடுகளை மற்ற நாடுகளுடன் மோதவிடுதல் ஏகாதிபத்தியவாதிகள் வாடிக்கையாக உப யோகிக்கின்ற தந்திரம். அவர்கள் வெற்றியடைகின்ற பொழுது தேசிய நலன்களுக்காக வளர்முக நாடுகள் நடத்து கின்ற போராட்டம் கணிசமாக பாதிக்கப்படுகிறது. அதனால்தான் சர்வதேசப் பிற்போக்குவாதத்தின் பிரிவி னைச் சூழ்ச்சியை அம்பலப்படுத்துவதன் மூலம் முற்போக்கு சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு அடிப்படையில் வளர்முக மற்றும் சோஷலிச நாடுகளின் ஒருமைப்பாட்டை வலுப் படுத்துகின்றன.

கூட்டுச் சேரா நாடுகளின் இயக்கம் வளர்முக நாடுகளை வலுப்படுத்துவதற்கு உதவுகிறது. கூட்டுச் சேரா இயக்கம் விடுதலையடைந்த நாடுகளின் பெரிய சர்வதேச ஜனநாயகக் கூட்டமைப்பாக இருக்கிறது. அந்த இயக்கத்தில் சுமார் 100 அரசுகள் பங்கெடுக்கின்றன; அந்த நாடுகளின் மொத்த மக்கள்தொகை 1.5 பில்லியனுக்கும் அதிகம். இந்த இயக்கத் தின் முக்கியமான கோட்பாடுகள் அதன் கொள்கை ஆவணங் களில் வெளியிடப்படுகின்றன. இராணுவ அரசியல் கூட்டணி களில் பங்கெடுக்காதிருத்தல், உலக சமாதானத்துக்கும் சர்வதேசப் பாதுகாப்புக்கும் ஆதரவாக, ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் மற்றும் புதிய காலனியாதிக்கத்தை

எதிர்த்துப் போராடுதல் ஆகியவை இந்தக் கோட்பாடு களாகும். நம் காலத்தின் ஜீவாதாரமான பிரச்சினைகளைப் பற்றி, ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நியாயமான, நிரந்தர சமாதானத்தை ஆதரிக்கின்ற போராட்டத்தின் பிரச்சினை களைப் பற்றி சோஷலிச முகாமைச் சேர்ந்த நாடுகளும் கூட்டுச் சேரா நாடுகளும் முற்றிலும் ஒத்த அல்லது பெரும்பான்மையும் ஒத்திருக்கின்ற நிலையைக் கடைப்பிடிக் கின்றன.

### தலைமை தாங்குவது யார்?

நம் சகாப்தத்தின் தேசிய விடுதலைப் புரட்சிகளுக்கு முன் னால் இரண்டு கடமைகள் இருக்கின்றன: முதலாவதாக, காலனியாதிக்கம், நிலப்பிரபுத்துவ மற்றும் நிலப்பிரபுத் துவத்துக்கு முந்திய கட்டமைப்புகள், காலனியாதிக்கவாதி கள் விட்டுச் சென்றிருக்கின்ற நிர்வாக இயந்திரம் ஆகியவற்றை ஒழித்தல்; தேசிய இன, குலமரபு மற்றும் சமயப் பிணக்குகளை அகற்றுதல் — அதாவது புரட்சியின் ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றுதல். இரண்டா வதாக, நவீன உற்பத்தியின் விரைவான வளர்ச்சி, கலாசார முன்னேற்றம், சமூக வேற்றுமைகளை அகற்றுதல் ஆகியவற்றுக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்குதல், தனியுடைமை மற்றும் மனிதனை மனிதன் சுரண்டலற்ற சமூக உறவுகளுக்கு மாறுதலை நிறைவேற்றுதல் — அதாவது புரட்சியின் சோஷலிஸ்ட் கடமைகளை நிறைவேற்றுதல்.

ஆகவே தேசிய விடுதலைப் புரட்சிகள் காலனி, சார்பு நாடுகள் மற்றும் ஒடுக்கப்பட்டிருக்கின்ற எல்லா மக்களினங்களும் ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து விடுதலை யடைகின்ற, தேசிய சுயநிர்ணயத்திற்காகப் போராடுகின்ற,

புதிதாகப் பெற்ற அரசுரிமையை சமூக, பொருளாதார மாற்றங்களை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்துகின்ற வரலாற்றுச் செயல்முறை ஆகும். இப்புரட்சிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத் தன்மை கொண்டவை. அவை வளர்ச்சியடைகின்ற பொழுது இரண்டு எதிர்ப்போக்குகள் — அதிக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ உறவுகளுக்கு அல்லது சோஷலிஸ்ட் உறவுகளுக்கு மாறுதல் — ஏற்படுகின்றன.

ஒரு நாடு எந்த வழியைத் தேர்ந்தெடுக்கிறது என்பது சர்வதேசப் பின்னணியையும் அந்த நாட்டில் உள்ள வர்க்க, சமூக மற்றும் அரசியல் சக்திகளின் பரஸ்பர பலத்தையும் பொறுத்திருக்கிறது. ஒவ்வொரு வளர்முக நாட்டிலும் உள்ள மக்கள்தொகையின் சமூக வர்க்கக் கட்டமைப்பின் பிரத்யேகத் தன்மைகள் புரட்சியின் இயக்கு சக்திகளின் கட்டமைப்பையும் இயல்பையும் நிர்ணயிக்கின்றன.

உதாரணமாக, லத்தீன் அமெரிக்காவில் பெரும்பான்மையான நாடுகள் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசியல் சுதந்திரம் பெற்றன; ஆனால் அவை வெகு சீக்கிரத்தில் பிரதானமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார மற்றும் அரசியல் ஆதிக்கத்தில் சிக்கின. எனினும் லத்தீன் அமெரிக்க நாடுகள் ஒப்பீட்டளவில் உயர்ந்த பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியைக் கொண்டிருக்கின்றன. இந்த நாடுகளில் நகர மற்றும் கிராமப் பாட்டாளி வர்க்கம் அதிக எண்ணிக்கையில் இருக்கிறது; அது மேன்மேலும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இந்த நாடுகளின் பலனுள்ள உழைப்பில் ஈடுபட்டுள்ள மக்கள் தொகையில் அது கால் பங்கு அல்லது அதற்கும் கூடுதலாக இருக்கிறது. மக்கள்தொகையில் பாதி அளவில் இருக்கின்ற விவசாய வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டாளியாக இருக்கிறது. பரந்த அளவிலுள்ள உழைக்கும் மக்களுக்கு

எதிராகப் பிற்போக்கான, ஏகபோக முதலாளி வர்க்கம் மற்றும் பெரும் பண்ணைக்காரர்களின் சிறிய குழு இருக்கிறது. இது ஏகாதிபத்தியத்தின் பொருளாதார மற்றும் அரசியல் ஆதரவைப் பெற்ற நிதி மூலதன ஏகபோகக் குழு ஆகும். இந்த நாடுகளின் ஆளும் வர்க்கத்தினர் வாடிக்கையான தேசிய எதிர்ப்பு, ஏகாதிபத்திய ஆதரவுச் சக்தியாக இருக்கிறார்கள்; ஆகவே பொருளாதார சுதந்திரத்துக்கும் மெய்யான தேசிய அரசுரிமைக்கும் நடைபெறுகின்ற போராட்டம் முதலாளித்துவச் சுரண்டலுக்கு எதிராக, அந்நிய மற்றும் உள்நாட்டு ஏகபோகங்களுக்கு எதிராகத் தீவிரமான வர்க்கப் போராட்டத்துடன் இணைந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சிகள் இப்போராட்டத்துக்கு மிகவும் உறுதியான முறையில் தலைமை தாங்குகின்றன. பெரும்பான்மையான லத்தீன் அமெரிக்க நாடுகளில் சோஷலிஸ்ட் மாற்றத்துக்கு அவசியமான பொருளாயத முன்நிபந்தனைகள் முதிர்ச்சியடைந்துவிட்டன. கியூபா மற்றும் நிகராகுவா புரட்சிகளின் அனுபவம் இதை நிரூபிக்கிறது. இன்று அப்பிரதேசத்தில் போர்க்குணமிக்க ஜனநாயக மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கின்றன, சோஷலிசத்துக்குப் பாதையைத் திறந்து விடுகின்றன.

வடக்கு ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு, தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த நாடுகள் விடுதலை அடைந்த பொழுது அந்த நாடுகளில் முதலாளித்துவ உறவுகளுடன் சேர்ந்து நிலப்பிரபுத்துவ உறவுகளும் நீடித்துக் கொண்டிருந்தன. சமூகத்திலிருந்த சமூக வர்க்கப் பிரிவினை முதலாளித்துவ வளர்ச்சியுடன் பொருந்தியிருந்தது: அங்கே (நகர மற்றும் கிராமப் பகுதிகளில்) தேசிய முதலாளி வர்க்கம் இருந்தது, தொழில்துறை மற்றும் விவசாயப் பாட்டாளி வர்க்கம், கைவினைஞர்கள் பிரிவு

ஆகியவை இருந்தன; விவசாய வர்க்கத்தில் குட்டி மற்றும் நடுத்தர விவசாயிகள், குத்தகைக்காரர்கள், விவசாயக் கூலிகள் என்னும் படிநிலை அமைப்பு ஆரம்பமாகிக் கொண் டிருந்தது. நிலப்பிரபுத்துவ வர்க்கம் உள்நாட்டுப் பிற் போக்குவாதத்தின் கோட்டையாக இருந்தது. மக்கள் தொகையில் 70–75 சதவிகிதமாக இருந்த விவசாய வர்க்கம் நாட்டின் ஆகப் பெரிய வர்க்கமாக இருந்தது. நாட்டின் விடுதலைப் போராட்டம் பெரும்பான்மையும் தேசிய முத லாளி வர்க்கத்தின் தலைமையில் நடத்தப்பட்டது. இளம் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை குறைவாக இருந்தா லும் உழைக்கும் மக்களுடைய மிகவும் ஸ்தாபன ரீதியில் ஒழுங்கமைந்த, உணர்வு பூர்வமான படைப்பிரிவு என்ற முறையில் அது விடுதலை இயக்கத்தில் முக்கியமான பாத் திரத்தை வகித்தது.

வெப்ப மண்டல ஆப்பிரிக்கா, அராபியத் தீபகற்பம் மற்றும் ஓஷியானியாவைச் சேர்ந்த பெரும்பான்மையான நாடுகளில் பொருளாதாரக் கட்டமைப்புகள் மிகவும் அதிக மாக வேறுபடுகின்றன. நிலப்பிரபுத்துவ மற்றும் குலமரபு உறவுகளின் தகர்வில் வெவ்வேறு கட்டங்களில் உள்ள விவசாய வர்க்கம் மக்கள்தொகையில் அதிகப் பெரும் பான்மையுள்ள வர்க்கமாக இருக்கிறது. இந்த நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்குப் பல்வகையான வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகளின் பிரதிநிதிகள் — அவர்களில் பெரும்பான்மையானவர்கள் நாட்டின் இளம் அறிவுப் பகுதி யைச் சேர்ந்தவர்கள் — தலைமை தாங்கினார்கள்.

ஒவ்வொரு வளர்முக நாடும் ஸ்தூலமான, வரலாற்று ரீதியான, சமூக, பொருளாதாரப் பிரத்யேகத் தன்மை களைக் கொண்டிருக்கிறது என்பதை தேசிய விடுதலைப் புரட்சிகளின் இயக்கு சக்திகளைப் பகுப்பாய்வு செய்கின்ற பொழுது நினைவிலிறுத்த வேண்டும். தேசிய விடுதலையில்

புறநிலையான அக்கறையைக் கொண்டிருக்கின்ற சமூகப் பிரிவுகளில் மக்கள்தொகையின் அதிகப் பெரும் பகுதியும் — விவசாய வர்க்கம், தொழிலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம், அறிவுப் பகுதியினர் மற்றும் இதர இடைநிலைப் பிரிவினர் — அடங்கும். ஆனால் அவர்களுடைய பாத்திரமும் முக்கியத்துவமும் நாட்டுக்கு நாடு வேறுபட்டிருக்கின்றன.

குறிப்பாக, வளர்முக நாடுகளைச் சேர்ந்த தேசிய முதலாளி வர்க்கம் கட்டமைப்பிலும் அரசியல் விருப்பார்வங்களிலும் வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறது. தேசிய முதலாளி வர்க்கத்தின் வெவ்வேறு பிரிவினருக்கு இடையில் பரஸ்பர நிலையும் அவர்களுடைய அரசியல் செல்வாக்கின் அளவும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன; அதைப் போல தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கும் அல்லது அந்நிய மூலதனத்துக்கும் இடையிலான முரண்பாடுகளின் தீவிரமும் வேறுபடுகிறது. தேசிய விடுதலைப் புரட்சியின் போது தேசிய முதலாளி வர்க்கத்தின் பாத்திரம் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கிறது. புரட்சியின் முதல் கட்டத்தின் போது அதற்கும் காலனியாதிக்கவாதிகள் மற்றும் நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களுக்கும் இடையிலுள்ள முரண்பாடு முக்கியமானதாக இருக்கிறது. ஆனால் அது அதிகாரத்தைப் பெற்றதும் முந்திய கூட்டாளிகள், அதாவது உழைக்கும் மக்களுக்கும் அதற்கும் இடையிலுள்ள முரண்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. ஒரு காலத்தில் முற்போக்காக இருந்த முதலாளி வர்க்கம் ‘‘கட்சி மாறி விடுகிறது’’, அதாவது பிற்போக்காக மாறி விடுகிறது. தேசிய முதலாளி வர்க்கத்தின் சில பிரிவினர் ஆட்சியைப் பெற்றவுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிற்போக்குவாதத்துடன் நெருக்கமாக ஒத்துழைக்கின்ற பாதையை மேற்கொண்ட உதாரணங்களும் இருக்கின்றன. வேறு சில உதாரணங்களில் முதலாளி வர்க்கம், அதன்

செல்வாக்குள்ள பகுதி பொதுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஜனநாயகப் போராட்டத்தில் மக்களுடன் அணி சேர்ந்து தேசிய விடுதலை இயக்கத்தில் முற்போக்கான பாத்திரத்தை வகித்திருக்கிறது. பெரும்பாலான நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கத்திற்குள் பிளவு ஏற்பட்டு அதன் பிரிவுகள், குழுக்கள் அரசியல் ரீதியில் முனைக்கோடியாகப் பிரிந் திருக்கின்றன. தேசிய முதலாளி வர்க்கத்தின் உள்ளூறையான இரட்டைத் தன்மை பல்வேறு வழிகளில் வெளிப்படுகிறது. சில நாடுகளில் அதன் ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூறுகள் இன்னும் நீடிக்கின்றன; வேறு சில நாடுகளில் அது தன்னுடைய முற்போக்கு வேகத்தை இழந்து விட்டபடி யால் தேசிய விடுதலைப் புரட்சியின் தலைமையான சக்தி யாக இருக்க முடியாது; இன்னும் சில நாடுகளில் அதன் கொள்கை முற்போக்கான மற்றும் பிற்போக்கான போக்கு கள் இரண்டையும் உள்ளடக்கியிருக்கிறது.

வளர்முக நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்திட மும் அதிகமான வேறுபாடு இருக்கிறது. சில நாடுகளில் அது பெரும்பான்மையும் பெரிய தொழில் கேந்திரங்களில் உள்ள தொழில்துறைப் பாட்டாளி வர்க்கமாக, மார்க்சிய-லெனி னியக் கட்சிகளின் தலைமையில் தேசிய விடுதலை இயக்கத் தின் முன்னணியில் முன்னேறிக் கொண்டிருக்கின்ற வர்க்க மாக இருக்கிறது. வேறு சில நாடுகளில் தொழிலாளி வர்க்கம் இப்பொழுதுதான் உருப்பெற்றுக் கொண்டிருக் கிறது; அதில் பருவகாலத் தொழிலாளர்கள், விவசாய மற்றும் கட்டிடத் தொழிலாளர்கள் கணிசமான பகுதியாக இருக்கிறார்கள். அது சுயேச்சையான அரசியல் சக்தியாக இன்னும் வளரவில்லை.

இந்த நாடுகளில் சமூக வளர்ச்சியின் திசைவழி இராணுவங்களின் அரசியல் திசையமைவைப் பெரும்பா லும் சார்ந்திருக்கிறது என்பதைக் கடந்த கால அனுபவம்

எடுத்துக்காட்டுகிறது. ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் சில நாடுகளில் இராணுவத்தின் பிரதிநிதி கள் அரசுக்குத் தலைமை தாங்குகிறார்கள்; அவர்கள் பல்வேறு சமூக வர்க்க சக்திகளின் நலன்களை, சில நாடு களில் உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பிற்போக்குவாதத்தின் நலன்களையும் வேறு சில நாடுகளில் முற்போக்கான, ஜனநாயக சக்திகளின் நலன்களையும் வெளியிடுகிறார்கள்.

தேசிய விடுதலைப் புரட்சிகளில் எந்த வளர்ச்சிப் பாதை வெற்றியடையப் போகிறது, முதலாளித்துவப் பாதையா அல்லது சோஷலிசத் திசையமைவுப் பாதையா என்பது புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் அரசியல் போராட் டத்தில் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது.

## முதலாளித்துவப் பாதையின் முட்டுச்சந்துகள்

புதிதாக விடுதலையடைந்த பெரும்பான்மையான அரசுகள் முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றுகின்றன. இந்த அரசுகளில் ஆட்சியைப் பிடித்துள்ள தேசிய முதலாளி வர்க்கம் கடைப்பிடிக்கின்ற கொள்கையில் வேறுபாடுகள் இருந்த போதிலும் அது முதலாளித்துவ உறவுகளை நிறுவு வதன் மூலம் தன்னுடைய வர்க்க ஆட்சியை வலுப்படுத்து வதற்குப் பாடுபடுகிறது. முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத் தைக் காட்டிலும் சமூக வளர்ச்சியில் உயர்ந்த கட்டம் என்பது உண்மையே (குலமரபு உறவுகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை). ஆனால் இந்த நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி வரையறுக்கப்பட்டதாக, ஊனமடைந்ததாக, மிக வும் முரண்பாடுள்ளதாக இருக்கிறது. அதற்கு முதலாவதாக, காலனி மற்றும் சார்பு நாடுகள் முதலாளித்துவத்துக்கு மாறு கின்ற வரலாற்று நிலைமைகள், இரண்டாவதாக, தேசிய

முதலாளி வர்க்கத்தின் ஆட்சி செய்கின்ற குழுக்களின் வர்க்க நலன்கள் என்னும் இரண்டு காரணங்கள் இருக் கின்றன.

முந்திய காலனிகள் முதலாளித்துவ வளர்ச்சியில் பின் தங்கி விட்டதனால் அவை ஏகாதிபத்திய அரசுகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது பாதகமான, நியாயப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றன. பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலைமை முதலாளித்துவத் தொழில் முயற்சியின் வளர்ச்சி வாய்ப்புகளைக் குறைத்து விட்டது. உதாரணமாக, ஒரு புதிய தொழிற்சாலையை நிறுவி இயக்க வேண்டுமென்றால் அதற்கு மூலதனம் மட்டும் போதாது. தொழிற்சாலைக் கட்டுமானத்திற்கு அவசியமான தளவாடங்கள், மின் சக்தி, தண்ணீர், போக்குவரத்துச் சாதனங்கள், மூலப்பொருட்கள் ஆகியவை வேண்டும். பின்தங்கிய பொருளாதாரத்தில் இவை அனைத்தும் பற்றாக்குறையாக இருக்கின்றன. இயந்திரங் களையும் உபகரணங்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்கு மதி செய்ய வேண்டியிருக்கும். மேலும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், பொறியியலா ளர்கள், நிர்வாகிகள் ஆகியோர் வேலைக்குக் கிடைப்பதும் கடினம். அந்த நாட்டில் அத்தகைய நிபுணர்களைப் பயிற்று விக்கின்ற வாய்ப்புகள் அநேகமாக வரையறுக்கப்பட்டன அல்லது அவை முற்றிலும் கிடையாது. அவர்களைப் பயிற்சி பெறுவதற்கு வெளிநாட்டுக்கு அனுப்புவதென்றால் செலவு அதிகம்; அதனால் காலதாமதமும் ஏற்படுகிறது. உள்நாட்டுச் சந்தை வளர்ச்சி அடையாதது என்பதால் அந்த நிறுவனம் ஒப்புநோக்கில் தனித்துவிடப்பட்ட நிலையில் இருக்கிறது. முழு அளவில் உற்பத்தி செய்யப்படாமல் குறைக்கப்படுகிறது. அதன் விளைவாக இழப்புகள் அதிகமாகின்றன; தன்னைக் காட்டிலும் வலிமையான கம்பெனிகளுடன் நடத்துகின்ற போட்டியில் அது தோல்வியடைய நேரிடுகிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலைமை ஏகாதிபத்தியத்தின் புதிய காலனியாதிக்கக் கொள்கை விரிவடைவதற்கு வழிவகுக்கிறது. ஏகாதிபத்தியம் காலனி மற்றும் சார்பு நாடுகள் ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கேந்திரங்களைச் சார்ந்திருக்கின்ற நிலையை நிரந்தரப்படுத்துவதற்குப் பாடுபடுகிறது.

பெரிய முதலாளி வர்க்கத்தின் கை ஓங்கியிருக்கின்ற நாடுகளில் அதன் வர்க்க நலன்கள் பெருந்திரளான மக்களுடைய நலன்களுடன் மேன்மேலும் அதிகமாக மோதுகின்றன. குட்டி மற்றும் நடுத்தர முதலாளி வர்க்கத்தின் கைகளில் அதிகாரம் கிடைத்திருக்கின்ற நாடுகளில் அது தீவிரமான சீர்திருத்தங்களைக் கொண்ட செயல்திட்டத்தை அறிவிக்கிறது; ஆனால் இச்சீர்திருத்தங்கள் முரண்பாடான முறையில் அமுல் நடத்தப்படுகின்றன. மேன்மேலும் தலைமையான இடத்தைப் பெறுகின்ற முதலாளித்துவ உறவுகளின் சாராம்சத்தை அவை மாற்றுவதில்லை. உலக முதலாளித்துவச் சந்தையைப் பொருளாதார ரீதியில் சார்ந்திருக்கின்ற நிலை நீடிக்கிறது; உலக முதலாளித்துவ அமைப்பின் உள்ளுறையான நெருக்கடி நிகழ்வுகள் தீவிரமடைகின்றன. பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களைச் சார்ந்திருக்கின்ற நிலையும் ஆழமடைவதற்கு முற்படுகிறது. முதலாளி வர்க்கத்துடன் நெருக்கமாகப் பிணைந்துள்ள சிவிலியன் மற்றும் இராணுவ அதிகார வர்க்கம் உருவெடுக்கிறது.

அதிகார வர்க்கம் பொருளாதாரத்தின் அரசுத் துறையைத் தன்னுடைய சொந்த லாபம், வசதிகளின் தோற்றுவாய் என்று கருதுவதற்கு முற்படுகிறது. அரசுத் துறை திறமையற்ற நிர்வாகம் மற்றும் உற்பத்தி ஒழுங்கின்மையின் விளைவாகத் தன்னுடைய முற்போக்கான பாத்திரத்தைப் படிப்படியாக இழக்கிறது. நிலச் சீர்திருத்தங்கள் ஏட்டளவில்



13*

நின்றுவிடுகின்றன. பெரும் செல்வந்தர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கிறது; தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களுடைய சமூக நிலைமையின் முன் னேற்றத்தின் வேகம் குறைகிறது. ஆகவே முதலாளித்துவ வளர்ச்சி பெருந்திரளான மக்களுக்கு சுதந்திரத்தைத் தரவில்லை, அவர்களுடைய சமூக நிலைமையையும் முன் னேற்றவில்லை. ஏனென்றால் இவை இரண்டும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை மட்டுமன்றி உற்பத்திச் சாதனங் கள் உழைக்கும் மக்களின் உடைமையாக இருக்கின்றனவா என்பதையும் பொறுத்திருக்கின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள பொருளாதார நிலைமை இதை நிரூபிக் கிறது.

லத்தீன் அமெரிக்காவிலுள்ள அரசுகள் ஒன்றரை நூற்றாண்டுக் கால சுதந்திரத்தின் போது முதலாளித்துவ வளர்ச்சியில் நெடுந்தொலைவு முன்னேறிச் சென்றிருந்தா லும் அவை இன்னும் பொருளாதார ரீதியில் பின்தங்கியவை என்றுதான் கருதப்படுகின்றன. அவை அமெரிக்காவையும் இதர ஏகாதிபத்திய அரசுகளையும் அதிகமாகச் சார்ந் திருப்பதும் அவற்றின் இயற்கை வளங்களை அந்நிய மூலதனம் நெடுங்காலம் கொள்ளையடித்ததும் இதற்குக் காரணங்களாகும். இவை அந்த அரசுகளின் பொருளாதார வளர்ச்சியைப் பல பத்தாண்டுகளாகத் தடுத்துவிட்டன, நாட்டுப்புறப் பகுதிகளில் அரை நிலப்பிரபுத்துவ உறவுகளை நிரந்தரமாக்கியிருக்கின்றன; பொருளாதாரத்தின் அளவுப் பொருத்தத்தில் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமூக வேறுபாடு கள் மேன்மேலும் அதிகரிப்பதற்கு வழிவகுத்திருக்கின்றன. அந்நிய ஏகபோக மூலதனத்தின் ஒடுக்குமுறையை எதிர்த்து உழைக்கும் மக்கள் நடத்துகின்ற வர்க்கப் போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஏகாதிபத்தியத்தினால் முடியவில்லை என்பதால் அது இராணுவ பாசிச சர்வாதிகாரங்களை

அதிகமாக ஏற்படுத்துகிறது; அந்த நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் அதிகமாகத் தலையிடுகிறது.

தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுவான எழுச்சி நிலைமைகளில் லத்தீன் அமெரிக்க மக்களினங்கள் புரட்சி கரமான நிகழ்வுப் போக்கில் மேன்மேலும் சுறுசுறுப்பான பாத்திரத்தை வகிக்கின்றன. அக்கண்டத்தின் உழைக்கும் மக்கள் உண்மையான சுதந்திரத்திற்கும் சுரண்டலின் எல்லா வடிவங்களிலிருந்தும் விடுதலைக்கும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஜனநாயக மற்றும் தேசபக்த சக்திகளைக் கொண்ட பரந்த முன்னணி—அது உழைக்கும் மக்கள் மட்டுமன்றி பாட்டாளி வர்க்கம் அல்லாதவர்களையும் ஒன்று சேர்க்கிறது—அந்தப் போராட்டத்துக்கு அரசியல் அடிப்படையை அமைக்கிறது. மத்திய அமெரிக்கா மற்றும் கரிபியன் பிரதேச நாடுகளில் 1970க்களிலும் 1980க்களிலும் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி, சார்பு நிலை வளர்ச்சி என்ற முதலாளித்துவப் பாதை லத்தீன் அமெரிக்காவில் தோல்வியடைந்து விட்டது, அந்த நாடுகள் முதலாளித்துவத்திலிருந்து முறித்துக் கொண்டு சோஷலிசப் பாதைக்கு மாறுதல் அவசியம் என்பதை மீண்டும் சுட்டிக் காட்டுகிறது.

### சோஷலிசத்துக்குச் செல்லும் பாதை

சோஷலிசத்துக்குச் செல்லும் பாதையில் வளர்ச்சியடைகின்ற அரசுகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, அரசியல் மற்றும் பொருளாதார விடுதலைக்காக நடைபெறுகின்ற போராட்டத்தின் முன்னணியில் இருக்கின்றன. முதலாளித்துவப் பாதையின் மூலம் பொருளாதார முன்னேற்றம் ஏற்படாது, அது பட்டினியையும் வறுமையையும் ஒழிக்காது என்பதைப் புதிதாக விடுதலையடைந்த மக்களினங்கள் தம்

முடைய மற்றும் இதர நாடுகளின் அனுபவங்களின் மூலம் மேன்மேலும் அதிகமாகப் புரிந்து கொண்டு வருகின்றன. அதனால்தான் புதிதாக விடுதலையடைந்த அரசுகள் மேன் மேலும் அதிக எண்ணிக்கையில் தம்முடைய சமூக, பொரு ளாதாரப் பிரச்சினைகளை சோஷலிசப் பாதையைப் பின் பற்றுவதன் மூலம் தீர்த்துக் கொள்வதற்கு முயல்கின்றன.

தேசிய விடுதலைப் புரட்சிகள் சோஷலிஸ்ட் புரட்சிகளாக வளர்ச்சியடைய முடியும் என்று லெனின் கருதினார். மனிதகுலத்தின் பெரும்பான்மையினர் காலனியாதிக்க ஒடுக்குமுறை, சார்புநிலை மற்றும் பின்தங்கிய நிலையை எதிர்த்து நடத்துகின்ற போராட்டம் முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டமாகப் பரிணமிக்கும்; அப்போராட்டத் தின் போது பின்தங்கிய மக்களினங்கள் சோஷலிச நாடுகளை உறுதியாக நம்பியிருக்கும் என்று அவர் கூறினார். ''வளர்ச்சி யடைந்த நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தின் உதவியுடன் பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்துக் குள் செல்லாமலேயே சோவியத் அமைப்புக்கும் பிறகு சில வளர்ச்சிக் கட்டங்களின் மூலம் கம்யூனிசத்துக்கும் மாற இயலும்'' என்று லெனின் முடிவு செய்தார்.* அவருடைய முடிவை வரலாறு நிரூபித்திருக்கிறது. ஜாரிஸ்ட் ருஷ்யாவின் எல்லையோரங்களில் வசித்த மக்களினங்கள் (இன்று சோ வியத் தேசியக் குடியரசுகளின் மக்களினங்கள்) முதலாளித் துவக் கட்டத்திற்குள் போகாமலேயே சோஷலிசத்துக்கு மாறியிருக்கின்றன. மங்கோலிய மக்கள் சோவியத் யூனிய னுடன் நெருக்கமான கூட்டணியின் மூலம் நிலப்பிரபுத்துவத் திலிருந்து சோஷலிசத்துக்கு மாறியிருக்கிறார்கள். ஆப் பிரிக்காவிலும் ஆசியாவிலும் பல நாடுகள் சோஷலிசத் திசையமைவுப் பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன.

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 31, p. 244.

நம்முடைய சகாப்தத்தில் முந்திய காலனிகள் முதலாளித்துவம் சோஷலிசத்துக்கு அவசியமான பொருளாயத மற்றும் ஆன்மீக முன்தேவைகளைப் படைக்கின்ற வரை காத்திருக்க வேண்டியதில்லை; ஏனென்றால் அவை முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையின் மூலம் சோஷலிசத்தை நோக்கிப் போக முடியும்.

முதலாளித்துவக் கட்டத்திற்குள் போகாமல் சோஷலிசத்தை நோக்கிப் போக விரும்புகின்ற பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சியில் முதலாளித்துவம் அல்லாத பாதை வரலாற்று ரீதியில் இன்றியமையாத காலகட்டமாகும். அக்காலகட்டத்தில் சோஷலிஸ்ட் புரட்சிக்குரிய பொருளாயத மற்றும் ஆன்மீக முன்தேவைகள் படைக்கப்படுகின்றன. அதற்கு அரசு அதிகாரம் தீவிரமாகப் பயன்படுத்தப்படுகிறது.

நாட்டின் வளர்ச்சி எந்தக் கட்டத்தில் இருந்த போதிலும் சோஷலிசத் திசையமைவுப் பாதைக்குரிய நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன.

அரசியல் துறையில் பிற்போக்கு, ஏகாதிபத்திய ஆதரவு சக்திகள் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டு மக்களுடைய நலன்களைப் பிரதிபலிக்கின்ற, உழைக்கும் மக்கள் திரளினரைச் சார்ந்திருக்கின்ற புரட்சிகர ஜனநாயக ஆட்சி நிறுவப்படுகிறது; அரசு இயந்திரம் ஜனநாயகப்படுத்தப்படுகிறது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முரணில்லாத போராட்டம் நடத்தப்படுகிறது; சோஷலிச நாடுகளுடன் நட்பு மற்றும் ஒத்துழைப்பு உறவுகள் நிறுவப்படுகின்றன.

பொருளாதாரத் துறையில் அரசு உடைமையாக இருக்கின்ற நவீனத் தொழில்துறையை நிர்மாணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன; அந்நிய நாட்டு நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்படுகின்றன; விவசாய வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்ற தீவிரமான நிலச் சீர்திருத்தங்கள்

நிறைவேற்றப்படுகின்றன; அந்நிய நாடுகளுடன் பொரு ளாதாரப் பிணைப்புகளை அரசு கட்டுப்படுத்துகிறது. அரசு மொத்தப் பொருளாதார வளர்ச்சியின் மீதும் பொதுவான கட்டுப்பாட்டை வைத்திருக்கிறது, பொருளாதாரத்தைத் திட்டமிடுகிறது, நாடு பொருளாதார ரீதியில் ஏகாதிபத்திய ஏகபோகங்களைச் சார்ந்திருப்பதைப் படிப்படியாக அகற்று வதற்குப் பாடுபடுகிறது.

சமூகத் துறையில், உழைக்கும் மக்களுடைய பொரு ளாயத மற்றும் கலாசார நிலைமைகளை அபிவிருத்தி செய்தல், தொழிலாளி வர்க்கத்தை உருவாக்குதல், அதன் தொழிற்சங்க மற்றும் அரசியல் ஸ்தாபனங்களை அமைத்தல், பெருந்திரளான விவசாயிகள், சிறு தொழில்களில் உள் ளோர், கைவினைஞர்களை ஸ்தாபன ரீதியில் ஒழுங் கமைத்தல் மற்றும் உழைக்கும் மக்களை உற்பத்தி நிர் வாகத்தில் படிப்படியாக ஈடுபடுத்துதல் முக்கியமான கடமை களாகும். அதே சமயத்தில் பெரிய முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுத்துவ நிலக்கிழார்களின் உரிமைகளைக் கட்டுப் படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கலாசாரத் துறையில் கல்வி நிலையங்களை அதிகப் படுத்தி கல்வியைப் பெருக்குதல், புரட்சிக்கு விசுவாசமான தேசிய அலுவலர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் விஞ்ஞான சோஷலிசக் கோட்பாடுகளைப் பரப்புதல் முக்கியமான கடமைகளாகும்.

உழைக்கும் மக்கள் பெருந்திரளினரின் நலன்களை வெளி யிடுகின்ற புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளை அமைப்பதும் வலுப்படுத்துவதும் சோஷலிசத்தை நோக்கிச் செல்கின்ற பாதையில் வளர்ச்சியடைவதற்கு மாபெரும் முக்கியத்துவத் தைக் கொண்டிருக்கிறது. முற்போக்கான சமூக மாற்றங் களை நிறைவேற்றுவதில் இக்கட்சிகள் அரசியல் வழிகாட்டு தலை அளிக்கின்றன.

சமூக அரசியல்
ஆரம்ப நூல் வரிசை

# விஞ்ஞான கம்யூனிசம் என்றால் என்ன?

எல். செலிஸ்னியோவ்
வி. ஃபிதீசவ்




முன்னேற்றப் பதிப்பகம்

எந்த சமூகப் புரட்சியிலும் அரசு அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையே முக்கியமான பிரச்சினையாகும். சோஷலிசத் திசையமைவு நாடுகளில் அவற்றின் பொருளாதார வளர்ச்சி, புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைமையின் அரசியல் சித்தாந்த நிலைகள் ஆகியவற்றைப் பொறுத்து வெவ்வேறு அரசு வடிவங்கள் உருவாகியிருக்கின்றன. முதல் வடிவம் தேசிய ஜனநாயகம்: இது அனைத்து தேசபக்த மற்றும் ஜனநாயக சக்திகளின் பரந்த கூட்டணியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இரண்டாவது வடிவம் குட்டி பூர்ஷ்வாப் புரட்சிகர ஜனநாயகம்: இது பிரதானமாக விவசாய வர்க்கம், நகர் மற்றும் கிராமப்புற முதலாளி வர்க்கம், இடை நிலையிலுள்ள சமூகப் பிரிவுகளைச் சார்ந்திருக்கிறது. மூன்றாவது வடிவம் தொழிலாளி-விவசாயிப் புரட்சிகர ஜனநாயகம்: இது உழைக்கும் மக்களின் இரண்டு பிரதான வர்க்கங்களாகிய தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாய வர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்த நாடுகளில் தலைமை தாங்குகின்ற கட்சிகள் தம்முடைய நடவடிக்கைக்கு அரசியல் சித்தாந்த அடிப்படையாக மார்க்சிய-லெனினியத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. சோஷலிசத் திசையமைவு நாடுகளில் நிலவுகின்ற இந்த அரசு அதிகார வடிவங்கள் புரட்சிகர ஜனநாயகத்தின் எல்லா பிரத்யேகத் தன்மைகளையும் வேற்றுமைகளையும் உள்ளடக்கவில்லை.

சோஷலிசத் திசையமைவு நாடுகளில் அரசியல் நிலைமை அடிக்கடி மாற்றமடைகிறது; சில சமயங்களில் ஸ்திரமற்ற நிலைமையும் நிலவுகிறது. அது புரட்சியின் போது சமூக வர்க்க மற்றும் அரசியல் சக்திகளின் எல்லைக்கோட்டின் பிரதிபலிப்பாகும்; கலப்பான வர்க்கக் கட்டமைப்பைக் கொண்ட புரட்சிகர ஜனநாயகத்திலும் இம்மாதிரி நடைபெறுவதுண்டு. புரட்சிகர மாற்றங்கள் ஆழமடைகின்ற

பொழுது அச்செயல்முறை தீவிரமடைகிறது. எவ்விதமான அரசியல் சக்திகள் ஆதிக்கம் செலுத்தும் என்பதை யாரும் ஆரூடம் கூற முடியாது.

சோஷலிச நாடுகள் சோஷலிசப் பாதையைத் தேர்ந் தெடுத்திருக்கின்ற, அதை அமுலாக்குவதற்குப் பாடுபடுகின்ற முற்போக்கான, புரட்சிகர ஜனநாயக சக்திகளையும் இயக் கங்களையும் ஆதரிக்கின்றன. அவை அவற்றுடன் தம்முடைய பொருளாதாரப் பிணைப்புகளை விரிவாக்கி, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவியை அதிகப்படுத்தி வருகின்றன.

உலகத்தின் சமூகப் புத்தாக்கத்தில் எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த கோடிக்கணக்கான மக்களும் லட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகள், புரட்சிக்காரர்கள், தேசபக்தர்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களும் ஈடுபட்டிருக்கின்றனர். ருஷ்யாவின் மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி புதிய நாகரிகத்துக்கு அடிப்படையை அமைத்தது; அந்தப் பாதையில் மனிதகுலம் இன்று கணிசமாக முன்னேறியிருக்கிறது. விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவர்களான மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனினுடைய புரட்சிகரத் தத்துவத்தின் ஜீவசக்தியை நடைமுறை நிரூபிக்கிறது.

ருஷ்யாவில் நடைபெற்ற புரட்சியைத் தொடர்ந்து மற்ற நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சிகள் ஏற்படும் என்று லெனின் முன்னறிவித்தார். விஞ்ஞான கம்யூனிசத்தின் இந்த இன்றியமையாத கருதுகோளை வாழ்க்கை மெய்ப்பித்திருக்கிறது. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் கோடிக்கணக்கான மக்கள் இன்று சோஷலிசப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள். மனிதகுலத்தின் தலைசிறந்த மேதைகள் புதிய நாகரிகத்தைப் பற்றிப் பல யுகங்களாகக் கண்ட கனவை மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் விஞ்ஞான ரீதியாக நிறுவினார்கள்.

சோஷலிச நாடுகளைச் சேர்ந்த மக்களினங்கள் சுரண்டலி லிருந்து விடுவிக்கப்பட்ட தங்களுடைய தன்னலமற்ற உழைப்பின் மூலம் அந்தப் புதிய நாகரிகத்தை நிர்மாணித்துக் கொண்டிருக்கின்றன. இன்றைய சமூக வளர்ச்சியில் சோஷலிச நாடுகள் தீர்மானகரமான காரணியாக இருக் கின்றன; முதலாளித்துவத்துடன் நிலவுகின்ற போட்டியில் சோஷலிசத்தின் வெற்றியை உறுதிப்படுத்துகின்றன.

ருஷ்யாவில் நடைபெற்ற புரட்சி கிழக்கு நாடுகளை உறக்கத்திலிருந்து எழுப்பியது, தேசிய விடுதலை இயக்கப் பேரெழுச்சியைத் தூண்டியது. அதன் விளைவாக முடிவில் காலனியாதிக்கம் தகர்ந்தது. பல நாடுகளில் தேசிய விடு தலைப் போராட்டம் சோஷலிசத்துக்கு மாறுகின்ற போராட்டமாகப் பரிணமித்திருக்கிறது. முந்திய காலனி கள் நம் காலத்திய புரட்சிகர நிகழ்வுப் போக்கின் முக்கிய மான சக்திகளில் ஒன்று ஆகும்.

இன்றைய சமூக, பொருளாதார வாழ்க்கை மார்க்சிய-லெனினியம் தத்துவ ரீதியில் முன்னறிவித்த திசையில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது; அது தற்செயலான நிகழ்வு அல்ல. விஞ்ஞான கம்யூனிசம் சமூக வளர்ச்சியின் புறநிலையான நியதிகளை எடுத்துக்காட்டியது மட்டுமன்றி இன்றைய முன்னேற்றத்தின் சாதனங்களாகவும் சிற்பிகளாக வும் உள்ள வர்க்க மற்றும் அரசியல் சக்திகளையும் அவற்றுக்கு எதிரான சக்திகளையும் சுட்டிக் காட்டியது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் அதிசயம் என்று வர்ணிக்கப்படுகின்ற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் புரட்சி உற்பத்திச் சக்திகள், தொழில்நுட்பவியல் மற்றும் விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு எல்லையற்ற வாய்ப்புகளைத் தோற்றுவித்திருக்கிறது. எனினும் அது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பேரளவில் வேலையில்லாத் திண் டாட்டம், வறுமை, துன்பம் ஆகியவற்றை ஏற்படுத்தியிருக்

கிறது. முதலாளித்துவ உலகத்தில் மக்களின் பசித்துன்பம் மாபெரும் பிரச்சினையாக இருக்கிறது. முதலாளித்துவ உலகத்தில் கோடிக்கணக்கான மக்கள் குடியிருப்பதற்கு வீடு இல்லாமல் துன்பமடைகிறார்கள் அல்லது மனிதர்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற சேரிகளில் வசிக்கிறார்கள். ஏக போக நிறுவனங்கள் லாப வேட்டையில் வயல்கள் மற்றும் காடுகள், ஆறுகள் மற்றும் கடல்கள், காற்று மண்டலம் மற்றும் கீழ்மண், அதாவது புறச்சூழலை அழிக்கின்றன.

கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின், மொத்த மனித குலத்தின் நலன்களை நிறைவேற்றுகின்ற சமூக நிலைமை களைப் படைப்பது சாத்தியமா? விஞ்ஞான கம்யூனிசத் தத்துவம் இக்கேள்விக்கு ''ஆமாம்'' என்று பதிலளிப்பது மட்டுமன்றி இப்பிரச்சினையைத் தீர்க்கின்ற வழிமுறை களையும் சுட்டிக் காட்டுகிறது. விஞ்ஞான கம்யூனிசம் இன்றைய வாழ்க்கை எழுப்புகின்ற எல்லாக் கேள்விகளுக்கும் முன்னரே தயாரிக்கப்பட்ட பதில்களைத் தருகின்ற சூத்திரம் அல்ல. மார்க்சிய-லெனினியம் வறட்டுக் கோட்பாடு அல்ல, அது நடவடிக்கைக்கு வழிகாட்டி. இன்று கம்யூனிஸ்டுகள் தம்முடைய புரட்சித் தத்துவத்தைப் படைப்புத் தன்மையுடன் வளர்க்கிறார்கள்; புதிய உண்மைகளையும் நிகழ்வுகளையும், உலகத்தின் சமூகப் புத்தாக்கத்துக்கான போராட்டத்தின் மிகவும் சமீப காலத்திய அனுபவத்தையும் பொதுமைப் படுத்துகிறார்கள்.

மனிதகுலத்தின் ஆக்கபூர்வமான நடவடிக்கை சமாதான நிலைமைகளில் மட்டுமே நடைபெற முடியும். உலக சோஷ லிசம் — எல்லாவற்றுக்கும் மேலாக சோவியத் யூனியன் — நம் காலத்தில் உலக சமாதானத்தின் முக்கியமான பாது காப்பு அரணாக இருக்கிறது. இந்த மேன்மையான முயற்சி யில் யுத்த எதிர்ப்பு ஜனநாயக இயக்கம், கூட்டுச் சேரா இயக்கம் மற்றும் ஐ.நா. சபையின் ஆக்கபூர்வமான நடவடிக்

கைகள் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. நம் சகாப்தத்தில் உலகப் போர் முற்றிலும் தவிர்க்க முடியாதது அல்ல, உழைக்கும் மக்களுடைய தீவிரமான, ஒன்றுபட்ட யுத்த எதிர்ப்பு நடவடிக்கை உலக சமாதானத்தைப் பாது காக்கும் என்று கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள். சோஷலிச நாடுகளும் உலக கம்யூனிஸ்ட் இயக்கமும் இதைத் தம்முடைய தலைமையான, கேந்திரமான கடமை என்று கருதுகின்றன. இரண்டு உலக அமைப்புகளுக்கு இடையிலான வரலாற்று ரீதியான போட்டி சமாதான முறைகள், சமாதான சகவாழ்க் கைக் கோட்பாடுகளின் மூலம் தீர்க்கப்பட வேண்டும். சோஷலிசம் அத்தகைய போட்டியைக் கண்டு அஞ்சவில்லை; ஏனென்றால் தன்னுடைய இறுதி வெற்றியில் அதற்கு நம் பிக்கை இருக்கிறது.

**அரசியல்** — அரசு அதிகாரம், அதன் தன்மை மற்றும் அதன் நடவடிக்கையின் உள்ளடக்கம் பற்றி வர்க்கங்கள், சமூகப் பிரிவுகள், தேசிய இனங்கள் மற்றும் அரசுகள் மத்தியில் உறவுகளைப் பற்றிய சமூக வாழ்க்கைத் துறை.

**அரசுரிமை** — ஓர் அரசு சுயேச்சையான உள்நாட்டுக் கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப் பிடித்தல்.

**அளவுவிகித மற்றும் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி விதி** — தேசியப் பொருளாதாரம் முழுவதையும் ஒரே மொத்தமாக இயக்குவதில் ஒருங்கிணைப்பின் புறநிலையான அவசியத்தை வெளியிடுகின்ற சோஷலிசத்தின் பொருளாதார விதி. உற்பத்தியின் பல்வேறு பிரிவுகளிலும் சமூக ரீதியில் அவசியமான அளவுவிகிதங்களை அமைப்பதற்கு உணர்வு பூர்வமாக முயற்சி செய்வதன் மூலம் அந்த விதி நிறை வேற்றப்படுகிறது.

**இராணுவவெறி** — ஓர் ஏகாதிபத்திய அரசு யுத்தத்துக்குத் தயாரிப்பதற்கும் உள் நாட்டில் உழைக்கும் மக்களின் போராட்டத்தை நசுக்குவதற்கும் இராணுவ பலத்தை அதிகப்படுத்துகின்ற கொள்கை.

**உற்பத்தி உறவுகள்** — சமூக உற்பத்தி, பரிவர்த்தனை மற்றும் வினியோகச் செயல்முறையின் பொழுது மக்களுக்கு இடையிலான உறவுகள். அவை மக்களுடைய சித்தத்துக்கும் விருப்பத்துக்கும் சுயேச்சையான முறையில் வெளிப்படுகின்றன.

**உற்பத்திச் சக்திகள்** — உற்பத்திச் சாதனங்கள், அவற்றை இயக்குகின்ற மக்களின் மொத்தம். அறிவு, திறமைகள், நுட்பத் திறன்கள் ஆகியவற்றைக் கொண்ட உழைக்கும் மக்கள் எந்த சமூகத்திலும் பிரதான உற்பத்திச் சக்தியாக இருக்கிறார்கள்.

**உற்பத்தி முறை** — மனித வாழ்க்கை, தனிப்பட்ட நுகர்வு மற்றும் உற்பத்திக்கு அவசியமான பொருளாயத மதிப்புகளை உற்பத்தி செய்கின்ற, வரலாற்று ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட முறை; உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் இயக்கவியல் ஒற்றுமை மற்றும் இடைச் செயல். உற்பத்திச் சக்திகள் உற்பத்தி உறவுகளைக் காட்டிலும் மாறக் கூடியவையாகவும் புரட்சிகரமானவையாகவும் இருக்கின்றன. அவை வளர்ச்சியடைகின்ற பொழுது உற்பத்தி உறவுகள் மாற்றமடைகின்றன.

**ஏகபோகங்கள்** — குறிப்பிட்ட பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையைப் பேரளவில் நடத்துகின்ற பெரிய முதலாளித்துவத் தொழில் நிறுவனங்கள்; உச்ச அளவு லாபமடைதலை நோக்கமாகக் கொண்டிருக்கும்; ஏகாதிபத்தியத்தின்கீழ் முதலாளித்துவ நிறுவனங்களின் பிரதானரகம்.

**ஏகாதிபத்தியம்** — முதலாளித்துவத்தின் மிகவும் உச்ச மற்றும் இறுதிக் கட்டமாகிய ஏகபோக முதலாளித்துவம்; முதலாளித்துவ உலகத்தில் தலைமையான ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் ஏகபோகங்களின் ஆதிக்க அமைப்பு.

**கம்யூனிச எதிர்ப்பு** — புரட்சிகர மற்றும் முற்போக்கு சக்திகளை எதிர்க்கின்ற போராட்டத்தில் ஏகாதிபத்திய சித்தாந்தம் மற்றும் கொள்கையின் பிரதான திசைவழி.

**கம்யூனிசம்** — முதலாளித்துவத்தை ஒழித்த பிறகு ஏற்படு கின்ற சமூக பொருளாதார அமைப்பு. அதன் முதல் கட்டம் சோஷலிசம். சோஷலிசம் சமூக, பொருளாதார முதிர்ச்சி அடைகின்ற கட்டத்தில் அது படிப்படியாகக் கம்யூனிசமாகப் பரிணமிக்கிறது.

**கருத்துமுதல்வாதம்** — ஆன்மா, உணர்வு, கருத்துகள் முதன்மையானவை, இயற்கை, பருப்பொருள், வாழ்நிலை இரண்டாம் நிலையானவை என்று கூறுகின்ற தத்துவஞானப் போக்கு; பொருள்முதல்வாதத்துக்கு எதிரானது, விஞ் ஞானத்துக்குப் புறம்பானது.

**சகாப்தம்** — உலக வரலாற்றில் நீண்ட காலகட்டம். மனித குலம் ஒரு சமூக அமைப்பிலிருந்து மற்றொரு சமூக அமைப்புக்கு மாறுவதுடன் தொடர்புடையது.

**சந்தர்ப்பவாதம்** — தொழிலாளர்களுக்கும் முதலாளி வர்க் கத்துக்கும் இடையில் வர்க்க சமரசத்துக்கும் ஒத்துழைப்புக் கும் பாடுபடுகின்ற தத்துவம் மற்றும் நடைமுறை; சீர்திருத்த வாதத்தைப் பின்பற்றுகின்ற கட்சிகள் மற்றும் தொழிற் சங்கங்களின் நடவடிக்கையில் பரவலாக இருக்கும்; தொழி லாளர் இயக்கத்தின் புரட்சிகரத் திசைவழிக்கு எதிரானது.

**சமூக பொருளாதார அமைப்பு** — தனிவகையான உற்பத்தி முறை, அரசியல் அமைப்பு, சமூக உணர்வின் வடிவங்களைக் கொண்ட சமூக வளர்ச்சிக் கட்டம். மனிதகுல வரலாற்றில் பூர்விகக் கூட்டுவாழ்க்கை அமைப்பு, அடிமையுடைமை அமைப்பு, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், கம்யூனிசம் ஆகிய அமைப்புகள் வரிசையாகத் தோன்றியிருக்கின்றன.

**சர்வதேசியவாதம்** — பொது இலட்சியங்களுக்காக நடைபெறுகின்ற போராட்டத்தில் எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்டுகளின் சர்வதேச ஒருமைப்பாடு; தேசிய விடுதலைக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் மக்களினங்களது போராட்டத்துக்கு அவர்களுடைய ஆதரவு.

**சித்தாந்தம்** — அரசியல், சட்டவியல், அறவியல், சமய, அழகியல் மற்றும் தத்துவஞானக் கருத்துகளைக் கொண்ட அமைப்பு; வர்க்க சமூகத்தில் சித்தாந்தம் வர்க்கத் தன்மையைக் கொண்டிருக்கிறது.

**சீர்திருத்தம்** — நிலவுகின்ற சமூக அமைப்பின் வர்க்கத் தன்மை மாறாமல் அதன் சுற்றுவட்டத்திற்குள் சமூக வாழ்க்கையின் சில அம்சங்களில் ஏற்படுகின்ற மாற்றம்.

**சோஷலிசத் திசையமைவு** — தேசிய விடுதலைப் புரட்சி சோஷலிஸ்ட் புரட்சியாக வளர்ச்சியடைவதை உறுதிப்படுத்துகின்ற சமூக மாற்றங்களின் திசைவழி.

**சோஷலிசம்** — முதலாளித்துவம் ஒழிக்கப்பட்ட பின்னர் ஏற்படுகின்ற சமூக அமைப்பு; கம்யூனிசத்தின் முதல் கட்டம். உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமை ஆக்கப்படுதலும் மனிதனை மனிதன் சுரண்டல் ஒழிக்கப்படுதலும் நட்புறவுள்ள உழைக்கும் வர்க்கங்களும் சமூகப் பிரிவுகளும் இருத்தலும் மக்களின் ஆட்சியதிகாரம் நிறுவப்படுதலும் சமூகத்தின் திட்டமிட்ட வளர்ச்சியும் அதன் குணாம்சமாகும். மக்களின் அதிகரிக்கின்ற பொருளாயத மற்றும் கலாசாரத் தேவைகளை மேன்மேலும் அதிகமான முறையில் பூர்த்தி செய்வது சோஷலிசத்தின் பிரதான நோக்கம்.

**கற்பனாவாத சோஷலிசம்** — சமத்துவம், கூட்டு உடைமை, ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும் என்னும் கருத்துகளை

அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பை இலட்சியமாகக் கொண்ட சமூக சிந்தனைப் போக்கு.

**திருத்தல்வாதம்** — மார்க்சிய-லெனினியக் கருதுகோள்களை விஞ்ஞானத்துக்குப் புறம்பான முறையில் திருத்துகின்ற போக்கு. மார்க்சிய-லெனினியத்துக்குப் பதிலாக வலதுசாரித் திருத்தல்வாதம் பூர்ஷ்வா சீர்திருத்தவாதக் கருத்துகளை நிறுவ முயல்கிறது; ''இடதுசாரி'' திருத்தல்வாதம் அராஜகவாத, அதிதீவிரப் புரட்சிகரக் கருத்துகளை நிறுவ முயல்கிறது.

**தேசிய இனம்** — திட்டவட்டமான பிரதேசத்தில் வசிக்கின்ற, பொருளாதார வாழ்க்கை நிலைமைகளினால் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்ற, ஒரே மொழி பேசுகின்ற, கலாசாரம் மற்றும் குணாம்சத்தில் அடையாளமான கூறுகளைக் கொண்டிருக்கின்ற வரலாற்று ரீதியான மக்கள் குழு. முதலாளித்துவம் தோன்றி வளர்ச்சியடைகின்ற பொழுது தேசிய இனங்கள் உருவாகின்றன.

**தேசிய வருமானம்** — பொருளாயத உற்பத்தித் துறையில் ஓர் ஆண்டுக் காலத்தில் புதிதாகப் படைக்கப்பட்ட நிகர மதிப்பு (அதன் உற்பத்தியின் பொருளாயதச் செலவுகள் சேர்க்கப்படுவதில்லை).

**தேசியவாதம்** — தேசியச் சிறப்பு, தனித்தன்மை என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்ட பூர்ஷ்வா மற்றும் குட்டி பூர்ஷ்வா சித்தாந்தம் மற்றும் கொள்கை; மற்ற தேசிய இனங்களுக்கும் தனக்கும் நலன்களில் உள்ள வேற்றுமையை வலியுறுத்தும்; அந்நிய ஒடுக்குமுறைக்கு எதிரான மறுப்பின் வெளியீடு என்ற முறையில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் தேசியவாதம் வரலாற்று ரீதியில் நியாயமானது.

**நிதி மூலதன ஏகபோகக் குழு** — மிகவும் அதிகமான செல்வமும் அதிகாரமும் கொண்ட ஒரு சில ஏகபோகவாதிகள்; அவர்கள் நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்.

**நிலப்பிரபுத்துவம்** — அடிமையுடைமை அல்லது பூர்விகக் கூட்டுவாழ்க்கை அமைப்பை அடுத்து ஏற்பட்ட சமூக பொருளாதார அமைப்பு; முதலாளித்துவத்துக்கு முந்தியது; நிலப்பிரபு நிலத்தைத் தனியுடைமையாகக் கொண்டிருப்பதையும் விவசாயி மீது முழுமையற்ற ஆதிக்க உரிமையைக் கொண்டிருப்பதையும் அடிப்படையாகக் கொண்ட அமைப்பு. வளர்முக நாடுகளில் நிலப்பிரபுத்துவ உறவுகளின் எச்சங்கள் மக்களுடைய முன்னேற்றத்தைத் தடை செய்கின்றன, தேசிய எழுச்சிக்கும் பொருளாதார சுதந்திரத்துக்கும் அவற்றின் போராட்டத்தைத் தடுக்கின்றன.

**பகை முரண்பாடுகள்** — பகைமை வர்க்கங்கள், சமூகப் பிரிவுகள் மற்றும் சக்திகளுக்கு இடையில் எழுகின்ற சமரசப் படுத்த முடியாத முரண்பாடுகள்; இவை வர்க்கப் போராட்டத்தின் மூலம் தீர்க்கப்படும்.

**பணவீக்கம்** — முதலாளித்துவத்தில் பணம் தீவிரமாக அதிகரிப்பதன் விளைவாக பணத்தின் மதிப்புக் குறைதல். இது விலைகள் உயர்வதிலும் மெய்யான ஊதியங்கள் குறைவதிலும் வெளிப்படுகிறது.

**பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம்** — சோஷலிஸ்ட் புரட்சியின் பொழுது தொழிலாளி வர்க்கம் நிறுவுகின்ற ஆட்சியதிகாரம். மனிதனை மனிதன் சுரண்டலையும் சமூக மற்றும் தேசிய ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் ஒழித்து சோஷலிசத்தை நிர்மாணிப்பதற்கு இது வரலாற்று ரீதியில் இன்றியமையாதது.

**புதிய காலனியாதிக்கம்** — ஏகாதிபத்திய அரசுகள் முந்திய காலனிகள் மற்றும் அரைக் காலனிகளின் பொருளாதாரம் மற்றும் அரசியல் மீது தம்முடைய மறைமுகமான ஆதிக் கத்தை உறுதிப்படுத்துவதற்காகச் சுமத்தியிருக்கின்ற அநீதி யான உறவுகளின் அமைப்பு.

**புறச்சூழல் நெருக்கடி** — முதலாளித்துவப் பொருளாதாரத் தில் இயற்கை வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டு மனிதன் வசிக்கின்ற சுற்றுப்புறம் கெடுக்கப்படுவதால் ஏற்படுகின்ற நெருக்கடி. மனிதன் உயிர் வாழ்வதற்கே பேராபத்தான நிலைமையைக் குறிக்கிறது.

**பொருள்முதல்வாதம்** — உலகம் பொருளாயதமானது, அது மனித உணர்விலிருந்து சுயேச்சையாக இருக்கிறது, அறியப் படக் கூடியது; பருப்பொருள் முதன்மையானது, உணர்வு இரண்டாம் நிலையானது என்று கூறுகின்ற விஞ்ஞான ரீதியான தத்துவஞானப் போக்கு; கருத்துமுதல்வாதத்துக்கு எதிரானது.

**மாறும் காலகட்டம் (முதலாளித்துவத்திலிருந்து சோஷ லிசத்துக்கு மாறும் காலகட்டம்)** — முதலாளித்துவ சமூகம் சோஷலிச சமூகமாகப் புரட்சிகர மாற்றமடைகின்ற கால கட்டம். தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைப் பெற்ற தும் ஆரம்பமாகி சோஷலிசத்துக்கு அடிப்படைகள் அமைக் கப்பட்டதும் முடிவடைகிறது.

**முதலாளித்துவ நெருக்கடி** — முதலாளித்துவத்தின் உள் ளூறையான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் முரண் பாடுகள் தீவிரமடைதல்.

**முதலாளித்துவம்** — உற்பத்திச் சாதனங்களில் தனியுடை மை மற்றும் முதலாளிகள் கூலியுழைப்பைச் சுரண்டுவதை

அடிப்படையாகக் கொண்ட சமூக பொருளாதார அமைப்பு. அது நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்கிறது. கம்யூனிச அமைப்பின் முதல் கட்டமாகிய சோஷலிசத்துக்கு முன்னர் ஏற்படுகிறது.

**அரசு ஏகபோக முதலாளித்துவம்** — முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்; வலிமை மிக்க ஏகபோக நிறுவனங்கள் பூர்ஷ்வா அரசு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்திருத்தல்.

**முதலாளித்துவம் அல்லாத பாதை** — முதலாளித்துவக் கட்டத்திற்குள் செல்லாமல் சோஷலிசத்துக்கு மாறுகின்ற நோக்கத்தைக் கொண்டுள்ள நாடுகளில் புரட்சிகர ஜன நாயக மாற்றங்களை நிறைவேற்றுவதற்கு வரலாற்று ரீதியில் அவசியமான காலகட்டம்.

**வரலாற்றில் அகவயக் காரணி** — புறவயமான சமூக நிலைமைகளை மாற்றுவதை, வளர்ப்பதை அல்லது பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட அகப்பொருளின் (வெகுஜனங்கள், வர்க்கங்கள், கட்சிகள் மற்றும் தனிநபர்கள்) நடவடிக்கை.

**வர்க்கங்கள்:**

**தொழிலாளி வர்க்கம்** — இன்றைய சமூகத்தின் மிகவும் வளர்ச்சியடைந்த, முற்போக்கான வர்க்கம்; முதலாளித்துவ அமைப்பில் உற்பத்திச் சாதனங்களை இழந்து முதலாளி வர்க்கத்தின் சுரண்டலுக்கு ஆளாகிறது; சோஷலிஸ்ட் நாடுகளில் சமூகத்தின் தலைமையான, வழிகாட்டும் சக்தியாக இருக்கிறது, மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் தலைமையின் கீழ் சோஷலிச மற்றும் கம்யூனிச நிர்மாணத்தை அமைத்து இயக்குகிறது.

**முதலாளி வர்க்கம்** — முதலாளித்துவ சமூகத்தின் ஆளும் வர்க்கம்; உற்பத்திச் சாதனங்களை உடைமையாக வைத்துக் கொண்டு கூலியுழைப்பைச் சுரண்டுகிறது; உபரி மதிப்பை

சுவீகரித்துக் கொள்வதன் மூலம் தன்னுடைய வருமானங் களைப் பெறுகிறது.

**வாழ்க்கைத் தரம்** — தனிநபர் அல்லது சமூகத்தின் பொரு ளாயத மற்றும் ஆன்மீகத் தேவைகள் திருப்தி செய்யப்படு கின்ற அளவு; பணம் அல்லது பொருளாயத அலகுகளின் மூலம் வாழ்க்கைத் தரத்தை நேரடியாக அளக்க முடியும்.

**வாழ்க்கை முறை** — சமூக அமைப்பின் தன்மையினால் நிர்ணயிக்கப்பட்டு வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் (வேலை, அன்றாட வாழ்க்கை, ஓய்வுநேரப் பொழுது போக்கு, இதரவை) வெளிப்படுகின்ற மனித நடவடிக்கை, உறவுகள், தொடர்புகள் மற்றும் நடத்தையின் அமைப்பு. **சோஷலிஸ்ட் வாழ்க்கை முறை** — சோஷலிசத்தின் உள்ளடக் கத்தினால் நிர்ணயிக்கப்பட்டு சமூகம் மற்றும் தனிநப ருடைய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட மனித நட வடிக்கை, உறவுகள், தொடர்புகள் மற்றும் நடத்தையின் அமைப்பு.

**விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி** — உற்பத்தியில் விஞ் ஞான மற்றும் தொழில்நுட்பவியல் சாதனைகளை இணைப் பதன் மூலம் உற்பத்திச் சக்திகளில் அடிப்படையான, குண ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துதல்.

**ஜனநாயகம்** — மக்களிடமிருந்துதான் அதிகாரம் தோன்று கிறது என்று அங்கீகரிக்கின்ற அரசு வடிவம். அங்கே சிவில் உரிமைகளும் சுதந்திரங்களும் பிரகடனம் செய்யப்பட்டுக் கடைப்பிடிக்கப்படுகின்றன. வர்க்க அரசில் ஜனநாயகம் வர்க்க இயல்பைக் கொண்டிருக்கிறது.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை — 600098

ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை — 600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001
3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008
செர்ரி ரோடு, சேலம் — 636001

விற்பனை நிலையங்கள்

3-22-75-D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் — 627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624001